ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான

திருவரங்கத்தமுதனாரருளிச்செய்த

இராமாநுசநூற்றந்தாதிமூலமும்,

இதற்கு

பெரியஜீயரருளிச்செய்த

உரையும்,

பிள்ளைலோகாசார்யஜீயரருளிச்செய்த

வ்யாக்யாநமும்;

சகரகூடம,

கந்தாடை-திருவேங்கடாசாரியரால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1891

ரிஜிஸ்டர்காபிரைட்—

http://acharya.org



ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

(நம்பெருமாளருளிச்செய்த தனியன்)

శ్రీశైలేశదయాపాత్రం ధీభక్త్యాదిగుణార్ణవమ్।
యతీంద్రప్రవణం వందే రమ్యజామాతరం మునిమ్॥

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்-
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

(எம்பெருமானாருளிச்செய்தது.)

లక్ష్మీనాథసమారంభాం నాథయామునమధ్యమామ్।
అస్మదాచార్యపర్యంతాం వందే గురుపరంపరామ్॥

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்-
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

(கூரத்தாழ்வானருளிச்செய்தது.)

యోనిత్యమచ్యుతపదాంబుజయుగ్మరుక్మ వ్యామోహతస్తదితరాణి తృణాయ మేనే।
అస్మద్గురోర్భగవతోస్య దయైకసింధోః రామానుజస్య చరణౌ శరణం ప్రపద్యే॥

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே-
அஸ்மத்குரோர்ப்பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம்ப்ரபத்யே.

(ஆளவந்தாருளிச்செய்தது.

మాతా పితా యువతయస్తనయా విభూతిః సర్వం యదేవ నియమేన మదన్వయానామ్।
ఆద్యస్య నః కులపతేర్వకుళాభిరామం శ్రీమత్తదంఘ్రియుగళం ప్రణమామి మూర్ధ్నా॥

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்-
ஆத்யஸ்யநஃகுலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா.

(பராசரபட்டருளிச்செய்தது.)

భూతం సరశ్చ మహదాహ్వయ భట్టనాథ శ్రీభక్తిసార కులశేఖర యోగివాహాన్।
భక్తాంఘ్రిరేణు పరకాల యతీంద్రమిశ్రాన్ శ్రీమత్పరాంకుశమునిం ప్రణతోస్మి నిత్యమ్॥

பூதம்ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்-
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம்ப்ரணதோஸ்மிநித்யம்

http://acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பிள்ளைலோகார்யஜீயரருளிச்செய்தவ்யாக்யாநம்.

அவதாரிகை.—(முன்னைவினையகல) ப்ராக்தநகர்மநிவர்த்யர்த்தமாக அபிஜாதரான அமுதனார் திருவடிகளை சிரோபூஷணமாக தரித்தேன், ஆகையால கர்மபலாநுபவம்பண்ணுவிக்கும்யமாதிகளுக்கு என்னோடு என்ன ப்ராப்தியுண்டென்கிறது.

மூ.—முன்னைவினையகல மூங்கில்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டு - மென்னுடைய
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன் தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன் யான்.

வ்யா.—(முன்னைவினையகல) (முன்னருளுமாரியனால) என்னாநிறே வாதிகேஸரி யழகியமணவாளச்சீயரும்; அப்படியே அநாதிகாலார்ஜிதகர்மங்கள் அகன்றுபோக. பாவமெல்லாமகன்று என்னைவிட்டுப்போக. அது எத்தாலேயென்ன; அமுதன்கால் தலைப்பட்டத்தாலேயென்கிறது (மூங்கில குடியமுதன இத்யாதியாலே.) மூங்கில்குடியாவது - "வேயர்தங்கள்குலம்" என்னுமாப்போலே இவர்க்குமூங்கில்குடியாய்த்து. அக்குலத்திலேயவதரித்த அமுதனாருடைய. (பொன்னங்கழல்கமலப்போதிரண்டும) ஸ்ப்ருஹணீயமாய் அழகிதாயிருக்கிற திருவடித்தாமரைப்பூவிரண்டையும். (என்னுடையசென்னிக்கணியாகச்சேர்த்தினேன்) அவருடைய சென்னிக்கணி * ராமாநுசனடிப்பூ: என்னுடைய சென்னிக்கணி இவையாய்த்து.

(சென்னிக்கணியாகச்சேர்த்தினேன்) தலைக்கலங்காரமாகச் சேர்த்தேன். (செம்மாபாதபற்புத்தலைசேர்த்து) என்னுமாப்போலே அங்குப்ராப்தத்தை; இங்குக்ருதார்த்ததை. அத்தால, தென்புலத்தார்க்கு-யமபுரவாஸிகளான யமகிங்கரர்க்கு. (என்னுக்கடவுடையேன) இனி எதுக்காக கர்மபலாநுபவத்துக்குக்கடவேன். கர்மக்ஷயம்பிறந்தவாறே பலாநுபவமில்லையிறே. ஆகையாலேகர்மபலாநுபவம்பண்ணுவிப்பார்க்கு காத்தவ்யமில்லை. * பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து என்சென்னித்திடரில் பாதவிலச்சினை வைக்கையாலே தென்புலக்கோன்பொறியொற்றிவைத்தவிலச்சினை மாற்றித் தூதுவரோடியொளித்தார், அத்தாலே (என்னுக்கடவுடையேன்யான்) என்கிறது. "என்பெயவினை தென்புலத்தில பொறித்தஅப்புத்தகச்சும்மை பொறுக்கியபின) என்னக்கடவதிறே. (யான் என்னுக்கடவுடையேன்) பொன்னங்கழற்கமலப் போதிரண்டும் என்னுடைய சென்னிக்கு அணியாகச்சேர்த்த யானென்றபடி

http://acharya.org

(என்னுக்கடவுடையேன்) என்னுக்குஎன்கிறகுகரம் கடைக்குறைத்தலாயிருக்கிறது. கடவுடையேன் - ஏதுக்காகப்ராப்தியுடையேனென்றபடி. அம்ருதத்துக்கும் விஷத்துக்கும் சேர்த்தியில்லாதாப்போலே திருவரங்கத்தமுதனார் திருவடிகளில் ஸம்பந்தமுடையார்க்கும் தென்புலக்கோனடியார்க்கும் என்ன சேர்த்தியுண்டு. "அரங்கமாநகருளானே - நின்னுமங்கற்ற வாவலிப்புடைமைகண்டாய - நமன்றமர்தலைகள்மீதே - நாவலிட்டுழிதருகின்றோம்" என்றும், "அரங்கமென்றழைப்பராகில் பொறியில்வாழ்நரகமெல்லாம்புலலெழுந்தொழியுமன்றே" என்றும், "నచజ్ఞానస్యసఙ్కోచం నచైవయమగోచరమ్। తస్మాద్రఙ్గమహాపుణ్యంకోనసేవేతబుద్ధిమాన్" "நசஜ்ஞாநஸ்யஸங்கோசம் நசைவயமகோசரம், தஸ்மாத்ரங்கம்மஹாபுண்யம்கோநஸேவேதபுத்திமாந்" என்றும், "నఖలుభాగవతాయమవిషయం గచ్ఛన్తి" "நகலுபாகவதா யமவிஷயம்கச்சந்தி" என்றும்சொல்லக்கடவதிறே.

அ—(நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்று) ப்ராப்யாபாஸங்களை ஹேயமென்றுபுத்திபண்ணி தம்திருவடிகளை ஆச்ரயித்தவர்கள்விஷயமாக ஸம்ஸாரஜயத்தைப்பண்ணித்தருமத்தாலே வந்தயசஸ்ஸையுடைய எம்பெருமானார்திருவடிகளிலே உத்துங்ககுணத்தையுடையதிருவரங்கத்தமுதனார், தம்முடையநிரவதிகபக்தியாலேபணிக்கும் நூற்றந்தாதியை ஓதஸம்மதியென்று மநஸ்ஸை அர்த்திக்கிறது

மூ.—நயந்தருபேரின்பமெல்லாம்பழுதென்றுநண்ணினர்பால்
சயந்தருகீர்த்தியிராமாநுசமுனிதாளிணைமேல்
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்குமன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதியோதவிசைநெஞ்சமே.

வ்யா.—(நயந்தருபேரின்பமெல்லாம்) விஷயங்களாலேவரும் நிரவதிகஸுகங்களையெல்லாம். நயம் - விஷயம். "நானுமைநள்ளேனயம்" என்கிறவிடத்துக்கு - விஷயங்களை என்றிறே வ்யாக்யானம்பண்ணியருளிற்று. அஜ்ஞாபிப்ராயத்தாலே சிற்றின்பத்தைப் பேரின்பமெனகிறது. (பழுதென்று) அவற்றைஹேயமென்று விசாரித்துவிட்டு. (நண்ணினர்பால்) ஆச்ரயித்தவர்கள்விஷயத்திலே. (சயந்தருகீர்த்தியிராமாநுசன்) அவர்களுக்கு ஸம்ஸாரஜயத்தைப்பண்ணித்தருகிற எம்பெருமானார். இப்படி ஆபாஸஸுகங்களைவிட்டு ஆச்ரயித்தவர்கள் ஆழ்வானும்அமுதனாருமாய்த்து. "రామానుజార్యవిషయీకృతమ్" "ராமாநுஜார்யவிஷயீக்ருதம்" என்றும், "அக்காதலளற்றழுந்திமாயுமெனனாவியை வந்தெடுத்தான்" என்றாரிறே. "రామాదిరోషహరమాత్మపదాశ్రితానాం రామానుజంయతిపతిమ్" "ராமாதி

http://acharya.org

தோஷஹரமாத்ம பதாச்ரிதாநாம் ராமாநுஜம் யதிபதிம்'' என்றும், ''[illegible]'' ''மதநகதநைர்நக்லிச்யந்தே யதீச்வரஸம்ச்ரயா:'' என்னக்கடவதிறே. இதுவாய்த்து சயந்தரு கீர்த்தி. ''சயப்புகழார்'' என்னுமாப்போலே.

(இராமாநுசமுனிதாளிணைமேல்) இப்படி ஆச்ரிதஜநஜயப்ரதரான எதித்தலைநாதனிராமாநுசமுநி சரணத்வய விஷயங்களிலே வாசிக கைங்கர்யமாகச்செய்த ப்ரபந்தத்தை அப்யஸிக்க ஸமமதி என்று ஸௌமநஸ்யமுண்டாம்படி மநஸ்ஸையர்த்திக்கிறது. ''ராமாநுசன் சரணாரவிந்தம்'' என்றும், ''ராமாநுசன்றனிணையடி'' என்றும், ''இராமாநுசனடிப்பூமன்னவே'' என்றும்கிறே ஆதி மத்யாவஸாநம் அங்கீகரித்வயவிஷயமாயிருப்பதாய்த்து - இப்ப்ரபந்தந்தான்.

அன்றிக்கே, ''நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்றுநண்ணி நம்பால சயந்தருகீர்த்தியிராமாநுசமுனி'' என்று இத்தனியனருளிச்செய்தவரபிப்ராயமாகவுமாம். அதாவது, நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணிநம்பால் - நன்மையைப்பண்ணுமதாய விஷயஸுகங்களெல்லாம், பழுதின்றி - ஸங்கோசமின்றிக்கே, நண்ணிநன்பால - ''தந்தைநல்தாயந்தாரம் தநயர் பெருஞ்செல்வம் என்றனக்கு நீயேயெதிராசா'' என்கிறபடியே ஸர்வஸங்கங்களும் அவரேயென்று ஆச்ரயித்த நம்முடைய விஷயமாக என்று இங்ஙனேயும் யோஜிக்கவுமாம் மேலபூர்வவாக்.

அன்றிக்கே, நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்று - ததிதரங்களை த்ருணவத்கரித்து, நண்ணி - நாராயணனை நண்ணினவருமாய என்று எம்பெருமானார்க்கு விசேஷணமாகவுமாம். நன்பால் - நல்லஸ்வபாவத்தாலே பரஸம்ருத்தியே பேறான ஸ்வபாவத்தாலே. (சயந்தருகீர்த்தியிராமாநுசன்) தாம் நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணினமாத்ரமன்றிக்கே, தம்மை யாச்ரயித்தவர்களும், ''நரகத்தை நகுநெஞ்சே'' என்கிறபடியே ஸம்ஸாரத்தை வெல்ல வல்லராம்படி பண்ணி அத்தாலேவந்த யசஸ்ஸையுடையவரென்றாகவுமாம். ''𑌤𑍃𑌣𑍀𑌕𑍃𑌤𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌾𑌦𑌿𑌨𑌿𑌰𑌙𑍍𑌕𑍁𑌶𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃। 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌪𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑌶𑌾𑌲𑌿𑌨𑌃'' ''த்ராணீகர்தவிரிஞ்சாதி நிரங்குசவிபூதய:। ராமாநுஜபதாம்போஜ ஸமாச்ரயணசாலிந:'' என்னக்கடவதிறே.

அ.—(சொல்லின்தொகைகொண்டு) இது அமுதனாரருளிச்செய்ததாதல்; அவரபிப்ராயத்தாலே அபிநிவேசமுடைய ஆஸ்திகரருளி [illegible]

http://acharya.org

பிள்ளைலோகார்யஜீயரருளிச்செய்தவ்யாக்யானம்.

அமுதனாரருளிச்செய்ததனியன்.

மூ.—சொல்லின்தொகைகொண்டுனதடிப்போதுக்குத்தொண்டு
செய்யும், நல்லன்பரேத்துமுன்னாமமெல்லாமென்றன்நா
வினுள்ளே, அல்லும்பகலுமமரும்படிநல்கறுசமய, வெல்
லும்பரமவிராமாநுசவிதென்விண்ணப்பமே.

வ்யா.—(சொல்லின்தொகைகொண்டு) இவ்வளவாகச்சொல்
லக்கடவோமென்று ஸங்க்யாநிர்த்தேசம்பண்ணி. அன்றிக்கே, சப்
தஸமூஹங்களைக் கொண்டென்னவுமாம். (உனதடிப்போதுக்கு
தேவரீருடைய திருவடித்தாமரைகளுக்கு. (தொண்டுசெய்யும்)
வாசிககைங்கர்யமாக*இருங்கவிகளைப்புனையும்.(நல்லன்பர்)ஏத்தும்
"நல்லாரபரவும" என்கிறபடியே அநந்யப்ரயோஜநபக்தியுக்தரா
லேத்தும.(உன்நாமமெல்லாம)அந்தபக்திபாரவச்யத்தாலே ஸ்தோ
த்ரம்பண்ணும் தேவரீருடைய திருநாமமெல்லாம். (என்றன்நாவி
னுள்ளே) அந்தத்திருநாமங்களை அநுஸந்திக்கவேணுமென்றிருக்
கிற என்றன்நாவினுள்ளே.

(அல்லும்பகலுமமரும்படிநல்கு) "நள்ளிருளளவும பகலும்
நானழைப்பன்" என்னும்படி இவாரா த்ரவிபாகமறப் பொருந்
தியிருக்கும்படி உபகரித்தருளவேணும். (அறுசமயம்வெல்லும்ப
ரம) * கூறுமசமயங்களாறுங்குலையும்படியிறேவெல்லுவது; இப்
படி (வெல்லும்பரம) வெல்லுகிறமேலானவரே ச்ரேஷ்டரானவ
ரே. (இராமாநுச) நாலெழுத்தாய நாராயணநாமத்திலும் அதிக
மான திருநாமத்தையுடையவரே. உன்நாமமெல்லாம என்றன
நாவினுள்ளே அல்லும்பகலு மமரும்படிநல்கு, இதென்விண்ணப்
பம் - இது என்விஜ்ஞாபநம. தேவரீர நாலெழுத்துடைய திரு
நாமம் என்நாவில்ல அமரும்படி நல்கியருளவேணும். "ராமாநு
சன்" என்றிறே முடியவருளிச்செய்தது.

(சொல்லின்தொகைகொண்டு) நூற்றெட்டுப்பாட்டாகச்சொ
ல்லவேணுமென்று, சொல்லின்தொகையை - ஸங்க்யாநிர்த்தேசத்
தைத் திருவுள்ளத்திலேகொண்டு.(உனதடிப்போதுக்கு) "ராமாநு
சன்சரணாரவிந்தம நாமமன்னிவாழ" "ராமாநுசனடிப்பூமன்ன
வே" என்றிறே இவாராமாநுசனடிப்போதுக்கு வாசிகமாகத்
தொண்டுசெய்தது. இப்படிதொண்டுசெய்யும நல்லன்பர்அமுத
னாரிறே. (ஏத்துமுன்னாமம்) அவர்களாலே ஸ்தோத்ரம்பண்ண
ப்பட்ட தேவரீர்திருநாமமான நூற்றெட்டுப்பாட்டும். (என்றன்
நாவினுள்ளே அல்லும்பகலு மமரும்படிநல்கு) இத்தை நிரந்தர
மநுஸந்திக்கவேணுமென்கிற என்னாவினுள்ளே இவாராதரம்

http://acharya.org

திருநாமமருளும்படி அநுக்ரஹிக்கவேணும்.(இதென்விண்ணப்பம்) * (ఇదం-మమః జ్ఞాపనమ్) "இதம்மமவிஜ்ஞாபநம" "அடியேன்செய்யும விண்ணப்பமே.) இது அமுதனார் நிர்வாஹத்தை அநுவதித்துச சொன்னபடி.

அ.—(இனியென்குறைநமக்கு எம்பெருமானார் திருநாமத்தினால்) ஸகலவேதஸாரமான ஸாவித்ரியின் ஸாரமாய பரபந்த காயத்ரியாம்படி நூற்றெட்டுப்பாட்டிலும் "ராமாநுசன" என்னும் திருநாமத்தை யருளிசசெய்து உபகரிக்கையாலே த்ருஷ்டாத்ருஷ்டங்களிரண்டிலும ஒருகுறைகளுமில்லையென்று பெற்றலாபத்தைப்பேசுகிறது.

சோமாசியாண்டானருளிச்செய்தது.

மூ.—இனியென்குறைநமகெம்பெருமானார்திருநாமத்தால்
முனிதந்தநூற்றெட்டுச்சாவித்திரியென்னு நுண்பொருளை
கனிதந்தசெஞ்சொல்கலித்துறையந்தாதிபாடித்தந்தான
புனிதன்திருவரங்கத்தமுதாகியபுண்ணியனே.

வ்யா.—(இனியென்குறைநமக்கு) ஒன்றும்குறையில்லை-த்ருஷ்டத்தில் சொல்லபபுகில். "வாயமுதமபரகுமராமாநுசனென்றுசொல்லுமின்" - அமுதன்வாயிலேயிறே அமுதமுண்டாவது. "హ్యాద్యాస్యమృతకల్పాని మనోహ్లాదననానిచ । తామేవేక్ష్వాకునాథస్య భరతస్యకథాం కురు" "ஹ்ருத்யாந்யம்ருதகலபாநிமநஃப்ரஹ்லாதநாநிச । தாமேவேக்ஷ்வாகுநாதஸ்யபரதஸ்யகதாஂகுரு;-" இவரும ராமாநுசனிறே; ஆகையாலே த்ருஷ்டஸுகமுமுண்டு; மோக்ஷஹேதுவாகையாலே அத்ருஷ்டஸுகமுமுண்டு; அததாலே இனியென்குறை யென்கிறது. (எம்பெருமானார் திருநாமததால்) "ராமாநுசன திருநாமம என்றிறே யருளிச்செய்தது, அந்ததிருநாமததாலே. நம்பெருமானை நாராயணன் நாமத்துககு ஒரு குறையுண்டு பந்ததுககு ஹேதுவாகை; எம்பெருமானார்ராமாநுசனென்னும் திருநாமம் மோக்ஷத்துக்கே ஹேதுவாகையாலே அககுறையுமில்லை. ஏவம் விதவைலக்ஷண்யததையுடைய திருநாமததிலே பாடித்தந்தானென்கிறது.

(முனிதந்த) "తస్యధ్యానాన్నస్థస్య" "தஸ்யதயாநாநதஸ்த்தஸ்ய" என்றும், "முனிமாபபிரமமுதலவித்தாய" என்றும், "முனியே" என்றுமிறே ஸ்ருஷ்ட்யுந்முகனை ஸர்வேச்வரனைச் சொல்லுவது. அப்படிப்பட்டஸர்வேச்வரன்ப்ரஹ்மாவைஸ்ருஷ்டித்து."వేదప్రదానపూర్వం గాయత్రీం వేదమాతరమ్""வேதப்ரதாநபூர்வம்காயத்ரீம்வேதமாதரம்" என்னும்படியான காயத்ரியையும் ப்ரணவபூர்வகமாக,

http://acharya.org

உபதேசித்தான்; அது அஷ்டோத்தரசதமாயிறே! உச்சரித்துப் போருவது, அப்படியே அநுஸந்திக்கும்படி, அதின் நுண்பொருளை - ஸூக்ஷ்மார்த்தத்தை. அந்தகாயத்ரிக்கும் மாதாவாயிறே ப்ரணவமிருப்பது.

அதில் அகாரத்தாலே - எம்பெருமானையும், உகாரத்தாலே - பிராட்டியையும், மகாரத்தாலே தச்சேஷபூதனான சேதநனையுமிறே சொல்லுவது. "[illegible]" "மகாரஸ்து தயோர்த்தாஸ:" "[illegible]" "அக்ஷர:" இத்யாதியாலே - அகார உகாரமகாரார்த்தங்கள் சப்தார்த்தஸ்வாரஸ்யங்களோடே கூடியிறே யிருக்கிறது; இவருமராமாநுசனிறே. "[illegible]" "ஓம்தயாத்மாநம்யுஞ்சீத" என்று - சப்தஸ்வாரஸ்யத்தாலே ப்ரதிபாத்யத்வமுண்டிறே ப்ரணவத்துக்கு; அதிறே நுண்பொருளாவது. "ராமாநுசன்" என்றிறே பாட்டுதோறும் ப்ரதஸ்தமாயிருப்பது. * உவ்வானவரிறே - உடையவர். தன் நாமத்தினுமத்திய நாமமிறே அவன்றனக்கும் இஷ்டமாயிருப்பது.

இனித்தான், "[illegible]" "தத்ஸவிதுர்வரேண்யம்" என்று - ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியான நாராயணனையிறே அங்கு ப்ரதிபாதிக்கிறது; "[illegible]" "[illegible]" "யஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருச்யதே" "ஸயஸ்சாயம்புருஷே யஸ்சாஸாவாதித்யே ஸஏக:" என்கிறபடியே - * அவைதன்னொடும் வந்திருப்பிடம் மாயனிராமாநுசனமனமிறே; அதத்தாலே சேர்ந்தாய்த்தது இவர் வடிவிருப்பது. இவரும * ராமாநுஜதிவாகரரிறே * கடலளவாய சுடரொளியாலேயிறே அவவிருளைத்துரந்தது. இப்படியாய்த்தது - * சாவித்திரியென்னும நுண்பொருளைப்பாடித் தந்தது. ஸகலவேதஸங்க்ரஹமான திருமந்த்ரத்தின தாத்பர்யமிறே. ததீயசேஷத்வம். "நின திருவெட்டெழுத்துங கற்று நான்ற்றது முன்னடியார்க்கடிமை."

நுண்பொருளைப்பாடித்தந்த பரகாரஞ்சொல்லுகிறது (கலிதந்தசெஞ்சொலித்யாதியாலே) கலிதருகையாவது - மிடுக்கைத் தருகை. அன்றிக்கே ஆரவாரமாதல்; அபூர்வமாதல். இப்படி, கலியைத்தந்த - சப்த்தசக்தியைத்தந்த. (செஞ்சொல்) செவ்வியசொல். "செவிக்கினியசெஞ்சொல்" என்னக்கடவதிறே. (கலித்துறையந்தாதிபாடித்தந்தான்) "கலித்துறை" என்கிறபாவிலேயாய்த்துப் பாடித்தந்தது. (செஞ்சொல்கலித்துறை) ச்ராவ்யமான கலித்துறையிலேயாய்த்து அந்தாதிபாடித்தந்தது. அந்தாதிப்பாட்டு அடியெடுத்து ஸுலபமாயிறேயிருப்பது. (பாடித்தந்தான்)

http://acharya.org

அநுபவபரீவாஹமாகப்பாடி பின்புள்ளார்க்கு முபகரித்தார்.(புனிதன்) பரிசுத்தன். பாடித்தந்தசுத்தி. அசுத்தரையும் சுத்தராக்கவல்ல சுத்தி. * போற்றும் புனிதனைப்போற்றுமவரிறே.

(திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே) திருவரங்கத்தமுதனாகிற தார்மிகன். "ராமாநுசன்மிக்கபுண்ணியன்" என்னுமாப்போலே மிக்கபுண்ணியனடியாகவந்த புண்ணியம். திருவரங்கத்தமுதாகிய புண்ணியன் - எம்பெருமானார் திருநாமத்தால் - கலித்துறையந்தாதி பாடித்தந்தான்; இனியென்குறை நமக்கு என்று க்ரியை. "అష్టోత్తరసహస్రంవా శతమష్టసమాహితైః। లక్ష్మణస్యమనుర్జప్యః ముముక్షుభిరతన్ద్రితైః" "அஷ்டோத்தரஸஹஸ்ரம்வா ஶதமஷ்டஸமாஹிதை:। லக்ஷ்மணஸ்யமநுர்ஜப்ய: முமுக்ஷுபிரதந்த்ரிதை:" என்றும், "యోజపేల్లక్ష్మణమనుంనిత్యమేకాన్తసంస్థితః। ముచ్యతేసర్వపాపేభ్యో విష్ణులోకంసగచ్ఛతి" "யோஜபேலக்ஷமணமநும்நித்யமேகாந்தஸம்ஸ்திதஃ। முச்யதேஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம்ஸகச்சதி" என்றுமிறே அகஸ்த்யஸம்ஹிதையில ப்ரமாணப்ராசஸ்த்யமிருப்பது. இவரும் "லக்ஷமண முனி" என்று சொல்லப்படும் ராமாநுசனிறே.

பிள்ளைலோகார்யஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருவரங்கத்தமுதனாரருளிச்செய்த

இராமாநுசநூற்றந்தாதி.

பெரியஜீயரருளிச்செயதவுரையினவதாரிகை.

ஸகலசாஸ்த்ரஸங்க்ரஹமான திருமந்த்ரத்திநுடைய தாத்ப ர்யமாய், பகவதாகஸ்மிகக்ர்பாலப்தத பரிசுத்தஜ்ஞாநரான ஆழ்வா ர்களுடைய திவ்யப்ரபந்தஸாரார்த்தமாய், பரமகாருணிகரான நம்மாழ்வாரு... பரிபூர்ணகடாக்ஷபாத்ரபூதரான ஸ்ரீமதுரகவி களுடைய உக்தயநுஷ்டடாநங்களாலேப்ரகடிதமாய், ஆழ்வா ர்தம்மாலே நாதமுனிகளுக்கருளிசசெய்யப்பட்டதாய், அவர் தம் திருவடிகளையாச்ரயித்த யோகயவிஷயங்களுக்கு உபதேசித்தருள

பிள்ளைலோகார்யசீயரருளிச்செய்த வ்யாக்யாநாவதாரிகை.

ஸ்ரீயஃபதியாய் பரமகாருணிகனை ஸர்வேச்வரன், (వైకుంఠేతు పరేలోకే శ్రీసహాయో జనార్దనః। ఉభాభ్యాం భూమినీళాభ్యాం సేవితః పరమేశ్వరః) (వైకుంఠేతు పరేలోకే శ్రియా సార్ధం జగత్పతిః। ఆస్తే విష్ణురచింత్యాత్మా భక్తైర్భాగవతైస్సహ) (வைகுண்டேது பரேலோகேஸ்ரீஸஹாயோஜநார்த்தந:। உபாப் யாஂபூமிநீளாப்யாஂ ஸேவித:பரமேச்வர:) (வைகுண்டேதுபரே லோகேஸ்ரீயாஸார்த்தஂஜகத்பதி:। ஆஸ்தேவிஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்பாகவதைஸ்ஸஹ)என்கிறபடியே நித்யவிபூதியிலே போ கோபகரணனாயிருந்து லீலாவிபூதியில்த்ரிகுணப்ரகர்திஸஂஸர்க்கத் தாலே ஜீவவர்ககங்களுக்கு நிதயஸூரிகளைப்போலே இந்த ஆநந்த ரஸத்தையநுபவித்துவருகைக்குயோக்யதையுண்டா யிருக்கச்செ யதேயும் * ஒழிககவொழியாத நமமோடுறவறியாதே ஸஂஸாரஸா கரத்தின் பெருக்குச்சுழியிலேயகப்பட்டு கரைமரஞ்சேரப்பெறா தேயிருந்ததுக்கு போரநொந்து இவாகளுக்கும் அந்தவுறவைய றிவித்து ஸஂஸாரஸாகரத்தினின்றும் உத்தரிப்பிககக்கடவோமெ ன்று நினைப்பிட்டு கலியுகாதியிலே நம்மாழ்வாரை யவதரிப்பித்து அவருககு * மயாவறமதிநலமருள,

அவரும் அந்தஸம்யக்ஞாநத்தாலே ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளைத்தாமநுபவித்து அதுஉள்ளடங்காமே * எதிர்பொங்கி மீதளிப்ப, அதுக்குப்போக்குவீடாக திவ்யப்ரபந் தங்களை நிர்மித்தும் மதுரகவியாழ்வார்தொடக்கமானவர்களு க்கு உபதேசித்து, அதுக்குஸாரமாய் தத்வஹித புருஷார்த்த யா தாத்மயாவபோதகமாய் ஸகலவேதஸங்க்ரஹமான திருமந்த்ரத் திலே குஹ்யதமமாக ப்ரதிபாதிக்கப்பட்ட சரமோபாயத்தை

http://acharya.org

அவர்கள்தாங்களும் இப்படியே உபதேசிக்கையாலே உபதேசபரம்பராப்ராப்தமாய், அகிலசேதநர்க்கும் ஸ்வரூபோபாய புருஷார்த்தயாதாத்ம்யரூபேண அவச்யாபேக்ஷிதமாய், பரமரஹஸ்யமாயிருந்துள்ள சரமபர்வநிஷ்டாப்ரகாரத்தை, எம்பெருமானார், கேவலக்ருபையாலே தம்மை ஆழ்வான்திருவடிகளிலே ஆச்ரயிப்பித்து தந்முகேந உபதேசித்தருளக்கேட்டு, அவ்வர்த்தத்தை யதாதர்சநம்பண்ணி, அநவரதம் எம்பெருமானார்திருவடிகளைஸேவித்துக்கொண்டுபோராநின்றுள்ள பிள்ளையமுதனார், அவருடைய திவ்யகுணங்களைத் தம்முடையப்ரேமத்துக்குப் போக்குவிடாகப் பேசி அநுபவிக்கவேண்டும்படியான தசைதமக்கு விளைகையாலும் இவ்வர்த்தஜ்ஞாநம் சேதநர்க்கு ஸுலபமாம்படி பண்ணவேணுமென்கிறதம்முடைய பரமக்ருபையாலும், தாமெம்பெருமானாருடைய திவ்யகுணங்களைப்ரேமாநுகுணமாகப்பேசுகிற பாசுரங்களாலே, தத்ப்ரபாவத்தை எல்லார்க்கும் ப்ரகாசிப்பியாநின்றுகொண்டு, முன்பு ஆழ்வார்திருவடிகளுக்கு அநந்யார்ஹரான ஸ்ரீமதுரகவிகள், மதுரகவியாழ்வாரொருவர்க்கு முபதேசிக்க, (மிக்கவேதியர்வேதத்தினுட்பொருள்நிற்கப் பாடியென்னெஞ்சுள நிறுத்தினான்) என்றும், (தேவுமற்றறியேன்) என்றும்-உக்தாநுஷ்டாநங்களாலே பூதரானபின்பு அந்த அர்த்தவிசேஷங்களையெல்லாம் தமக்குப்ரஸாதிக்கவேணுமென்று ஸ்ரீமந்நாதமுநிகள் ப்ரார்த்திக்க, அவருக்கு அர்ச்சாவ்யவஸ்தையையதிக்ரமித்து திருவாய்திறந்து உபதேசிக்க அவரடியாக வாயத்து ஓநதஸம்பரதாயமவந்தது;

இவ்வர்த்தவிசேஷங்களையெல்லாம் * இருள்தருமாஞாலமான பூலோகத்திலே ஜநங்களுக்குபதேசித்து ஸர்வர்க்கும் மோக்ஷத்தை கரதலாமலகமாக்கவேணுமென்று, ([illegible]) (பதயுகேமலவாஸிந்யா: ப்ரோரணாத்பர்திவீதலே, அஹீநாமீஸ்வரஸ்ஸோயமாஸீத்ராமாநுஜோமுநி:) என்கிறபடியே ஸர்வேச்வரன் திருவநந்தாழ்வானையேவ, அவர்வந்து ஸ்ரீபெரும்பூதூரிலேயவதரித்து ஸகலசாஸ்த்ரப்ரவீணராய் திருக்கச்சிநம்பிமுகமாக தேவபெருமாளறிவித்த அறிவாலே தத்வஹிதங்களையெல்லாம் விசதமாகத்தெரிந்தும், பெரியபெருமாள்க்ருபையாலே உபயவிபூதி ஸாம்ராஜ்யத்தை நிர்வஹியுமென்றுசெங்கோலைக்கொடுக்கப்பெற்றும், நாதயாமுநாதிஸம்ப்ரதாயபரம்பராப்ராப்தமான தத்வஹித புருஷார்த்த யாதாத்ம்ய ஜ்ஞாநமாகிற அர்த்தவிசேஷத்தை லபித்தும், தமக்கு அந்தரங்கரான ஆழ்வான்முதலான முதலிகளுக்கு அவ்வர்த்தவிசேஷத்தை உபதேசித்துக்கொண்டும் வாழுகிறகாலத்திலே.

http://acharya.org

ஸ்வநிஷ்ட்டாகதநரூபேணவும் பரோபதேசரூபேணவும் உஜ்ஜீவ நார்த்தத்தை லோகத்துக்கு வெளியிட்டருளினப்போலே, தாமும் ஸ்வநிஷ்ட்டாகதநரூபத்தாலும் பரோபதேசத்தாலும் அவரைப் போலேஸங்க்ரஹேண பத்துப்பாட்டாக வன்றிக்கே, பரக்கக்கொண்டு ஆசார்யாபிமாநநிஷ்டர்க்குஜ்ஞாதவ்யார்த்தங்களையெல்லாம் இப்ப்ரபந்தமுகேந அருளிச்செய்கிறார். எம்பெருமானார் திருவடிகளிலேப்ரேமமுடையவர்களுக்கு "ஸாவித்ரிபோலே இது நித்யாநுஸந்தேயவிஷயமாகவேணும்" என்றாய்த்துப்பாட்டுத்தோறும் திருநாமத்தைவைத்து நூற்றெட்டுப்பாட்டாகவருளிச்செய்தது; ஆகையாலே இதைப்ப்ரபந்நஸாவித்ரியென்றாய்த்து நம்முதலிகள் அருளிச்செய்வது.

அ.—முதற்பாட்டு. தம்திருவுள்ளத்தைக்குறித்து எம்பெருமானாருடையதிருவடிகளை நாம் பொருந்திவாழும்படியாக அவருடையதிருநாமங்களைச்சொல்லுவோம்வாவென்கிறார்.

திருவரங்கத்தமுதனார் ஸகலசாஸ்த்ரபரிபூர்ணராயிருந்தும் ஸத்ஸம்ப்ரதாயம்தெரியாதேயிருக்க, எம்பெருமானார் தம்முடைய நிர்ஹேதுகக்ருபையாலே ஆழ்வானையிட்டு அவரைத்திருத்துவிக்க, அவரும் ஆழ்வானையாச்ரயித்து அவர் காட்டிக்கொடுக்க எம்பெருமானார்திருவடிகளைக்கண்டு அதிலே அத்யந்தாபிநிவிஷ்டசித்தராய ஸர்வதா அநுபவம்பண்ணிக்கொண்டு போந்து அவ்வநுபவம் உள்ளடங்காதேபரிவாஹரூபேண, "கலித்துறை" என்கிறசந்தஸ்ஸிலே அந்தாதியாக நூற்றெட்டுப்பாட்டாய், பாட்டுத்தோறும் எம்பெருமானார்திருநாமத்தைச்சேர்த்து ப்ரபந்திகரித்துப்போந்தாராகையாலே இது ப்ரபந்நகாயத்ரியென்று அத்யவஸிக்கப்பட்டு, நம்முதலிகளெல்லார்க்கும், (గురోర్నామసదాజపేత్) (குரோர்நாமஸதாஜபேத்) என்கிறபடியே நித்யாபிஜப்யமாயிருக்கிறதாய்த்து.

அ.—முதற்பாட்டு பிள்ளையமுதனார் தமக்கு ஆசார்யப்ரஸாதத்தாலே லப்தமாய மந்த்ரரத்நகண்டத்வயார்த்த யாதாத்ம்ய ஜ்ஞாநரூபமாய் பரமரஹஸ்யமாயிருந்துள்ள அர்த்தவிசேஷங்களை, (ఏకస్స్వాదు న భుంజీత) (ஏகஸ்ஸ்வாது ந புஞ்ஜீத) என்கிறபடியே கண்ணநுந்திலிழிவார்க்குத்துணைத்தேட்டமாமாப்போலே எம்பெருமானாருடைய கல்யாணகுணஸாகரத்திலே யிழிவதுக்குத்துணைத்தேட்டமாய, உபயவிபூதியிலும் ஆராய்ந்தால் நித்யவிபூதியிலே யிருந்துள்ள நித்யஸூரிகளும் முக்தரும், (సదాపశ్యన్తి) (ஸதாபச்யந்தி) (ఇమాంల్లోకాన్ కామాన్నీ కామరూప్యనుసఞ్చరన్, ఏతత్సామగాయన్నాస్తే, హా3వుహా3వు) என்கிறபடியே பரத்வத்தை முற்றூட்டாக வநுபவித்து ஸாமகாநம்பண்ணிக்கொண்டு களித்து, (నోపజనంస్మరన్నిదంశరీరమ్) (நோபஜநம்ஸ்மரந்நிதம்ஶரீரம்) என்கிறபடியே-லீலாவிபூதியிலே கண்வையாதேயிருந்தார்களாகையாலும், லீலாவிபூதியிலுள்ள

மூ.—பூமன்னுமாதுபொருந்தியமார்பன்புகழ்மலிந்த
பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன்பல்கலையோர்
தாமன்னவந்தவிராமாநுசன்சரணாரவிந்தம்
நாமன்னிவாழ்நெஞ்சேசொல்லுவோமவன்நாமங்களே. (க)

பதம்.	உரை.
	(पद्मेस्थिताम्) (பத்மேஸ்திதாம) என்கிறபடியே,
பூ	தாமரைப்பூவை,
மன்னு	இருப்பிடமாகவுடைய,
மாது	பெரியபிராட்டியார், இந்த போக்யதையைக்கண்டபின்பு அத்தை உபேக்ஷித்து, (இறையும் அகல கில்லேன்) என்றும்,
பொருந்திய	நித்யவாஸம் பண்ணும்,
மார்பன	திருமார்பையுடையவனுடைய,
புகழ்	கல்யாண குணங்களால்,
மலிந்த	ஸம்ர்த்தமா யிருந்துள்ள,
பா	திருவாய்மொழியிலே,

பதம்.	உரை.
	(கவியமுதம் நுகர்ச்சியுறுமோ முழுதும்) என்னும்படி,
மன்னு	திருவுள்ளத்தில ஊற்றத்தை யுடையரான,
மாறன்	ஆழவாருடைய,
அடி	திருவடிகளை,
பணிந்து	ஆச்ரயித்து,
உய்ந்தவன்	உஜ்ஜீவித்தவராய்,
பல்கலையோர்தாம	அநேக சாஸ்த்ரங்களை அதிகரித்திருக்கச்செய்தேயுமதத்வஹித புருஷார்த்தநிர்ணயமபண்ணவறியாதே ஒன்றிலும ஒருநிலையற்றிருக்குமவர்கள், அவற்றினுடையயாதாத்மய வேதநத்தாலே,
மனன	ஸுப்ர திஷ்டிதராமபடியாக,
வந்த	அவதரித்த,

ஸம்ஸாரிஜநங்களப்ராக்ர்தத்வேந அஜ்ஞாநகையாலே, (नन्दन्त्युदित आदित्ये नन्दन्त्यस्तमिते रवौ) (நந்தந்த்யுதித ஆதித்யே நநதந்த்யஸ்தமயேரவௌ) என்றும், (உண்டியேயுடையேயுகந்தோடும்மண்டலம்) என்றும்சொல்லுகிறபடியே உண்டுடுத்து, * (புறமேபுறமேயாடி) என்கிறபடியே லீலாவிபூதியிலே சௌரிசிந்தா விமுகராய் விஷயாந்தரங்களிலே மண்டியிருக்கையாலும, எமபெருமானார் ஸமபந்தமுடையஜ்ஞாநாதிகரெல்லாரும்,(பாலேபோல்சீர) என்கிறபடியே பரமபோக்யமானவவருடைய கல்யாணகுணங்களை யநுதிலேது,(காலாழும்நெஞ்சழியும) இத்யாதிப்படியே அவ்வநுபவதபவித் ஆழங்கால்பட்டு குமிழ்நீருண்டுகின்றார்களாகையாலும, இந்நால் வரும் துணையல்லா தொழிகையாலே தம்முடைய ஸுகதுக்கங்களுக்கு எப்போதும் பொதுவாயிருக்கிற தம்மநஸ்ஸை துணையாக வேணுமென்று திருவுள்ளம்பற்றி அதுதன்னையே ஸமபோதித்துச் சொல்லுகிறார்.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
இராமாநுசன்	எம்பெருமானாருடைய,	நாமங்கள்	திருநாமங்களைப் பேசுவோம்.
சரணாரவிந்தம்	திருவடித் தாமரைகளை,	சொல்லுவோம்	
நாம்	இதுவே ப்ராப்யமென்றறிந்த நாம்,		
மன்னி வாழ	பொருந்தி வாழும்படியாக,		
நெஞ்சே	நெஞ்சே!,		
அவன்	அவருடைய,		

தாம்மன்னவென்றது- தாங்களே வந்தாச்ரயிக்கும்படி யென்றுமாம். நாமென்றது - அநாதிகாலம் இதரவிஷயங்களின் காற்கடையிலே துவண்ட நாமென்னவுமாம். மன்னுதல் - பொருத்தமும், நிலைப்பாடும். ... (க)

வ்யா.— (பூமன்னுமாதுபொருந்தியமார்பன்) (పద్మేస్థితాం) (பத்மேஸ்த்திதாம்) என்றும்,(மலர்மேல்மங்கை)என்றும், (అరవిన్దవాసినీ) (அரவிந்தவாஸிநீ) என்றும் சொல்லுகிறபடியே-ஸௌகந்த்ய ஸௌகுமார்யங்களாலே அத்யந்தபோக்யமான தாமரைப்பூவின் பரிமளந்தானே ஒருவடிவுகொண்டாப்போலே அதிலேயவதரித்த பெரியபிராட்டியார் ஸ்வயம் "பத்மிநி" என்கிறபேரை யுடையளாய், அவ்வீட்டின்போக்யதையாலே அத்தைவிடமாட்டாதே இருப்பிடமாக அதிலேயிருந்து அதுவேநிரூபகமாகச் சொல்லப்பட்டபின்பு, * ஸாக்ஷாந்மந்மதமந்மதனான நாராயணன், தன்னை தனக்கு பத்நியாக பரிணயித்துபரிஷ்வங்கம்பண்ணவே அவன்திருமார்வையநுபவித்து அந்தபோக்யதையிலே யீடுபட்டு நின்றபின்பு தாமரைப்பூவின் போக்யதையும் அருவருத்து ஒருக்காலும் அத்தைஸ்மரியாதே,(இறையும் - அகலகில்லேன்) என்று நித்யவாஸம் பண்ணபபடுகிற திருமார்வையுடையனான ஸர்வேச்வரனுடைய. (பூமன்னுமாது பொருந்தியமார்பன்) என்று - விசேஷ்யபூதனான ஸர்வேச்வரனுடைய நாமநிர்த்தேசம்பண்ணாதே, அமுதனார் விசேஷணபூதையான பெரியபிராட்டியாரைமாத்ரமே யருளிச்செய்தது, "அகஸ்த்யப்ராதா" என்றாப்போலே யிருக்கிறதுகாணும்; அப்படியேயிறேச்ருதிஸ்ம்ருதிகளிலும்,(శ్రద్ధయా దేవో దేవత్వమశ్నుతే) (ச்ரத்தயாதேவோதேவத்வமச்நுதே) என்றும், (అప్రమేయం హి తత్తేజో యస్య సా జనకాత్మజా) (அப்ரமேயம்ஹிதத்தேஜோ யஸ்யஸாஜநகாத்மஜா) என்றும்-இவளையிட்டு அவனுடைய அதிசயம் சொல்லப்படுகிறது. (పితుశ్శతగుణం మాతా గౌరవేణాతిరిచ్యతే) (பிதுஶ்ஶதகுணம் மாதாகௌரவேணாதிரிச்யதே) என்று பர்த்தாவுக்கு இப்படியே ப்ரதிபத்தியுண்டாகவேண்டியிருக்குமிறே.

(புகழ்மலிந்த) * (உயர்வறவுயர்நலமுடையவன் - அயர்வறும மரர்களதிபதி) (திடவிசும்பெரிவளிநீர் நிலமிவைமிசை படர்பொருள்முழுவதுமாயவையவைதொறும் உடல்மிசையுயிரெனக்கரந்தெங்குமபரந்துளன் சுடர்மிகு சுருதியுளிவையுண்டசுரன்,)

* (நீர்தொறும்பரந்துளன் பரந்தவண்டமிதென) (ஒன்றுந்தேவு முலகுமுயிரும் மற்றும்யாது மில்லாவன்று நான்முகன்றன்னொடு தேவருலகோடுயிர்படைத்தான்) (உலகமுண்ட பெருவாயா வுலப்பில்கீர்த்தியம்மானே,) (புணராநின்ற மரமேழன்றெய்த வொருவில்வலவாவோ புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோன முதல்வாவோ) (கோலாதாற்றேறுனபாதம் காணவென்று நுண்ணுணர்வில் நீலார் கண்டத்தம்மானும் நிறைநான்முகனுமிந்திரனும்) (செந்தாமரைக்கட்செங்கனிவாய் நாற்றோளமுதே யெனதுயிரே) (முனியேநான்முகனே முக்கண்ணப்பா,) * (சூழ்ந்ததனிற்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ! சூழ்ந்ததனில் பெரியசுடர் ஞானவின்பமேயோ) என்று தலைக்கட்டுகையாலே, (உயர்வற) என்று தொடங்கி, (உயர்ந்தே) என்னுமளவும - ஆதிமத்யாவஸாநங்களிலே ஒருபடிப்பட்ட கல்யாணகுணங்களால் ஏற்பட்ட.

(பா) பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளபடி விசததமமாவநுபவிக்கவநுபவிக்க அது உள்ளடங்காமே, பக்திபலாத்காரத்தாலே வந்ததானாலும், (పాదబద్ధోక్షరసమస్తంత్రీలయసమన్వితః) (பாதபத்தோக்ஷரஸமஸ்தந்த்ரீலயஸமந்விதः) என்னுமாப்போலே நிர்ஹேதுகபகவத் விஷயீகாரத்தாலே ஸாவலக்ஷண்யபேதமாய, (கவியமுதம்) என்றும், (தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள் சொன்னேன) என்றுமதாமேச்லாகிக்குமபடியான திருவாய்மொழியிலே, (மன்னு) ஸாவத்ராநிப்சலராயிருந்துள்ள (மாறன) (அரங்கரவண்புகழ்மேலான்றதமிழ்மறைகளாயிரமும் ஈனறமுதலதாய் சடகோபன் * குழல்மலியசசொன்னவோராயிரத்தே.

(மாறன) இது வாயத்து ப்ரதமோபாதாநமான திருநாமம். (వినాశాయచదుష్కృతామ్) (விநாஶாயசதுஷ்கர்தாம்) என்னுமாப்போலே பாஹ்யகுத்ருஷ்டிகளை சிக்ஷித்து அவர்களுடைய ஸம்ஸாரநாசகரரானவர். (மாறன) அஜ்ஞாநத்துக்குமாரகா. அன்றிக்கே, (సాక్షాన్మన్మథమన్మథః) (ஸாக்ஷாந்மந்மதமந்மதः) என்கிறவனும பிச்சேறி ஊமத்தங்காய திந்றவனைப்போலே - * மின்னிடைமடவாரில் வ்யாமுக்த்தனும்படி பண்ணவல்லதாய் பெண்பிள்ளைத்தனத்தையும, * ஊனிலவாழுயிரிலே ஒரு நீராகக்கலந்து வ்யாமுக்தனும்படி பண்ணவல்லஜ்ஞாநாதிகபத்தையுமுடையவராகையாலே (மாறன) எனனவுமாம. இப்படிப்பட்ட ஆழ்வாருடைய. (அடி) ஆழ்வார்பர்யந்தமல்ல இவர் தம்முடையஸ்வாமித்வாத்யவஸயம. ஆக தமக்கு நிருபாதிகஸ்வாமியானவனென்னுதல். தம்மைவசீகரிக்கைக்கு மூலமானவனென்னுதல். இப்படிப்பட்ட திருவடிகளை. (பணிந்து) ஆச்ரயித்து. (శ్రీమత్తదంఘ్రియుగళం ప్రణమామి మూర్ధ్నా) (ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா) என்று ஆளவந்தாரருளிச்செய்தது. அடியிலே யிப்படி யருளிச்செய்கையாலே இப்ப்ரபந்தம் சரமபர்வநிஷ்டர் விஷயமென்று தோற்றுகிறது.

http://acharya.org

(உய்ந்தவன்) உஜ்ஜீவித்தவன். இவருக்கு உஜ்ஜீவநம் அந்ந பாநாதிகளாலேயன்றுகாணும், ஆழ்வார் தமமுடைய திருவடிகளை இவருக்குருப்படியாகவிட்டுப்போநதாரிறே. அவ்வாழ்வார் திருவடிகளைப்பணிந்தபின்பு இவர் அவைதன்னையேயநுபவித்துப்போந்தார். ஆழ்வாரகுகும இவர்ககும காலவிப்ரகர்ஷடமாளுலும், முதலிலே ஆழ்வார்நாதமுனிகளுககு உபதேசமபணணுமபோது இவரை தயாநமபண்ணி, (యస్స్వాపకాలే కరుణాకరస్సన్ భవిష్యదాచార్యవరస్య రూపమ్। సన్దర్శయామాస మహానుభావం తం కారిసూనుం శరణం ప్రపద్యే) (யஸ்வாபகாலே கருணாகரஸ்ஸநபவிஷ்யதாசார்யவரஸ்யரூபம - ஸந்தர்ஶயாமாஸ மஹாநுபாவம் தம்காரிஸூநும் ஶரணம்ப்ரபத்யே) எனகிறபடியே இவருடைய பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை ஸ்வப்நமுகேந நாதமுனிகளுககுக காட்டிகொடுத்தபடியை யபிமாநித்து, பரகதஸ்வீகாரத்தாலே அவருககு ஆசார்யராகையாலே இவரும் அவ்வாழ்வார் திருவடிகளைப்பற்றி, அவர, (உணணுஞசோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெலலாம கண்ணனெமபெருமான்) என்று அத்யவஸித்த பகவத்பரபாவத்தை ஸ்ரீபாஷ்யமுகேந ப்ரகாசிப்பித்து, வேஙகடாசல யாதவாசலஸ்தலஙகளை, ([illegible] ప[illegible]రబ్రహ్మణః [illegible] లక్ష్మణోయం మునిః) (த்ருமாஷ்டிகுஹநாமுகே நிபதத:பரப்ரஹ்மண:। கரகாஹவிசக்ஷரோஜயதி லக்ஷமணோயம் முநி:) எனகிறபடியே நிர்வஹித்து ஸகலதிவ்யதேசங்களையும் திருத்தி இதுவே உஜ்ஜீவநமாகவிருக்கிறவரென்றபடி.

(பல்கலையோர்) ஸகலசாஸ்த்ரபாரீணரான கூரேச குருகேச கோவிந்த தாசரதிமுதலானமுதலிகளும் பரந்யவஸ்ததாநம்பண்ணி ப்ரஸங்கித்தபின்பு எமபெருமானார தம்முடைய விஷயீகாரத்தாலே தத்வஹிதபுருஷார்த்த யாதாத்ம்யஜ்ஞாநத்தைபபெற்ற யாதவப்ரகாச யஜ்ஞமூர்த்யாதிகளும் (தாம்மன்ன) யதாவஸ்திதஜ்ஞாநத்தாலே ஸுப்ரதிஷ்டிதராம்படி. மன்னுதல-பொருந்தமும், நிலைப்பாடும (வந்த) பரமபதத்தினின்றும ஸர்வேச்வரனுடைய நியமநத்தாலே யெழுந்தருளின. (இராமாநுசன) இவர் சகரவர்த்தித் திருமகனை அநுஸரித்து ஜநித்தார்காணும்; அவன், (అభయం సర్వభూతేభ్యో దదామ్యేతద్ వ్రతం మమ) (அபயம்ஸர்வபூதேப்யோ ததாம்யேதத்வ்ரதம்மம) என்று ஸாவருக்கும அபயப்ரதாநம்பண்ணினுப்போலே இவரும மோக்ஷோபாயமான மந்த்ரத்தை ஸ்ரீதாநம்பண்ணினுரிறே. இப்படிப்பட்ட வெம்பெருமானுருடைய. (சரணாரவிந்தம்) அரவிந்தமென்கிற, மந்மதபாணம் போலேதம்மை மோஹிப்பித்தவையாகையாலே சரணங்களுககு அரவிந்தத்தைப் போலியாகச்சொல்லுகிறுர். ஆச்ரிதருக்கு பாவநத்வ போக்யதைகளாலே ஏகரூபமாயிருககையாலே ஏகவசநப்ரயோகம் பண்ணுகிறுர். (மன்னி) ஆச்ரயித்து. நிஸ்சலமாகத்ர்டாத்யவஸாயத்தைப் பண்ணி.

(நாம்வாழ) நாமொருத்தனுமே ஆச்ரயிக்க என்னுடைய ஸம்பந்திஸம்பந்திகளெல்லாம, (ప్రయతపాణిశ్శరణమహంప్రపద్యే)(స్వస్తిచిన్తాథ్యేమ్యభయమస్తు అస్తు) (భుక్త్వైభోగానవిదితనృపస్పైరకస్యార్భకాదిః) என்றும், (ఋణంభవత్సత్వం)(సాచత్వయైవకమలారమణేర్థితాయత్ క్షేమస్స ఏవహియతీన్ద్రభవచ్ఛ్రితానామ్) என்றும் சொல்லுகிறபடியே உஜ்ஜீவிக்கும்படியாக, (సకృదేవప్రపన్నాయ తవాస్మీతిచయాచతే। అభయంసర్వభూతేభ్యో దదామ్యేతద్వ్రతంమమ) என்று அவன் சொன்னானிறே (நாமமன்னி) (రామానుజస్యచరణౌశరణంప్రపద్యే) என்றபடி. (வாழ) (ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ) என்றபடி. (நெஞ்சே) ஒருமஹாநிதிலாபத்தால் அந்தரங்கராயிருப்பாரைக்குச்சொல்லுவர் லௌகிகர், அப்படியே தமக்கு அந்தரங்கமான மநஸ்ஸை ஸம்போதித்துத் தாம் பெற்ற பேற்றைச் சொல்லுவதாக ஸம்போதிக்கிறார்.

(சொல்லுவோமவன்நாமங்களே) நாமிருவருங்கூடி அவர் திருநாமங்களைச் சொல்லுவோம். * వాచాధర్మమవాప్నుహి - வாசாதர்மமவாப்நுஹி என்கிறார். ஒருக்திமாத்ரத்தாலே ப்ராப்யப்ராபகங்களிரண்டுமத்தர்மபூதமான சரணாரவிந்தத்திலே அத்திருநாமந்தானே நம்மைச்சேர்க்கும. ரஸ்யமான பதார்த்தம் லபித்தால், (ఏకస్స్వాదుసభుఞ్జీత) బోధయన్తఃపరస్పరమ్) என்கிறபடியே அந்யோந்யம்ரஸித்துக் கொண்டு அநுபவிக்கக்கடவோமென்றபடி. (அவன்நாமங்களே) (தேவுமற்றறியேன்) என்று - அநந்யபரராகக்கொண்டு அவருடைய திருநாமங்களைச் சொல்லுவோம. த்ரிவிதகரணங்களால் இல்லையாகிலும் * நாமஸங்கீர்த்தநாம்ர்தமே யமையும். (కురోరానామసదాజపేత్) (குரோர்நாமஸதாஜபேத்) என்னக்கடவதிறே. (நெஞ்சேசொல்லுவோம) என்றது - தமக்கு உபகரித்த உபகாரத்தை யநுஸந்தித்து சேதநஸமாதியாகச்சொல்லுகிறார். (నచేద్రామానుజేత్యేషాచతురాచతురక్షరీ। కామవస్థాంప్రపద్యన్తే జన్తవోహన్తమాదృశాః) (நசேத்ராமாநுஜேத்யேஷாசதுராசதுரக்ஷரீ। காமவஸ்தாம்ப்ரபத்யந்தே ஜந்தவோஹந்தமாத்ர்சாஃ) என்றானிறே ஆழ்வான். (வேதமொருநான்கினுட் பொதிந்தமெய்ப்பொருளும் கோதில்மநுமுதல்கூறுவதும், தீதில், சரணாகதிதந்ததன்னிறைவன்றாளே, அரணாகுமென்னுமது) என்று அருளாளப்பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்தாரிறே. (பூமகள்கோன் தென்னரங்கன் பூங்கழற்குப்பாதுகமாய்த், தாமகிழுஞ்செல்வச்சடகோபர், தேமலர்த்தாட்கு, ஏய்ந்தினியபாதுகமாமெந்தை யிராமாநுசனை, வாய்ந்தெனது நெஞ்சமேவாழ்) என்றிறே ஜீயருமருளிச்செய்தது. (నగురోరపరస్త్రాతా) என்னக்கடவதிறே. ... ... (க)

அ.—இரண்டாம்பாட்டு. என்னுடையநெஞ்சானது எம்பெருமானாருடைய சீலகுணமொழியவேறொன்றை நினையாதபடியாய்த்து, இது எனக்கு வித்தித்தபெருவிரகு ஒன்றுமறிகிறிலேனென்கிறார்.

மூ.—கள்ளார்பொழில்தென்னரங்கன்கமலப்பதங்கணெஞ்சில்
கொள்ளாமனிசரைநீங்கிகுறையல்பிரானடிக்கீழ்
விள்ளாதவனபனிராமாநுசன்மிக்கசீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சொன்றறியேனெனக்குற்றபேரியல்வே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கள் ஆர்	மதுமிக்க,	குறையல்	திருக் குறையலூரைத்திருவவதாரஸ்தலமாகவுடையராய்,
பொழில்	பொழிலையுடைத்தாய்,	பிரான்	திவ்யப்ரபந்த நிர்மாண முகத்தாலே லோகோபகாரகரான திருமங்கையாழ்வாருடைய,
தென	தர்சநீயமாயிருந்துள்ள,	அடிக்கீழ்	திருவடிகளின்கீழ்,
அரங்கன்	கோயிலிலே கண்வளர்ந்தருளுகையாலே அததேசஸம்பந்தத்தை யிட்டுத்தம்மைநிரூபிக்கலாம்படியிருக்கிற பெரிய பெருமாளுடைய,	விள்ளாத	விட்டுநீங்காத,
கமலப்பதங்கள்	விகாஸாதிகளால் தாமரை போலே போக்யமான திருவடிகளை,	அன்பன்	ஸ்நேஹத்தையுடையராயிருந்துள்ள,
நெஞ்சில்	தங்கள் மநஸ்ஸிலே	இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
கொள்ளா	ஒருக்காலும் வையாத,	மிக்கசீலமல்லால்	நிரவதிகமான சீலகுணத்தையொழிய,
மனிசரை	சாஸ்த்ரவச்யமான ஜந்மத்திலே பிறந்துவைத்து நிர்ப்பாகயரா யிருக்குமவர்களை,	எனநெஞ்சு	என்னுடைய நெஞ்சானது,
நீங்கி	விட்டகன்று,	ஒன்றுஉள்ளாது	வேறொன்றையும் சிந்திக்கிறதில்லை;
		எனக்குஉற்ற பேரியல்வு	இது எனக்குவித்தபெரியவிரகு,
		ஒன்றறியேன.	ஒன்றுமறிகிறிலேன்.
		விள்ளுதல்	நீங்குதல். இயல்வு-விரகு ... (உ)

அ.—இரண்டாம்பாட்டு. கீழ்ப்பாட்டில், (நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே) என்று-தம்முடைய மநஸ்ஸோடேகூடி உபதேசித்தவாறே மநஸ்ஸானது அவருடையசீலகுணத்திலேஆழங்கால்பட்டு, (అనన్యాక్షిప్తస్మృతిః) (அநந்யாக்ஷிப்த ஸ்ம்ருதி) (அநங்யாஸ்சிந்தயந்தோமாம்) என்கிறபடியே அவர்திருவடிகளை அநுபவித்துக்கொண்டு தத்வ்யதிரிக்தமானவற்றை விரும்பாதே யிருந்தது,இதென்ன ஆச்சர்யமென்கிறார்.

http://acharya.org

வ்யா.—(கள்ளார்பொழில்) "மதுவிருந்தொழுகின மாமலரெல்லாம் - கொழுங்கொடிமுல்லையின் கொழுமலரணவிக் கூர்ந்தது, குணதிசை மாருதமிதுவோ, எழுந்தன மலரணைப்பள்ளிகொணடன்னமீர்பனிநனைந்த தமிருஞ்சிறகுதறி - பைம்பொழில கமுகின் மடலிடைக் கீறிவண்பாளைகள்நாற வைகறைகூர்ந்ததுமாருதமிதுவோ) என்றும, (வான்றிகழுஞ்சோலைமதிளரங்கர்) என்றும், (పూగకణ్ఠద్వయసస్సరసస్నిగ్ధనీరోపకణ్ఠాం ఆవిర్మోదస్తిమితశకునానూదితబ్రహ్మఘోషామ్) (பூகீகண்டத்வயஸஸரஸஸ்நிக்த்த நீரோபகண்டாம் ஆவிர்மோதஸ்திமிதசகுநாநூதிதப்ரஹ்மகோஷாம) என்றும சொல்லுகிறபடியே மதுஸ்யந்தியான புஷ்பவிசேஷஙகளாலே வ்யாப்ததஙகளான உத்யாநஙகளாலே சூழப்பட்ட.

(தென்னரங்கன்) அநதாலே தர்சநீயமான திருவரஙகமே தனககு நிருபகமாமபடி நித்யவாஸம்பணணுகிற ஸ்வாமியுடைய திருப்பதியெனறபடி. இவ்விடததுககு இது முகயமான திருநாமங்காணும். (கமலப்பதஙகள்) கமலப்பதமதிர்ததவாசகமாய-பாவநமானவெனனுதல்; ஸம்ஸாரதாபதபதனுடைய ச்ரமஹரமானவென்னுதல் பாதககமலம என்றதே முந்துறமுனனம(கமலம)என்றது - ஸர்வேச்வரன திருவடிகளை ஸேவிககுமபோது பாவநதவாதிகளுககுமுனனே போகயதையைககண்டு முறறூடடாக வநுபவித்தவராகையாலே. (நெஞ்சிலகொளளாமணிசனை) ([illegible]) (விசித்ராதேஹஸம்பத்திரீச்வராயநிவேதிதும - பூர்வமேவகருதாப்ரஹ்மன்ஹஸ்தபாதாதிஸம்யுதா) ([illegible]) என்கிறபடியே அலப்யலாபமாக பகவச்சரண கமலபரிசரணததுக்கு இடடுப் பிறந்த மநுஷ்யதேஹத்தைப்பெறறும திருவடிகளைநெஞ்சிலேகொள்ளாதே யிருககிற கர்பபநிர்பபாகயா கோஷ்டியிலநின்றும், (நீங்கி) அகன்று. ([illegible]) என்று ஸர்வரும் சலாகிக்கும்படி பாஹ்யகுதர்ஷ்டிகளை பராஜிதமாகப் பண்ணுவித்து

(குறையல்பிரான்) திருக்குறையலூரிலே யவதரித்து, திவ்யப்ரபந்தநிர்மாணத்தாலும திருவத்யயநத்துககு ஏகாதசியிலே திருநாள் நடப்பித்தபடியாலும, அவ்விடத்திலே பெருமாளுககு ரணுகததிருமதிளை நிர்மாணமபண்ணிவைததபடியாலும், ருகரபக்ஷபாதிகளான குதர்ஷ்டிகளோடே தர்க்கித்து அவர்களைஜயித்து அவர்களாலே பழிகைப்பட்ட திவ்யதேசங்களை நிர்வஹித்தபடியாலும், இப்படிகளாலே உபகாரகரான திருமங்கையாழ்வாருடைய

http://acharya.org

இவ்விடத்திலே இன்னமொருயோஜனையுண்டு;-(குறையல்பிரான்) (குறைவொன்றுமில்லாத கோவிந்தா) என்கிறபடியே ஹேயப்ரத்யநீகனான கோவிந்தன். கோவர்த்தநோத்தரணம் பண்ணினபோது இந்த்ரன் கோவிந்தாபிஷேகம்பண்ணினவாறே கோகோபீஜநங்களை ரக்ஷித்த உபகாரகன். அந்த அவதாரத்திலே, பூதநா சகட யமளார்ஜுநாரிஷ்ட ப்ரலம்ப தேநுக காளியகேசிகுவலயாபீட சாணூர மௌஷ்டிக கம்ஸாதிகளைநிரஸித்து ஸ்வாச்ரிதர்களான பாண்டவர்களுக்கு தௌத்யஸாரத்யங்களைப்பண்ணி, (ஸர்வதர்மான்பரித்யஜ்ய) என்றுதொடங்கி(மாசுச:)என்னுமளவும் தத்வோபதேசம்பண்ணியும், இப்படி நிகிலமநுஜமநோநயநஹாரி திவ்யசேஷ்டிதங்களைப் பண்ணின உபகாரகன். இதில சரமச்லோகத்தை உபதேசிக்கை உபகாரத்திலே ப்ரதாநம். இப்படி ஒரு அர்த்தவிசேஷம தோன்றினாலும் நம்மாசார்யர்கள திருமங்கைமன்னன்விஷயமாக அருளிச்செய்கையாலே பேசிறதே பேசுகையே அவர்களுக்கேற்றமென்று முதல்சொன்னபொருளே ஸங்கதமாகக்கடவது. (அடிக்கீழ்) திருமங்கையாழ்வாருடைய திருவடிகளின்கீழே.

(விள்ளாதவனபன) இவ்வாழ்வார் ப்ரதமபர்வ நிஷ்டராகையாலே, * அணிபொழில் திருவரங்கத்தம்மானை ப்ரார்த்தித்துக்கொண்டிறேயிருப்பர்; இவ்வெம்பெருமானார் சரம பர்வததிலே ஊற்றமுடையவராகையாலே அவ்வாழ்வாருடைய திருவடிகளின் கீழ் ஒருகாலும்விடாதே ஸக்தமான பகதியை யுடையராயிருப்பர். விள்ளுதல்-நீங்குதல். அன்பு-பகதி. (இராமாநுசன்)பூர்வாவதாரத்திலே ராமாநுவர்த்தநமபண்ணின வாஸனை இப்போதும் அநுவர்த்திகையாலே இதுக்கு சரமபர்வமானவிதிலே ஈடுபட்டார்காணும். (மிககசீலமல்லால்)தாம் மஹாநுபாவராயிருந்துவைத்தும் என்போலாம மந்தமதிகளோடே புரையறகலந்து பரிமாறின சீலகுணம் ஒன்றிலுமே ஈடுபட்டு, அதொழிய வேறொன்றிலும் போகமாட்டாது. உள்ளுதல்-சிந்திததல். (என்னெஞ்சு) என்மநஸ்ஸு. என்னாலே உபதேசிக்கப்பட்ட நெஞ்சு (ஸம்ஸாரஸாகராத்... ...) என்னும்படியாய்த்து

(ஒன்றறியேனெனக்குற்றபேரியல்வே)என்னவாச்சர்யம்,இப்படி ப்ரவணமாகைக்குவிரகொன்றுமறிகிலேன்.(எனக்கு) (... ... ...) என்றுப்போலே பஹுஜந்மங்கள்தன்னில்தபோஜ்ஞாநஸமாதிகளைப் பண்ணவேண்டியிருக்க, அங்ஙனன்றியே, (சொல்லுவோமவன் நாமங்களே) என்று அத்யவஸாய மாத்ரம் பண்ணினபடி. எனக்கு, உற்ற-ஸித்தித்த. (பேரியல்வே)[... ...] ஸமஸ்தோபாயங்களைகாட்டிலும பெரிதாய் விலக்ஷணமான உபாயவிசேஷம்.

http://acharya.org

அ.—மூன்றும்பாட்டு. ப்ராக்ருதரோட்டை ஸம்பந்தத்தை நீக்கி எம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்தமுடையவர்கள் திருவடிகளில் ஸம்பந்தமுடையவர்கள் திருவடிகளிலே என்னைசேர்த்தவுபகாரததுக்கு நெஞ்சே! உன்னை வணங்கினேனென்கிறார்.

மூ.—பேரியல்நெஞ்சேயடிபணிந்தேனுன்னைப்பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ளசுற்றமபுலர்த்திப்பொருவருஞ்சீர்
ஆரியன்செம்மையிராமாநுசமுனிக்கன்புசெய்யுஞ்
சீரியபேறுடையாரடிக்கீழென்னைச்சேர்த்ததற்கே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பேர்இயல் நெஞ்சே	பெரியஸ்வபாவத்தையுடைய மநஸ்ஸே,	இராமாநுசமுனிக்கு	எமபெருமானார்விஷயத்திலே,
பேய்ப்பிறவி	ஹேயஜந்மாக்களாய்,	அனபுசெய்யும்	ப்ரேமத்தைப் பண்ணுகையாகிற,
பூரியரோடுள்ள	அஹங்காராதி தோஷதூஷிதரானவர்களோடுண்டான,	சீரியபேறுடையார்	பரம புருஷார்த்தத்தை யுடையவர்களுடைய,
சுற்றம்புலர்த்தி	ஸம்பந்தத்தைநீக்கி,	அடிக்கீழ்	திருவடிகளின்கீழே,
பொருவருமசீர்	உபமாந ரஹிதமான குணங்களையுடையராய்,	என்னைச்சேர்த்ததற்கு	என்னைச் சேர்த்த இநதமஹோபகாரத்துககு,
ஆரியன்	ஸமதிகதஸமஸ்தசாஸ்த்ரராய்,	உன்னை அடிபணிந்தேன்	உன்னை வணங்கினேன.
செம்மை	ஆச்ரிதருடையகௌடில்யம்பார்த்துக் கைவிடாதே அவர்களுக்கிடாகத்தம்மை யமைத்துப் பரிமாறும் ஆர்ஜவ குணயுக்தரான,		

பேய்ப்பிறவி தீதானபிறவி. பூரியர் - பொல்லாதவர்கள். பூரி - பொல்லாங்கு. புலத்தல் - நீக்கல். ... ... (௩)

(ஒன்றறியேன) எததாலே இந்தச்சொற்சோத்திலபித்தது, நான் ஒன்றுமறிகிறிலேன். * முந்துற்றநெஞ்சே! நீயறிந்தாயாகில் சொல்லிக்காணு யென்ன; (నాహంపురుషకారేణ సచాప్యన్యేనహేతునా। కేవలంస్వేచ్ఛయైవాహం ప్రేక్షేకఞ్చిత్కదాచన) என்னுமாப்போலே நிர்ஹேதுகமகாவிஷ்த்தித்ததொன்றாயத்து. இயலவு—விரகு. ... (உ)

அ —மூன்றும்பாட்டு. கீழ்ப்பாட்டிலே தம்முடைய நெஞ்சானது எம்பெருமானாருடைய சீலகுணத்திலே ஈடுபட்டமாத்ரமன்றிககே இப்படியநுபவிக்கஅநுபவிக்க அபிநிவேசம்கரைபுரண்டு என்னைக்கொண்டுபோய்த் ததீயருடைய திருவடிகளின்கீழே சேர்த்தது, இந்தமஹோபகாரத்துக்குத்தக்கஸமர்ப்பணம்தம்பக்கல் ஒன்றுமில்லையென்று * நெஞ்சினுடையகாலிலேவிழுகிறார். ()

http://acharya.org

வ்யா.—(பேரியல்நெஞ்சே) பெரியஸ்வபாவத்தை யுடைய மநஸ்ஸே. முதலிலே எம்பெருமானாருடைய சீலகுணத்திலேயிழிந்து அதிலே அத்யபிநிவிஷ்டமாய் உன்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக என்னையும் ததீயபர்யந்தமாக அத்யவஸிப்பித்தஸ்வபாவத்தையுடையமநஸ்ஸேயென்கிறபடி.(பேய்ப்பிறவிப்பூரியரோடுள்ள சுற்றம்புலர்த்தி) அஸுரவர்க்கத்திலே ஜநித்து நிஹீநரான மூடரோடுண்டான ஸம்பந்தத்தை ஸவாஸநமாகப்போக்கி. (ఆసురీంయోనిమాపన్నా మూఢాజన్మనిజన్మని। మామప్రాప్యైవకౌన్తేయ తతోయాన్త్యధమాంగతిమ్) என்றுசொல்லப்பட்ட நீசருடைய ஸம்பந்தத்தை, (అద్యప్రభృతి హే లోకాః యూయం యూయం వయం వయమ్) என்னும்படி பண்ணுவித்து. (கூழாட்பட்டு நின்றீர்களை யெங்கள் குழுவினில் புகுதலொட்டோம்) என்னும்படியே பண்ணுவித்ததென்கிறபடி. (பேய்ப்பிறவி) தீதானபிறவி. பூரியர்-பொல்லாதவர்கள். புலத்தல்-நீக்குதல்.

(பொருவருஞ்சீர்) (అచిన్త్యాద్భుతాక్లిష్టజ్ఞానవైరాగ్యరాశయే) என்கிறபடியே உபமாநரஹிதமாகையாலே ஏவம்பூதமென்று நிரூபித்துச் சொல்ல வரிதாயிருக்கிற கல்யாணகுணங்களையுடையராய். (ஆரியன்) ஸகலசாஸ்த்ரபாரீணராய். (యతిరాజో జగద్గురుః। తస్మిన్ రామానుజార్యే గురురితి చ పదం భాతి నాన్యత్ర) என்கிறபடியே இவ்விபூதியிலே யிருந்துள்ள ஸகலசேதநருக்கும் திருவேங்கடமுடையானுக்கும் ஆசார்யராய். (தன்னுரியனுக்கு) என்று ஆர்யபதத்தை ஆசார்யபத ஸமாநார்த்தமாக ஜீயர்பரயோகித்தருளினாரிறே.(செம்மை)தாம்ஸங்கல்பித்தபடியே அநுஷ்டித்தும் உபதேசித்தும் இப்படிகரணத்ரயஸாரூப்யதை யுடையரான. (ఆచినోతి హి శాస్త్రార్థానాచారే స్థాపయత్యపి। స్వయమాచరతే యస్తు స ఆచార్య ఇతీరితః) என்றிறே ஆசார்யலக்ஷண மிருக்கும்படி.

(இராமாநுசமுனிக்கு) (పుణ్యామ్భోజవికాసాయ పాపధ్వాన్తక్షయాయ చ। శ్రీమానావిరభూద్భూమౌ రామానుజదివాకరః) என்னும்படியான தம்முடைய அவதாரப்ரயோஜநத்திலே எப்போதும் மநநம்பண்ணிக்கொண்டிருக்கிற எம்பெருமானார்விஷயத்திலே. (அன்புசெய்யுஞ்சீரியபேறுடையார்) அத்யபிநிவிஷ்ட சித்தராய் அதுதானே விலக்ஷணமென்று அத்யவஸித்திருக்கும் ஆழ்வான்முதலான ததீயருடைய. (அடிக்கீழ்) திருவடிகளின்கீழே. (என்னைச்சேர்த்ததற்கே)என்னுடையசிரஸ்ஸிலே அத்திருவடிகள் பூஷணமாம்படி பூர்வகாலத்திலே சரமபர்வத்தினுடைய ப்ரபாவத்தை யறியாதேயிருக்கிறஎன்னை அமைத்துவைத்ததற்கே, தனக்கு நான் உபதேசிக்கவேண்டியிருக்கத தானே யெனக்கு புருஷகாரமாய் என்னைக் கொண்டுபோய் ததீயருடைய ஸ்ரீபாதத்திலே சேர்த்ததற்கு.

http://acharya.org

இந்தமஹோபகாரத்துக்குநான் எத்தைப்ரத்யுபகாரமாகப்பண்ணுவது என்று ஆராய்ந்துபார்த்தால், (మమనాథ యదస్తి యోస్మ్యహం సకలం తద్ధి తవైవ మాధవ। నియతస్వమితి ప్రబుద్ధధీరథవా కిన్ను సమర్పయామి తే) என்றிருக்கக்கடவதே, (బ్రహ్మవిద్యాప్రదానస్య దేవైరపి న శక్యతే। ప్రతిప్రదానమథవా గద్యాన్యూ... తత్ప్రదానాత్) என்றும், (ఏష సర్వస్వభూతో మే పరిష్వఙ్గో హనూమతః) என்றும் சொல்லுகிறபடியிலே, (அடிபணிந்தேனுனை) உன்னுடைய திருவடிகளிலே ஆச்ரயித்தேனே; உனக்கொரு நமஸ்காரம் பண்ணுகிறேனென்றபடி. (వాచా యతీన్ద్ర మనసా వపుషా చ యుష్మత్పాదారవిన్దయుగళం భజతాం గురూణామ్। కూరాధినాథకురుకేశముఖాద్యపుంసాం పాదానుచిన్తనపరస్సతతం భవేయమ్) என்று - பெருப்பெருக ஜீயர்ப்ரார்த்தித்தருளின ததீயபாரவச்யத்தைக்காறும் இவருக்கு இவருடைய மநஸ்ஸு முதலிலே யுண்டாக்கிற்று. ... ... (௩)

அ.—நாலாம்பாட்டு. இப்படி திருவுள்ளத்தைக்கொண்டாடின வாறே இன்னமும் துர்வாஸநையாலே நெஞ்சுதான் நழுவநிற்குமாகிலும் உம்முடையநிஷ்டைக்கு ஹாநிவாராதோவென்ன; எம்பெருமானார் தாமே நிர்ஹேதுகமாக அங்கீகரிக்கப்பெற்ற வெனக்கு ஒருஹாநியும் வாராதென்கிறார்.

மூ.—என்னைப் புவியிலொருபொருளாக்கி மருள்சுரந்த
முன்னைப்பழவினை வேரறுத்தூழிமுதல்வனையே
பன்னப்பணித்த விராமாநுசன்பரன் பாதமுமென்
சென்னித்தரிக்கவைத்தானெனக்கேதுஞ்சிதைவில்லையே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஊழி	காலோபலக்ஷிதஸகல பதார்த்தங்களுக்கும்,	மருள்சுரந்த	அவித்யா ஸம்வர்த்தமாய்,
முதல்வனையே	காரணபூதனான ஸர்வேசவரனையே,	முன்னைப்பழவினை	அநாதியாகையாலே மிகவும்பழையதாயப்போருகிற கர்மங்களை,
பன்ன	ஸாவரும் விவேகித்தநுஸந்திக்கும்படி,	வேரறுத்து	ஸவாஸநமாகப்போக்கி;
பணித்த	ஸ்ரீ பாஷ்யமுகேந அருளிச்செய்த,	பாதமும்	தம்முடைய திருவடிகளையும்,
பரன்	ஸர்வோத்கர்ஷ்டரான,	என்சென்னித்தரிக்க	என்தலையிலே தரிக்கும்படிவைத்தருளினார்;
இராமாநுசன்	எம்பெருமானார்,	வைத்தான்	ஆனபின்பு,
என்னை	அவஸ்துவான வென்னை,	எனக்குஏதும்சிதைவில்லை	எனக்கு ஒரு பலஹாநியுமில்லை.
புவியில்	லோகத்திலே,		
ஒருபொருளாக்கி	ஒரு வஸ்துவாம்படி பண்ணி,		

(௪)

http://acharya.org

பதம். உரை	பதம். உரை.
அன்றிக்கே, (பரன்பாதமுமென்சென்னித் தரிக்கவைத்தான்) என்கிறவித்தைமேலே கூட்டி-ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேச்வரனுடைய திருவடிகளையும் என்	சென்னிதரிக்கவைத்தானென்னவுமாம். (பரன்பாதமென்சென்னித்தரிக்கவைத்தான்) என்றும் பாடமாம். பன்னுதல் - ஆராய்தல். சிதைவு-அழிவு, ... (௪)

அ.— நாலாம்பாட்டு. இப்படி மூன்றுபாட்டளவும் தம்முடைய அபிநிவேசாதிசயத்தைச் சொல்லிஞல் இதுஸ்வகதமாக வந்தது, அத்யந்தபாரதந்த்ர்யமான ஸ்வரூபத்துக்குச் சேருமோ, பரகதமாகவந்ததேயாகிலும் அதுக்குப்ரச்யுதியில்லையோவென்ன அருளிச்செய்கிறார்.

வ்யா.—(என்னை) இதபூர்வகாலத்திலே (నసమేయమ్) என்றிருந்தவென்னை. (అసన్నేవసభవతి, అసద్బ్రహ్మేతివేదచేత్) என்கிறபடியே ஒருபொருளல்லாத வென்னையென்றபடி. (புவியில்) * இருள்தருமாஞாலத்திலே. (ஒருபொருளாக்கி) (అస్తిబ్రహ్మేతిచేద్వేద, సన్తమేనంతతోవిదుః) என்கிறபடியே ஒருவஸ்துவாகப்பண்ணி. ப்ரஹ்மவித்துக்களிலே அத்விதீயனாகப்பண்ணி யென்றபடி. (மருள்சுரந்தமுன்னைப்பழவினை) (సంసారసాగరంఘోరమనన్తక్లేశభాజనమ్) என்றும், (అవివేకఘనాన్ధదిఙ్ముఖేబహుధాసన్తతదుఃఖవర్షిణి। భగవన్భవదుర్దినే) என்றும், (సంసారమరుకాన్తారే దుర్వ్యాధివ్యాఘ్రభీషణే। విషయాక్షుద్రగుల్మాఢ్యే తృషాపాదపశాలినే॥ పుత్రదారగృహక్షేత్ర మృగతృష్ణామ్బుపుష్కలే। కృత్యాకృత్యవివేకాన్ధం పరిభ్రాన్తమితస్తతః॥ అజస్రంజాతతృష్ణార్తమవసన్నాఙ్గమక్షమమ్। క్షీణశక్తిబలారోగ్యం కేవలంక్లేశసంశ్రయమ్॥ సన్తప్తంవివిధైర్దుఃఖైర్దుర్వచైరేవమాదిభిః) என்றும, (అనాదికాలప్రవృత్తాఽకృత్యకరణకృత్యాఽకరణ భగవదపచారభాగవతాపచారాసహ్యాపచారరూప నానావిధానన్తాపచారాన్) என்றும சொல்லுகிறபடியே அநாத்யவித்யாகர்ம வாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தாத்மகமாயிருந்துள்ள புண்யபாபரூபமான கர்மங்களை. (வேரறுத்து) வேர்விடந்தால் திரியட்டும் அங்குரித்து வளர்ந்துவருமென்று ஸமூலோந்மூலநமாகச சேதித்து.

(ஊழிமுதல்வனையே) காலோபலக்ஷிதமான ஸர்வகார்யவர்க்கத்துககும்ப்ரதாநகாரணபூதனான ஸர்வேச்வரனை. (సకారణంకారణాధిపాధిపః) என்றதிறேச்ருதி. (మామేకంశరణంవ్రజ। సర్వపాపేభ్యోమోక్షయిష్యామి) என்றும், (புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும்) என்றும் சொல்லுகிறபடியே இச்சேதநருடைய ப்ராப்திப்ரதிபந்தகங்களெல்லாவற்றையும் விடுவித்து, (కారణన్తుధ్యేయః) என்கிறவனை. (முதல்வனையே) என்கிற ஏவகாரத்தாலே - (మామేకంశరణంవ్రజ) (మామేవయేప్రపద్యన్తే) (తమేవచాద్యంపురుషంప్రపద్యే) (మామేకమేవశరణమాత్మానంసర్వదేహినామ్। యోహిసర్వాత్మభావేన) என்கிறபடியே அந்யயோகவ்யவச்சேதம்பண்ணினபடி.

http://acharya.org

(பன்னப்பணித்த) ஸர்வரும் விரும்பி விவேகித்தநுபவிக்கும்படி ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யமுகேந அருளிச்செய்த ஸர்வோத்க்ர்ஷ்டரான. பன்னுதல் - விவேகித்தல். (இராமாநுசன்) எம்பெருமானார். (సదాచార్యనూలో మన్త్రిరత్నః) என்று த்வயோபநிஷத்திலும், (యస్మాత్తదుపదేష్టాసౌతస్మాద్గురుతరో గురుః) என்று மஹாபாரதத்திலும், (గురుముఖాచ్ఛ్రీశం ప్రపద్యాత్మవాన్) என்று வரதாசார்யராலும், (దత్తేరఙ్గీనిజమపిపదం దేశికాదేశికాఙ్క్షే) என்று வேதாந்தாசார்யராலும், (నారాయణోఽపి వికృతిం యాతిగురోః ప్రచ్యుతస్యదుర్బుద్ధేః । కమలం జలాదపేతం శోషయతిరవిర్నపోషయతి) என்றுவரதாசார்யராலும, (భగవత్స్వరూపం సర్వస్వం గురువన్దనపూర్వకమ్) என்று அபியுக்தோகதியாலும அந்வயவ்யதிரேகங்களாலே சொன்னகட்டளையாலே, தம்மை ஸகலஜகத்காரணபூதனான எம்பெருமான் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்த வெம்பெருமானார்.

(பரன்பாதமுமென் சென்னித்தரிகக) ஸர்வோத்கர்ஷ்டரான வெம்பெருமானார் என்னுடைய சிரஸ்ஸிலே தரிக்குமபடி தம்முடைய ஸ்ரீபாதத்தை, (గురుర్వపరంబ్రహ్మ) என்று இவ்விஷயததிலே பரத்வப்ரதிபத்தி பண்ணினவராகையாலே (பரன்பாதம்) என்கிறார். அன்றிக்கே, (பரன்பாதமுமென்சென்னித்தரிகக) ஸர்வஸ்மாத்பரனுடைய ஸ்ரீபாததநதை நானசிரஸ்ஸாலே தரிககும்படியென்னவுமாம். (வைத்தான்) நிர்ஹேதுகமாக பரகதஸ்வீகாரமாய்த்தானேவைத்தான். இப்படிஸ்வரூபாநுரூபமானபேற்றைநான் பெறும்படி உபகரித்தானென்றபடி. (எம்மாவீட்டுத்திறமுஞ்செப்பம் நின், செம்மா பாதபறபுததலைசேர்தொல்லைக, கைமமாதுன்பங கடிந்தபிரானே, அமமாவடியேன் வேண்டுவதீதே) என்று மயர்வற மதிநலமருளப்பெறற நம்மாழ்வாரும்பரமபாவத்திலே அருளிசசெயதாரிறே.

இப்படியானபின்பு (எனககேதும் சிதைவில்லையே) (గురూణా యోఽభిమన్యేత) என்கிறபடியே பரகதஸ்வீகாரபாத்ரபூதனான வெனககு ஏதேனுமொருஹாநியுண்டோ. சிதைவு - அழிவு. (యదాహ్యేవైషఏతస్మిన్నదృశ్యేఽనాత్మ్యేఽనిరుక్తేఽనిలయనేఽభయం ప్రతిష్ఠాం విన్దతే। అథసోఽభయంగతో భవతి) (ఏతంహవావనతపతి, కిమహం సాధునాకరవమ్, కిమహం పాపమకరవమితి) என்று வேதபுருஷன் சொன்னானிறே. (சிதைவில்லையே) ஆகையாலே எனக்கொருகுறையுமில்லையெனகிறார். இவர் அடியேபிடித்து பாட்டுக்கள்தோறும், (சரணாரவிந்தம்) என்றும், (கமலப்பதங்கள்) என்றும், (பாதம், அடி) என்றும் இடைவிடாதே வாய்விட்டுப் புலம்புகிறார். மோருள்ளதனையும்சோறேயோ, ஆகிலும்இவர் தம்முடைய காதலிருக்கும்படி ஒருக்காற்சொன்னத்தை ஒன்பதின்கால்சொல்லிக்கொண்டு போந்தாரென்கை. .. ... (சு)

அ.—அஞ்சாம்பாட்டு. இப்படி எம்பெருமானாருடைய விஷயீகாரதார்ட்யத்தை யருளிச்செய்த வநந்தரம் அவன் திருநாமங்களைச் சொல்லுவோமென்று முன்பு உபக்ரமித்தபடியே ஸ்தோத்ரம்பண்ணுவதாக உத்யோகித்தவர், அதில் நிரவத்யமாகச்செய்கையாலே லாக்ஷணிகர்நிந்திப்பார்களேயென்று நிவர்த்யுந்முகராய், மீளவும் தாமேசித்தஸமாதாநம்பண்ணிக்கொண்டு ப்ரவர்த்தராகிறார்.

மூ.—எனக்குற்றசெல்வமிராமாநுசனென்றிசையகில்லா
மனக்குற்றமாந்தர்பழிக்கில்புகழ்வன்மன்னியசீர்
தனக்குற்றவன்பரவன திருநாமங்கள்சாற்றுமென்பா
வினக்குற்றங்காணகில்லார்பத்தியேய்ந்தவியல்விதென்றே.

பதம்.	உரை.
எனக்கு	நமக்கு,
உற்ற	ஸ்வரூபாநுரூபமான,
செல்வம்	ஸம்பத்து,
இராமாநுசனென்று	எம்பெருமானாரென்று.
இசையகில்லா	இசையாத,
மனக்குற்றம்	மநோதோஷத்தையுடைய,
மாந்தர்	மநுஷ்யர்,
பழிக்கில்	நிந்தித்தார்களாகில்
புகழ்	அதுஸ்துதியாமித்தனை;
அவன்	அவருடைய,
மன்னியசீர் தனக்கு	நித்யஸித்த கல்யாணகுணங்களுக்கு,
உற்ற	தகுதியான,
அன்பர்	ப்ரேமத்தை யுடையவர்கள்,
பத்தியேய்ந்த	பக்தியோடேகூடின,
இயல்விதென்று	ப்ரவ்ருத்தியையுடையதென்று,

பதம்.	உரை.
அவன்	அவருடைய,
திருநாமங்கள்	திருநாமங்களை,
சாற்றும்	சொல்லாநின்றுள்ள,
என	என்னுடைய,
பாஇனம்	சந்தஸ்ஸமூஹத்தினுடைய,
குற்றம்	குற்றத்தை,
காணகில்லார்	காணமாட்டார்கள்.

இயல்வு-ப்ரவ்ருத்தி. இயல்விதென்றது-இயல்வையுடையதென்றபடி. "பத்தியேய்ந்தவியலிது" என்று பாடமானபோது-இதுபக்தியோடேகூடினசொல்லென்றுகொண்டு குற்றம்காணகில்லாரென்கை. பா-சந்தஸ்ஸு. இனம்.-ஸமூஹம். தாழிசை, துறைவிருத்தமென்று இனத்தின் வகையான கலித்துறையாகையாலே பாவினமென்றாராகவுமாம். (ரு)

அ.—அஞ்சாம்பாட்டு. (எனக்குற்றசெல்வம்) கீழ்ப்பாட்டிலே - எம்பெருமானார் தம்மை நிர்ஹேதுகமாக விஷயீகரித்தாரென்று கொண்டாடினார்; இதில் - அந்தப்ரீதியாலே ப்ரேரிதராய்க் கொண்டு அவருடையகுணகீர்த்தநம்பண்ண உத்யோகித்து, குதர்ஷ்டிகளாயிருப்பார் இதில் ஏதேனுமொரு குற்றத்தை ஆரோபித்து தூஷித்தார்களாகில் அதுவேஎனக்கு பூஷணமென்றுசொல்லாநின்றுகொண்டு,இதின்ரஸமறிந்தவர்கள் குணமாகவிரும்புவர்களென்கிறார்.

http://acharya.org

வயா.—(எனக்குற்றசெல்வம்) (శరీరపాతనావధిప్రభునిషేవణాపాదనాదబిన్ధనధనఞ్జయప్రశమదన్ధనం ధనమ్) என்கிறபடியே அப்ராப்தமாய் அதிதீக்ஷ்ணமாய் அநித்யமான தநம்போலன்றிக்கே,(ధనఞ్జయవివర్ధనం ధనమ మూఢగోవర్ధనం సుసాధనమబాధనం సుమనసాం సమారాధనమ్) என்றும்,(ధనఞ్జయస్య స్యన్దనభూషణం ధనమ్) என்றும, (ధనం మదీయం తవపాదపఙ్కజమ్) என்றும், (అస్తి మేహస్తిశైలాగ్రే అస్తిపైతామహం ధనమ్) என்றும் சொல்லப்பட்ட விஷயத்திலுடைய சரமபர்வமாய் தக்யாதாத்ம்யபூதமாய், (కురుదేవపరం ధనమ్) என்று அவதாரணபரத்வப்ரதிபத்தி பூர்வகமாகவே நிஷ்கர்ஷிக்கப்பட்டதாய் எனக்கு ஸ்வரூபப்ராப்தமாயிருந்துள்ள ஸம்பத்து.

(இராமாநுசனென்று) (தந்தைநல்தாய் தாரம் தனயர்பெருஞ்செல்வமென்றனுக்கு நீயேயெதிராசா) என்கிறபடியே எம்பெருமாஞரோ தந்தாமுக்கு மஹாநிதியென்று அத்யவஸித்து. (తృణీకృతవిరిఞ్చ్యాదినిరఙ్కుశవిభూతయః) என்கிறபடியே ததந்யஸம்பத்துக்களையெல்லாம் அஸத்கல்பமாக தார்ணீகரித்து, நாம் அவருடைய குணகீர்த்தநமொன்றுமே பணணககடவோமென்று கணிசித்திருகக, (இசையகில்லா மனக்குற்றமாந்தர்) ஸம்மதிககமாட்டாதபடியான மநோதோஷத்தையுடைய மநதமதிகள்.

(பழிககில்) *இவர்கள், குணங்களை யறியமாட்டாதே தோஷதர்க்குக்களாகையாலே, (విద్యాన్యాశిల్పనైపుణమ్) என்று சொல்லப்படுகிற துஸ்தர்க்கங்களாலும் ஸாஹித்யததாலும் குதர்ஷ்டிகல்பநமாகிற தோஷங்களையேறிட்டு நிந்தித்தால் (మాయయాஅపహృతజ్ఞానాః) என்றும், (సమ్మ్యాహమజ్ఞాసన్తః) என்றும், (అజ్ఞానేనావృతం జ్ఞానం తేన ముహ్యన్తి జన్తవః) என்றுஞ்சொல்லுகிறபடியே அவாகள அஜ்ஞராகையாலே (மாந்தர்) எனகிருர். (ఇద్రాస్వప్రమాదోత్థం తత్త్వమస్యనుదాహృతమ్ । తామసకృత్స్నవిదోమన్దాన్) என்றிறே இவாகளை சாஸ்த்ரஞ்சொலலுகிறது.

(பழிக்கில்புகழ்) (జ్యోతిష్టోమేన స్వర్గకామో యజేత, వాయవ్యం శ్వేతమాలభేత భూతికామః। రాయస్పోషాయ సుప్రజాస్త్వాయ సువీర్యాయ) என்று பலததோடேவ்யாப்த்தங்களான காமயகர்மங்களை யிழந்தாரொன்றிறே அவர்கள் பழிசொல்லுவது, அவை தன்னை ஆராய்ந்தால், (యామిమాం పుష్పితాం వాచం ప్రవదన్త్యవిపశ్చితః) (నాన్యదస్తీతి వాదినః) (న తు మామభిజానన్తి తత్త్వేనాతశ్చ్యవన్తి తే। అన్తవత్తు ఫలం తేషాం తద్భవత్యల్పమేధసామ్) (క్షీణే పుణ్యే మర్త్యలోకం విశన్తి) (గతాగతం కామకామా లభన్తే) என்கையாலே ஸாதநாந்தரஙகளின் தோஷமறியாதவர்கள்சொல்லும்பழியாகையாலே அதுவேநமக்குப்புகழாம். (సత్కర్మనిరతాశ్శుద్ధాస్సాఙ్ఖ్యయోగవిదస్తథా । నార్హన్తి శరణస్థస్య కలాం కోటితమీమపి॥ యద్యేస కామకామేన నాసాధ్యస్స్యాధనాన్తరైః। ముముక్షూణాం య సాఙ్ఖ్యేన సయోగేన చ భక్తితః॥ తేన తేనాప్యతే తత్తన్న్యాసేనైవ మహామునే। ప్రాప్యతే పరమం ధామ యతో నావర్తతే పునః॥ పరమాత్మా చ తేనైవ సాధ్యతే పురుషోత్తమః) என்றும

http://acharya.org

சொல்லப்படுகிறவிஷயதகைதப் பற்றினர்க்கு, (సిద్ధిర్భవతి వా నేతి సంశయోచ్యుతసేవినామ్) என்கையாலே பலஸித்தியில் கண்ணழிவுண்டாயிருக்கும், அப்படியன்றிக்கே, (నసంశయోస్తి తద్భక్తపరిచర్యారతాత్మనామ్) என்கிற ததீயவைபவத்தை யறியாதவர்கள் சொல்லும்பழியாகையாலே எனக்கு அதுவேபுகழாம். (ஞாநமநுட்டாநமிவை நன்றாகவேயுடையனான குருவையடைந்தக்கால், மாநிலத்தீர், தேனார்கமலத் திருமாமகள்கொழுனன், தானேவைகுந்தந்தரும்)என்றும்,(உய்ய நினைவுண்டாகில் உங்குருக்கள் தம்பதத்தே, வையுமன்புதன்னை யிந்தமாநிலத்தீர், மெய்யுரைக்கேன், பையரவின்மாயன் பரமபதமுங்களுக்காம், கையிலங்குநெல்லிக்கனி) என்றும சொல்லப்படும் விஷயத்திலேயிறே அவர்கள் பழிசொல்லுவது, அதுபுகழேயாய்த் தலைக்கட்டுமித்தனை. (న్యాసవిద్యైకనిష్ఠానాం వైష్ణవానాం మహాత్మనామ్। నీచైః కృతాస్తు నిన్దా నిన్దాస్తుతిరితి స్మృతా) என்றும், (அலகைமுலைசுவைத்தார்க்கன்பரடிக்கனபர் இலதமெனத்திரிவார தம்மை, உலகர்பழிதூற்றில்துதியாகும்) என்றும சொல்லக்கடவதிறே.

(அவன் மன்னியசீர்தனக்குற்றவன்பர்) (அவன்) (పాషణ్డద్రుమషణ్డదావదహనశ్చార్వాకశైలాశనిః బౌద్ధధ్వాన్తనిరాసవాసరపతిర్జైనేభకణ్ఠీరవః। మాయావాదిభుజఙ్గభఙ్గగరుడస్త్రైవిద్యచూడామణిః శ్రీరఙ్గేశజయధ్వజో విజయతే రామానుజోऽయం మునిః) என்று ப்ரஸித்தரான எம்பெருமானாருடைய. (மன்னியசீர்) நித்யஸித்தங்களாய் ஸ்வாபாவிகங்களாய், (ప్రత్యక్షితాముపగతస్త్వహరఙ్గరాజః। వశ్యస్సదా భవతి తే యతిరాజ తస్మాచ్ఛక్తస్స్వకీయజనపాపవిమోచనే త్వమ్) என்கிற ச்லோகத்திலே சொல்லப்பட்ட ஜ்ஞாநசக்திகள் தொடக்கமான கல்யாணகுணங்கள்.

(தனக்கு உற்றவன்பர்) தனக்குத்தகுதியான ப்ரேமத்தையுடையரான மஹாத்மாக்கள். (அவன் திருநாமங்கள் சாற்றுமென்பாவினக்குற்றம்) அவர்விஷயமானபக்தி ஸந்துக்ஷணமபண்ணதத்ப்ரேரிதனாய்க்கொண்டு அவருடைய திருநாமஙகள் பத்யரூபேண ஸமர்ப்பிப்பதாக என்னாலேசொல்லப்பட்ட சந்தஸ்ஸமூஹத்திலே அவத்யத்தை. அன்றிக்கே, (அவன்திருநாமங்கள் சாற்றுமென்பாவினக்குற்றம) அவருடையதிருநாமங்களைச் சொல்லாநின்றுள்ள என்னுடைய சப்தஸமூஹத்திலே குற்றத்தையென்னவுமாம். பா-சந்தஸ்ஸு. இனம்-ஸமூஹம்.

(காணகில்லார்) வத்ஸலஸ்வபாவராகையாலேதோஷாடதர்சிகளாய்ப்போருவார்கள். கில்லார் - ஸமர்த்தரல்லாதார்; மந்தமதிகளானவர்கள் தந்தாமுடைய அறிவுகேட்டாலே இவன்காம்யகர்மபரித்யாகம் பண்ணினனென்றும் லக்ஷணத்தில் குறைச்சலாகச் சொன்னனென்றும் இப்படியான தோஷங்களைக் காணகில்லாரென்றபடி. அதுக்கு மூலமேதென்ன (பத்தியேய்ந்தவியல்விதென்றே) பக்தியோடேகூடின வ்ர்த்தியையுடையதென்னவுமாம். இயல்வு-ப்ரவர்த்தி. ஏய்தல்-கூடுதல். ... ... (ரு)

http://acharya.org

அ.—ஆரும்பாட்டு. "பத்தியேய்ந்த இயல்விதென்று - என் பாவினக்குற்றம்காணகில்லார்" என்றார் - கீழ்; அந்தபக்திதான் தமக்குண்டோ வென்று பார்த்தவிடத்தில் அதுவும் விஷயாநுகுணமாகத்தமக்கில்லாமையாலே ஸ்தோத்ரோதயுக்த்ரான தம்மை கர்ஹிக்கிறார்.

மூ.—இயலும்பொருளுமிசையத்தொடுத்தீன்கவிகளன்பால்
மயல்கொண்டுவாழ்த்துமிராமாநுசனைமதியின்மையால்
பயிலுங்கவிகளில்பத்தியில்லாதவென்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் அவன்றன்பெருங்கீர்த்திமொழிந்திடவே.()

பதம்.	உரை.
இயலும்	சப்தமும,
பொருளும்	அர்த்தமும்,
இசையத் தொடுத்து	பொருந்தத தொடுத்து,
ஈன்கவிகள்	விலக்ஷணமான கவிகள்,
அன்பால்	ப்ரேமத்தாலே,
மயல்கொண்டு	அறிவழிந்து,
வாழ்ததும்	ஏத்தாநின்றுள்ள,
இராமாநுசனை	எம்பெருமானாை,
பயிலும்	ப்ரதிபாதகத்வேந செறிந் திருப்பதான,
கவிகளில்	கவிகளிலே,
பத்தியில்லாத	பக்தி யின்றிக்கே யிருககிற,
என்	என்னுடைய,

பதம்.	உரை.
பாவிநெஞ்சால்	பாபிஷ்டமான மநஸ்ஸாலே,
அவனறன்	அவருடைய,
பெருங்கீர்த்தி	நிரவதிககீாததியை,
மொழிந்திட	பெசுவதாக,
மதியின்மையால	அறிவுகேட்டாலே,
முயலகின்றனன	உத்ஸாஹியாநின்றேன.

பிறங்குதல்-மிகுதி, ப்ரகாசமுமாம். சோராதகாதலென்றது-அஸங்குசிதமான காதலெனவுமாம். அப்போதைக்கு, சோர்தல்-வாடுதல்; அதாவது - ஸங்கோசம். சோராமை-அஸங்குசிதமாயிருக்கை. இத்தால்-பரிபூர்ண பக்தியென்றபடி. ... (௧௫)

அ.—பதினைஞ்சாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-குலசேகரப்பெருமாளுடைய ஸம்பந்தத்தையிட்டுத் தம்மாலே கொண்டாடப்பட்ட வெம்பெருமானார் தம்மைபரிக்ரஹித்த வைபவத்தைச்சொல்லி, இப்பாட்டிலே - ஸர்வபூதஸுஹ்ருத்தாய ஸர்வரக்ஷகனான ஸர்வேச்வரனை ஸாக்ஷாத்கரித்து அவனுடைய ரக்ஷகத்வாதிகளிலே கண்வையாதே ப்ரேமதசைதலையெடுத்து அவனுக்கு என்வருகிறதோவென்று மதிசங்கையாலே திருப்பல்லாண்டாலே மங்களாசாஸநம்பண்ணி அவனுக்குக் காப்பிட்ட பெரியாழ்வாருடைய திருவடிகளுக்கு ஆச்ரயமாகின்ற திருவுள்ளத்தையுடையரான வெம்பெருமானாருடைய கல்யாணகுணங்களைத் தங்களுக்கு ஆச்ரயமாகப் பற்றியிராத மநுஷ்யரை நான்கிட்டேன், ஆகையாலே எனக்கு இனி என்னகுறையுண்டென்கிறார்.

வ்யா.—(சோராதகாதல்) சோராதே-வாடாதே - ஸங்குசிதமாகாதே யிருக்கிறபக்தி. பரிபூர்ணபக்தியென்றபடி. ([illegible]) (புநர்விச்லேஷபீருத்வம் பரமபக்திருச்யதே) என்னும்படியான பக்தியென்றபடி. அன்றிக்கே, சோராதகாதல்-அவ்யபிசாரிணியான பக்தியென்னவுமாம். (பெருஞ்சுழிப்பால்) அவர்பட்ட சுழிதான் ஸங்குசிதமன்றிக்கேயும். (பெருஞ்சுழி) பரிபூர்ணயானபக்தி கரைபுரண்டவோபாதி அதினுடைய மஹாப்ரவாஹத்தின் நடுவேபிறந்ததாகையாலே மஹாவேகத்தோடேகூடி அதிவிஸ்தாதமாயிருக்கிற சுழியிலே யகப்பட்டு

http://acharya.org

ஆழுங்கால் படுகையாலே. (தொல்லைமாலை) (నిత్యస్సత్యః) (நித்யஸ்ஸத்ய:) என்கிறபடியே நித்யஸத்யனுமாய், (ఏకో హ వై నారాయణ ఆసీత్, న బ్రహ్మా నేశానః, స ఏకాకీ న రమేత) (ஏகோ ஹவை நாராயண ஆஸீத், நப்ரஹ்மா நேசாந:, ஸஏகாகீநரமேத) என்றும், (అచిద్విశిష్టాన్ ప్రళయే జన్తూనవలోక్య జాతనిర్వేదః) (அசிதவிஷ்டாக்ப்ரளயேஜந்தூநவலோக்ய ஜாத நிர்வேத:) என்றுஞ் சொல்லுகிறபடியே * ஸம்ஸாரமாகிற பெருங் கடலிலே விழுந்து நோவுபட்டு உருமாய்ந்துகிடக்கிற இச்சேதநருக்காக நிர்வேதப்படும்படியான வ்யாமோஹத்தை யுடைய சரியபதியை.

(ஒன்றும்பாராது) (మఙ్గళానాఞ్చ మఙ్గళమ్) (న వాసుదేవాత్పరమస్తి మఙ్గళమ్) (மங்களாநாஞ்ச மங்களம்) (நவாஸுதேவாத்பரமஸ்தி மங்களம்) என்றும், (உயர்வறவுயர்நலமுடையவன் - அயர்வறுமமரர்களதிபதி) என்றும், (நிகரில்லமரர்முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே) என்றும், (ஒன்றும் தேவுமுலகுமுயிரும் மற்றுமியாதுமில்லாவன்று நான்முகன்றன்னொடு தேவருலகோடுயிர்படைத்தான்) என்றும் சொல்லுகிறபடியே - ஸகலஜகத்ஸ்ரஷ்டாவாய் ஸர்வைச்வர்யஸாவமங்களங்களையும் கொடுக்கக் கடவனானவனை இப்புடைகளாலே ஏகதேசமும் நிரூபியாதே. தம்முடைய ப்ரேமபரவசராய்க்கொண்டு, இவையொன்றும் விசாரியாதே - இவற்றிலொன்றிலும் கண்வையாதேயென்றபடி.

(அவனைப்பல்லாண்டென்றுகாப்பிடும்பான்மையன்தாள்)லோகத்திலேபரிமிதகாலவர்த்தியான ஸாதாரணஜநங்களுக்குஆயுரர்த்தமாக (ఆయురాశాస్తే) (ஆயுராசாஸ்தே) என்கிறபடியே தீர்க்காயுஷ்மாந்பவேத என்றுமங்களாசாஸநம்பண்ணுவாரைப்போலேஅந்தச்ரியபதியைக்குறித்து, (பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பல்கோடிநூறாயிரமும், மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன், செவ்வடிசெவ்விதிருக்காப்பு) (நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு, சுடராழியும்பல்லாண்டு, அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டு) என்று அபரிமிதமானகாலத்தையுண்டாக்கி அதுதன்னையேபெருக்கி இப்படிப்பட்ட காலதத்வமுள்ளதனையும் செவ்விமாறாதே நித்யஸ்ரீயாக வாழவேணுமென்று இப்படி மங்களாசாஸநம் பண்ணுகையே தமக்கு ஸ்வபாவமாகவுடையரானை பெரியாழ்வாருடையதிருவடிகளை. பான்மை - ஸ்வபாவம். தாள - திருவடிகள்.

(போராதவுள்ளத் திராமாநுசன்றன்) விட்டுநீங்காத திருவுள்ளத்தையுடையரான எம்பெருமானாருடைய. பேருகை - நீங்குகை. (பிறங்கியசீர்) நித்யாபிவ்ர்த்தமான கல்யாணகுணங்களை.

(కుదృష్టికుహనాముఖేనిపతతఃపరబ్రహ్మణః కరగ్రహవిచక్షణోజయతి లక్ష్మణోయం మునిః) (குத்ர்ஷ்டிகுஹநாமுகேநிபததஃபரப்ரஹ்மண: - கரக்ரஹவிசக்ஷணோஜயதி லக்ஷ்மணோயம்முனி:) என்கிறபடியே குத்ர்ஷ்டிகளாலே யழிக்கப்பட்ட பகவத்வைபவத்தை ஸ்ரீபாஷ்யமுகேந வெளிப்படுத்தி, இவ்வளவும் இனிமேலுள்ள காலமெல்லாமும் நித்யாபிவ்ர்த்தமாம்படி பண்ணுகையாலே இவருடைய கல்யாணகுணங்களும் நித்யாபிவ்ர்த்தமாய்க்காணுமிருப்பது. பிறங்குதல்-மிகுதி.

(சாராமனிசரை) அவற்றைத் தங்களுக்கு அபாச்ரயமாகப் பற்றியிராத மநுஷ்யரை. (నృదేహమాద్యం ప్రతిలభ్య దుర్లభమ్) (ந்ர்தேஹமாத்யம் ப்ரதிலப்யதுர்லபம்) என்கிறபடியே அதிதுர்லபமான மநுஷ்யதேஹத்தையுடையரா யிருந்தும். (పుమాన్ భవాన్ పితరేత్ సఆత్మహా) (புமாந்பவாப்த்திம்நதரேத் ஸஆத்மஹா) என்னும்படி நஷ்டப்ராயரான மநுஷ்யரென்றபடி. யோக்யதையில்லாதே அகன்றுபோனார்களென்று ஆறியிருக்கப்போமோ. ச்ரவணமநநங்களுக்கு ஸாதநங்களையுடைத்தான மநுஷ்யதேஹத்தைப்பெற்றும ஆச்ரயியாத கர்ப்பநிர்ப்பாக்யரை. (சேரேன) அபபடிப்பட்டவரை ஒருக்காலும் கிட்டாதே ஸவாஸநமாக விட்டிருந்தேன். (నాస్తికత్వం హ్యాసం యుక్తం పరస్పరమ్) (நாஸ்திஸங்கதிரஸ்மாகம் யுக்தமாகஞ்சபரஸ்பரம்) என்கிறபடியே குடநீர்வழித்துக்கொண்டிருந்தேன். (எனக்கென்னதாழ்வினியே) இப்படியானபின்பு எம்பெருமானாருடைய கர்பைக்கு விஷயபூதனான வடியேனுக்கு என்ன, தாழ்வுண்டு-என்ன அவத்யமுண்டு.(తదేవముష్ణాత్యకుభాగ్యశేషతః)(ததேவமுஷ்ணாத்யசுபாங்யசேஷத:) என்றும், (సిద్ధేతదీయశేషత్వే సర్వార్థాస్సంభవన్తిహి) (ஸித்தேததியசேஷத்வே ஸர்வார்த்தாஸ் ஸம்பவந்திஹி) என்றுஞ் சொல்லுகிறபடியே ஒருகுறைகளுமின்றிக்கே ஸர்வமும் கரதலாமலகமாயிருக்குமென்றபடி. ... ... (௬௫)

உ-ரை.—அ.—பதினாறும்பாட்டு. இப்படி ஸ்வலாபாநுஸந்தாநத்தாலே ஹ்ர்ஷ்டரானவர்,எல்லாரும் தம்மைப்போலே தத்விஷயப்ரவணராகைக் குறுப்பாக பகவத்வல்லபையான ஆண்டாளுடைய ப்ரஸாதபாத்ரமான எம்பெருமானார் லோகத்துக்குச் செய்தவுபகாரத்தை யருளிச்செய்கிறார்.

மூ.—தாழ்வொன்றில்லாமறைதாழ்ந்துதலமுழுதுங்கலியே
ஆள்கின்றநாள்வந்தளித்தவன்காண்மினரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச்சூடிக்கொடுத்தவள்தொல்லருளால்
வாழ்கின்றவள்ளலிராமாநுசனென்றும் * மாமுனியே. ()

* "என்னும் மாமுனி" என்று உரையினபாடம்.

பதம்.	உரை.
அரங்கர்	பெரிய பெருமாளுடைய,
மௌலிசூழ்கின்றமாலையை	திருமுடியிலே சாத்துகிற திருமாலையை,
சூடிக்கொடுத்தவள்	தன்னுடைய திருக்குழலிலேசூடி வாஸிதமாக்கிக் கொடுத்த வைபவத்தையுடையளான ஆண்டாளுடைய
தொல்	ஸ்வாபாவிகமான,
அருளால்	க்ர்பையே விளைநீராக,
வாழ்கின்ற	வாழாநிற்பாராய,
வள்ளல்	பரமோதாரராய்,
மாமுனியென்னும்	முனிச்ரேஷ்டரான,
இராமாநுசன்	எம்பெருமானார்,
	நித்யத்வா பௌருஷேயத்வப்ரயுக்தமாய் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணவிலக்ஷணமாய யதாபூதவாதியாயிருக்கையாலே,

பதம்.	உரை.
ஒருதாழ்வில்லாமறை	ஸ்வப்ராமாண்யத்தில் ஒருகுறைவற்றிருக்கிற வேதமானது,
தாழ்ந்து	பாஹ்ய குத்ருஷ்டிகளாலே அபிபூதமாய்க்கொண்டுஇழிவுபட்டு, தீபஸங்கோசத்தில் திமிரவ்யாப்தி போலே,
தலமுழுதும்	பூமியெங்கும்,
கலி	கலியுகமானது,
ஆள்கின்றநாள்	தனிகோல் செலுத்துகிற காலத்திலே,
வந்து	அபேக்ஷா நிரபேக்ஷமாகவந்து,
அளித்தவன் காண்மின்	அந்தவேதத்தை உத்தரிப்பித்துலோகத்தை ரக்ஷித்தருளினவர் காணுங்கோள்.

ஆதலால் நீங்களும் என்னைப்போலே அவரையல்லதறியோமென்று இருக்கையன்றோ அடுப்பதென்றுகருத்து. ... (௧௬)

அ.—பதினாறும்பாட்டு. கீழ்ப்பாட்டிலே - பெரியாழ்வார்ஸம்பந்தத்தையிட்டு எம்பெருமானாரைக் கொண்டாடி,இப்பாட்டிலே அந்த ஆழ்வாருடைய பெண்பிள்ளையான ஆண்டாளுடைய ஸ்வாபாவிகக்ர்பையாலே வாழ்ந்துகொண்டு பரமோதார ஸ்வபாவராய், அத்தாலே எல்லாருக்கும் பரமபதத்தைக் கொடுக்கைக்கு மநநம்பண்ணிக்கொண்டு போருகிற வெம்பெருமானார், வேதமார்க்கமெல்லா மழிந்து பூமண்டலமெங்குமொக்க வ்யாபித்து கலியானது ஸாம்ராஜ்யம் பண்ணுகிறகாலத்திலே * விண்ணின் தலைநின்றும் மண்ணின் தலத்துதித்து எல்லாரையும் ரக்ஷித்தரு

http://acharya.org

ளின * நல்லன்பரென்று ஸர்வரும் தம்மைப்போலே தத்விஷய ப்ர வணராகைக்கு உடலாக அவர் செய்தருளின வுபகாரத்தை யருளிச் செய்கிறார்.

வ்யா.—(அரங்கர்மௌலி) கோயிலிலே கண்வளர்ந்தருளு கிறபெரியபெருமாள்தானே ஸ்ரீவில்லிபுத்தூரிலே வடபெருங் கோயிலுடையானென்னும் திருநாமத்தையுடையராய்க்கொண்டு கண்வளர்ந்தருளுகையாலே அவனை, (அரங்கர்) என்றருளிச்செய கிறார். அப்படிப்பட்ட ஸ்வாமியுடைய உத்தமாங்கத்துக்கு. (சூழ் கின்றமாலையை) அலங்கரிக்கத்தக்க புஷ்பமாலையை. (சூடிக்கொடு த்தவள்) முந்துறமுன்னம், (சாற்றுமாலையான) என்னும்படியான தன்னுடைய திருக்குழலிலே அலங்கரித்துக்கொண்டு அந்த மாலை களைத்து ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்கும்படி கொடுத்தவள். இப்படி யாகையாலே இவளுக்கு "சூடிக்கொடுத்தவள்" என்னும் அதுவே நிரூபகமாய்த்து (சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே) என்னக் கடவதிறே. (தொல்லருளால்) ([illegible] [illegible]) ([illegible] மர்த்யமாத்ராசரக்ஷணக்ஷம [illegible]) என்றும், ([illegible]) ([illegible] வந்தே நித்யமஜ்ஞாந நிவர்த்தநாம) என்றுஞ் சொல்லும்படியே அகிலஜகந்மாத்ருத்வத்தாலே வந்த குடல்துடக்கை யுடைத்தான வளுடைய ஸ்வாபாவிகமான கருணையாலே

(வாழ்கின்ற) அவளுடைய க்ருபையாலே நாளும் இவருடைய வாழ்வெல்லாம். எம்பெருமானார் சரணாகதி பண்ணும்போது ஸ்ரீரங்க நாயகியாருடைய ஸந்நிதியிலே அழகிய மணவாளனை சேர்த்தி கொடுத்திருக்கச்செய்தே, ([illegible]) (பகவந்நாராயணாபி மதாநுரூப) என்று தொடங்கி முந்துறமுன்னம் அவள்திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணிற்று ப்ரஸித்தமிறே. (வள்ளல்) இப்படி அவள்முன்னிலையாக அவன் திருவடிகளிலே ப்ரபத்திபண்ணி தாம்பெற்ற பலத்தை இந்தலோகத்திலே எல்லா ருக்குங் கொடுத்த பரமோதாரன். ([illegible] పాప క్రియస్య శరణం భగవత్క్షమైవ । సా చ త్వయైవ కమలారమణే ర్థితా యత్ క్షేమ స్స ఏవ హి యతీంద్ర భవచ్ఛ్రితానామ్) (காலத்ரயேபி கரணத்ரயநிர்மிதாதி பாபக்ரி யஸ்யசரணம்பகவத்க்ஷமைவ| ஸாச த்வயைவ கமலாரமணேர்த்திதா யத க்ஷேமஸ்ஸஏவஹியதீந்த்ரபவச்ச்ரிதாநாம்) என்று இந்தஔதா ர்யத்தை ஜீயரும் அருளிச்செய்தாரிறே. (என்னும் மாமுனி) இப்படிபரமோதாரராகையாலே ஸர்வகாலத்திலும் ஸ்வாச்ரிதரக்ஷ ணத்திலேதானே மநநம்பண்ணிக்கொண்டிருக்கிற. (இராமாநுசன்) எம்பெருமானார்.

http://acharya.org

(தாழ்வொன்றில்லாமறை) வேதத்துக்குத் தாழ்வொன்றில்லாமையாவது - பரமப்ரமாதவிப்ரலம்பாதி தர்மவிசிஷ்டத்வம், புருஷப்ரணீதத்வம், ஸ்வப்ராமாண்யே அந்யஸாபேக்ஷத்வம், அநித்யத்வம் தொடக்கமானவற்றில் ஒன்றுமின்றிக்கே, யதா பூதவாதியாய் அபௌருஷேயமாய் நித்யமுமாயிருக்கை. (மறைதாழ்ந்து) இப்படிப்பட்ட வேதமானது ராஷ்பாடம்பரான பாஹ்யகுத்ருஷ்டிகளாலே யாதல், கலிதோஷத்தாலேயாதல் அபிபூதமாய்க் கொண்டு இழவுபட்டு கலியுகமானது வேதத்தை ஸங்கோசிப்பித்து அழித்தபடி ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் ஸ்ரீபாகவதத்திலும் விஸ்தரேண உபபாதிக்கப்பட்டதிறே (కలౌ జగత్పతిం విష్ణుం సర్వస్రష్టారమీశ్వరమ్। నార్చయిష్యన్తి మైత్రేయ పాషణ్డోపహతా జనాః) (கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீச்வரம், நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா:) என்றும் (అన్తశ్శాక్తం బహిశ్శైవం సభామధ్యే తు వైష్ణవమ్। కలౌ కష్టం ప్రవర్తన్తే వర్ణాశ్రమజనా మునే॥ కలౌ కార్తయుగం ధర్మం కర్తుమిచ్ఛతి యో నరః। స్వామిద్రోహకృతం మత్వా తస్మై ప్రద్విషతే కలిః) (அந்தஶ்ஶாக்தம் பஹிஶ்ஶைவம் ஸபாமத்யே து வைஷ்ணவம், கலௌ கஷ்டம் ப்ரவர்த்தந்தே வர்ணாச்ரமஜநா முநே, கலௌ கார்த்தயுகம் தர்மம் கர்த்துமிச்சதி யோ நர:, ஸ்வாமித்ரோஹக்ருதம் மத்வா தஸ்மை ப்ரத்விஷதே கலி:) என்றும் சொல்லுகிறபடியே நிஷித்தமார்க்கத்தை நடப்பித்துக்கொண்டு போருகிற கலிதோஷத்தாலே வேதமார்க்கமானது மூலையடியே நடந்து.

(தலமுழுதுங் கலியேயாண்டின்றநாள்) தீபஸங்கோசத்தில் திமிரவ்யாப்திபோலே * இருள்தருமாஞாலமான பூமிக்கு கலியுகமானது தனிக்கோல் செலுத்தும்படி ஸாம்ராஜ்யம்பண்ணுகிறகாலத்திலே. தேசகாலங்களை ஸமீசீநங்களாலல் திருத்திரக்ஷிக்கலாம், அப்படியன்றிக்கே தேசமோ அநேகவிரோதிபூயிஷ்டமானது, காலமோ தத்வசத்ருக்கு வர்த்தகமானது. (வந்து) இப்படி அதிக்ருரங்களான தேசகாலங்களிலே பரமபதத்தில் நின்றும் இந்த விபூதியிலே ஸ்ரீபெரும்பூதூரிலே யவதரித்தருளி. (அளித்தவன் காண்மின்) உத்தரிப்பித்து இந்தலோகத்தை ரக்ஷித்தவர்காணுங்கோள். எல்லாரும் இவரை ரக்ஷகரென்றுதெளிந்து ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்று கருத்து. (கலியுகங்கெடுங்கண்டு கொண்மின்) என்னக்கடவதிறே.... ... ... (க௬)

உரை.—அ.—பதினேழாம்பாட்டு. இப்படி எம்பெருமானார் செய்த வுபகாரத்தைக்கேட்டு தத்ஸமாச்ரயணருசிபிறந்தவர்கள் இவ்விஷயத்தை யாச்ரயித்தாலும் ஸம்ஸாரஹேதுபந்தமான கலக்கம்வரிலசெய்வ தென்னென்ன; திருமங்கையாழ்வார் பக்கல்

http://acharya.org

ஸ்நேஹயுக்தராய் எங்கள்நாதராயிருக்குற வெம்பெருமானாரை ஆச்ரயித்தவர்கள் அவைமேலிட்டாலும் கலங்காரென்கிறார்.

மூ.—முனியார்துயரங்கண்முந்திலுமின்பங்கண்மொய்த்திடினும்
கனியார்மநங்கண்ணமங்கைநின்றானைக்கலைபரவும்
தனியானையைத்தண்டமிழ்செய்தநீலன்றனக்குலகில்
இனியானையெங்களிராமாநுசனைவந்தெய்தினரே. (௧௭)

பதம்.	உரை.
கலை	ஸகல சாஸ்த்ரங்களாலும்,
பரவும்	ஸ்துதிக்கப் படுவாராய்,
தனி ஆனையை	அதவிதீயமான மத்தகஜம்போலே அத்தால் வந்தசெருக்கையுடையனாய்க்கொண்டு,
கண்ணமங்கைநின்றானை	திருக்கண்ணமங்கையிலேநின்றருளினவனை, "நின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம்கவியினபொருள்" என்னும்படி,
தண்	ப்ரதிபாத்யார்த்த கௌரவத்தாலே ஸாம்ஸாரிக ஸகல தாபஹரமான,
தமிழ்செய்த	தமிழைச் செய்தருளின,
நீலன்றனக்கு	திருமங்கையாழ்வார்க்கு,
உலகில்இனியானை	லோகத்திலே ஸ்நேஹிதராயிருப்பாராய்,

பதம்.	உரை.
எங்கள்	எங்களுக்கு நாதரான,
இராமாநுசனை	எம்பெருமானாரை,
வந்தெய்தினர்	வந்துப்ராபித்தவர்கள்,
துயரங்கள்	துஃகங்களானவை
முந்திலும	அஹமஹமிகயா வந்தாலும்,
முனியார்	இதுவந்ததேயென்று வெறுக்கார்கள்;
இன்பங்கள்	ஸுகங்களானவை,
மொய்த்திடினும்	ஏகோத்யோகேந வந்து திரண்டாலும்,
மனம்கனியார்	பக்வபலம் போலே மநஸ்ஸில் நினைக்கார்கள்.

ஆனபின்பு, நீங்களும் இவற்றால்வரும்ஹர்தய காலுஷ்யத்தை நினைத்து அஞ்சவேண்டாவென்று கருத்து. முனிவு - வெறுப்பு. மொயத்தல்-திரளுதல் ()

அ.—பதினேழாம்பாட்டு. கீழெல்லாம் ஆழ்வார்களுடைய ஸம்பந்தத்தையிட்டே எம்பெருமானாரைக் கொண்டாடுகிற ப்ரகரணமாகையாலே இப்படி எம்பெருமானார்செய்தருளின உபகாரத்தைக்கேட்டு தத்ஸமாச்ரயண ருசிபிறந்தவர்கள் இவ்விஷயத்தை ஆச்ரயித்தாலும் ஸுகது꞉க நிபந்தமாகக்கலக்கம்வரில

செயவதென்னென்று திருக்கண்ணமங்கையுள் நின்றருளின பத்தராவிவிஷயமாக திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்த திருமங்கையாழ்வாருக்கு ப்ரியதமரான வெம்பெருமானை ஆச்ரயித்தவர்களுக்கு ஸுகதுஃகங்கள் வந்துமேல்விழுந்தாலும் ஹர்ஷாமர்ஷங்களாலே சலியார்களென்கிறார்.

வ்யா.—(கலைபரவும்) (సర్వేవేదాయత్పదమామనన్తి) (వేదాక్షరాణియావన్తి పఠితానిద్విజాతిభిః। తావన్తిహరినామాని కీర్తితానినసంశయః॥ వేదేరామాయణేపుణ్యే భారతేభరతర్షభ। ఆదౌమధ్యేతథాన్తేచ విష్ణుస్సర్వత్రగీయతే) (ஸர்வேவேதாயதபதமாமநந்தி) (வேதாக்ஷராணியாவந்தி படிதாநித்விஜாதிபி: । தாவந்திஹரிநாமாநி கீர்த்திதாநிநஸம்சய:॥ வேதேராமாயணே புண்யே பாரதேபரதர்ஷப। ஆதௌமத்யேததாந்தேச விஷ்ணுஸ்ஸர்வத்ரகீயதே)என்கிறபடியே ஸகலசுருதிஸ்ம்ருதிஹாஸபுராணங்களாலும் ஸ்துதிக்கப்படுமவனாய். (தனியானையை) (ద్యావాపృథివీ జనయన్దేవఏకః) (సయశ్చాయంపురుషే, యశ్చాసావాదిత్యే, సఏకః) (దివ్యోదేవఏకో నారాయణః) (த்யாவாப்ருதிவீஜநயன்தேவஏக:) (ஸயஶ்சாயம்புருஷே, யஶ்சாஸாவாதித்யே, ஸஏக:) (திவ்யோதேவஏகோநாராயண:) என்கிறபடியே அத்விதீயமாய மத்தகஜம்போலே செருக்கையுடையனாய்க்கொண்டு. (கண்ணமங்கையுள்நின்றானை) (முத்தின் திரள்கோவையைப் பத்தராவியை நிதிலத்தொத்தினை, யரும்பினையலரை யடியேன்மநத்தாசையை அமுதம் பொதியும் சுவைக் கரும்பினைக்கனியைச்சென்றுநாடி கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே) என்கிறபடியே தன்னுடையபோக்யதையையெல்லாருமநுபவிக்கும்படி திருக்கண்ணமங்கையிலே யெழுந்தருளியிருக்கிற பத்தராவியை

(தண்டமிழ்செய்த) (நின்றனக்குங் குறிப்பாகில் கற்கலாங்கவியின்பொருள்தானே) என்கிறபடியே அவனுடைய ஸ்வரூபரூப குண விபூதிகளாகிற ப்ரதிபாத்யார்த்த கௌரவத்தாலே தன்னை அப்யஸித்தவர்களுடையஸகலதாபங்களுமாறும்படிச்ரமஹரமாய் த்ரமிடபாஷாரூபமாக ப்ரபந்திகரித்தருளின. (நீலன்றனக்கு) திருமங்கையாழ்வாருககு. (கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனென்றுகாதலால் கலியனுரைசெயதவண்ணவொண்டமிழ்) என்று ஆழ்வார்தாமே யருளிசசெய்தாரிறே. (உலகிலினியானை) இவ்விபூதியிலே ஸமஸ்தபாகவத ஜநங்களுக்கும் அதிப்ரியகரரான.(పరకాలముఖాబ్జమిత్రమ్) (பரகாலமுகாபஜமித்ரம்) என்று ஜீயருமருளிச்செய்தாரிறே. (எஙகளிராமாநுசனை) என்னைப்போலே எல்லாரையுமுத்தரிப்பிக்கைக்காகவந்தவதரித்தருளின எம்பெருமானை. (வந்தெய்தினரோ) (శ్రీమానావిరభూద్భూమౌ రామానుజదివాకరః) (ஸ்ரீமாநாவிரபூத்பூமௌராமாநுஜதிவாகர:) என்னுமபடியான ப்ரபாவத்தை யறிந்துவந்து ஸபந்திபண்ணி ஆச்ரயித்த பாக்யவாங்கள்.

http://acharya.org

(முனியார்துயரங்கள் முந்திலும்) துக்கங்களானவை * அநேகமென்கையாய வந்து மொசிந்தாலும் இது வந்ததேயென்று வ்யாகுலப்படார்கள். முனிவு-வெறுப்பு. (இன்பங்கள் மொய்த்திடினுங்கனியார்மனம்) ஸுகங்களானவை ஏகோத்யோகேந வந்து திரண்டாலும் இந்த அதிசயம் நமக்கு வந்ததேயென்று பகவபலம்போலே மநஸ்ஸில் ஏசாகாரங்களாய. மொய்த்தல் - திரளுதல (நப்ரஹ்ருஷ்யேத்ப்ரியம் [illegible]) (நப்ரஹ்ருஷ்யேத்ப்ரியம்ப்ராப்யநோத்விஜேத்ப்ராப்யசாப்ரியம்) என்றாரிறே கீதாசாரியரும் ([illegible]) (மதாகதநைநாகலிச்யாந்தேயாஸீசவர ஸம்ச்ரயா:) என்று இவ்வர்த்தத்தை அபியுக்தருமருளிச்செய்தாரிறே. ... . (௧௭)

உ-ரை.—அ.—பதினெட்டாம்பாட்டு நம்மாழ்வாரைத் திருவுள்ளத்திலே வைக்கைக்கு அநுரூபரானவரான ஸ்ரீமதுரகவியாழ்வார்குணங்களை ஸகல ஆத்மாக்களும் உஜ்ஜீவிக்கைக்காக உபகரிக்கும் எம்பெருமானார் எனக்கு ஆன துணையென்கிறார்.

மூ.—எய்தற்கரியமறைகளையாயிரமின்றமிழால்
செய்தற்குலகில்வருஞ்சடகோபனைச்சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும்பெரியவர்சீரையுயிர்களெல்லாம்
உய்தற்குதவுமிராமாநுசனெம்முறுதுணையே. (௧௮)

பதம்.	உரை.	பதம்	உரை.
எய்தற்கரிய	துஷ்ப்ராபங்களான	சடகோபனை	பாஹ்ய குத்ருஷ்டிகளாகிற சடர்க்கு ப்ரதிபடராயிருக்கையாலே சடகோபனென்னும் திருநாமத்தை யுடைய ஆழ்வாரை
மறைகளை	வேதங்களை, பரணவம்போலே ஈருங்கி யிருந்தவ வேதம்போலே பரவியிருத்தல் செய்கையன்றிக்கே,		
ஆயிரம்	ஆயிரம்பாட்டாகவும்,	சிந்தையுள்ளே	தம் திருவுள்ளத்திலே,
இன்	அதுதான் ரஸமாகவும்,	பெய்தற்கிசையும்	வைக்கைக்குத் தகுதியாயிருந்துள்ள
தமிழால்	ஸதீ பாலர்களுக்கும் கற்கலான பாஷையாலே,	பெரியவர்	பரபாவத்தை யுடையரான ஸ்ரீமதுரகவிகளுடைய
செய்தற்கு	செய்தருளுகைக்கு,		
உலகில்வரும்	லோகத்திலேவந்தவதரித்தருளினவராய்.		ஜ்ஞாநாதி குணங்களை.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
உயிர்களெல்லாமுய்தற்கு	ஸகலாத்மாக்களுடையவும் உஜ்ஜீவநார்த்தமாக,	எம்முறுதுணை	எனக்கு சீரிய துணை.
உதவும்	உபகரித்தருளாநிற்கும்,		அதவா, சடகோபனைச் சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவரென்று - ஆழ்வாரையல்லதறியோம் என்றிருக்குமவரெல்லாரையும் சொல்லவுமாம். ( )
இராமாநுசன்	எம்பெருமானார்,		

அ — பதினெட்டாம்பாட்டு. கீழ்ப்பாட்டுக்களிலே ப்ரதிபாதிக்கப்பட்ட ஆழ்வார்களில் வைத்துக்கொண்டு ப்ரதாநராய் ஸர்வாதிகாரமாம்படி திருவாய்மொழி யென்கிற திவ்யப்ரபந்தத்தை யருளிச்செய்கைக்காக அவதரித்தருளின நம்மாழ்வாருக்கு அநந்யார்ஹரான ஸ்ரீமதுரகவியாழ்வாருடைய கல்யாணகுணங்களை ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்கைக்காக உபகரித்தருளின எம்பெருமானார் எனக்கு ஸஹாயமென்கிறார்.

வ்யா.—(எய்தற்கரியமறைகளை) (அநந்தா வை வேதா:) (அநந்தா வை வேதா) என்கிறபடியே ஒருஸங்கையையிட்டுச் சொல்லப்போகாதபடி அபரிமிதங்களாய், ஸர்வோபஜீவ்யங்களாகாதே அதிகர்தாதிகாரங்களாய், அந்யோந்யமாத்தவாக்யங்களாலே ஸ்வார்த்தத்தைத் தெளியும்போது, எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரானவர்களுக்கும் அருமைப்படுத்தக்கடவனவான ஸம்ஸ்க்ருத வேதங்களை. (ஆயிரமின்தமிழால்) வர்ணாதி நியதியின்றிக்கே ருசிபிறந்தவர்களெல்லாரும் அதிகரிக்கும்படியாய், ஆயிரம் என்று ஒருஸங்கையோடே கூடியிருப்பதாய், (உயர்வற வுயர்நலம்) என்று தொடங்கி, (உயர்ந்தே) என்னுமளவும் - ஆதிமத்யாவஸாநங்களிலே பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதிகளையும், சேதநாசேதநரூபஸ்வபாவங்களையும், சேதநருடைய ஸம்ஸாரபந்தஹேதுக்களையும், தந்நிவர்த்தகோபாயமான தத்விஷய ப்ரீதிரூபாபந்நஜ்ஞாநத்தையும், ஜகத்காரணவஸ்து நாராயணனேயென்று தேவதாவஸ்து விசேஷநிர்த்தாரணத்தையும், அவனுடைய ஸமஸ்தகல்யாண குணாத்மகத்வத்தையும், அநந்தகருடவிஷ்வக்ஸேநாதி திவ்யஸூரி பரிசர்யமாணனாய்க்கொண்டு நின்றபடியையும், தாமநுபவித்தபடியை எல்லாராலும் அநுபவிப்பிக்கைக்காக தம்முடைய நிர்ஹேதுக பரமக்ருபையாலே லௌகிகரைக் குறித்து உபதேசித்தபடியையும், தம்முடைய அபிநிவேசமெல்லாந் தீரும்படி அவனைப்ராபித்தபடியையும் விசதமாக ப்ரதிபாதிப்பதாய், ஸ்வார்த்தத்தையெல்லாம் ஸுஸ்பஷ்டமாகவும் ஸங்க்ரஹமாகவும் தெரிவிக்குமதாய்,

http://acharya.org

அதவ அத்யந்தஸுலபமாய்,([Grantha text])(பக்தாம்ருதம்)(தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்) என்னும்படி அநுபோக்த்தாக்களுக்கு அத்யந்தம் போக்யமாய * நடைவிளங்குதமிழான த்ரமிடபாஷையாலே திருவாய்மொழியெனகிற ப்ரபந்தரூபேண. (செய்தற்கு) அவதரிப்பிப்பதற்கு. ஆவிர்பாவத்தைப் பண்ணுவதற்கென்றபடி.

(உலகில்)([Grantha text])([Grantha text])(அசுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவாத்யா: கர்மயோநய:, ஆவிரிஞ்சாதிமங்களம்) என்றும், (இருள்தருமாஞாலம்) என்றும், ([Grantha text])(கர்ப்பஜந்மாத்யவஸ்த்தாஸு து:கமத்யந்ததுஸ்ஸஹம், நகிஞ்சித கணயன்நித்யம் சராமீந்த்ரியகோசர:) என்றுஞ் சொல்லப்படுகிற இந்த லீலாவிபூதியிலே. (வருஞ்சடகோபனை) வரும் என்ற வர்த்தமானநிர்த்தேசத்துக்கு - அவருடைய திவ்யமங்கள விக்ரஹம் ஸமஸ்த திவ்யதேசங்களிலும் ஸமஸ்தப்ரபந்நஜநங்களுடைய திருமாளிகையிலும் நவநவமாய்க்கொண்டு ஆராதநமாகையும் அவருடைய திவ்யஸூக்திகள் இந்தலோகத்திலே இவ்வளவும் இன்னுமுள்ளகாலத்திலும் நடையாடிப்போருகையும் பொருளாகக் கடவது; இப்படியவதரித்தருளின. (சடகோபனை) சடரானவா - ஸ்வரூபஜ்ஞானமில்லாத ஸம்ஸாரிகள். அவர்களைக்குறித்து * ஒருநாயகத்திலும் * நண்ணாதார் முறுவலிப்பும் பருஷம் பண்ணினவனை பாஹ்யகுத்ருஷ்டிகளாகிற சடர்க்குப்ரதிபடரானவரை என்னுதல். இப்படிப்பட்ட நம்மாழ்வாரை.

(சிந்தையுள்ளே) தம்முடைய திருவுள்ளத்திலே. (வைத்தற்கு) தமக்கு பரதேவதையாய ஆராத்யராயிருக்கும்படி வைக்கைக்கு. (இசையும்) உபயுக்தமானப்ரபாவத்தையுடைய (மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே தேவுமற்றறியேன்) என்றும், (மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடியென் னெஞ்சுள் நிறுத்தினான்) என்றும்றே இவர் தாமருளிச்செய்யும்படி. (பெரியவர்) "உண்டபோதொருவார்த்தையும் உண்ணாதபோதொருவார்த்தையுஞ் சொல்லுவார் பத்துப்பேருண்டிறே, அவர்கள் பாசுரங்கொண்டன்று இவ்வர்த்தமறுதியிடக்கடவது; அவர்களைச்சிரித்திருப்பாரொருவருண்டிறே; அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்தமறுதியிடக்கடவோம்" என்று ஸ்ரீவசநபூஷணத்திலே சொல்லுகிறபடியே - ([Grantha text])(யஸ்மாத்ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத்குருதரோ குரு:| அர்ச்சநீயஸ்ச வந்த்யஸ்ச) இத்யாதிசாஸ்த்ரங்களிலே சொல்லப்பட்ட சரமபர்வநிஷ்டராயும் தத்ப்ரவர்த்தகராயுமிருக்கையாகிற மஹாப்ர

http://acharya.org

பாவத்தையுடையவராகையாலே ஸர்வாதிகரான ஸ்ரீமதுரகவியாழ்வாருடைய. (சீரை)(மாறன் சடகோபன்வண்குருகூரேறெங்கள், வாழ்வாமென்றேத்தும மதுரகவியா ரெம்மை, யாள்வாரவரேயர ண்) என்றும்,(பாருலகில் மற்றுள்ளவாழ்வார்கள் வந்துதித்தநாள் களிலும் உற்றதெமக்கென்று நெஞ்சேயோர்) என்றும் இப்படி ச்லாகிக்கப்பட்ட கல்யாணகுணங்களை.

(உயிர்களெல்லாம்) வர்ணாச்ரமகுணவ்ர்த்தாத்யுத்க்ர்ஷ்டாப க்ர்ஷ்டவிபாகமறருசியுடையரான ஸகல ஸம்ஸாரிகளுடையவும். (உய்தற்கு) உஜ்ஜீவநார்த்தமாக. இதொழிந்த உபாயங்களெல்லாம் உஜ்ஜீவநஹேதுக்களன்றென்றுகாணும் இந்தவமுதனுருடைய திருவுள்ளத்திலோடுகிறது. (உதவும்) உபகரித்தருளும. எல்லாருக்கும் மோக்ஷோபாயமான திருமந்த்ரார்த்தத்தை யுபதேசிக்கும்வேளையிலே அர்த்தவிசேஷங்களையெல்லாம ததியபர்யந்தமாக அநுஸந்திக்கவேணுமென்னும மதுரகவியாழ்வாருடைய நிஷ்டையையேகாணும் எம்பெருமானாருபதேசிப்பது. (இராமாநுசனெம முறு துணையே) இப்படிப்பட்ட எம்பெருமானார் எனக்குத்தாடமான துணை. துணை-ஸஹாயபூதர். உறு-தர்டம. இதநால்-பரமபதத்திலே கொண்டுபோய்ச்சேர்க்குமெனறபடி. அன்றிக்கே, பெரியவா என்கிறபதத்துக்கு - ஆழ்வாருடைய திருவடிகளைத்திருவுள்ளத்திலே நிறுத்திக்கொணட ஸ்வாமிகளெல்லாரும என்றும பொருளாகவுமாம. ... ... (கஅ)

உரை.—அ.—பத்தொன்பதாம்பாட்டு. ஐச்வர்யாதி பரதேவதாபர்யந்தமான அபேக்ஷிதவஸ்துக்களெல்லாமதிருவாய்மொழியேயென்று ஜகத்ப்ரஸித்தமாகநின்ற எம்பெருமானார் எனக்குநிரதிசயபோக்யரென்கிறார்.

மூ.—உறுபெருஞ்செல்வமுந்தந்தையுந்தாயுமுயர்குருவும்
வெறிதருபூமகள்நாதனும்மாறனவிளங்கியசீர்
நெறிதருஞ்செந்தமிழாரணமேயென்றிந்நீணிலத்தோர்
அறிதரநின்றவிராமாநுசனெனக்காரமுதே. (கசு)

பதம். உரை. பதம். உரை.

உறு ஸ்வஸம்பந்தமுடை யவர்களுக்கு இனனென்னும்படி வைக்கொடுக்கும ஜ்ஞாபகமுமாய்ப் ப்ராப்ய ப்ராபகங்களுமாயிருக்கையாலே சிரியதாய்,
தாய் ஹிதகரமு பெரும நிரவதிகமான
மாய ப்ரியகரமு செல்வமும் ஸம்பத்தும்,
மாய அஜ்ஞாத தந்தையும் பிதாவும்,

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாயும்	மாதாவும்,	செந்தமிழ் ஆரணமே என்று	த்ராவிட வேதமான திருவாய்மொழியே யென்று,
உயர்குருவும்	ஸதாசார்யனும்,	இந்நீணிலத்தோர்	இம்மஹா ப்ருதிவியிலுள்ளார்,
வெறிதரு	பரிமளிதமான,	அறிதர நின்ற	அறியும்படி நின்ற,
பூமகள் நாதனும்	புஷ்பத்தைப் பிறப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியாருக்கு வல்லபனான ஸர்வேச்வரனும்,	இராமாநுசன்	எம்பெருமானார்,
மாறன்	ஆழ்வார்,	எனக்கு ஆரமுது	எனக்கு நிரதிசய போக்யர்.
விளங்கிய	பகவத் ப்ரஸாதத்தாலே தமக்குப்ரகாசித்த,		அதவா. விளங்கிய சீர்நெறி தரும் என்றது - "மயர்வற மதிநலமருளினன்" என்னும்படி தமக்கு ப்ரகாசித்த பகவத் குணங்களை அடைவே உபதேசித்தருளின தென்றவாறாம். ... (௧௮)
சீர்நெறி தரும்	பரபக்த்யாதி ஸ்வபாவங்களையுடைய அடைவிலே உபதேசித்தருளின,		

அ.—பதவுரையிற்போந்த பாட்டு ஸர்வேச்வரனும், பரிமளம் உடைய பத்மாஸனையும், ஸர்வவித பந்துக்களும், வர்த்த மேதிவரு மில்லாத் ... நம்மாழ்வார், தமக்கு பகவத் நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே ப்ரகாசித்து நின்ற அர்த்த விசேஷங்களை அடைவே யருளிச்செய்த த்ராவிட வேதம் ... நிஷ்டதேயென்று ஸகலஜநங்களுக்கும் ப்ரகாசிப்பித்த எம்பெருமானார் எனக்கு நிரதிசய போக்யமென்கிறார்.

வ்யா —(உறுபெருஞ்செல்வமும்)(உய)(... ஸம்ஸ்தாஸ்மி)(அவிநதநந்தநரேசயப்ராசமதமந்தநமந்தகம்) என்கிறபடியே அப்ராப்தமான ஸம்பந்தமாகக்கே, (...) (தநந்யமயிவர்த்தந ... முதாடகோவர்த்தநம், ஸாஸாதநம்பாதந ஸகலஸாமாராத நம்) என்றும், (...) (ஸாஹிஸ்ரீரமாதாஸதா) என்றும் முக்கைசவாயத்துக்குடலானையாலே ப்ராப்தமாய். (பெருநம்) (...) (க்ஷிணேபுணேமர்த்யலோகம் விசந்தி) என்றும், (ஒருநாயகமாயோட வுலகுடனாண்டவர், கருநாய் கவர்ந்தகாலர் சிதைகிய பானையர், பெருநாடுகாண இம்மையிலே பிச்சை தாங்கொள்வர்) என்னுமிந் சொல்லுகிறபடியே அதிஸ்வல்பமாய் அநித்யமாயிருக்கையன்றிக்கே, (கொள்ளக்குறைவற்றிலங்கி, கொழுந்துவிட்டோங்கிய) என்கிறபடியே கொள்ளக் கொள்ளப் பெருகிவரக்கடவதாயிருக்கிற.

http://acharya.org

(செல்வமும்) ஸம்பத்தும். * அளவியன்றவநந்தாதியாயிறே யிது. (தந்தையுமதாயும) (మాతాపితృసహస్రేభ్యో వత్సలతరం శాస్త్రమ్) (மாதாபிதர்ஸஹஸ்ரேப்யோவத்ஸலதரஂசாஸ்த்ரம்) என்று-ஸகலஜநோஜ்ஜீவநப்ரவர்த்தமாயிறே வேததவஸாமாநய விசிஷ்டவேதம் எல்லாரும் விரும்புவது. அப்படியே (ద్రావిడవేదసాగరమ్) (த்ராவிடவேதஸாகரம) என்று இத்தைவேதமாகநிதர்சிக்கையாலே ஸகலஜநோஜ்ஜீவனைகப்ரவர்த்தமாகையாலும, (భక్తామృతం విశ్వజనానుమోదనమ్) (பக்தாமாதஂவிச்வஜநாநுமோதநம்) என்றும, (தொண்டர்க்கமுதுண்ணச்சொனமாலைகள சொனனேன்)என்றுமசொல்லுகிறபடியே ப்ரியததைதயே நடததககடவதாகையாலும், திருவாய்மொழியிலே (வீடுமினமுற்றவும) எனறு தொடஙகி, (கண்ணனகழலிணை) எனறுமளவும் ஆதயநதத்திலே ஹிதத்தையேபோதிக்கையாலே ஹிததைத நடததககடவதாகையாலும் தாயுந்தந்தையுமாயிருககுமெனறபடி.

(உயாகுருவும்)(పుత్రాన్ బన్ధూన్ సఖీన్ గురూన్ - సర్వధర్మాంశ్చ సంత్యజ్య) (புத்ரான் பந்தூந்ஸகிந்குரூந் - ஸர்வதர்மாஂஶ்சஸஂத்யஜ்ய) என்று த்யாஜ்யகோடியிலே பரிகணிககப்பட்ட குருவன்றிககே, (అత్ర పరత్ర చాపి)(அத்ரபரத்ரசாபி)என்கிறபடியே உபயவிபூதியிலும் இச்சேதநனுக்கு உபாதேயதமனாய, * பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணின ஸதாசார்யனும். இவ்வுபகாராதிகயததாலேகாணும் இவன் பரிதயாஜ்யனாகாதே யொழிநதது. உயர்த்தியையுடையனெனறும், சேதநருடைய அஜ்ஞாநாநதகாரத்தைத நிவர்த்திப்பிததவனாகையாலே (குரு) என்கிறார். (అన్ధకారనిరోధిత్వాద్గురురిత్యభిధీయతే) (அந்தகாரநிரோதித்வாத்குருரிதயபிதீயதே) என்னககடவதிறே.

(வெறிதருபூமகளநாதனும) வெறி-பரிமளம். இந்தபதம் புஷ்பத்துக்கு விசேஷணமாய-பரிமளமான புஷ்பத்தைப் பிறபிடமாக வுடையளான பெரியபிராட்டியாருக்கு, (பூமகளார் கனிகைகேள்வன)எனகிறபடியே வல்லபனான ஸர்வேச்வர னென்றபடி. அன்றிககே (வெறிதருபூமகள்) வெறிஎன்கிறபதம் பிராட்டிககு விசேஷணமாய, (గన్ధద్వారామ్) (கநதத்வாரம்) என்கிறபடியே திவ்யகந்த பரதமான திருமேனியையுடைய பெரியபிராட்டியாரென்னவுமாம. அனறிககே (வெறிதருபூமகள் நாதனும்) வெறி என்கிறபதம ஈச்வரனுக்கு விசேஷணமாய்,(సర్వగన్ధః)(ஸர்வகந்த:) என்கிறபடியே திவ்யபரிமளஸ்வரூபனான ஸ்ரீயபதி யென்றுஞ்சொல்லவுமாம.

இவ்வபிநிவேசமெல்லாம்இவருக்குஎவ்விஷயத்தைப்பற்றவென்றால் (மாறன்விளங்கியசீர்நெறிதருஞ்செந்தமிழாரணமேயென்று)

http://acharya.org

(மாறன்) நம்மாழ்வாருடைய பிதாவானகாரியாலே ஸமர்ப்பிக்கப்பட்ட திருநாமமாய்த்து - இது. இப்படிப்பட்ட நம்மாழ்வாருக்கு. (விளங்கிய) ப்ரகாசித்த. ஸர்வேச்வரன் தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே உபயவிபூதிவ்ர்த்தாந்தங்களையெல்லாம் அடைவே யறியலாம்படி * மயர்வறமதிநலமருளப்பெற்ற நம்மாழ்வாருக்கு. (ఏవంనిత్యాత్మభూగాధాస్సద గోపః ప్రణేష్యతి) (ஏவம்நித்யாத்மபூகாதாஸ்ஸட கோபஃப்ரணேஷ்யதி)என்கிறபடியே நித்யாபௌருஷேயமாயிருக்கிறவிது அவாதம்மாலேயுண்டாக்கப்பட்டதென்று,தோற்றும்-ப்ரகாசித்ததென்றபடி. ஆகையாலேயிறே (விளங்கிய) என்றருளிச்செய்கிறார். (சீர்நெறிதரும்) பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதி ஸ்ரீயையெல்லாம் எல்லாருமறியும்படி ஸாத்மிகக ஸாத்மிக்க அநுபவிப்பிக்குமதாய். நெறி-ஒழுக்கம். அதாகிறது-ஸாத்மிக்க என்றபடி.

அன்றிக்கே, (மாறன்விளங்கியசீர்நெறிதரும்) ஆழ்வார், பகவத்ப்ரஸாதத்தாலேதமக்குப்ரகாசித்த பரபக்த்யாதி ஸ்வபாவங்களினுடைய அடைவிலே உபகரித்தருளினவென்று யோஜிக்கவுமாம். அங்ஙனன்றிக்கே, (சீர்நெறிதரும்) (అగస్త్యోభగవాన్ సాక్షాత్ తస్య వ్యాకరణం వ్యధాత్। ఛన్దశ్శాస్త్రానుసారేణ వృత్తానామపి లక్షణమ్॥ ఉక్తమన్యైస్తథాచార్యైః ద్రామిడస్య మహామునే। సంస్కృతస్య యథా సన్తి పాఠ్యబన్ధస్య సర్వతః॥ లక్షణాని తథా సన్తి ద్రామిడస్యాపి భూతలే) (அகஸ்த்யோபகவாந்ஸாக்ஷாத தஸ்யவ்யாகரணம்வ்யதாத் । சந்தஶ்ஶாஸ்த்ராநுஸாரேண வ்ர்த்தாநாமபி லக்ஷணம் ‖ உக்தமந்யைஸ்ததாசார்யைஃ த்ராமிடஸ்ய மஹாமுநே। ஸம்ஸ்க்ர்தஸ்யயதாஸந்தி பாட்யபந்தஸ்யஸர்வதஃ‖ லக்ஷணாநிததா ஸந்தி த்ராமிடஸ்யாபிபூதலே) என்கையாலே - எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொடை, நிரை, பா என்று சொல்லப்படுகிற ப்ரபந்தலக்ஷணபேதமா யிருக்குமென்னவுமாம். (சீர்) என்கிறவிது - எழுத்து அசைதொடக்கமானவற்றுக்கு உபலக்ஷணமாகக்கடவது. நெறி-ஒழுக்கம். அதாவது-ஸ்வபாவமாய - லக்ஷணமென்றபடி. தருகை-உடைத்தாகை.

(செந்தமிழாரணமேயென்று) ஆதிமத்யாவஸாநங்களிலே ஏகரூபமாய் த்ராமிடபாஷாரூபமான உபநிஷத்தேயென்று அவதாரணத்தாலே - அந்யயோகவ்யவச்சேதம்பண்ணுகிறது. இதுகாணும எம்பெருமானாருடைய ப்ரதிபத்தி. எம்பெருமானார் தமக்கு ஐச்வர்யாதி பரதேவதாபர்யந்தமான புருஷார்த்தங்களெல்லாம் திருவாய்மொழியேயன்றி வேறொன்றை அதயவஸிதரோரன்றபடி (இந்நீணிலத்தோரறிதாகின்ற) இவ்வர்த்தத்தை விஸ்தீர்ணையான இந்த ப்ர்திவியிலேயுள்ள சேதநர்க்கு அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணுகைக்கு நின்றருளின.

அன்றிக்கே, இவ்வர்த்தத்தை மஹாப்ர்திவியி லுள்ளாரெல்லாரும அறியும்படிநின்றருளின வென்னவுமாம். (ஏஷ ப்ரஹ்மம்) (ஏதத்வ்ரதமமம) என்கிறபடியே பத்தகங்கணராயிருக்கிற வென்றபடி. (இராமாநுசன்) எம்பெருமானார். (எனக்காரமுதே) அடியேனுக்கு அபர்யாப்த்தாம்ர்தம்; - நிரதிசயபோக்யனென்றபடி. (உக)

உரை.—அ.—இருபதாம்பாட்டு. நாதமுனிகளைத் தம்திருவுள்ளத்திலே அபிநிவேசித்தநுபவிக்கும் எம்பெருமானார் எனக்கு பரமதநமென்கிறார்.

மூ.—ஆரப்பொழில்தென்குருகைப்பிரானமுதத்திருவாய்
ஈரத்தமிழினிசையுணர்ந்தோர்கட்கினியவர்தம்
சீரைப்பயின்றுய்யுஞ்சீலங்கொள்நாதமுனியைநெஞ்சால்
வாரிப்பருகுமிராமாநுசனென்றன்மாநிதியே. (உ0)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆரப்பொழில்	சந்தநச் சோலைகளையுடைத்தாய,	உய்யுமசீலங்கொள்	தன்ஸத்தை பெறுநிற்கும் ஸ்வபாவத்தையுடையரான,
தென்	தர்சநீயமான,	நாதமுனியை	நாதமுனிகளை, பெருவிடாயர் மடுவிலே புகுந்து வாரிப்பருகு மாப்போலே,
குருகைப்பிரான்	திருநகரிக்கு நாதபூதரான ஆழவாருடைய,	நெஞ்சால்	தம்திருவுள்ளத் தாலே,
அமுதம்	பரம போக்யமான,	வாரிப்பருகும்	அபிநிவிஷ்ட ராய்க் கொண்டு அநுபவிக்கும்,
திருவாய	திருப்பவளத்தில் பிறந்த,	இராமாநுசன்	எம்பெருமானார்,
ஈரம்	ஈரப்பாட்டையுடைத்தான,	என்றன்மாநிதி	எனக்கு அக்ஷயமான நிதி.
தமிழினிசை	திருவாய மொழியினிசையை,	ஆரம்—சந்தநம். (உ0)	
உணர்ந்தோர்கட்கு	அறிந்தவர்களுக்கு,		
இனியவர்தம்	ஸ்நிக்த்தராயிருக்குமவர்களுடைய,		
சீரை	குணங்களிலே,		
பயின்று	செறிந்து,		

வ்யா.—அ.—இருபத்தோராம்பாட்டு. தர்சநீயமான திருநகரிக்கு நிர்வாஹகரான நம்மாழ்வாருடைய அம்ர்தமய திவ்யஸூக்திரூபமாயிருந்துள்ள திருவாய்மொழியை ஸார்த்தமாக அப்யஸிக்க வல்லவர்திறததிலே அதிப்ரவணராயிருக்குமவர்களுடைய கல்யாணகுணங்களிலே ஸக்தராய் உஜ்ஜீவிக்கும் ஸ்வபாவத்தையுடையரான ஸ்ரீமந்நாதமுனிகளை தம்முடையமநஸ்ஸாலே யநுபவிக்கும் எம்பெருமானார் அடியேனுக்கு மஹாநிதியாயிருப்பரென்கிறார்.

http://acharya.org

வ்யா.—(ஆரப்பொழில்தென்குருகை) திருத்தாம்ரபர்ணீதீரமாகையாலும் - நீர்வாசியாலும் நித்யாபிவ்ருத்தங்களான சந்தநச்சோலையாலே சூழப்பட்டு தாசநீயமான திருக்குருகூர்க்கு. ஆரம்-சந்தநம். (பிரான்) ஸர்வருக்கும் ஸேவ்யமாம்படி உபகாரகர். (குயில்நின்றால் பொழில்சூழ்குருகூர்நம்பி) என்று ஸ்ரீமதுரகவியாழ்வாருளிச்செய்தாரிறே. (குருகைப்பிரான்) திருக்குருகையிலே யவதரித்து ஸகலஜகங்களுக்கும் திருவாய்மொழி முகத்தாலும், நாதமுநிகளுக்கு ஸகலார்த்தங்களையு முபதேசித்து ஸம்ப்ரதாயத்தை நடத்தினபடியாலும் உபகாரக ரென்றபடி. (அமுதத்திருவாயிரத் தமிழினை) இப்படிப்பட்ட நம்மாழ்வாருடைய, (தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள்சொன்னேன்)என்கிறபடியே பரமபோக்யமாய்க் கொண்டு திருப்பவளத்தில பிறந்ததாய், ஸ்வநிஷ்ட்டரான சேதநருடைய ஸம்ஸாரதாபமெல்லாம ஆறும்படியாக எரப்பாட்டையுடைததாய, த்ரமிடபாஷாரூபமான திருவாய்மொழியினுடைய. (இசை) சாநம. ராகாதி லக்ஷணங்களோடேகூடி. (உணர்ந்தோர்கட்கு) அப்யஸித்து பின்னையும ஆவர்த்திபண்ணி அதிலே பூர்ணஜ்ஞாநமுடையவாகளுக்கு. ஸ்ரீமந்மதுரகவிகள், திருமங்கையாழ்வாரமுதலானவர்களுக்கென்றபடி.

(இனியவர்) அவர்களுக்கு அத்யந்தம் ப்ரியதமராய் ஸ்ரீமந்நாதமுநிகளுககுக்கண்ணிநுண் சிறுத்தாமபை உபதேசித்தருளின ஸ்ரீபராங்குசநம்பி. (இனியவர்தம சீரைபபயின்று) அவாகளுடைய கல்யாணகுணஙகளை ஸாவகாலமு மநுஸந்தித்து அவர் செய்தருளின உபகாரத்தை விஸ்மரியாதே கர்தஜ்ஞராய்க்கொண்டு. பயிலுதல்-அநுஸந்திக்கை. (உயயும்) அவ்வளவாச இவருக்கு உஜ்ஜீவநமில்லை, அந்தமதுரகவியாழ்வாருடைய ஸமப்ரதாயஸ்த்தரான ஸ்ரீபராங்குசனமபி உபதேசிதத வநந்தரம் அவர்பககலிலே க்ர்தஜ்ஞராயப்போந்தபின்பு காணும் இவர் உஜ்ஜீவித்தது (சீலங்கொள்நாதமுனியை) இப்படி உஜ்ஜீவநமேஸ்வபாவமாகவுடையரான ஸ்ரீமந்நாதமுனிகளை. ஸ்ரீரங்கநாதருடையதிருநாமத்தை வஹித்து ஆழ்வார் தமககு உபதேசிததவர்த்தங்களை அடைவே ஸர்வதாமநநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாதமுநிகளை யென்றபடி.

(நெஞ்சால் வாரிபபருகும்) ஸமாநகாலமானால் காயிகமாகத் தழுவி முழுசிப் பரிமாறி யநுபவிப்பர்காணும். அதயந்தகாலவ்யவதாநமா யிருக்கையாலே அந்தஸ்ரீமந்நாதமுநிகளை நெஞசாலே யள்ளிக்கொண்டு பிறிகதிர்ப்படாதபடி விக்ரஹகுணங்களோடேகூட வநுபவிக்கிற. பருகுகை - அநுபவிக்கை. (இராமாநுசன்)

http://acharya.org

எம்பெருமானார். (என்றன்மாநிதியே) லோகத்தாரெல்லாருக்குமாக அவதரித்தாராகிலும் அமுதனாருடைய அத்யவஸாயம் தமக்கேயாகவவதரித்தாரென்றுகாணும். (என்றன்மாநிதி) அடியேனுடைய மஹாநிதி. நவநிதியான தநங்களுக்கும் தைநம்திநயப்ரளயத்திலும் அழிவுண்டு, அப்படியன்றிக்கே அவற்றைக்காட்டில் விலக்ஷணமாய் அப்ராக்ர்தமான நிதியென்கிறார். யாவதாத்மபாவியாக உஜ்ஜீவந ஹேதுவாயிருக்கும் நிதியென்றபடி. (𑌅𑌤𑍍𑌰 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌚𑌾𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌦𑍀𑌯𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌮𑌦𑍀𑌯𑌮𑍍) (அத்ரபரத்ரசாபிநித்யம் யதீயசரணௌ ஶரணம்மதீயம்) என்றருளிச்செய்தாரிறே ஆளவந்தாரும். (௨௦)

உரை.—அ.—இருபத்தோராம்பாட்டு. ஆளவந்தாருடைய திருவடிகளாகிற ப்ராப்யலாபத்தைப் பெற்றுடைய எம்பெருமானார் என்னை ரக்ஷித்தருளினார், ஆகையால் க்ஷுத்ரருடைய வாசல்களிலேநின்று அவர்கள் ஔதார்யாதிகளைச்சொல்லி ஸ்துதியேனென்கிறார்.

மூ.—நிதியைப்பொழியும்முகிலென்று நீசர்தம்வாசல்பற்றித்
துதிகற்றுலகில்துவள்கின்றிலேனினிதூய்நெறிசேர்
எதிகட்கிறைவன்யமுனைத்துறைவனிணையடியாங்
கதிபெற்றுடையவிராமானுசனென்னைக்காத்தனனே. (௨௧

பதம்.	உரை.
தூய்நெறிசேர் எதிகட்கு	பரிசுத்தாநுஷ்டாநயுக்தரான யதிகளுக்கு,
இறைவன்	நாதரான,
யமுனைத்துறைவன்	ஆளவந்தாருடைய,
இணை	பரஸ்பரஸத்ருசமான
அடியாம்	திருவடிகளாகிற
கதிபெற்றுடைய	ப்ராப்யத்தைப் பெற்றுடையராயிருக்கும்,
இராமாநுசன்	எம்பெருமானார்,
என்னைக்காத்தனன்	என்னை ரக்ஷித்தருளினார்;
இனி	ஆனபின்பு,
நிதியைப் பொழியும் முகிலென்று	நிதியை வர்ஷியாநிற்கும் மேகமென்று,

பதம்.	உரை.
	அவர்களுடைய ஔதார்ய கதநத்துக்குறுப்பான,
துதிகற்று	ஸ்தோத்ரங்களைக் கற்று,
உலகில்	லோகத்திலே,
நீசர்தம்	அஹங்காராதி தூஷிதரான தண்ணியர்களுடைய,
வாசல்பற்றி	வாசலைப்பற்றி நின்று என்னுடைய ரக்ஷணார்த்தமாக அவர்களுடைய அவஸரம் பார்த்து,
துவள்கின்றிலேன்	துவளக்கடவேனல்லேன்.

தூய்நெறிசேர் எதிகட்கிறைவன் என்கிறவிது ஆளவந்தார்க்கு விசேஷணமாகவுமாம். நெறி-ஒழுக்கம். கதி-கதி; அதாவது-ப்ராப்யம். (௨௧)

http://acharya.org

அ.—இருபத்தோராமபாட்டு. இவ்வளவும- ஆழ்வார்களுடையவும ஸ்ரீமந்நாதமுனிகளுடையவும ஸம்பந்தத்தையிட்டு எம்பெருமானாருடைய வைபவத்தை யருளிச்செய்துகொண்டு வந்து, இதிலே - சரமபர்வநிஷ்டரொலலார்க்குமஸ்வாமியான ஆளவந்தாருடைய திருவடிகளை உபாயோபேயமாகப்பற்றின எமபெருமானார் என்னை ரக்ஷித்தருளினபின்பு இனிநீசரான மநுஷ்யரை ஸ்துதித்து க்லேசபபடேனென்கிறார்.

வ்யா.—(தூய்நெறிசேர்) (ശ്രുതിപഥവിപരീതം ക്ഷേത്രം ...) (ச்ருதிபதவிபரீதம் க்ஷேவேளகல்பம்ச்ருதௌசப்ராகர்த்தி புருஷயோகப்ராபகம் சோகதத்ய:)என்கிறபடியே அபரிசுத்தமாயிருக்கிற உபாயாந்தரங்களுக்கும * ப்ராபகாந்தரபரித்யாகத்துக்கும் அஜ்ஞாந அசக்திகளன்று ஸ்வரூபவிரோதமே ப்ரதாந ஹேதுவென்றும், மஹிராப்ரந்துமிச்ரமான சாதகுமபமயகும்பகத தீர்த்தஸலிலம்போலே அஹங்கார மிச்ரமான உபாயாந்தரமென்றுஞ் சொல்லப்படுகிற அவத்யங்களொன்றுமின்றிக்கே அதயந்தபாரதந்த்ர்ய ஸ்வரூபாநுரூபமாய், அதிலும பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவான ஈச்வரனைப பற்றுகை யன்றிக்கே மோக்ஷைகஹேதுவான ஸதாசார்யனைப்பற்றி, அதிலும அஹங்கார கர்பபமானதானபறறுமபற்றுகையன்றிக்கே காருணிகராய் பரஸந்நாசார்யரான ஆளவந்தாரதமமாலே பரகதமாக ஸ்வீகரிக்கபபட்டதாகையாலே அதயநத பரிசுததமான ஆசார்யாபிமாநத்திலே யொதுங்கி வர்த்திக்கிற. தூயமை-பரிசுததி. நெறி-உபாயம.

(எதிகட்கு) (ഐഹികാമുഷ്മികം സർവം ...) (ஐஹிகாமுஷ்மிகம ஸர்வமகிரஷ்டாக்ஷரப்ரத:) என்றும, (മാതാ പിതാ യുവതയസ്തനയാ വിഭൂതിസ്സർവം) (மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ் ஸர்வம) என்றுஞ் சொலலுகிறபடியே ஸ்வாசார்யரான ஆளவந்தாரே தங்களுக்கு ஐஹிகாமுஷ்மிகங்களெல்லாம என்றுகொண்டு மேகபிந்துக்களையொழிய மற்றொன்றைவிரும்பாத சாதகம்போலே ததீயவிஷயங்களை விருமபாதபடி தந்தாமுடைய மநஸ்ஸை நியமித்துப் போருகிற பெரியநம்பி, திருமலைநமபி, திருக்கோட்டியூர்நம்பி, திருவரங்கப் பெருமாளரையா, திருமாலையாண்டான, திருக்கச்சிநம்பி, மாறனேரிநம்பிமுதலானவர்களுக்கு (இறைவன) ஸ்வாமியானவர்.

(யமுனைத்துறைவன்) யமுநாதீரத்திலே யெழுந்தருளியிருந்த நாதமுநிகளுக்கு உத்தேச்யராய் காட்டுமன்னாரகோயிலிலே யெழுந்தருளி யிருந்த ஸ்வாமிகளுடையதிருநாமத்தை வஹித்த ஆளவந்தாருடைய. (இணையடியாம்) பாவநத்வபோக்யத்வங்க

ளாலே பரஸ்பரஸத்ர்சமான திருவடிகளாகிற. (கதிபெற்று) உபாயத்தை லபித்து. உபாயோபேயங்களாகப் பற்றியென்றபடி. கதி-கதி. அதாவது-ப்ராப்யமும், ப்ராபகமும். அத்தாலே-லோகத்தில் ப்ரபந்நஜநங்களுக்கெல்லாம் ஸ்வாமியாயிருக்கிற. (இராமாநுசன்) எம்பெருமானார். (என்னைக்காத்தனனே!) லோகத்திலே ஜ்ஞாநாதிகர்களை ரக்ஷித்தது ஆச்சர்யமாயிராது, ப்ரதிகூலனாயிருக்கிற வென்னை அநுகூலனாக்கி ரக்ஷித்தான்; இதென்ன அகடிதகடநாஸாமர்த்யமென்று வித்தராகிறார். தூயநெறிசேர் யதிகட்கிறைவன யமுனைத்துறைவனிணையடியாங் கதிபெற்றுடைய என்கிறது - எம்பெருமானாருக்கு விசேஷணமாகவுமாம்.

(இனி) அவர்க்கு அடியேன் ரக்ஷ்யபூதனாய விட்டபின்பு. (இனி) மேலுள்ளகாலமெல்லாம். (நீசர்தமவாசலபற்றி) (సంశ్లిష్టసమస్తకల్పనమపూర్వమ్) (ஸம்கல்பித புருஷார்த்தம ஸகலப யகராமேச மல்பார்த்தம) என்கிறபடியே அஹங்கார தூஷிதராய நிஹீநரா யிருக்கிறவர்களுடைய, (సర్వస్వదానగర్వితధీస్సాదానచింతనమ్) (ஸர்வஸ்வதாநகர்விதஸ்ஸர்வதிகாதுராவிகாயைரசிதோயமஞ்சலி:) என்கிறபடியே நரகப்ராயமான வாசலை ஆச்ரயித்து.

(நிதியைப்பொழியும்முகிலென்று) லோகத்திலே மேகம ஜலத்தைவர்ஷிக்கும் மித்தனை, இந்த தாதாவானவன் நவநிதியையும ஒருக்காலே வர்ஷிக்கும காளமேகமா யிருந்தானென்று. (நிதிசற்று) (சொன்னால் விரோதமிதாகிலும சொல்லுவன கேண்மின்று, என்னாவிலின்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்) என்கிற * தாமஜ்ஞஸமயத்தையும லங்கித்து வாய்வந்தபடியெல்லாம் ஸ்தோத்ரம்பண்ணி. மறவொருநவாசொன்ன மித்யாஸ்தோத்ரங்களை அபயலித்து முன்னேசொல்லி யென்றுதல (உலகில) இப்படியிருந்த * இருள்தருமாஞாலத்திலே. (துவளகின்றிலேன) அவர்களுடைய அவஸரமபார்த்துஎன்னுடையரக்ஷணத்துக்காககலேசப்படக்கடவேனல்லேன். துவளுகை - வாடுகை (గురుపాదాంబుజం ధ్యాయేత్ గురోర్నామ సదా జపేత్ । గురోర్వార్తాంశ్చ కథయేత్ గురోర్నాన్యం న భావయేత్) (குருபாதாம்புஜம் த்யாயேத குரோர்நாமஸதா ஜபேத। குரோர்வார்த்தாம்ஸ்சகதயேதகுரோரந்யம்நபாவயேத்) என்கிறபடியே யிருக்கக்கடவேனென்று கருத்து. ... ... (உக)

உரை.—அ—இருபத்திரண்டாமபாட்டு. முன்பு தனனோடு எதிரிட்ட தேவஜாதி, பின்பு தன்வைபவத்தையறிந்து ஸ்தோத்ரம் பண்ண அவர்களுக்காக வாணன் அபராதத்தைப் பொறுத்த ஸர்வேசுவரனையேத்தும எம்பெருமானார் எனக்கு ஆபத்தநமென்கிறார்.

http://acharya.org

மூ.—கார்த்திகையானுங்கரிமுகத்தானுங்கனலும்முக்கண்
மூர்த்தியும்மோடியும்வெப்பும்முதுகிட்டுமூவுலகும்
பூத்தவனேயென்றுபோற்றிடவாணன்பிழைபொறுத்த
தீர்த்தனையேத்துமிராமாநுசனென்றன்சேமவைப்பே

பதம்.	உரை.
கார்த்திகையானும்	க்ர்த்திகாநக்ஷத்ரஸம்பந்தத்தாலே கார்த்திகேயனென்று சொல்லப்படுகிற ஸுப்ரஹ்மண்யனும்,
கரிமுகத்தானும்	கஜமுகனான கணபதியும்,
கனலும்	அவர்களுக்குஸஹாயமாய்வந்த அக்நியும்,
முக்கண்மூர்த்தியும்	த்ரிநேத்ர யுக்தமான வடிவை யுடைய ருத்ரனும்,
மோடியும்	துர்க்கையும்,
வெப்பும்	ஜ்வரமும்,
முதுகிட்டு	"முண்டனீறன்மக்கள் வெப்புமோடியங்கியோடிட" என்கிறபடியே புறங்காட்டியோட, "కృష్ణ కృష్ణ మహాబాహో జానే త్వాం పురుషోత్తమమ్" க்ர்ஷ்ண க்ர்ஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம்" என்கிறபடியே ஸர்வேச்வரனென்றறிந்தபின்பு,
மூவுலகும்	க்ர்தகம் அக்ர்தகம் க்ர்தகாக்ர்தகம் என்று மூன்றுவகைப்பட்டிருக்கிற இந்த அண்டத்தை,
பூத்தவனேயென்று	உன்னுடைய திருநாபீகமலத்திலே ஜநிப்பித்தவனே யென்று, அவனுடைய ஜகத்காரணத்வகதநத்தாலே அவனுக்கும் தங்களுக்கு முண்டான பித்ராபுத்ரஸம்பந்தாதிகளை ஸூசிப்பித்து நிரூபாதிகமான ஆச்ரயித்தவானவனுடைய ரக்ஷகத்வமாக,
போற்றிட	ஸ்தோத்ரம்பண்ண,
வாணன்பிழைபொறுத்த	அவர்களுக்காக பாணாஸுரனுடைய அபராதத்தை க்ஷமித்த,
தீர்த்தனை	குணசுத்தியையுடைய ஸர்வேச்வரனை,
ஏத்தும்	அந்த குணவித்தராய்க்கொண்டுஏத்துகிற,
இராமாநுசன்	எம்பெருமானார்,
என்றன்சேமவைப்பு	எனக்கு ஆபத்துக்குத்துணையாக சேமித்துவைத்த தநம்.

அ.—இருபத்திரண்டாம்பாட்டு. பாணனென்கிற மஹாஸுரன் கோரதபஸ்ஸாலே ருத்ரனை வசீகரித்து அவனைத் தன்வாசலிலே வைத்துக்கொண்டிருக்கிறகாலத்திலே, அவன் தன் பெண்பிள்

http://acharya.org

லையான உஷாநிமித்தமாக அநிருத்தாழ்வானை நிரோதிக்க க்ர்ஷ்ணன் இவ்வ்ர்த்தாந்தத்தைக்கேட்டு அவன்மேலேபடையெடுத்து வர ருத்ரனும் ஸபரிகரனாய்க்கொண்டுவந்து எதிரிட்டு க்ர்ஷ்ணனோடே கோரயுத்தம்பண்ணி பலாயிதனானபின்பு, தன்னை உள்ளபடி யறிந்து ஸ்தோத்ரம்பண்ணினவாறே, அப்போது ருத்ரன்முதலான தேவஜாதிக்காக பாணனுடைய ஆர்த்த்ராபராதத்தைப் பொறுத்த க்ர்ஷ்ணனை ஸ்துதிக்கும் எம்பெருமானார் எனக்கு மஹாநிக்ஷேபபூதரானகிறார்.

வயா.—(கார்த்திகையனுமித்யாதி)ப்ரஹ்லாதனுடையபௌத்ரனாய் மஹாபலியுடைய புத்ரனான பாணனென்கிற மஹாஸுரன் கோரமானதபஸ்ஸுக்களாலே ருத்ரனை ப்ரஸந்நனாக்கி வசீகரித்துக்கொண்டு நீ என்வாசலிலேயிருந்து ஸகலலோக ஜயத்தையும் பண்ணித்தரவேணுமென்று அர்த்திதனவாறே ருத்ரனும்,அப்படியே பார்யாபுத்ராதி ஸஹிதனாய்வந்து தலையில்பூ வாடாதபடி உன்னைக்காக்கிறேனென்று ப்ரதிஜ்ஞைபண்ணி அவனுடையவாசலிலேயிருக்கிறகாலத்திலே, அவனுடைய கந்யகையானஉஷா ரூபலாவண்யாதிகளாலே அப்ரதிமையாயிருக்கையாலே அவளுக்கு க்ரீடார்த்தமாக ஒருஸௌதத்தைப் பண்ணிக்கொடுக்க; அவளும் பஹுபரிசாரிகாஸ்தரீகளோடே அந்த ஸௌததத்திலேவிஹரியாநின்றுகொண்டு தனக்குத்தகுதியானவாகளைதேடும்பருவம்வந்தவாறே ஒருமாயாப்பிறவியான தோழியை யழைத்து, பூலோகத்திலேயிருக்கிறராஜகுமாரரெல்லாரையும் ஒருசித்ரபடத்திலே எழுதிக்கொண்டுவரவேணுமென்றுசொல்ல,அவளும அப்படியே எழுதிக்கொண்டு அவள்கையிலேகொடுக்க, அவள் எல்லாரையும்பார்த்து அவர்களிலே த்வாரகாநகரவாஸியாய் க்ர்ஷ்ணனுக்குப் பேரனாய் ப்ரத்யும்நனுடைய குமாரனான அநிருத்தாழ்வானைப்பார்த்து,அவனையேவரிக்கவேணுமென்னும அதிவ்யாமோஹத்தாலே அந்தத்தோழியைப்ப்ரார்த்திக்க, அவளும் அஸுரஜாதியிலேபிறந்த மாயாவிநியாகையாலே த்வாரகையிலுள்ளாரெல்லாரையும் வஞ்சித்து அநிருந்தாழ்வானை யெடுத்துக்கொண்டுவந்துஅந்தஸௌதத்திலேவைக்க, உஷையும் அநிருத்தாழ்வானும் அந்யோந்யம் ஸம்வதித்துக்கொண்டு காந்தர்வவிவாஹத்தாலே ஒருவரையொருவர் வரித்து போகபரராயிருக்க, பாணனும அச்செய்திதெரிந்து குடிலசித்தனாய் அநிருத்தாழ்வானைப் பிடித்து நிரோதிக்க; இவ்வ்ர்த்தாந்தத்தை நாரதனால் கேட்டருளி வாணன்மேலே சீறி ஸபரிகரனாய்ப் படையெடுத்துவர, அவன வாசலிலேயிருந்த ருத்ரன எதிரிட்டுத் தோற்று ஸ்துதிபண்ணினனென்று இந்த வ்ர்த்தாந்தங்களெல்லாம் பாகவதஹரிவம்சாதிகளிலே ப்ரஸித்தமிறே; அந்தகதாமுகேன இப்பாட்டையருளிச்செய்கிறார்.

(கார்த்திகையானும்) ருத்ரபுத்ரனாய் க்ருத்திகாக்ஷேத்ரத்திலே ஜலத்திலே ஜநித்த ஷண்முகனும். (கரிமுகத்தானும்) ருத்ரன் தக்ஷயாகத்வம்ஸம்பண்ணினபோது அங்கே யிருந்தவர்கள் இவனுடைய சிரஸ்ஸை சேதித்தவாறே தேவஜாதியெல்லாம் திரண்டுவந்து ஒரு ஆனையினுடைய தலையை யறுத்துக்கொண்டுவந்து இவன் கழுத்தின்மேலே சேர்க்க அன்றுதொடங்கி கஜாநநனென்று பேரைவஹித்த ருத்ரகணபதியும். (கனலும் முக்கண்மூர்த்தியும்) லோகஸம்ஹாரம்பண்ணுகிற ஸம்வர்த்தகாலாக்நிபோலே ப்ரஜ்வலிதமான மூன்றுகண்களையுடைய நாமததாலே விரூபாக்ஷனென்று பேசப்படுகிற ருத்ரனும. அனறிக்கே, கனலும என்று-அவர்களுக்கு ஸஹாயமான அக்நியைச் சொல்லவுமாம். (மோடியும) துர்க்கையும். (வெப்பும) யுத்தபரிகரமாய எதிரிப்படைக்கு ஸந்தாபகரமான ஜ்வராதிதேவதையும். இத்தனை ஸாதநங்களுடனே வந்து யுத்தம்பண்ணி க்ர்ஷ்ணனுடைய பாணபாதத்துக்கு ஸஹிக்கமாட்டாதே. (முதுகிட்டு) (முண்டன நீறன மக்கள வெப்புமோடியங்கியோடிட) என்கிறபடியே விமுகராய்ப் புறங்காட்டியோடி. அப்போது அவனுடைய பரத்வத்தையறிந்து.

(மூவுலகும்பூத்தவனேயென்று)(కఇతి బ్రహ్మణో నామ ఈశోహం సర్వదేహినామ్। ఆవాం తవాఙ్గే సమ్భూతౌ తస్మాత్కేశవనామవాన్) (கஇதிப்ரஹ்மணோநாம ஈசோஹம்ஸர்வதேஹிநாம்| ஆவாந்தவாங்கேஸம்பூதௌ தஸ்மாத்கேசவநாமவாந்) என்றும், (ఏతౌ ద్వౌ విబుధశ్రేష్ఠౌ ప్రసాదక్రోధజౌ స్మృతౌ। తదాదర్శితపన్థానౌ సృష్టిసంహారకారకౌ) (ஏதௌத்வௌவிபுதச்ரேஷ்டௌ ப்ரஸாதக்ரோதஜௌஸ்ம்ர்தௌ| ததாதர்சிதபந்தாநௌ ஸ்ர்ஷ்டிஸம்ஹாரகாரகௌ) என்றும்,(வானோர்பலரும முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய், தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி யதனுட கண்வளரும்) என்றும் சொல்லுகிறபடியே ஸமஸ்தலோகங்களையும் ஸ்ருஷ்டிக்கைக்காக காரணஜலத்திலே ஒரு பவனான ஆலந்தளிரின்மேலே பள்ளிகொண்டு அவனுடைய திருநாபீகமலத்திலே சதுர்முகனதொடக்கமான ஸகலஜகத்துக்களினுடையவும் உத்பத்திகாரணமாயிருப்பதொரு தாமரைப்பூவை விகஸிப்பித்த ஜகத்காரணபூதனானவனென்று.

(போற்றிட) தங்களுக்கு மவனுக்குமுண்டான பிதாபுத்ராதி ஸம்பந்தங்களை ஸூசிப்பியாநின்றுகொண்டு ஸ்தோத்ரம்பண்ண. போற்றுதல்-புகழுதல். (కృష్ణ కృష్ణ మహాబాహో జానే త్వాం పురుషోత్తమమ్) (க்ர்ஷ்ணக்ர்ஷ்ண மஹாபாஹோ ஜாநேத்வாம் புருஷோத்தமம) என்றானிறே ருத்ரன். (కృష్ణేతి మఙ్గళం నామ యస్య వాచి ప్రవర్తతే। భస్మీభవన్తి రాజేన్ద్ర మహాపాతకకోటయః) (க்ர்ஷ்ணேதிமங்களம்நாம யஸ்யவாசிப்ர.

http://acharya.org

வர்த்ததே। பஸ்மீபவந்திராஜேந்த்ர மஹாபாதககோடய:.) [కృష్ణ- க்ர்ஷ்ண] தான் தீரக்கழியச்செய்த அபராதத்துக்கு ப்ராயஶ்சித்தாத்தமாக திருநாமஸங்கீர்த்தநம பண்ணுகிறான்காணும். (ప్రాయశ్చిత్తాన్యశేషాణి తపఃకర్మాత్మకాని వై। యాని తేషామశేషాణాం కృష్ణానుస్మరణం పరమ్) (ப்ராயச்சித்தாந்யசேஷாணி தப:கர்மாத்மகாநிவை। யாநிதேஷாமசேஷாணாம் க்ர்ஷ்ணாநுஸ்மரணம்பரம்) என்னக்கடவதிறே. [కృష్ణ- க்ர்ஷ்ண] (కృషిర్భూవాచకశ్శబ్దో ణశ్చ నిర్వృతివాచకః। తయోరైక్యం పరబ్రహ్మ కృష్ణ ఇత్యభిధీయతే) (க்ர்ஷிர்பூவாசகஶ்ஶப்தோ ணஶ்சநிர்வ்ர்திவாசக:। தயோரைக்யம்பரப்ரஹ்மக்ர்ஷ்ண இத்யபிதீயதே) என்னும்படி உபயவிபூத்யாத்மகனாய், (జగచ్చ సః) (ஜகச்சஸ:) என்று-தத்ரூபமஹாப்ர்திவியானவனே.

[మహాబాహో-மஹாபாஹோ] பூர்வகாலத்திலே தேவர்களும் ரிஷிகளும், (అశక్తాస్తే సమస్తాస్తు దేవాద్యాః కర్మయోనయః) (அசக்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவாத்யா:கர்மயோநய:) என்றும், (అవిద్యాన్తర్గతాస్సర్వే) (அவித்யாந்தர்க்கதாஸ்ஸர்வே) என்றும், (న మే విదుస్సురగణాః ప్రభవం న మహర్షయః) (நமேவிதுஸ்ஸுரகணா: ப்ரபவந்நமஹர்ஷய:) என்றும் சொல்லப்பட்ட ப்ரக்ர்தராகையாலே ஹரிஹரர்களிருவருடையவும் பலாபலங்களை யறிவதற்காக விச்வகர்மாவை யழைத்து இரண்டு தநுஸ்ஸுக்களைப் பண்ணச்சொல்ல அவனும் அப்படியே பண்ணிக்கொடுக்க, அவர்கள் அந்த தநுஸ்ஸுக்களையெடுத்து இருவர்கையிலுங்கொடுத்து யுத்தம்பண்ணவேணுமென்று ப்ரார்த்திக்க, அப்படியே இருவரும் யுத்தம்பண்ணுகிறபோது விஷ்ணுவினுடைய சரவேகத்தை ருத்ரன ஸஹிக்கமாட்டாதே மிகவும் அவஸந்நனாய் ரஜஸ்தமஸ்ஸுக்கள் அபிபூதமாய் ஸத்வம்தலையெடுத்தவாறே, அப்போது அவனை "ஸர்வஸ்மாத்பரன்" என்றறிந்து ஸ்தோத்ரமபண்ணினனென்று ப்ரஸித்தமிறே; அப்படியே இப்போதும் தமோத்ரேகத்தாலே யுததம்பண்ணி அவனாலேயடிபட்டு பின்பு ஸதவமதலையெடுக்க பூர்வகாலத்தில்அபதானத்தை ஸ்மரித்து அவனுடைய பாஹுபலத்தை யறிந்தவனாகையாலே (మహాబాహో - மஹாபாஹோ) என்று ஸம்போதிக்கிறான்.

[జానే-ஜாநே] இவ்வளவும் தேவரீர்கொடுத்த அதிகாரத்தாலே யுத்தம்பண்ணி அடிபட்டபின்பு ஸத்வம்தலையெடுத்துத் தெளிந்தேன். (సత్త్వాత్సంజాయతే జ్ఞానమ్) (ஸத்வாத்ஸஞ்சாயதேஜ்ஞாநம்) என்றதிறே. தெளிந்தபடியெங்ஙனேயென்னில் [త్వాం పురుషోత్తమమ్-த்வாம்புருஷோத்தமம்] [త్వామ్-த்வாம்] வஸுதேவகுமாரராய் ஆச்ரிதஸுலபரான தேவரீரை. [పురుషోత్తమమ్ - புருஷோத்தமம்] (అతోऽస్మి లోకే వేదే చ ప్రథితః పురుషోత్తమః। యో మామేవమసమ్మూఢో జానాతి పురుషోత్త

http://acharya.org

க்ஷீ) (அதோஸ்மிலோகேவேதேச ப்ரதிதஃபுருஷோத்தம:। யோமாமேவமஸம்மூடோ ஜாநாதிபுருஷோத்தமம்) என்று தேவரீர் அருளிச்செய்தபடியே பரமபுருஷனென்று இப்போது தெளிந்தேனென்று. (போற்றிட) இப்படிகுணிநிஷ்டகுணபிதாநம் பண்ணி ஸ்துதிக்க.

(வாணன்பிழைபொறுத்த) இந்த ஸ்தோத்ரத்தாலே ப்ரஸந்நனாய் அநிருத்தாழ்வானை நிரோதித்து மஹாபராதமபண்ணினவனான வாணனுடைய மஹாபராதத்தை க்ஷமித்த. (தீர்த்தனை) ஒருவன் சில அபராதங்களைப்பண்ணினால் அவை அநுபவ ப்ராயச்சித்தங்களாலே போக்கவேணுமிறே; இவன் அப்படியன்றிக்கே ஒருவனை ஸ்தோத்ரமாத்ரத்தாலே அவனுடைய பாபங்களையெல்லாமபொடி பண்ணினபாவநனை. பதிதபாவநனை. (ஏத்தும) இந்தபரபாவத்தையிட்டு ஸ்துதிக்கிற. (ஏத்தும்)என்கிற வர்த்தமாந நிர்த்தேசத்தாலே - ஸ்ரீபாஷ்யகீதாபாஷ்யாதிகளாலே - ஸர்வகாலத்திலும லோகத்திலேஅவனுடைய ப்ரபாவத்தை ஸ்தாபிக்கிறவரென்றபடி.(இராமாநுசன்) எம்பெருமானார்.(என்றனசேமவைப்பே)எனக்குயாவதாத்மபாவியாய்உஜ்ஜீவிக்கும்படி சேமித்துவைத்த ஆபத்தநமென்றதாய்த்து. வைப்பு - நிக்ஷேபம். .. ... (௨௨)

உரை.—அ.—இருபத்துமூன்றுமபாட்டு. நித்தோஷமான ப்ரேமயுக்தர் பரமதநமாகத தங்களநெஞ்சிலே வைத்துக்கொண்டிருக்கும் விஷயத்தை, பாபிஷ்டனான ஹேயமான மநஸ்ஸிலேவைத்து ஏத்தாநின்றேன், இது அவ்விஷயத்திறுடைய குணத்துக்கு என்னுமெனகிறார்.

மூ.—வைப்பாயவான்பொருளென்றுநல்லன்பர்மநத்தகத்தே
எப்போதும்வைக்குமிராமாநுசனையிருநிலத்தில
ஒப்பாரிலாதவருவினையேன்வஞ்சநெஞ்சில்வைத்து [சே.
முப்போதும்வாழ்த்துவனென்னாமிதுவவனமொயபுகழுக்

பதம்.	உரை	பதம்.	உரை.
வைப்பாய	"வைத்தமாநிதி" என்னுமாப்போலே ஆபத் ரக்ஷகமாக வைக்கப்பட்ட,		ப்ரிய நிதிகளைச் செப்புகுளே வைப்பாரைப் போலே,
வான்பொருளென்று	அக்ஷயமானதநமென்று	மநத்தகத்தே	மநஸ்ஸுகளுள்ளே,
		எப்போது	திவாராத்ரவிபாகமறஸர்வகாலத்திலும
நலலன்பர்	நிர்த்தோஷராய ப்ரேமயுக்தராயிருக்குமவர்கள்,	ம்வைக்கும்	மவைக்குமான,

பதம்.	உரை.	பதம்.	உரை.
இராமாநுசனை	எம்பெருமானை,	வஞ்சநெஞ்சில்வைத்து,	க்ர்த்ரிமயுக்தமானமநஸ்ஸிலே வைத்து,
இருநிலத்தில்	மஹாப்ர்திவியில்,	முப்போதும்	த்ரிஸந்த்யமும்,
ஒப்பாரிலாத	பாபம்பண்ணினவர்களில் இவனைப்போல் ஒருபாபிகபடி,	வாழ்த்துவன்	ஏத்தாநின்றேன்,
		அவன்	அவருடைய,
அருவினையேன	பாபிஷ்டனாயிருக்கிறநான,	மொய்புகழுக்கு	ச்லாக்யமான புகழுக்கு,
நிஸ்நேஹனாயிருக்க	ஸ்நேஹிகளைப்போலேபாவி	என்னும்	என்னாய்விளையுமோ.

த்து, "உன்னையும் வான்-பெருமை. "நல்லன்பர்" வசிக்கும் கள்ளமனமறவிடத்தில, நனமை அனநம்'' எனகிறபடி புக்கு விசேஷணமாய்-அநந்யப்ரயேஸர்வஜ்ஞனையு யோஜநதயாவிலக்ஷணபக்தி யெம்மருட்டவற்றுன, ன்னவுமாம்.மொய்-அழகு. உகூ

அ.—இருபத்துமூன்றாம்பாட்டு. பூர்வாசார்யர்களெல்லாரும் வைத்தநிதியென்னுமாப்போலே தஙகளுக்குஆபத்ரக்ஷகமாகவைக்கப்பட்ட அக்ஷயபரமதநமென்றுகொண்டு தங்களுடைய திருவுள்ளத்திலே ஸர்வகாலமும் வைக்கும் விஷயமானவெம்பெருமானை அதிபாபிஷ்ட்டனைவென்னுடைய மநஸ்ஸிலேவைத்துக்கொண்டு அவருடைய கல்யாணகுணங்களை ஸ்துதிக்கத்தொடங்கினேன், மஹாப்ரபாவமுடையவவருடைய கல்யாணகுணங்களுக்கு இது எனனாய்விளையுமோவென்று பரிதபிக்கிறார்.

வ்யா.—(வைப்பாயவான்பொருளென்று) சேமித்த மஹாதநமென்று. நிக்ஷேபித்துவைத்த பரமதநமென்று. வான் - பெருமை. (ప్లుశ్నేషితదీయ•శ్యుభగుణనిలయోవిగ్రహశ్శ్రీశఠారి శ్శ్రీమాన్ రామానుజార్యః పదకమలయుగంభాతిరమ్యంతదీయమ్) (விஷ்ணுஶ்ஶேஷிதநீயஶ்ஶுபகுணநிலயோ விக்ரஹஶ்ஶ்ரீஶடாரிஶ் ஶ்ரீமாந்ராமாநுஜார்யஃபதகமலயுகஂபாதிரமயஂதநீயம்) என்று சொல்லப்படுகிறபடியே பதகமலத்தை, (ధనంమదీయమ్) (தநஂமதீயம்) என்றருளிச்செய்கையாலே அப்படிப்பட்ட எம்பெருமானை பரமதநமாக நிரூபித்தென்றபடி. (గురురేవపరంధనమ్) (குருரேவபரஂதநம்) என்னக்கடவதிறே. இப்படி யாவதாத்மபாவி உஜ்ஜீவநஹேதுவான பரமதநமென்று அத்யவஸித்திருக்கிற.

(நல்லன்பர்) ஜ்ஞாநாதிகராய் அவர் திருவடிகளிலே ப்ரீதியுக்தரானவர்கள். நல்லன்பர் என்கிறவிடத்தில், நன்மை அன்புக்கு விசேஷணமாய் அநந்யப்ரயோஜநதயா விலக்ஷணையான பக்தியையுடையவரென்னவுமாம். அவர்களாகிறார்-ஆழ்வான், பிள்ளான், எம்பார், ஆண்டான், பிள்ளையுறங்காவில்லிதாஸர் முதலானவர்கள். (மநத்தகத்தே - வான்பொருளென்று) வானென்று - விபுவாசகமாய், (గురురేవపరంబ్రహ్మ) (குருரேவபரம்ப்ரஹ்ம) என்று சொல்லப்பட்ட மஹாதநமென்றுகொண்டு அத்தை வெளிச்செறிப்பாக வைத்தால் ஸாதகமாயிருக்குமென்று அறியாதபடி நிரவயவமான மநஸ்ஸினுள்ளே. (நல்லன்பர் மநத்தகத்தே) (స్తోత్రరత్నమిదంఽనర్ఘ్యం స్థం ఆచార్యస్తుతిసమ్పుటే) (ஸ்தோத்ரரத்நமிதம் அர்க்யம் ஸ்தம் ஆசார்யஸ்துதிஸம்புடே) என்று-அநர்க்கமான ரத்நம் கிடைத்தால் செப்பிலே வைத்துக் கொண்டிருப்பாரைப்போலே இந்த லோகவிலக்ஷணமான மஹாதநத்தைத் தங்களுடைய நெஞ்சினுள்ளே.

(எப்போதும்வைக்கும்) பூதபவிஷ்யத்வர்த்தமாந காலத்திலும்வைக்கும். பூதகாலத்திலே நம்மாழ்வார், (கலியுங்கெடும் கண்டுகொண்மின் - பொலிக பொலிக பொலிக) என்று இவரை மங்களாசாஸநம் பண்ணுகிறகையாலும், ஆளவந்தார், இவருடைய ப்ராபவத்தைக்கேட்டருளிப் பெருமாள் கோயிலுக்கெழுந்தருளி கரியமாணிக்கப் பெருமாள் ஸந்நிதியிலே இருந்து இவரை மங்களாசாஸநம் பண்ணினாராகையாலும், ஸ்ரீமந்நாதமுனிகள், ஆழ்வார்ஸம்ப்ரதாயத்தாலே இவருடைய விக்ரஹத்தைப்பெற்று ஸர்வகாலமும் ஆராதித்துக்கொண்டு போந்தாராகையாலும், (நல்லன்பர்மநத்தகத்தே எப்போதும்வைக்கும்) என்னத்தட்டில்லையிறே.

(வைக்கும்) சேர்த்துவைக்கும். (జఙ్గమశ్రీవిమానాని హృదయాని మనీషిణామ్) (ஜங்கமஸ்ரீவிமாநாநி ஹ்ருதயாநி மநீஷிணாம்) என்னக்கடவதிறே. கிரணங்களாலே தப்தனாய்க்கொண்டு ரவிமண்டலத்திலே வர்த்தித்தும், காடுமேடுமான பர்வதாக்ரத்திலே ஜடாதாரணம் பண்ணிநின்றும், ஜலதத்வத்திலே ஸர்வதாவஸித்தும் இப்படி ஸாதநாநுஷ்டாநம்பண்ணின ஸர்வேச்வரனுக்கு ஜ்ஞாநிகளுடைய ஹ்ருதயகமலவாஸம் ஸாத்யமென்று ப்ரஸித்தமாகச் சொல்லுகையாலே இது பகவத்பரமானாலும். (యస్యదేవే పరాభక్తిః యథాదేవే తథాగురౌ) (யஸ்யதேவேபராபக்திர்யதாதேவே ததாகுரௌ) என்றும், (దేవమివాచార్యముపాసీత) (தேவமிவாசார்யமுபாஸீத) என்றும், (దేవవత్స్యాదుపాస్యః) (தேவவத்ஸ்யாதுபாஸ்ய:) என்றும் சொல்லுகையாலே இருவருக்கும் ஒக்குமிறே. (இராமாநுசனை) எம்பெருமானாரை.

http://acharya.org

(இருநிலத்தில்) அதிவிஸ்த்ர்தையான இந்த பூமியிலே. (ஒப்பாரிலாத) என்னைப்போலே பாபிஷ்டனாகிலும்கிடைப்பனோவென்று ஆராய்ந்தால் எனக்குத் துல்யரான பாபிஷ்டர் இந்தலோகத்திலே கிடையாமையாலே ஸத்ர்சரில்லாத. ஒப்பார்-ஸத்ர்சர். (அருவினையேன) ப்ராயஶ்சித்தாதிகளாலே நிவர்த்திப்பிக்க வரிதாய், (అవశ్యమనుభోక్తవ్యం కృతం కర్మ శుభాశుభమ్) (அவச்யமநுபோக்தவ்யம் க்ர்தம்கர்மசுபாசுபம) என்கிறபடியே அநுபவைகநாச்யமான பாபத்தைப் பண்ணின நான. (నద్యత్రాణి కృతాన్యనేన నిరయైర్నాలం పునః కల్పితైః పాపానామితి మత్కృతే తదధికం కర్తుం ప్రవృత్తే త్వయి। తేభ్యోఽప్యభ్యధికాని తాన్యహమపి క్షుద్రః కరోమి క్షణాత్) (நத்விராணிக்ர்தாந்யநேநநிரயைர்நாலம்புநர்கல்பிதைர்பாபாநாமிதிமத்க்ர்தேததததிகாங்கர்த்தும் ப்ரவர்த்தேத்வயி| தேப்யோப்யப்யதிகாநிதாந்ய ஹமபிக்ஷாத்ரகரோமிக்ஷணாத்) என்றும், (అహమస్మ్యపరాధచక్రవర్తి) (அஹமஸ்ம்யபராதசக்ரவர்த்தி) என்றும், (యావచ్చ యచ్చ దురితం సకలస్య జన్తోః తావచ్చ తత్తదధికఞ్చ మమాస్తి సత్యమ్) (పూర్వైస్స్వనైచ్యమనుసంహితమార్యవర్యైః మామేవ వీక్ష్య మహతాం న తదస్తి తేషామ్। నైచ్యం త్విదం శఠరిపోర్మమ సత్యమేవ మత్తః పరో న మలినో యత ఆవిరస్తి) (யாவச்சயச்சதுரிதம்ஸகலஸ்யஜந்தோ: தாவச்சதத்ததிகஞ்சமமாஸ்திஸத்யம்) (பூர்வைஸ்ஸ்வநைச்யமநுஸம் ஹிதமார்யவர்யைர் மாமேவவீக்ஷ்ய மஹதாம்நததஸ்திதேஷாம்|| நைச்யம்த்விதம் சடரிபோமமஸத்யமேவமத்தபரோநமலிநோயதஆவிரஸ்தி) என்றும் சொல்லுகிறபடியே அத்யந்தபாபிஷ்டனான வெனனுடைய.

(வஞ்சநெஞ்சில்வைத்து) நான் அப்படியானாலும் என்மநஸ்ஸு நிர்மலமோ,எனனெனேட்டை ஸம்பந்தம்பெற்றதாகையாலேஎனக்குமுன்னே பாபகர்மங்களிலே ப்ரவர்த்திக்குமாய்த்து. (బన్ధాయ విషయాసఙ్గి) (பந்தாயவிஷயாஸங்கி) என்னும்படியே - பாஹ்யவிஷயப்ரவணமாய், எலலாரையும்மோசம்போக்கக்கடவதாய், ஸர்வஜ்ஞரான தேவரீருங்கூட நல்லவனென்றுதிருவுள்ளத்திலே கொண்டாடும்படியான வஞ்சநத்தையுடைய மநஸ்ஸிலேவைத்து.(వృత్త్యా పశుర్నరవపుస్త్వహమీదృశోఽపి శ్రుత్యాదిసిద్ధనిఖిలాత్మగుణాశ్రయోఽయమ్। ఇత్యాదరేణ కృతినోఽపి మిథః ప్రవక్తుమద్యాపి వఞ్చనపరోఽత్ర యతీన్ద్ర వర్తే) (வ்ர்த்யாபசுர்நரவபுஸ்த்வஹமீத்ர்சோபி சுத்யாதிஸித்தநிகிலாத்ம குணாச்ரயோயம், இத்யாதரேண க்ர்திநோபிமிதப்ரவக்துமத்யாபிவஞ்சந பரோத்ர யதீந்த்ரவர்த்தே) என்று ஜீயரு மநுஸந்தித்தாரிறே. (முப்போதும் வாழ்த்துவன்) ஸர்வகாலத்திலும், (அறுசமயச்செடியதனையடியறுத்தான் வாழியே - அழகாருமெதிராசரடியிணைகள்வாழியே) (எதிராசன்வாழியெதிராசன்வாழி)என்றுகொண்டு மங்களாசாஸநம் பண்ணினாரிறேஜீயரும்; ஸக்ர்த்ப்ராஷ்டனுக்கு ப்ராயச்சித்

http://acharya.org

தம் லகுவாயிருக்கும், அப்படியன்றிக்கே இதுவேயாத்ரையாக இந்த அக்ர்த்யத்தைப் பண்ணுகின்றேன்.

(என்னுமிதுவவன்மொய்புகழ்க்கே) (அவன்) (అనన్తః ప్రథమం రూపం ద్వితీయం లక్ష్మణస్తథా। బలభద్రస్తృతీయస్తు కలౌ రామానుజస్స్మృతః)(அநந்த: ப்ரதமம்ரூபம் த்விதீயம்லக்ஷ்மணஸ்ததா। பலபத்ரஸ்த்ருதீயஸ்து கலௌராமாநுஜஸ்ம்ருத:) என்று ப்ரஹ்மநாரதீயத்திலும், (శేషో వా సైన్యనాథో వా శ్రీపతిర్వేత్తి సాత్త్వికైః। వితర్క్యాయ మహాప్రాజ్ఞైః యతిరాజాయ మఙ్గళమ్) (శమితోదయశఙ్కరాదిగర్వః స్వబలాదుద్ధృతయాదవప్రకాశః। అవరోపితవాన్ శ్రుతేరపార్థాన్ నను రామావరజస్స ఏష భూయః) (சேஷோவா ஸைந்யநாதோவா ஸ்ரீபதிர்வேத்தி ஸாத்விகை:। விதர்க்யாய மஹாப்ராஜ்ஞை: யதிராஜாய மங்களம்) (சமிதோதயசங்கரதிகர்வஸ்ஸ்வபலாதுத்த்ருதயாதவப்ரகாச:। அவரோபிதவாந் ச்ருதேரபார்தாந் நநுராமாவரஜஸ்ஸ ஏஷ பூய:) என்று அபியுக்தராலும் ப்ரதிபாதிக்கப்பட்ட அப்ரதிமப்ரபாவரான எம்பெருமானாருடைய, (மொய்புகழ்க்கு) ச்லாக்யமான ப்ரபாவத்துக்கு. மொய்-அழகு. அன்றிக்கே, அஸங்க்யேயமான ப்ரபாவத்துக்கென்னுதல். (இது என்னும்) இது என்னாய்விடுமோ. இப்படிப்பட்ட மங்களாசாஸநம் பண்ணுமதுவும் அவருடைய வைபவத்துக்கு என்னாயிற்று தலைக்கட்டுமோ வென்றபடி. (நினைந்துநைந்துள்கரைந்துருகி இமையோர் பலரும் முனிவரும், புனைந்த கண்ணநீர்சாந்தம்புகையோடேந்தி வணங்கினால், நினைந்த வெல்லாப்பொருள்கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே, மனஞ்செய்ஞானத்துன்பெருமை மாசூணாதோமாயோனே) என்னுமாப்போலே தலைக்கட்டுகையாலே எத்தனைஸாஹஸம் பண்ணுகிறேனென்று அநுதபிக்கிறார். (దిక్షు క్షితౌ విదితం త్రయ్యమలం జ్ఞం పరమపురుషయోగం యోగివర్యాగ్రగణ్యైః। విధిశివసనకాద్యైర్ధ్యాతుమత్యన్తదూరం తవ పరిజనభావం కామయే కామవృత్తః) (திக்ஷுசிம்விநிதம் நிஸ்த்ரய்யமாமலஞ்ஜம் பரமபுருஷயோஹம் யோகிவர்யாக்ரகண்யை:। விதிசிவஸநகாத்யைர்த்யாதுமத்யந்ததூரம் தவபரிஜநபாவம் காமயே காமவ்ருத்த:) என்று ஆளவந்தாரும் இப்படியே அநுஸந்தித்தருளினாரிறே. ... (உரு)

உரை.—அ.—இருபத்துநாலாம்பாட்டு. "ஒப்பாரிலாதவுருவினையேன்" என்றீர், இப்படியிருக்கிற வுமக்கு இவ்விஷயத்தை முப்போதும்வாழ்த்துகை கூடினபடி யென்னென்ன; தாம்முன்பு நின்றநிலையையும் இன்று தமக்கு இவ்வுத்கர்ஷம் வந்தவழியையும் சொல்லுகிறார்.

மூ.—மொய்த்தவெந்தீவினையால் பல்லுடல்தொறும்மூத்ததனா
ல், எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாமின்றுகண்டு
யர்ந்தேன், பொய்த்தவம்போற்றும்புலச்சமயங்கள்நில
த்தவியக், கைத்தமெய்ஞ்ஞானத்திராமானுசனென்னுங்
கார்தன்னையே. ... ... (உச)

பதம்.	உரை.
மொய்த்த	தேன்கூண்டை மொய்த்தாப் போலே ஆத்மாவை மொய்த்துக்கொண்டிருப்பதாய், அநுபவவிநாச்யமாதல், ப்ராயச்சித்தவிநாச்ய மாதல் செய்யாத,
வெந்	அதிக்ரூரமான,
வினையால்	காமத்தாலே,
பல்லுடல் தொறும்	அநேக சரீரங்கள்தோறும்,
மூத்து	ஜராவதியாக வலித்து,
அதனால்	அத்தாலே,
எய்த்தொழிந்தேன்	அவஸந்நனாய் விட்டேன்;
முனநாள்களெல்லாம்	அநாதியானகாலமெல்லாம்,
பொய்	அவைதிகங்களாகையாலே அயதார்த்தங்களாயிருக்கும்,
தவம்	விஷயவிரக்தி, ஹிம்ஸாநிவ்ருத்தி, ஸத்குருஸேவாதிகளான தபஸ்ஸுக்களை,
போற்றும்	நோக்கிக் கொண்டு போரும்,
புலச்சமயங்கள்	நீசஸமயங்கள்,
நிலத்தவிய	விளக்குப் பிணம் போலே நசிக்கும்படியாக,
கைத்த	நிரஸித்த,
மெய்ஞ்ஞானத்து	யதார்த்தஜ்ஞாநயுக்தரான,
இராமாநுசனென்னும் கார்தன்னை	எம்பெருமானாரான பரமோதாரனை,
கண்டு	தம்முடைய ஔதார்யத்தாலே காட்டக்கண்டு,
இன்றுஉயர்ந்தேன்	இன்று உத்க்ருஷ்டனானேனென்கை.

“மொய்த்தவெந்தீவினையார் பல்லுடல்” என்று பாடமானபோது - திரண்ட க்ரூரகர்மங்களாலே நிறைந்துள்ள அநேக தேஹங்களென்கை. மொய்த்தல் - திரளுதல். கைத்தல் - கடிதல். கார்தன்னை யென்றது-முற்றுவமை. ... ... (உச)

அ.—இருபத்துநாலாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-மஹாப்ரபாவரான எம்பெருமானாரை என்னுடைய வஞ்சகமான மநஸ்ஸிலே வைத்து ஸ்துதியாநின்றேனென்று நிர்வேதப்பட்டார்; இப்பாட்டிலே - இப்படிப்பட்ட வுமக்கு ஸ்தோத்ரம்பண்ணுகைக்குத்தான்

http://acharya.org

அதிகாரமுண்டோவென்ன; தேன்கூண்டை ஈமொய்த்துக்கிடக்குமாப்போலே ஆத்மாவைச்சுற்றிககொண்டிருக்கிற கோரமான பாபகர்மங்களாலே அநாதிகாலந்தொடங்கி நாநாவித தேஹபரிக்ரஹம் பண்ணி கர்ப்பஜந்மாத்யவஸ்தாஸப்தகத்தாலேஇவ்வளவும் நசித்துப்போந்தேன, சாஸ்த்ரவிஹிதமான தபஸ்ஸுககளைப் பண்ணும் நீசஸமயநிஷ்டடரெல்லாம பசுநராம்படி ஸ்ரீபாஷ்யாதிகளைப் பண்ணும் யதார்த்தஜ்ஞாநத்தையுடையரான எமபெருமானார் என்னுடைய காளமேகமானார், அவரைககண்டு உதகர்ஷடனேன், ஆகையாலே ஸ்தோத்ரம்பண்ணுகிறேனென்கிறார்.

வ்யா.—(மொய்த்த) அநாதிகாலமேதொடங்கி என்னாலே பண்ணப்பட்ட பாபங்களெல்லாம என்னாத்மாவை மொயததுக் கிடக்குமே. மொய்த்தல் - திரளுதல். தணடகாரணயத்திலே சகரவர்த்தித் திருமகனை கரதூஷணாதிபதினாலாயிரம ராக்ஷஸாகள் மொசிந்தாப்போலேகாணும் இவரைமொசிந்தபடி. (ஆவி துணைககைவவர்குமைக்குஞ் சிற்றின்பம், பாவியேனைப் பலநீகாட்டிப் படுப்பாயோ) என்று கலேசிககுமபடி சூழநதுகொண்டிருககிற. (வெம்) அநுகூலமாகவும் அநுபயமாகவும மொசிநதால் ஒருபடி ஸஹிக்கலாம், அப்படியன்றிககே அதிக்ரூரமான. (தீவினையால்) புண்யபாபங்களிரண்டுமன்று நானசெய்தது, எல்லாம பாபமேயாய்த்து. அன்றிக்கே, சிறிது புண்யங்களுணடானாலும அதுவும ப்ராப்தி ப்ரதிபந்தகமாயத் தலைககட்டுகையாலே இவரபிப்ராயத்தாலே தீவினையாமிறே. ([illegible]) (அதபாதகபீதஸ்தவம) என்று- புண்யங்களெல்லாம் பாதகசபதததாலே சொல்லப்பட்டதிறே. ஸ்ரீவிஷ்ணுதர்மததிலும அப்படியே, ([illegible]) (அநக) என்கிற ஸ்ரீராமாயணச்லோகபதத்துக்கு ததியபர்நதமனறககே யிருககிற ராமபக்தியும் அகமென்னுமதனை ஈட்டுககாரருமருளிசசெய்தாரிறே.

(மொய்த்தவெந்தீவினையால) ராவணபவநத்திலே பிராட்டியைச்சுற்றிலும் வளைததுககொணடு, "தஹ, பச" என்று கோர பாஷணங்களைப்பண்ணும் ஏகாக்ஷி ஏககாணிமுதலான ராக்ஷஸ ஸ்த்ரீகளைப்போலே சூழ்ந்துகொண்டு தபநஹேதுககளானவென்னுடையபாபங்களாலே தப்தனானவென்றபடி. (பலவுடலதொறும) தேவதிர்யங்மநுஷ்ய ஸ்தாவரரூபமான நாநாவித சரீரங்களதோறும், சரீரஸம்பந்தமடியாகவிறே பாபங்களைப்பண்ணுவது. (மூத்து) அவ்வவசரீரங்களிலே ஜராவஸ்தியாகவஸித்து. இது கர்ப்பவாஸ ஜந்மாதிகளுக்கும் உபலக்ஷணம் (வேதநூல்பிராயம்நூறு மனிசர் தாம்புகுவரோலும், பாதியுமுறங்கிப்போகும் நின்றதிற்பதினையாண்டு பேதைபாலகனதாகும பிணி பசி மூப்புத்துன்பம்) என்று

* மயர்வறமதிநல மருளப்பெற்றவரும் அருளிச்செய்தாரிறே. (గర్భజన్మాద్యవస్థాసు దుఃఖమత్యన్తదుస్సహమ్। నకిఞ్చిద్గణయన్నిత్యం చరామీన్ద్రియగోచరః॥ ఏవం విషయతృష్ణాయ వఞ్చితస్య జరా మమ। తద్భోగకరణానాఞ్చ శైథిల్యం కురుతే భృశమ్) (கர்ப்பஜந்மாத்யவஸ்த்தாஸு துஃகமத்யந்தது ஸ்ஸஹம்। நகிஞ்சித்கணந்நித்யம்சராமீந்த்ரியகோசர:॥ ஏவம்விஷயத்ர்ஷ்ணாய வஞ்சிதஸ்யஜராமம। தத்போககரணாநாஞ்ச சைதில்யம்குருதேப்ர்சம) என்று அபியுக்தரும சொன்னார்களிறே. (జరాజర్జరదేహశ్చశిథిలావయవఃపుమాన్, విచలచ్ఛీర్ణదశనో వలిస్నాయుశిరావృతః॥ దూరప్రణష్టనయనో వ్యోమాన్తర్గతతారకః। నాసావివరనిర్యాతలోమపుఞ్జశ్చలద్వపుః॥ ప్రకటీభూతసర్వాస్థిర్నతపృష్ఠాస్థిసంహతిః। ఉత్సన్నజఠరాగ్నిత్వాదల్పాహారోల్పచేష్టితః॥ కృచ్ఛ్రాచ్చఙ్క్రమణోత్థానశయనాసనచేష్టితః। మన్దీభవచ్ఛ్రోత్రనేత్రస్స్రవల్లాలావిలాననః॥ అనాయత్తైస్సమస్తైశ్చ కరణైర్మరణోన్ముఖః। తత్క్షణేప్యనుభూతానాం అస్మర్తాఖిలవస్తునామ్॥ సకృదుచ్చరితే వాక్యే సముద్భూతమహాశ్రమః। శ్వాసకాసమహాయాససముద్భూతప్రజాగరః॥ అన్యేనోత్థాప్యతేన్యేన తథాసంవేశ్యతేజరః। భృత్యాత్మపుత్రదారాణామపమానపురస్కృతః॥ ప్రక్షీణాఖిలశౌచశ్చ విహారాహారసస్పృహః। హాస్యఃపరిజనస్యాపి నిర్విణ్ణాశేషబాన్ధవః॥ అనుభూతమివాన్యస్మిన్ జన్మన్యాత్మవిచేష్టితమ్। సంస్మరన్యౌవనేదీర్ఘం నిశ్వసిత్యతితాపితః॥ ఏవమాదీని దుఃఖాని జరాయామనుభూయ వై) என்று ஸ்ரீபராசரப்ரஹ்மரிஷி சொன்னபடியும் ஜரையையநுபவித்து.

(அதனுலெயதனெதாழிந்தேன்) இப்படி சரீரம் ஜீர்ணமானவாறே மரித்துப்போவேன். (అన్తే దేహావసానే చ దుఃఖముత్క్రాన్తిసమ్భవమ్। కృచ్ఛ్రేణ దేహాన్నిష్క్రాన్తిం యామ్యకిఙ్కరదర్శనమ్॥ యాతనాదేహసమ్బన్ధం యామ్యపాశైశ్చ కర్షణమ్। ఉగ్రమార్గగతక్లేశం యమస్య పురతస్స్థితిమ్॥ తన్నియోగవశాద్యాతనాశ్చ సహస్రశః। శ్రుత్వాస్మృత్వాచనరకం తత్ప్రవేశభయాకులః॥ పునశ్చగర్భజన్మాదిప్రవేశం కర్మనిర్మితమ్। ముహుర్విచిన్త్యమచ్చిత్తం కమ్పతేజలచన్ద్రవత్) (அந்தே தேஹாவஸாநேசதுஃக முத்க்ராந்தி ஸமபவம்। க்ர்ச்ச்ரேணதேஹாந்நிஷ்க்ராந்தியாம்யகிங்கரதாசநம்।। யாதநாதேஹஸம்பந்தம் யாம்ய பாசைஶ்சகர்ஷணம। உக்ரமார்க்ககதக்லேசம் யமஸ்யபுரதஸ்த்திதிம।। தந்நியோகவசாயாதயாதநாஶ்சஸஹஸ்ரச। ச்ருத்வாஸ்மத்வாசநரகம் தத்ப்ரவேசபயாகுலः।। புநஶ்சகர்ப்பஜந்மாதிப்ரவேசம் கர்மநிர்மிதம் । முஹுர்விசிந்த்யமசித்தம் கம்பதேஜலசந்த்ரவத்) என்று அபியுக்தரும் சொன்னார்களிறே. (முனநாள்களெல்லாம) இது அநாதிகாலமே தொடங்கி இவ்வளவான காலமெல்லாம். ஜந்மஜராமரணாதிகளையுடையனாய்க்கொண்டு அவஸந்நனாய்விட்டேனென்றபடி.

(இன்று) இப்போது. (பொய்த்தவம்) சாஸ்த்ரவிஹிதமான தபஸ்ஸு, ராவணஸந்யாஸம், காலநேமி ஜபம்போலே.

http://acharya.org

(பேற்றும்) (అశాస్త్రవిహితంఘోరం తప్యన్తేయేతపోజనాః। యజన్తేనామ యజ్ఞైశ్చదమ్భేనావిధిపూర్వకమ్॥ కర్శయన్తశ్శరీరాణి భూతగ్రామమచేతసమ్। మాంచైవా న్తశ్శరీరస్థం తాన్విద్ధ్యాసురనిశ్చయాన్) (அசாஸ்த்ராவிஹிதம்கோரம் தப்யந்தேயேதபோஜநா:। யஜந்தேநாமயஜ்ஞைர்ஶ்சதம்பேநாவிதிபூர வகம்॥ கர்ஶயம்ஶ்சஶரீராணி பூதக்ராமமசேதநம்। மாஞ்சைவாந்த ஶ்ஶரீரஸ்த்தம் தாந்வித்த்யாஸுரநிஶ்சயாந்) என்கிறபடியே அசா ஸ்த்ரீயங்களாய், அயதாபூதங்களான விஷயவிரக்தி பாஹ்யஸா கிவர்த்தி குருஸேவாதிகளான தபஸ்ஸுக்களை ஆசரித்துக்கொண்டு போரும். இவர்கள்தான் வெளிக்கு *செங்கலபொடிக்கூறைவெண் பல் தவத்தவர்போலேகாணுமிருப்பது.

(புலச்சமயங்கள்) நீசஸமயங்கள். சைவ மாயாவாத சாக்தேய காணாபத்ய சார்வாக பௌத்தாதிஸமயங்கள். (நிலத்தவிய) பூலோ கத்திலே பஸ்மமாம்படி. (హృత్వద్వంద్వసమరసరే హయగ్రీవస్తోత్ర ఘోరమ షట్ప్రత్యర్థిక్ష్మాపైః) (దిక్సౌదామన్యజైత్రధ్వజపటపవనస్ఫాతినిర్ధూత తత్తత్సిద్ధాన్తస్తోమ తూల స్తబకవిగమనవ్యక్తసద్వర్త్తనీకా) (శమితోదయశఙ్కరాదిగర్వః) (శాక్యోలూక్యాక్షపాదక్షపణక) (ஶமிதோதயஶங்கராதிகர்வ:) (சாக்யோலூக்யாக்ஷபாதக்ஷபணகாநாம்) இத் யாதிகளில் சொல்லுகிறபடியே - அவையெல்லாம் இந்த பூலோக த்திலே அவியும்படி. யஜ்ஞமூர்த்தி, யாதவப்ரகாசன் முதலானோ ரை சிக்ஷித்து அநுகூலராகப்பண்ணியும், திருநாராயணபுரத்திலே பௌத்தரை நிரஸித்தும், அவற்றை பஸ்மஸாத்தாம்படி பண்ணி யருளினாரென்று ஸர்வலோகப்ரஸித்தமிறே. (கைத்த) ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய வேதார்த்தஸங்க்ரஹாதிகளை யருளிச்செய்து வ்யாக் யாநம்பண்ணியருளின. அனறிக்கே, கைத்தல்-அவற்றை விளக்குதப் பிணம்போலே நசிக்கும்படியாக நிரஸித்த வென்னவுமாம்.

(மெய்ஞ்ஞானத்து) யதாவஸ்திதத்வவிஷயஜ்ஞாநயுக்த ரான. (இராமாநுசன்) எம்பெருமானார். (என்னுங்காதலனேயே) இவராகிறமேகத்தை. வேதமாககப்ரதிஷ்டாபநம பண்ணி ஸர்வ லோகத்தையும் ரக்ஷித்தது ஒருஔதார்யமாக நினைத்திலர், ஆர்த்த ராபராதியானகாகாஸுரனைசக்ரவர்த்திதிருமகன் ரக்ஷித்தாப்போ லே அப்படிப்பட்ட தம்மையும ரக்ஷித்தருளினபடியாலே ஜலஸ்த் தலவிமாகமற வர்ஷிக்கும் வர்ஷூகவலாஹகம்போலே யிருந்தா ரென்று சலாகிக்கிறார். கார்தன்னையே என்றது-மூற்றுவமை.கண் டு - இப்படிப்பட்ட பரமோதாரரைக்கண்டு கோயிலிலே ஸேவித் து. ஆழ்வான்புருஷகாரமாக ஆச்ரயித்தென்றபடி. அவர்விஷ யீகரித்தபின்பு, உயர்ந்தேன் - உத்க்ருஷ்டனானே னென்றதா ய்த்து. அத்தாலே-ஸ்தோத்ரம்பண்ணத் தொடங்கினே னென்று கருத்து. ... ... *(உ௪)

உரை.—அ.—இருபத்தஞ்சாம்பாட்டு. எம்பெருமானார் தம் பக்கல்பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்து அத்தாலே அவர் திருமுகத்தைப்பார்த்து தேவரீருடைய க்ர்பாஸ்வபாவம் இந்த லோகத்தில் ஆர்தானறிவாரென்கிறார்.

மூ.—காரேய்கருணையிராமாநுசாவிக்கடலிடத்தில்
ஆரேயறிபவர்நின்னருளின்தன்மையல்லலுக்கு
நேரேயுறைவிடம்நான்வந்துநீயென்னையுற்றபின்னுன்
சீரேயுயிர்க்குயிராயடியேற்கின்றுதித்திக்குமே. (உரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கார்ஏய	ஜலஸ்த்தல விபாகம் பாராதே வர்ஷிக்கும் மேகம்போலே ஸர்வவிஷயமாகஉபசரிக்கும்,	உன்சீரே	தேவரீருடைய கல்யாணகுணங்களே,
கருணை	க்ர்பையையுடைய,	உயிர்க்குயிராய்	ஆத்மாவுக்கு தாரகமாய்,
இராமாநுச	உடையவரே,	அடியேற்கு	அடியேனுக்கு.
அல்லலுக்கு	துக்கத்துக்கு,	இன்றுதித்திக்கும்	இன்றுரஸியா நின்றது;
நேரேஉறைவிடம்நான்	நேரே ஆவாஸபூமியாயிருப்பானொருவனான நான்:	நின்	தேவரீருடைய,
என்னை	இப்படியிருக்கிறவென்னை,	அருளின்தன்மை	க்ர்பையின்ஸ்வபாவத்தை,
நீவந்து	தேவரீர்தாமேவந்து,	இக்கடலிடத்தில்	இக்கடல் சூழ்ந்த பூமியில்,
உற்றபின்	ப்ராபித் தருளினபின்பு,	ஆர்அறிபவர்	ஆர்தான்அறிவார்.

காரேய் கருணை என்றது-காரேய்ந்தகருணையென்றபடி. ஏய்கை-ஒப்பு. ... ... (உ(

வ்யா.—அ.—இருபத்தஞ்சாம்பாட்டு. மேகம்போலே ஸர்வ விஷயமாக உபகரிக்கும்க்ர்பையையுடைய எம்பெருமானாரே!,சது ஸ்ஸமுத்ரபரிவேஷ்டிதமான இந்த பூப்ரதேசத்திலே தேவரீருடையக்ர்பாஸ்வபாவத்தைத்தெளிந்தவரார்,ஸகல துக்கங்களுக்கும் ஸாக்ஷாதாகரமான வென்னை தேவரீரே யெழுந்தருளி யங்கீகரித்தபின்பு, தேவரீருடைய கல்யாணகுணங்கள் என்னுடைய ப்ராணனுக்கு ப்ராணனாய் அடியேனுக்கு ரஸியாநின்றதென்று எம்பெருமானார் திருமுகத்தைப்பார்த்து நேர்கொடுநேரே விண்ணப்பம் செய்கிறார்.

வ்யா.—(காரேய்கருணை) ஜலஸ்த்தலவிபாகமற வர்ஷுகவலாஹகம்போலே. * அநாலோசிதவிசேஷா லோகசரண்யமான க்ர்பை,(ಸಿದ್ದೇಶವಿಯಶೇಷ ಶ್ವ ಸರ್ವಾರ್ಥಾ ಸ್ವಭ್ಯಾವ ಧಿಃ)(ஸித்தேதநீயசேஷத்வே

http://acharya.org

ஸர்வார்த்தாஸ்ஸமபவந்திஹி) என்னக்கடவதிறே. கார் - மேகம். ஏய்கை-ஒப்பு. இப்படிப்பட்ட க்ர்பையையுடைய. (இராமாநுசா) எம்பெருமானாரே. (இக்கடலிடத்தில்) சதுஸ்ஸமுத்ர பரிவேஷ்டிதமான இந்த * இருள்தருமாஞாலத்திலே. (கின்னருளினா) பரதுக்காஸஹிஷ்ணுத்வ நிராதிசிர்ஷத்வாதிலக்ஷணங்களோடே கூடியிறே க்ர்பையிருப்பது, அப்படிப்பட்ட க்ர்பைக்கு.

(நின்னருளின்) என்று - ஆசாயப்ராபல்யத்தாலேவந்த வெளிச்செறிப்பு ஸ்வர்ணத்துக்கு பரிமளமவந்தாப்போலேகாணு மிருப்பது. (தன்மை) இப்படிப்பட்ட காபாஸ்வபாவத்தைத (ஆரேயறிபவா) தெளிந்தவாதார் ஆர். நித்யவிபூதியிலிருந்தவர்களாகில், (ஸதாபச்யந்தி) (ஸதாபசயந்தி) என்றும், (...) (விப்ராஸ:) என்றும், (...) (ஜாகாவாம்ஸ:) என்றும்-ஸாமவஞ்ருடையவராகையாலே ஆவியக்கேட்டவாகவிதகனே; (...) (யாநிசாஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்திஸம்யமி) என்றும்படி அந்நாதத்தை விளப்பிரும பூலோகத்திலிருந்தவர் தெரிகிலரென்றபடி.

(அல்லலுக்கு) (...) (காப்ப ஜந்மாத்யவஸ்தாஸு துக்கமத்யந்தது:ஸஹம்) என்னும்படியான துக்கங்களுக்கு (நேரேயுறைவிடமானான்) ஸாக்ஷாத்ஆவாஸ பூமியாயிருப்பதொருவன் நான (சர்ரஸம்பந்தங்களுக்கு வந்த துக்கங்களெல்லாம் தத்ஸம்பந்தத்தாலே எனக்கு ப்ராப்தமாகும் சிறிது லகுவாயிருக்கும்; அப்படியன்றிக்கே, ஸாக்ஷாத எனக்கு வந்ததாகையாலே அவற்றுக்கெல்லாம நான்தர்ட்டமான ஆச்ரயமாயிருந்தேனென்றபடி. (வந்துநீ) (நீ-வந்து) தேவரீர பரதுக்கஸஹிஷ்ணுவாகையாலே ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்ததவனி கேட்டவாறே ஸர்வேச்வரன் அரைகுலையத் தலைகுலைய வந்தாப் போலே பரமபதத்திலின்றும் இவ்வளவாகஎழுந்தருளி (என்னை) துக்காச்ரயமான வென்னை. (உற்றபின்) (...) (த்வயாபிலப்தம்பகவந்நிதாநீமநுத்தமம்பாத்ரமிதம்தயாயா:) என்றாப்போலே அலப்யலாபமாக என்னைப்பெற்றபின்பு.

(உன்சீரே) தேவரீருடைய கல்யாணகுணங்களே. (...) (குணாநாமாகரோமஹாந்) என்றாப்போலே சீர் என்னும்படியான வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகுணங்களே. (உயிர்க்குயிராய்) ஆத்மாவுக்கு தாரகமாய். லோகத்தில் எல்லார்க்கும் தந்தாமுடைய ப்ராணன் ஜீவநஹேதுவாயிருக்கும், இங்கு அப்படியன்றிக்கேஇவருடையப்ராணனுக்குப்ராணனுய்ககாணும் அவருடைய

சீரிருப்பது. (அடியேற்கு) சேஷபூதனனவெனக்கு. (இன்று) (रसं ह्येवायं लब्ध्वानन्दी भवति) (ரஸம் ஹ்யேவாயம்லப்த்வாநந்தீபவதி) (सोऽश्नुते सर्वान् कामान् सह) (ஸோசநுதே ஸர்வாந்காமாந்ஸஹ) என்றுஞ் சொல்லப்படுகிற ப்ரஹ்மத்தினுடைய கல்யாணகுணாம்ருதாநுபவமும, (அடியார்கள்குழாங்களை - உடன் கூடுவதென்றுகொலோ) என்று ததீயரோடே கூடிப்பண்ணக்கடவேனென்று ப்ரார்த்தித்தபடி தலைக்கட்டுவது பரமபதத்திலேயா யிருக்கும்; அப்படியன்றிக்கே எனக்கு இது இந்த பதத்தசையிலேதானே. (தித்திக்குமே) ரஸ்யமாய ஆநந்தாவஹமா யிருக்குமென்றதாய்த்து. * தேனும் பாலும் கன்னலு மமுதமாகித் தித்தித்தாப்போலேயாயத்தென்றபடி. (அண்ணிக்கு மமுதூறுமென்னாவுக்கே) என்னக்கடவதிறே. ... ... (உரு)

உரை.—அ.—இருபத்தாறும்பாட்டு. எம்பெருமானார் விஷயீகரித்தருளின பின்பு அவருடைய குணங்களே தமக்கு தாரக போஷக போக்யங்களாய்தென்றார் – கீழ்; அவ்வளவன்றிக்கே அவர் திருவடிகளுக்கு அநந்யார்ஹராயிருக்கும் மஹாப்ரபாவரான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பூர்வாவஸ்தைகளில் ஒரொன்றே என்னை எழுதிக்கொள்ளாநின்றதென்கிறார்.

மூ.—திக்குற்றகீர்த்திஇராமாநுசனையென்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கிவிளங்கியமேகத்தைமேவும்நல்லோர்
எக்குற்றவாளரெதுபிறப்பேதியல்வாகநின்றோ
ரக்குற்றமப்பிறப்பவ்வியல்வேநம்மையாட்கொள்ளுமே.()

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்செய்வினையாம்	"अवश्यमनुभोक्तव्यम्" (ததிஷந்தபோபக்ராத்யாம்) என்கிறபடியே பிறரதாய் அசல்பிளந்து ஏறிடவந்த தன்றிக்கே என்னாலே செய்யப்பட்ட வினையாகிற,		றேும் என்னும் ப்ரீதியாலே,
		விளங்கிய	தாம் உஜ்வலரான
		மேகத்தை	பரமோதாரராய்,
		திக்குஉற்ற	திக்குகள்தோறும் வ்யாப்த்தையான,
		கீர்த்தி	குணவத்தா ப்ரதையையுடையராயிரு
மெய்க்குற்றம் நீக்கி	நிலைநின்றதோஷத்தைப்போக்கி, இவன் விரோதியை மேவும் ப்போக்கப் பெற்	இராமாநுசனை	எம்பெருமானாரை "रामानुजपदच्छाया" (ராமாநுஜ பதச்

http://acharya.org

பதம்.	உரை.
	சாயா) என்கிறபடியேபாதச் சாயாதிகள் அபர்தக்ஷித்தமாம்படி பொருந்தியிருக்கும்,
நல்லோர்	விலக்ஷணரானவர்கள்.
எக்குற்றவாளர்	யாதொரு குற்றத்தை யுடையராகவும்,
எதுபிறப்பு	யாதொரு ஜநமத்தையுடையராகவும்,
ஏதியல்வாக	யாதொருவ்ருத்தத்தையுடையராகவும்,
நின்றோர்	முன்புநின்றோர்கள்,
அக்குற்றம்	அந்தக்குற்றமும்,
அப்பிறப்பு	அந்தப்பிறப்பும்,
அவ்வியல்வே	அந்தஇயல்வுமே
வநம்மை	(சிறுமாமனிசர்) என்னலாம்படி மஹாப்ரபாவரான ஜந்மாதிகளை பரிக்ரஹித்தது தாதர்சரான நம்போல்வாரும் இவ்விஷயஸமாசரயணீயரா என்னுமதை தர்சிப்பிக்கைக்காகஎன்று நினைத்திருக்கிறநம்மை,
ஆள்கொள்ளும்	அநுஸந்திக்குந்தோறும் எழுதிக்கொள்ளா நின்றது

பதம்.	உரை.
	இவ்வளவான ப்ரதிபத்தி பிறந்தாலிறே ஸ்ரீவைஷ்ணவர்கள்பக்கல ஸஜாதீயப்ராதிபத்தி குலைந்ததாவது.

அதவா, அவர்கள்விஷயத்தில் அதிமாத்ரப்ரவணரான நமமை என்னவுமாம். அனதிகசே, எக்குற்றவாளர் எது பிறப்பேதியலவாகநின்றோர் என்றது- "அஹங்கார ஹேதுவான ஜந்மவ்ருத்தஜ்ஞாநங்கள் ஹேயம்" என்கிற ஜ்ஞானம்பிறந்த பின்பு, அந்தவ்ருத்தஜ்ஞானங்களாலுண்டான ஸ்வநிகர்ஷத்தை யநுஸந்தித்து நின்றநிலையாய், அவ்வவஸ்வ பாவநசனே என்னை எழுதிக்கொள்ளாநின்றதென்கிறோர் எனனவுமாம், மெய்யாவது-நிலைநிற்குமது. இது நிலைநிற்கையாவது-அநுபவவிநாச்யமாதல், ப்ராயச்சித்தவிநாசயமாதலன்றிககே யிருக்கை. என்செய்வினையாம் மெய்க்குற்றம் நீக்கி என்றது-மதகர்தகாமமடியாகவுண்டான தேஹஸம்பந்த ப்ரயுக்தாஹங்காராதி தோஷங்களைப் போககியென்னவுமாம். அப்போதைக்கு வினையாம என்றது-வினையாலே யுண்டானவென்றபடி. ஜந்மவ்ருத்தங்களோடேஸஹபடிக்கையாலே, எக்குற்றவாளர் என்கிறவிடத்தில், குற்றமென்றது-ஜ்ஞானத்தில் குறையாகக்கடவது இயல்வு-வ்ருத்தம்.(௨௬)

http://acharya.org

வ்யா.—அ.—இருபத்தாறும்பாட்டு. மேகம்போலே உதாரரான எம்பெருமானார் தம்மை விஷயீகரித்தபின்பு அவருடைய கல்யாணகுணங்கள் தமகு தாரகமாயிருந்தபடியைக் கீழ்ப்பாட்டிலே சொல்லி, இப்பாட்டிலே - அவர்க்கு அநந்யார்ஹராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவாகளுடைய ஜந்மவ்ர்த்தாதிகளில் ஓரான்றே அடியேனை யெழுதிகொள்ளாநின்றதென்கிறார்.

வ்யா.—(என்செய்வினையாம்) (ద్విషన్తః పాపకృత్యామ్) (த்விஷந்தஃபாபகர்த்யாம்) என்கிறபடியே அசல்பிளந்து ஏறிடவந்ததன்றிக்கே என்னாலே செய்யப்பட்ட அக்ர்த்யகரணரூபமாய் ப்ராயச்சித்தாதிகளாலே நிவாத்தியாதே, (నాభుక్తం క్షీయతే కర్మ కల్పకోటిశతైరపి) (நாபுக்தம்க்ஷீயதேகர்மகல்பகோடிசதைரபி) என்னும்படியானுபாவ்யகர்மமாகிற. (மெய்க்குற்றம்) நிலைநின்றதோஷம். (వాచామగోచరమహాగుణదేశికాగ్ర్యకూరాధినాథకథితాఖిలనైచ్యపాత్రమ్। ఏషోఽహమేవ న పునర్జగతీదృశః) (வாசாமகோசரமஹாகுணதேசிகாக்ர்ய கூராதிநாதகதிதாகிலநைச்யபாத்ரம்। ஏஷோஹமேவநபுநர்ஜகதீத்ர்ஶ) என்றும், (పూర్వైశ్చ నైచ్యమనుసంహిత మార్యవర్యైరాత్మేవవిశ్యమహతాన్నతదస్తితేషామ్। నైచ్యన్త్విదం మమ హరిపో మమ సత్యమేవ మత్తః పరో న మ వినోదయ తదావిరస్తి॥ యావచ్చ యచ్చ దురితం సకలస్య జన్తోః తావచ్చ తచ్చ అధికఞ్చ మమాస్తి సత్యమ్) (பூர்வைஶ்ஶ்வநைச்ய மநுஸம்ஹிதமார்யவர்யையாமாமேவவிஶ்யமஹதாந்நதஸ்திதேஷாம்। நைச்யந்த்விதம் ஹடரிபோமமஸத்யமேவ மத்தஃபரோநமவிநோ யதஆவிரஸ்தி॥ யாவச்சயச்சதுரிதம்ஸகலஸ்யஜந்தோஃ தாவச்சதத்ததிகஞ்சமமாஸ்திஸத்யம்) என்றும் சொல்லுகிறபடியே ப்ரத்யயம்பண்ணிச் சொல்லுகிறார். மெய்யாவது - நிலைநிற்குமது. இது நிலைநிற்கையாவது - அநுபவவிநாச்யமாதல், ப்ராயச்சித்தவிநாஶ்யமாதலன்றிக்கே யிருக்கை. இப்படிப்பட்ட பாபத்தை நீக்கி. (வாரேறுமழிகடலோ மாருதமோதீயகமோ, காணேனொருங்கிற்றுக் கண்டிலமால்) என்கிறபடியே போனவிடம் தெரியாதபடி. ஸவாஸநமாகப் போக்கி. (விளங்கிய) அத்தாலே அத்யுஜ்வலமான. இவன் விரோதியைப் போக்கப்பெற்றோமே யென்னும் ப்ரீதியாலேயாறும் அவாதாம உஜ்வலரானது. (மேகத்தை) வர்ஷுகவலாஹகம்போலே பரமோதாரராய மேகத்தை என்றது - முற்றுவமை.

(திக்குற்றகீர்த்தி) (ஏய்ந்தபெருங்கீர்த்தி) என்கிறபடியேஅஷ்டதிக்கிலும் வ்யாபித்திருக்கிற குணவத்தா ப்ரதையையுடையரான. (இராமாநுசனை) எம்பெருமானாரை. (மேவும்) (மேவினேனவன்பொன்னடிமெய்ம்மையே) என்கிறபடியே (రామానుజస్య చరణౌ శరణమ్)(ராமாநுஜஸ்யசரணௌசரணம்) என்னும்படி-அவரு

http://acharya.org

டைய திருவடிகளையே ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் அத்ய வஸித்திருக்கிற. (நல்லோர்) (நன்மையால்மிக்க நான்மறையா ளர்கள்) என்கிறபடியே அநந்யப்ரயோஜநரான மஹாத்மாக்கள். அன்றிக்கே (மேவும்நல்லோர்) (ராமாநுஜபதச்சாயா) (ராமாநுஜ பதச்சாயா) என்கிறபடியே பாதச்சாயாதிகள்போலே அபர்த்தக் ஷித்தமாம்படி பொருந்தியிருக்கும் விலக்ஷணரானவர்களென் னவுமாம்.

(எக்குறறவாளர் எதுபிறப்பேதியல்வாகநின்றோர்) அந்த மஹாத்மாக்கள் ஆச்ரயணபூர்வகாலத்திலே யாதொரு ஜ்ஞாநஸங் கோசமாகிற குற்றத்தையுடையராகவும், யாதொரு உத்க்ருஷ்டாப க்ருஷ்டஜாதியையுடையராகவும், யாதொரு நிஷித்தாநுஷ்ட் டாநமாகிற வ்ருத்தியையுடையராகவும் நின்றார்கள். குற்றம்-ஜ்ஞா நஸங்கோசம். இயல்வு - வ்ருத்தம். அவர்களுடைய. (அக்குற்றமப் பிறப்பவ்வியல்வே) (இவையெல்லாம அவர்களுடைய ஆச்ரயண பூர்வபாவிகளாகையாலும், அநந்தரத்திலே தாமே ஆச்ரய ணத்தைப் பண்ணினார்களாகையாலும், (பாவாமலினாக) எல் லாம்படி மஹாப்ரபாவரான இவர்களுடைய பூர்வதசாவஸ்த்திக விசேஷங்களான விவையே.

(நம்மையாட்கொள்ளுமே) இவ்வளவும் பரதிகூலிராய்ப்போந்த நம்மையும், தாஸபூதராய் கரயவிகரயார்ஹராம்படி பரிக்ரஹ கொள்ளக்கடவன். அன்றிக்கே, (நம்மையாட்கொள்ளுமே) இப் படி மஹாப்ரபாவரான இவர்கள் நிக்ருஷ்டஜாதீயராய் ப்ரதிபத்தி விஷயத்தது தாத்ர்சரான நம்போலவாரும் இப்படிப்பட்ட ஜ்ஞாநமாவது ஹாயொன்று மிடத்தை தர்சிப்பிக்கைக்காக வென்று கொண்டு இருக்கிற நம்மை யநுஸந்திக்குந்தோறும் எழுதிக்கொள்வர்களென் னவுமாம். (శూద్రం వా భగవద్భక్తం నిషాదం శ్వపచం తథా । వీక్షతే జాతిసామాన్యాత్ స యాతి నరకం నరః ॥ ...) (சூத்ரம் வா பகவத்பக்தம் நிஷாதம் ச்வபசம் ததா | வீக்ஷதே ஜாதிஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர: || ...) என்கிற வசநம் இவ்விடத்துக்கு ப்ரமாணம்.

அப்போது, ஆதிதேவசப்தத்தாலே - ப்ரதமாசார்யனென்று தோற்றினாலும் அந்த ஸர்வேச்வரனை சேவியென்றபடி யிலே உபதேசித்து உபகரித்தவராகையாலே, ஆதிதேவசப்த மும் - எம்பெருமானாரைச் சொல்லுமென்னக் குறையில்லை. அன்றிக்கே எம்பெருமானாருக்கு அநந்யார்ஹரான மஹாத்மாக் கள் எந்தவர்ணமுடையரானாலும், எந்த வ்ருத்தமுடையரானா லும், எந்தஸ்வபாவமுடையரானாலும் அந்தந்தவர்ண வ்ருத்தஸ்வ

பாவங்களை நமக்கு உத்தேச்யமா யிருக்குமென்னவுமாம். அந்த மஹாத்மாக்கள் எந்தவர்ணத்திலே ஜநித்தாலும் ப்ரக்ர்திஸம்பந்தாயத்தமாய்க்கொண்டு அதுக்கு அநுரூபங்களான ஸ்வபாவ வ்ர்த்தங்களுண்டாயிருக்குமிறே.

குற்றங்களிலவையேயாகிலும் மணிதர்ப்பணாதிஸ்வச்சத்ரவ்யங்களிலே எதிரிருந்த பதார்த்தங்களெல்லாம் தோற்றுமாப்போலே நிர்மலரான அவர்களைக்கொண்டு தந்தாமுடைய ஸ்வபாவ வ்ர்த்தங்களை அவர்கள்பக்கலிலே ஏறிட்டுக்கொண்டு அஜ்ஞராய் ப்ரமித்திருப்பாரிறே சிலர், அப்படிப்பட்ட ஸ்வபாவ வ்ர்த்தங்களேயாகிலும் நமக்கு உத்தேச்யமெனனுதல்; அங்ஙனுமன்றிக்கே, அவர்களுக்கு சரீரஸம்பந்தத்தாலே ப்ராமாதிகமாய்க்கொண்டு சிலகுற்றங்களுண்டாயிருந்தாலும், (పద్మపత్రమివాంభసా) (பத்மபத்ரமிவாம்பஸா) என்கிறபடியே அவற்றோடு அவர்கள் ஒட்டற்றிறே யிருப்பது. அப்படியேயாகிலும் அவர்களுக்கு அவையும் உண்டாகையாலே நம்மை உத்தரிப்பிக்கைக்கு அவையேபோரும்; இப்படியே எம்பெருமானுக்கு அநந்யார்ஹராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஜந்மவ்ர்த்தாதிகளால் குறையுண்டானாலும் அவர்கள் நமக்கு ஆச்ரயணீயரென்று கருத்து.

(యస్మిన్ మ్లేచ్ఛేఽపి వర్తతే - తస్మై దేయం తతో గ్రాహ్యం స చ పూజ్యో యథా హ్యహమ్) (யஸ்மிந்ம்லேச்சேபி வர்த்ததே-தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்) என்று ம்லேச்சனானாலும் பகவத்பக்தனாகில் என்னைப்போலே பூஜ்யன், அவன்பக்கல் ஜ்ஞானோபதேசம் கொள்ளலாமென்றானிறே (అపి చేత్సుదురాచారో భజతే మామనన్యభాక్। సాధురేవ స మన్తవ్యః సమ్యగ్వ్యవసితో హి సః) (அபிசேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக்| ஸாதுரேவ ஸமந்தவ்யஸ்ஸம்யக்வ்யவஸிதோ ஹிஸ:) [మామ్ மாம்] திருத்தேர்த்தட்டிலே அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணாநின்றுகொண்டு கீதாசார்யனான என்னை அநந்யப்ரயோஜநனாய் பஜித்தானாகில் அவன் எப்படிப்பட்ட குற்றத்தை யுடையவனாகிலும். [సాధురేవ స మన్తవ్యః - ஸாதுரேவ ஸமந்தவ்ய:] என்றானிறே. இத்தால - அவர்களுடைய ப்ராமாதிகமான ஸ்வபாவ வ்ர்த்தங்களெல்லாம் அகிஞ்சித்கரம், ஆச்ரயப்ராபல்யமே ப்ரதாநமாக அவர்கள் பூஜ்யரென்றபடி. (తస్మాన్మద్భక్తభక్తాశ్చ పూజనీయా విశేషతః) (தஸ்மாத்மத்பக்தபக்தாஸ்ச பூஜநீயா விசேஷத:) என்றானிறே (பயிலும் திருவுடையார் யவரேலு மவர்கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறெம்மையாளும் பரமரே) (நம்மையளிக்கும்பிராக்களே) (எந்தொழுகுலந்தாங்களே) (படியாதுமில் குழவிப்படி யெந்தைபிரான்றனக்கு அடியாரடியார் தம்மடியாரடியார்

http://acharya.org

தமக்கடியாரடியார் தம்மடியாரடியோங்களே) (சிறுமாமனிசரா யென்னையாண்டாரிங்கேதிரியவே) (தமர்கள்தமர்கள்தமர்களாம சதிரேவாய்க்கதமியேற்கே) (அவர்களுக்கே குடிகளாய்ச்செல்லும நல்லகோட்பாடே) என்று இவ்வர்த்தத்தை பத்தும பத்தாக நம்மாழ்வாரருளிச்செய்தாரிறே. (𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌥𑌾𑌨𑌾𑌂 𑌨𑍈𑌷𑌾𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌕𑍁𑌲𑌾𑌦𑌿𑌕𑌮𑍍) (ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம்நைஷாம்சிந்த்யம்குலாதிகம) என்றானிறே-ஸ்ரீபரத்வாஜமஹாமுநியும்.

இனி, (அக்குற்றம்) என்றதுக்கு ப்ராமாதிகமாய வந்ததன்றிக்கே ஆச்ரயணாநந்தரபாவி புத்திபூர்வகமாய் ஆனதைச் சொல்லில், (𑌧𑍀𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌥𑌪𑌾𑌪𑍍𑌮𑌨𑌾𑌮𑌜𑌨𑌾𑌤𑍍) (தீபூர்வோத்தபாப்மநாமஜநாத்) என்றும், (புண்யத்துக்கு அஞ்சுகிறவன் பாபத்தைப் பண்ணுமிறே) என்றுஞ் சொல்லுகையாலே இவர்களுக்கு அது புத்திபூர்வகமாகவர வழியில்லை, (ஜாதேபி) என்கிறபடியே ப்ராக்ருதிஸம்பந்தத்தாலே புத்திபூர்வகமாக பரஸக்தமானாலும், (என்னடியாரதுசெய்யார் செய்தாரேல்நன்றுசெய்தார்)என்றுஞ்சொல்லப்படுகிற பகவதபிஸந்திவிசேஷத்தாலும், (𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌜𑌲𑌧𑍇) (வாத்ஸல்யஜலதே) என்கிறபடியே அவன் ஸ்வாச்ரிதருடைய குற்றத்தை போக்யமாகக்கொள்ளும் ஸ்வபாவனாகையாலும், (இறையும்-அகலகில்லேன்)என்று-அவனைப்பிரியாதே நித்யாநபாயினியாயிருக்கிறபெரியபிராட்டியாருடைய புருஷகாரபலத்தாலும் குற்றத்தை அவளாலேபொறுப்பித்துக்கொள்ளத்தட்டில்லை, ஓரநுசயமாத்ரத்தாலே நசிக்கக்கடவதானபாவத்தை.

(𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿) (ஸர்வபாபேப்யோ மோக்ஷ இஷ்யாமி) என்று கீதாசார்யனும், (𑌤𑌦𑍈𑌵𑌮𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑍍𑌯𑌶𑍁𑌭𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃) (ததைவமுஷ்ணாத்யசுபாந்யசேஷத:) என்று ஆளவந்தாரும், ஸாவசப்தாஉசேஷபதஸாமாநாதிகரண்யேநவந்தபாபத்தை நிர்த்தேசிக்கையாலே அந்த சப்தங்களிலே புத்திபூர்வோத்தராகமும அந்தர்ப்பவிக்குமிறே. ஸர்வேச்வரன் இவனுடையகுற்றத்தை அபேக்ஷித்தானாகிலும் அவனுக்குஒருகுற்றமடையாதபடி ப்ரபந்நனும் ஸாவதாநமாயிருக்கவேணும, இப்படிப்பட்ட ப்ரபாவம் அவர்கள் பக்கல் உண்டாயிருக்கையாலே அத்தையிட்டு அவர்களை அநாதரியாதே அவர்கள் எனக்கு சேஷிகள்என்று அத்யவஸிக்கவேணும்என்றதாய்த்து. இவ்வளவான ப்ரதிபத்திபிறந்தாலிறே இவனுக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள்பக்கலிலே ஸஜாதீயதாப்ரதிபத்தி குலைந்ததாவது. ... ... (௨௭)

உரை.—அ.—(இருபத்தேழாம்பாட்டு.) இப்படி இவர்தமக்கு அநந்யார்ஹராளவிலே ஊன்றினவாறே எம்பெருமானார் இவர்

http://acharya.org

நெஞ்சுக்கு தம்மை ஸர்வகாலமும் விஷயமாக்கிக்கொடுக்க, பாபிஷ்ட்டனான என்னெஞ்சிலே புகுந்தருளின விது தேவரீர்ப்ரபாவத்துக்கு அவத்யமன்றோ வென்று என்னெஞ்சுதளரா நின்றதென்கிறார்.

மூ.—கொள்ளக்குறைவற்றிலங்கிக்கொழுந்துவிட்டோங்கியவுன்
வள்ளல்தனத்தினால்வல்வினையேன்மனம்நீபுகுந்தாய்;
வெள்ளைச்சுடர்விடுமுன்பெருமேன்மைக்கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்குமிராமாநுசவென்தனிநெஞ்சமே. (உள)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இராமாநுசா	உடையவரே,		வஸிஷ்ட்டன் சண்டாள ச்ரேணியிலேபுகுந்தாப்போலே புகுந்தவிது,
கொள்ள	வேண்டுவார்க்குவேண்டுவதெல்லாம் கொள்ளலாம்படி		
குறைவு அற்று	ஒருகுறைவு அற்றிருப்பதாய்,	வெள்ளை	பரிசுத்தமாய்,
		சுடர்விடும்	விளங்காநின்றுள்ள,
இலங்கி	கொடுக்கப்பெற்றால உஜ்வலமாய்,	உன்பெருமேன்மைக்கு	தேவரீருடைய நிரவதிகப்ரபாவத்துக்கு,
கொழுந்துவிட்டு	மேன்மேலும இளகிப்பதித்து,	இழுக்கிதென்று	அவத்யமென்று,
ஓங்கிய	வளர்ந்திருப்பதான,		
உன் வள்ளல்தனத்தினால	தேவரீருடைய ஔதார்யத்தாலே,	தனி	ஒருதுணையின்றிக்கே தனிப்பட்டிருக்கிற,
வல்வினையேன	மஹாபாபியான வென்னுடைய,	என்நெஞ்சம்	என்னெஞ்சானது,
மனம்	மநஸ்ஸிலே	தள்ளுற்று	தளர்ந்து,
நீ புகுந்தாய்	தேவரீருடையபெருமைபாராதேவந்து புகுந்தருளிற்று;	இரங்கும்	ஈடுபடாநின்றது.

தள்ளுதல்-தளர்தல். இரக்கம்-ஈடுபாடு. ... (உள)

வ்யா.—அ.—இருபத்தேழாம்பாட்டு. இப்படி இவர் தமக்கு அநந்யார்ஹர்பக்கலிலே ப்ரதிபத்திபண்ணினவாறே எம்பெருமானார் இவருடைய நெஞ்சு, குற்றமே ஸர்வகாலமும் விஷயமாக்கிக்கொடுக்க பாபிஷ்டனான என்னெஞ்சிலே புகுந்தருளின விது தேவரீருடைய ப்ரபாவத்துக்கு அவத்யமன்றோ வென்று என்னெஞ்சு தளராநின்றதென்கிறார்.

வ்யா.—(கொள்ளக்குறைவற்று) வேண்டுவார் வேண்டுவதெல்லாம் கொண்டாலும், ஒருகுறைவின்றிக்கே - குறைப்பட்டிராதே, மஹாமேருவானாலும் நிதயவாஸம் பண்ணத்தொடங்கினால்

நாளுக்கு நாள் குறைப்பட்டு அழிந்து போமிறே; இங்கு அப்படியன்றிக்கே புஷ்கலாவர்த்தகாதி மேகங்கள் பருகினாலும ஸமுத்ரஜலம் குறைப்பட்டிராதே நிஸ்சலமாய் பூர்ணமாயிருக்குமாப் போலே யிருந்தது. (இலங்கி) இந்தப்ரபாவத்தாலே (ఆవిర్భూద్రామానుజదివాకరః) (ஆவிரபூத்ராமாநுஜதிவாகர:) என்றுப்போலே அத்யுஜ்வலமாய். (கொழுந்துவிட்டோங்கிய) ஸமுத்ரத்துக்கும் இவருடையவள்ளல்தனத்துக்கும் ஒருவாசியுண்டு; - அது அதிகம்பிரமாய்ப் பொருந்தி இருந்தபடியே யிருக்கும்; இந்த வள்ளலானை லோகத்திலே இவருடைய க்ர்பாவிஷய பூதரெல்லாரும் வாங்கிக் கொண்டுபோந்தால அதுவேஹேதுவாக ப்ரகாசித்து பல்லவிதது பரமபதபர்யந்தமாகப் படராநிற்கும்; இப்படி ஓங்கிவளராநிற்க

(உன்வளளல்தனததினால) இவாதாம தமமுடைய அவதாரதசையேபிடிதது எல்லாருக்கும பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை, (அறியாதனவறிவித்து) என்கிறபடியே விசதமாகத் தெளியும்படி உபதேசிதது, இபபடி பண்ணினோமேயென்று ஆறியிருக்கையன்றிக்கே ஸர்வரும ஸாவகாலமும அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி ஸ்ரீபாஷ்யகீதாபாஷ்யாதி ப்ரபந்தஙகளைப பண்ணியருளி உபகரிததாரிறே. க்ரந்தகரணததை (வள்ளல) என்பாரோ வென்னில்; (తత్త్వేన యశ్చిదచిదీశ్వరతత్స్వభావ భోగాపవర్గతదుపాయగతీరుదారః । సందర్శయన్నిరమిమీత పురాణరత్నమ్) (தத்வேநயஶ்சித சிதீசவரதத்ஸ்வபாவ போகாபவர்க்கததுபாயகதீருதார: । ஸந்தர்சயந்நிரமிமீதபுராணரத்நம) என்று ஆளவந்தாருமருளிச்செய்தாரிறே

(உன்வள்ளல்தனத்தினால) லோகததிலே கர்ண சிபி மாந்தாதாதிகள் வதாந்யராய் அநேகமபேருண்டு, அவர்கள்ஸகாசத்திலே பாத்ரனானஅர்த்திவந்தால் அர்த்தஙகளைக் கொடுப்பாகளென்று ப்ரஸித்தமாயிருக்கும, அப்படியன்று தேவரீருடைய வளளல் தனம்; - அர்த்திதவநிரபேக்ஷமாக பாத்ராபாத்ரஙகளைப் பாராதே ஆகிஞ்சந்யாநந்யகதித்வஙகளேபற்றாசாககொண்டு பரமபுருஷார்த்தத்தையே கொடுக்கக்கடவதாயிருக்கும; இபபடிப்பட்ட தேவரீருடைய ஔதார்யத்தாலே. வள்ளலுடைய மாஹாத்ம்யம் சொன்னீரோ, இது உமக்குத் தெளிந்தபடியென்னென்ன; நான் புறமபே எங்கேயாகிலும் சென்று கர்ணா கர்ணியாய்க்கேட்டுத் தெளிந்தேனோ இது ஸ்வபாவத்தால் வந்ததன்றோ வென்கிறார்.

(வல்வினையேன்மனம) நன்மையென்று பேரிடலாவதொரு நன்மையுமின்றிக்கே யொழிந்தாலும், (திருவடி தன்நாமம் மறந்தும புறந்தொழாமாந்தர்) என்கிறபடியே தடஸ்தனாயிருந்தேனோ. நான் அறியும்படியே மஹாகோரமான பாபஙகளைப்பண்ணினேன், இப்படி பாபிஷ்டனான வென்னுடையமநஸ்ஸிலே. (ఽన్యాయ

షయాసఙ్గీ) (பந்தாயவிஷயாஸங்கி) என்னப்பட்ட மநஸ்ஸிலே. (நீபுகுந்தாய்) உபயவிபூதி ஸாம்ராஜ்யத்துக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட தேவரீர் புகுந்தீர், உம்மை என்மநஸ்ஸுக்கு விஷயமாக்கியே நிறுத்தினீரென்றபடி. இத்தைப்பார்த்தால் அத்யந்த பாபிஷ்டனான நான எங்கே, (శ్రీవిష్ణులోకమణిమణ్డపమార్గదాయీ) (ஸ்ரீவிஷ்ணுலோகமணிமண்டப மார்க்கதாயீ) என்னும்படியான அப்ரதிமப்ரபாவதத்தையுடைய தேவரீா எங்கே, இதுசேராச்சேர்த்தியன்றோ. சண்டாளவாடிகைக்குள்ளே வஸிஷ்டன் புகுந்தாப்போலே இது அதிஸாஹஸ ப்ரவ்ர்த்தியாயிருக்குமென்றபடி. (இராமாநுசா) எம்பெருமானே.

(வெள்ளைச்சுடர்) லோகோபகாரமாய் ச்ரமஹரமான சந்த்ர தேஜஸ்ஸுககும் ஒருகளங்கமுண்டு, அப்ராகர்தமாய் பகவத்கடாக்ஷவிசேஷத்தாலே வந்ததாகையாலே தேவரீருடைய தேஜஸ்ஸு அபபடிப்பட்டதன்றே, (அடியார்கடகென்னை யாள்படுத்தவிமலன்) என்கிறபடியே ஆழ்வானையிட்டு என்னைத திருத்துவித்து அவருக்கு சேஷபூதனும்படி க்ர்பைபண்ணி யருளுகையாலே அதிநிர்மலமாயிருக்குமென்றபடி. இப்படிபபட்ட தேவரீருடைய பராபிபவந ஸாமாத்த்யமாகிற தேஜஸ்ஸை. (விடும்) லோகத்திலே மாமபழமிருக்கிற தோப்பை கொள்ளையாகவிடும தாமிகரைப்போலே. (శ్వసితావధూతపరవాదివైభవా) (ச்வஸிதாவதூதபரவாதிவைபவா) என்று கொண்டாடும்படி ஸ்வாசரிதருககு முற்றூட்டாகக்கொடுத்தருளுகிற. (உன்பெருமேன்மைக்கிழுக்கிதென்று) *నిగమజలధివేలా- நிகமஜலதிவேலா பூர்ணசந்த்ரராகையாலே எல்லாருக்கு மொக்க பவ்யராயிருககும் தேவரீருடைய மஹத்தான அப்ரதிமவைபவத்துக்கு அவத்யமென றுகொணடு.

(இழுக்கிதென்று) பிராட்டி தன்னுடைய க்ர்பையை வெளியிடுகைககாக ராவணபவநத்திலே புகுந்தால் அது லோகத்தாருக்கும் ஈச்வரனுககும் அஸஹ்யமா யிருந்தாப்போலே அவரும் இவர்தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்து நின்றால் அது அவருடைய மேன்மைககு அஸஹ்யமாய் அதுக்கு அவத்யத்தை விளைககுமென்றுகாணும் இவருடைய அத்யவஸாயம். (என் தனிநெஞ்சமே) மநஸ்ஸிலே ஒருக்லேசமுண்டானவாறே தனக்குஆப்த்தராயிருப்பாரோடே சொன்னால் செய்தது சாமகமாயிருக்கும், அதுக்கு நமக்கு ஒருஸஹாயபூதருண்டோ. இப்படி பயப்படுகைககு தன்போலவாரொருவரும் இல்லாமையாலே அத்விதீயமான மநஸ்ஸென்னவுமாம். இந்தப்ரகாரமான மநஸ்ஸானது. (தள்ளுற்றிரங்கும்) தளர்ந்து ஈடுபடாநின்றதென்று போரநிர்வேதப்படுகிறாராய்த்து. தள்ளுதல் - தளும்புதல். இரக்கம் - ஈடுபாடு.

http://acharya.org

(என்தனிநெஞ்சமே) இத்தனைநாளும் தான் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கு தன்னோடு ஸத்ர்சரில்லையென்றிருக்கிற என்னுடைய மநஸ்ஸென்னவுமாம். ... ...(உஎ)

உரை.—அ.—இருபத்தெட்டாம்பாட்டு. (मनःपूर्वो वागुत्तरः) (மநப்பூர்வோவாகுத்தர:) என்னும் மநஸ்ஸுக்கு அநந்தரமான வாக்குக்கு அவர்விஷயத்திலுண்டான பராவண்யத்தைக்கண்டு ப்ரீதராகிறார்.

மூ.—நெஞ்சில்கறைகொண்டகஞ்சனைக்காய்ந்தநிமலன்நங்கள்
பஞ்சித்திருவடிபின்னைதன்காதலன்பாதம்நண்ணா
வஞ்சர்க்கரியவிராமாநுசன்புகழன்றியென்வாய
கொஞ்சிப்பரவகில்லாதென்னவாழ்வின்றுகூடியதே(உஅ)

பதம்.	உரை.
நெஞ்சில்	"தீயபுந்திக்கஞ்சனுன்மேல் சினமுடையன" என்கிறபடியே ஹ்ருதயத்திலே,
கறைகொண்ட	சீற்றத்தை யுடையனான,
கஞ்சனை	கம்ஸனை,
காய்ந்த	சீறின,
நிமலன்	ஹேயப்ரத்ய நீகனாய்,
நங்கள்	ஆச்ரித ஜநாபிமாநியாய்,
பஞ்சி	"பஞ்சிய மெல்லடிபின்னை" என்கிறபடியே பஞ்சு போலே ம்ர்துவாளான,
திருவடி	திருவடிகளை யுடைய
பின்னைதன்	நப்பின்னைப் பிராட்டிக்கு,
காதலன்	ஸ்நிக்தனானவனுடைய,
பாதம்	திருவடிகளை,
நண்ணா	ஆச்ரயியாத,
வஞ்சர்க்கு	ஆத்மாபஹாரிகளுக்கு,
அரிய	ஸுதுர்லபரான,
இராமாநுசன்	எம்பெருமானுடைய.

பதம்.	உரை.
புகழன்றி	குணங்களையொழிய,
என்வாய	என்னுடைய வாக்கானது,
கொஞ்சிப் பரவகில்லாது	முக்தஜல்பமாகக் கொண்டு உடைவுகெட ஏத்தாது;
இன்றுகூடியதுவாழ்வு,	இன்று எனக்குக் கூடினதொரு வாழ்வு,
என்	இருந்தபடியென்.

"நிமலன்" என்று - "देवानां दानवानां च सामान्यमधिदैवतम्" (தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்) என்கிறபடியே பொதுவான ஸம்பந்தமும் கிடக்கச்செய்தே ஆச்ரித விரோதி யென்னுமாகாரத்தாலே அவனைநிரஸிக்கையால் வந்த நைர்மல்யத்தைச்சொல்லுகிறது. கறை-கறுப்பாய்-சீற்றத்தைச்சொல்லுகிறது. அன்றிக்கே, கறைஎன்று - தோஷமாய், மநஸ்ஸிலே தோஷத்தை யுடையவனென்னவுமாம். பஞ்சு-பஞ்சு கொஞ்சுதல்-அபூர்ணோக்தியாகச் சொல்லுதல். ( )

http://acharya.org

வ்யா.—அ.—இருபத்தெட்டாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-மநஸ்ஸினுடைய ஸமர்த்திகளைச்சொல்லி, இதிலே - வாக்குக்குள்ள ஸமர்த்தியைச்சொல்ல ஒருப்பட்டு, துர்ப்புத்தியான கம்ஸனை ஸம்ஹரித்து, அதிகோமளமான ஸ்ரீபாதங்களையுடைய நப்பின்னைப்பிராட்டிக்கு ஸ்நேஹியான க்ர்ஷ்ணனுடையஸ்ரீபாதங்களை ஆச்ரயியாத ஆதமாபஹாரிகளுககு அகோசரரான எமபெருமானுடைய கல்யாணகுணங்களையொழிய வேறொருவிஷயத்தை என்வாக்கானது ஸ்துதிககமாட்டாது, ஆகையாலே இபபோது எனக்கொரு அலப்பலாபமசேர்ந்ததென்று வித்தராகிறார்.

வ்யா.—(நெஞசில்கறைகொண்ட கஞ்சனை) கம்ஸன் அசரீரிவாணிசொன்ன வார்த்தையைக கேட்டவன்றுதொடஙகி மநஸ்ஸிலே க்ரோதத்தை வைத்துககொண்டிருந்தான், அந்தக்ரோதமானது தமஃகார்யமென்கையாலே அத்தைக் கறுப்பாக வருளிச செய்கிறார். (தீயபுந்திக்கஞ்சனுன்மேல சினமுடையன்) எனகிற படியே துஷ்டாசயத்திலே சீற்றத்தையுடையவனான கம்ஸனை (కంసస్తు తద్వచనం ప్రాహ సర్వాన్ మహాసురాన్ । ప్రలంబకేశిప్రముఖానాహూయాసురపుంగవః । హే ప్రలంబ మహాబాహో కేశిన్ ధేనుక పూతనే । అరిష్టాద్యాస్తథా చాన్యే శ్రూయతాం వచనం మమ ॥ మాం హన్తుమమరైర్యత్నః కృతః కిల దురాత్మభిః । మద్వీర్యతాపితాన్ వీరో న త్వేతాన్ గణయామ్యహమ్ ॥ కిమింద్రేణాల్పవీర్యేణ కిం హరేణైకచారిణా । హరిణా వాపి కిం సాధ్యం ఛిద్రేష్వసురఘాతినా) என்றுதொடஙகி, (అమరేషు మమావజ్ఞా జాయతే దైత్యపుంగవాః । హాస్యం మే జాయతే వీరాః తేషు యత్నపరేష్వపి ॥ తథాపి ఖలు దుష్టానాం తేషామభ్యధికం మయా । అపకారాయ దైత్యేన్ద్రా యతనీయం దురాత్మనామ్) என்று சொல்லிக்கொண்டுபோநது, (ఉత్పన్నశ్చాపి మే మృత్యుర్భూతపూర్వస్స వై కిల । ఇత్యేతద్బాలికా ప్రాహ దేవకీగర్భసంభవా ॥ తస్మాద్బాలేషు చ పరో యత్నః కార్యో మహీతలే । యత్రోద్రిక్తం బలం బాలే స హన్తవ్యః ప్రయత్నతః) என்று இவ்விர்த்தாந்தம் ஸ்ரீவிஷ்ணுபுராணததிலே பரககசசொலலப்பட்டதிறே.

(காய்ந்த)(ఉత్ప్లుత్యారుహ్య తం మఞ్చం కంసం జగ్రాహ వేగతః । కేశేష్వాకృష్య విగలత్కిరీటమవనీతలే ॥ స కంసం పాతయామాస తస్యోపరి పపాత చ । అశేషజగదాధారగురుణా పతతోపరి । కృష్ణేన త్యాజితః ప్రాణానుగ్రసేనాత్మజో నృపః) (உத்ப்லுத்யாருஹ்ய தம் மஞ்சம் கம்ஸம் ஜக்ராஹ வேகதஃ । கேசேஷ்வாகர்ஷ்ய விகளத் கிரீடமவநீதலே॥ கம்ஸம் ஸம்பாதயாமாஸ தஸ்யோபரிபபாதச। க்ர்ஷ்ணேநத்யாஜிதப்ராணா நுக்ரஸேநாத்மஜோநர்பஃ) என்கிறபடியே ஸம்ஹரித்த. (நிமலன்) கல்மஷரஹிதன். முன்னே ஒருமலமிருந்து அத்தைப் போக்கிக்கொண்டபடியன்று, நைஸர்க்கிகமான நைர்மல்யத்தையுடையவன். ஹேயப்ரதிபடனென்றபடி. அன்றிக்கே, கம்ஸனைக்கொல்லுமளவும் மாதாபிதாக்களைச் சிறையிலேயிருக்கக் கேட்டுப் பொறுத்திருந்த தொருமலமுண்டு, அவனைக்கொன்று

http://acharya.org

மாதாபிதாக்களைச் சிறையில் நின்றும் விடுவித்தபின்பு நிர்மலனானென்னவுமாம். (தந்தைகாலில் விலங்கறவந்து தோன்றியதோன்றல்) என்னக்கடவதிறே. அங்ஙனுமன்றிக்கே, (அடியார்க்கென்னை யாட்படுத்தவிமலன) என்கிறபடியே - தம்மை எம்பெருமானார் திருவடிகளிலே அநந்யார்ஹராம்படி பண்ணினனாகையாலே (நிமலன்) என்கிறாராகவுமாம்.

(நங்கள்பஞ்சித்திருவடி பின்னைதன்காதலன்) (நங்கள்பஞ்சித்திருவடி) (பஞ்சியமெல்லடிபபின்னை) என்கிறபடியே - பஞ்சுபோலே ஸுகுமாரமான திருவடிகளையுடையளான. அன்றிக்கே, அத்யந்த புஷ்பஹாஸ ஸுகுமாரியாகையாலே கடிநமான பூமியிலே திருவடிகளைவைத்தால வாடுமென்று நினைத்து, பஞ்சுமேல அடியையிட்டுத் திரியும்படியான திருவடிகளையுடையாளென்னவுமாம. (பின்னைதன) இப்படிப்பட்ட ஸௌகுமார்யத்தையுடையளான நபபின்னைபபிராட்டிககு. (பின்னைதன்காதலன்) என்போல வாரெல்லாருடையவும் ஈசவரநிகரஹஹேதுவான அபராதங்களை அவளாலேபொறுப்பித்து நம்மைஆசரயிபபிக்கைக்காக அவளோடே அநேகாவதாரங்களைப பண்ணினனாகையாலே நமக்காயே யிருக்கிறுளென்று நினைத்து, (நஙகள்) எனகிறா. ஆக, ஆச்ரிதரக்ஷணார்த்தமாக வவதரிதது அதிஸௌகுமார்யத்தை யுடையளான நப்பின்னைப்பிராடடிதனக்கு ஸ்நிகததனானவென்றபடி.

ஸ்ரீஜநகராஜன், தன்பூமியிலுள்ளஇடையர்கெல்லாம்தலைவனாய் கும்பனென்னும் பேரையுடையனானவன், இடையர்கோஷ்டியிலேஏழுவ்ருஷபங்கள் அஸுராவேசத்தாலே மஹாபலவீர்யவத்துக்களாய்க்கொண்டு, இருந்த ராஜ்யங்களையெலலாம பாதிககத்தொடங்கினவாறே, அவன் கும்பனையழைத்து பயபபடுதத; அவனும் நப்பின்னைப்பிராட்டியென்று எனக்கு ஒருபெணபிள்ளையுண்டு, இந்த வ்ர்ஷபங்களை ஸம்ஹரித்தவனுககு இந்தப்பெண்பிள்ளையைக் கொடுக்கக்கடவேனென்று ப்ரதிஜ்ஞைபண்ணினேன் என்ன; ஸ்ரீக்ர்ஷ்ணனுக்கும குமபன் மாதுலனாகையாலே இந்த வ்ர்த்தாந்தத்தைக்கேட்டு சடக்கென அஙகேசென்றுநப்பின்னைப்பிராட்டியைப் பார்த்து அவளதிறத்திலே அதிவ்யாமுக்தனாய்க் கொண்டுஅவளோட்டை ஸம்ச்லேஷத்துககு ப்ரதிபந்தககஙகளான ஸப்தவ்ர்ஷபங்களையும் ஒருக்காலே ஊட்டியாகத தழுவி ஸம்ஹரித்தானென்று புராணங்களிலே ப்ரதிபாதிதமான இந்த அபதாநத்தைக்கொண்டு, (காதலன்) என்று அருளிச்செய்கிறார். (தளவேழ்முறுவல் பின்னைக்காய்வல்லானயர்தலைவனாய் இளவேறேழுந்தழுவியவெந்தாய்) என்று நம்மாழ்வாரும்அருளிச்செய்தாரிறே. இப்படிப்பட்ட க்ர்ஷ்ணனுடைய.

http://acharya.org

(பாதம் நண்ணாவஞ்சர்க்கு) திருவடிகளை ஆச்ரயியாத வஞ்சகருக்கு.(యోన్యథాసన్తమాత్మాన మన్యథా ప్రతిపద్యతే। కింతేననకృతంపాపం చోరేణాత్మాపహారిణా) (யோந்யதா ஸந்தமாத்மாந மந்யதாப்ரதிபத்யதே| கிம் தேநநக்ருதம்பாபம்சோரேணாத்மாபஹாரிணா)என்கிறபடியே "த்வம் மே" என்றால், "அஹம் மே" என்னும்படியான ஆத்மாபஹாரிகளுக்கு.(సమాందుష్కృతినోమూఢాః ప్రపద్యన్తేనరాధమాః। మాయయాఽపహృతజ్ఞానాః ఆసురంయోనిమాశ్రితాః) (நமாம்துஷ்க்ருதிநோமூடா: ப்ரபத்யந்தேநராதம:| மாயயாபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரீம்யோநிமாச்ரிதா:) என்றானிறேகீதாசார்யனும்; அப்படிப்பட்ட வஞ்சகருக்கு.

(அரியவிராமாநுசன்) ஆச்ரயிக்கைக்கு கடிநராய் ஸுதுர்லபரான எம்பெருமானாருடைய. (புகழன்றி) கீழ்ப்பாட்டிலே வஞ்சகமான என்மநஸ்ஸிலே என்னுடையதோஷத்தைப்பாராதே அதுவேபோக்யமாக அங்கீகரித்துப புகுந்துநிற்க அத்தாலே ப்ரகாசிதங்களான வாத்ஸல்யஸௌசீல்யாதி கல்யாணகுணங்களையொழிய. (என்வாய்) இத்தனைநாளும் ப்ரதிகூலனாய்ப்போந்த வென்னுடைய வாக்கானது. (கொஞ்சிப்பரவகில்லாது) அந்யவிஷயஸ்தோத்ரத்துககு ஸங்கோசிதது; அத்தைஸ்தோத்ரம்பண்ணமாட்டாது. ரும்கீத்தஜல்ப்மாய்க்கொண்டு அறிவுகெடமாட்டாது. கொஞசுதல் - {அபூர்ணோக்தியாகசசொல்லுதல். (என்னவாழ்வின்றுகூடியதே) இப்போது இந்த ஸம்ருத்தி நமக்குச்சேர்ந்ததுகண்டீரோ, இதுபெரும்பேறென்றுவித்தராகிறார். இராமாநுசன்புகழன்றி என்கையாலே - பகவத்குணங்களையும்ஸ்தோத்ரம்பண்ணமாட்டாதென்று தம்முடைய சரமநிஷ்டையை வெளியிட்டருளினதொன்றதாய்த்து. ... ... (உஅ)

உரை —அ.—இருபத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார் திவ்யகுணங்களை உள்ளபடி அறிந்திருக்குமவர்கள்திரளை என் கண்கள்கண்டு களிக்கும்படி கூட்டக்கடவ ஸுக்ர்தம் என்று கூடுமோ வென்கிறார்.

மூ.—கூட்டும்விதியென்றுகூடுங்கொலோதென்குருகைப்பிரான்
பாட்டென்னும்வேதப்பசுந்தமிழ்தன்னைத்தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்தவிராமாநுசன்புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னையென்னாட்டங்கள்கண்டின்பமெய்திடவே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
தென்	தர்சநீயமான,	பாட்டு	பாட்டென்று கொண்டுப்ரஸித்தமாய்,
குருகைப்பிரான்.	திருநகரிக்கு நாதரான ஆழ்வாருடைய,	என்னும்	
		வேதம்	வேதரூபமாய்,

பதம்.	உரை.
பசுந்தமிழ் தன்னை	செந்தமிழா யிருக்கிற திருவாய்மொழியை,
தன்பத்தியென்னும்	தம்முடைய பக்தியாகிற,
வீட்டின்கண்வைத்த	வாஸஸ்தாநத்திலே வைத்த,
இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
புகழ்	கல்யாண
மெய்	யதாவாக,
உணர்ந்தோர்	அறிந்திருக்குமவர்களுடைய
ஈட்டங்கள்	ஸமூஹங்கள் தன்னை,
என் நாட்டங்கள் கண்டு	என்னுடையத்ருஷ்டிகளானவை கண்டு,
இன்பம்	ஸுகத்தை,
எய்திட	ப்ராபிக்கும்படியாக,
கூடும்	என்றுகூடியும் இப்பேற்றை நமக்குச் சேர்விப்பதான,

பதம்.	உரை.
விதி	அவருடையக்ருபை,
என்று கூடுங்கொலோ	என்று கூடவற்றோ.

-ஸௌகர்தம். இவர் தமக்கு பேறுக்கடியான ஸௌகர்தமாக நினைத்திருப்பது அதத்தலையில் க்ருபையையிறே. * இராமாநுசன் புகழ் மெய்யுணர்ந்தோரீட்டங்களைத் தத்காலத்திலே காணக் கிட்டச்செய்தே இங்ஙன சொல்லுவானென்னென்னில்; காணகிறதில்லன்று இவர்க்கு இப்போது அபேக்ஷை, கண்டால் கண்கள் அவிக்ருதமா யிருக்கை யன்றிகே இன்பமெய்துகை. இன்பம்-ப்ரேமம். அதுக்கடியான ப்ரேமம் எம்பெருமானாருளாலே விளையுமேவணுமிறே; அத்தாலே சொல்லுகிறார். "உன் தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும்படி என்னை யாக்கியங்காட்படுத்து" என்றிறே மேலும் இவர்ப்ரார்த்தனை. ஈட்டம் - திரள். நாட்டம் - த்ருஷ்டி. ... ... (உகூ)

வ்யா.—அ.—இருபத்தொன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-தம்முடையவாக்கானது எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களுக்கு அநர்ஹமாய்விட்டதென்று அந்தஸம்ர்த்தியைச் சொல்லி, அவ்வளவிலே சுவறிப்போகாதே மேல்மேல் பெருகிவருகிற அபிநிவேசாதிசயத்தாலே, இப்பாட்டில் - தர்சநீயமான திருக்குருகைக்கு நிர்வாஹகராய் திருவாய்மொழி முகத்தாலே தத்வஹிதபுருஷார்த்தங்களை ஸர்வருக்கும் உபகரித்தருளின நம்மாழ்வாருடைய திவ்யஸூக்திமயமானவேதமாகிற செந்தமிழ் தன்னை தம்முடைய பக்தியாகிற கோயிலிலே ப்ரதிஷ்டிப்பித்துக்கொண்டிருக்கிற எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை உள்ளபடி தெளிந்திருக்கும் ஜ்ஞாநாதிகர்களுடைய திரள்களை என்கண்கள் கண்டு அநந்திக்கக்களிக்கும்படி சோககவகான பாக்யம்

http://acharya.org

எப்போது லபிக்குமோவென்றுதத்யபர்ந்தமான ப்ரீதியைப்ப்ராரர்த்தித்தருளுகிறார்.

வ்யா.—(தென்குருகைப்பிரான்)(தென்) தர்சநீயமானவென்னுதல்; தெற்குதிக்கிலேயிருக்கிறவென்னுதல். (குருகை) பரமபதத்தைச சேர்க்கு மூரென்னுதல்; பரமபதத்தோடே ஸமமான வைபவத்தையுடைய வூரென்னுதல். (பிரான்) இப்படிப்பட்ட திருநகரியிலே அவதரித்து லோகத்தாரெல்லாரும் உஜ்ஜீவிக்கும்படி தத்வஹித புருஷார்த்த தத்யாதாத்ம்யங்களை திவ்யப்ரபந்தமுகேந உபகரித்த நம்மாழ்வாருடைய அன்றிககே, அவ்வூரிலே அவதரிக்கையாலே எல்லாருக்கும் அவர்உத்தேச்யராயிருக்கிறவழியாலே அவ்வூருக்கு உபகாரகரென்னவுமாம். (பாட்டென்னும் வேதப் பசுந்தமிழ்தன்னை) (அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன) என்றும், (தமிழ்மறைகளாயிரமும்ஈன்றமுதல் தாய்சடகோபன்) என்றுஞ் சொல்லுகிறபடியே தென்குருகைப்பிரானருளிச்செய்த பாட்டென்று ப்ரஸித்தமாய்ஸாமவேதரூபமாய் செந்தமிழாயிருக்கிற திருவாய்மொழியை.

(தன்பத்தியென்னும்) அத்தைவிஸ்மரித்தால்ஒருக்ஷணம் ஒரு கல்பம்போலே யிருக்கும்படி பண்ணககடவதான பரமபக்தியாகிறவதுவும். (தன்பத்தி) எல்லாருடையபக்தியைப்போலன்றிக்கே பகவதஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளபடி யறிந்த எம்பெருமானருடைய ப்ரேமம அவருடைய ஜ்ஞாந வைசத்யத்துக்குத் தகுதியாயிருக்குமிறே, இப்படிப்பட்ட பக்தியாகிற. (வீட்டின்கண் வைத்த) கண் - ஸப்தமி. வீடு - ஆவாஸஸ்த்தாநம். அநர்க்கமானரத்நத்தைச் செப்பிலே வைத்துககொண்டிருபபாரைப்போலே தம்முடைய பக்தியாகிற மஹாஸௌதத்திலே வைத்துக் கொண்டிருக்கிற. (இராமாநுசன்புகழ்) திருவாய்மொழியை ஸதா காலக்ஷேபம பண்ணியும, அந்தரங்கர்க்கு ஸார்த்தமாக அத்தை உபதேசித்தும், அந்தப பாசுரங்களைக்கொண்டு சாரீரகஸூத்ரங்களுக்கு வ்யாக்யாநம் பண்ணியும், பிள்ளானையிட்டு அதுக்குவ்யாக்யாநம் பண்ணுவித்தும் இப்படிப்பட்டவைபவத்தையுடையரான எம்பெருமானருடைய கலயாணகுணங்களை.

(மெய்யுணர்ந்தோர்) மெய்யாகத் தெளிந்துகொண்டிருக்கிற பெரியோர்களுடைய. (ஈட்டங்கள்தன்னை) (సంసేవితస్సంయమిసప్తశత్యా పీఠైశ్చతుస్సప్తతిభిస్సమేతైః । అన్యైరనన్తైరపిఃష్ణుభక్తై రాస్తేఽద్రిరఙ్గంయతిసార్వభౌమః)
(ஸம்ஸேவிதஸ்ஸம்யமிஸப்த சத்யாபீடைஶ்சதுஸ்ஸப்ததிபிஸ் ஸமேதை: । அந்யைரநந்தைரபிவிஷ்ணுபக்தைராஸ்தேதிரங்கம்யதிஸார்வபௌம:) என்கிறபடியே - ஸப்தசதிஸங்க்யாதரான யதிகளும், ஆழ்வான் முதலான முதலிகளும், ஏகாங்கிகளும், அஸங்க்யாதரான

ஸ்ரீவைஷ்ணவர்களும், ஆண்டாள்முதலான ஸ்ரீவைஷ்ணவ ஸ்த்ரீகளுமாய்க்கொண்டு திரளாயிருந்துள்ள ததியருடைய திரள்களை. ஈட்டம் - திரள்.

(என்நாட்டங்கள்) ஸமாச்ரயணபர்யந்தம் ஏஷணத்ரயத்தையே பற்றி ஸுகிக்க நினைத்திருக்கிற என்னுடைய த்ருஷ்டிகள். நாட்டம். த்ருஷ்டி. (கண்டு) கண்ணாரக்கண்டு ஸேவித்து. (இன்பமெய்திடவே)பண்ணினபின்பு,பூர்வகாலத்திலே தேஹஸம்பந்திகளாய்க்கொண்டு வருகிற ஸுகதுக்கங்களைக் காற்கடைக்கொண்டு இந்த ஜ்ஞாநாதிகருடைய திரள்களைக்கண்டு ஆநந்தத்தைப் பெறும்படி. (கூட்டும் விதி என்றுகூடுங்கொலோ) சேர்க்கும் பாக்யம் எப்போது லபிக்கவல்லதோ. விதி-ஸுக்ருதம். இவர் தமக்குப்பேற்றுக்கடியான ஸுக்ருதமாக நினைத்திருப்பது அத்தலையில் க்ருபையையிறே.

இராமாநுசன்புகழ் மெய்யுணர்ந்தோரீட்டங்கள்தன்னை தத்காலத்தில்காணுநிற்கச்செய்தே இங்ஙனே சொல்லுவானென்னென்னில்; காண்கிறதிலன்று இப்போது இவருக்கு அபேக்ஷை, கண்டால் கண்கள் விக்ருதமாகையன்றிக்கே, இன்பமெய்துகைக்கு ப்ரேமம், அதுக்கடியானப்ரேமம் எம்பெருமானாரருளாலேவிளைய வேணுமிறே, அத்தாலே சொல்லுகிறார். அன்றிக்கே, மெய்யுணர்வாவது - அஸங்குசிதஜ்ஞாநம். அது ஒருதேச விசேஷத்திலே சேர்ந்தபின்பு வரக்கடவதாகையாலே அப்படிப்பட்ட ஜ்ஞாநவைசத்யத்தையுடையரானவர்களுடைய திரளை இங்கேகண்டு பரிபூர்ணாநுபவம்பண்ணும்படியாக இப்பேற்றை நமக்குச் சேர்விப்பதான அவருடைய க்ருபை ஏககாலத்துக் கூடவல்லதோ என்னவுமாம். அத்திரள்கள் இவருக்கு ஸதாஸேவ்யங்களாயிருந்தாலும நித்யாபூர்வங்களாயே யிருக்குங்காணும். (உன்தொண்டர்களுக்கே அன்புற்றிருக்கும்படி யென்னை யாக்கியங்காள் படுத்தே) என்றிறே மேலும் இவருடைய ப்ரார்த்தனை. ... ... (௨௯)

உரை.—அ.—முப்பதாம்பாட்டு. இப்படி இவர்ப்ரார்த்தித்ததைக்கேட்டவர்கள், இவ்வளவேயோ உமக்கு, இனி பரமபதப்ராப்திமுதலானவையும் அபேக்ஷிதங்களன்றோவென்ன; எம்பெருமானார் என்னை அடிமைகொண்டருளப்பெற்றபின்பு ஸுகாவஹமான மோக்ஷம் வந்து லபித்திக்கிலென், துக்காவஹமான நரகம் வந்து சூழிலென் என்கிறார்.

மூ.—இன்பந்தருபெருவீடுவந்தெய்திலென்னெண்ணிறந்த
துன்பந்தருநிரயம்பலசூழிலென்தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறையவன்மாயனெனமொழிந்த
அன்பனநகரிராமாநுசனென்னையாண்டனனே. (௩௦)

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொல்உலகில்	ப்ரவாஹரூபேண பழையதாய்ப் போருகிறஜகத்திலே,	இராமாநுசன்	எம்பெருமானார்,
மன்	நித்யராய்,	என்னையாண்டனன்	என்னையடிமைகொண்டருளினார்;
பல	அஸங்க்யாதரான,		ஆனபின்பு,
யிர்கட்கு	ஆத்மாக்களுக்கு,	இன்பம்தரு	ஆநந்தாவஹமாய்,
இறையவன்	சேஷியாயானவன்,		ஆத்மாநுபவ மாத்ரமன்
மாயனென	ஸ்வரூபகுணங்களால் ஆச்சர்யபூதனான ஸர்வேச்வரனென்று,	பெருவீடு	பரமபுருஷார்த்த லக்ஷணமான மோக்ஷமானது,
		வந்தெய்திலென	வந்து ஸித்திக்கிலெ
மொழிந்த	ஸ்ரீபாஷ்யமுகேந அருளிச்செய்த,	எண்ணிறந்ததுன்பம்தரு	அஸங்க்யேயதுக்காவஹமான,
அன்பன்	ஸ்நேஹத்தையுடையராய, இப்படி ஸ்நேஹரூபமாக உபதேசிக்குமதொழிய,	நிரயம்பல	நரகங்கள் பலவும்வந்து,
		சூழிலென	தப்பவொண்ணாதபடி வளைத்துக்கொள்ளிலென்; இவற்றை ஒன்றாக நினைத்திரேனென்றுகருத்து.. (௩௦)
அநகன்	கயாதிலாபாதிகளில் விருப்பத்துக்கடியான பாபஸம்பந்தமின்றிக்கேயிருக்கிற,		

வ்யா.—அ.—முப்பதாம்பாட்டு.கீழ்ப்பாட்டிலே-எம்பெருமானாருடைய கல்யாணகுண வைபவத்தை உள்ளபடியறியும் பெரியோர்களுடைய திரளைக்கண்டு ஆநந்தத்தைப் பெறுவிக்குமதான பாக்யம் உண்டாவதெப்போதோவென்று இவர் அபிநிவேசிக்க, இத்தைக் கண்டவர்கள் உம்முடைய அபேக்ஷை இவ்வளவேயோ பின்னையு முண்டோவென்ன; அநாதியான ஸம்ஸார ஸாகரத்திலே பரமித்துத்திரிகிற ஜந்துக்களுக்கெல்லாம் ஸ்வாமியாய் ஆச்சர்ய குண சேஷ்டிதங்களையுடையனான ஸர்வேச்வரனென்று ஸ்ரீபாஷ்யாதிமுகேந அருளிச்செய்து, ப்ரயோஜநாந்தர கந்தரஹிதமான ப்ரீதியோடே உபகரித்தருளும் எம்பெருமானார் அடியேனை அடிமைகொண்டருளினார், இனி ஆநந்தாவஹமான பதம்வந்து ப்ராபித்தாலென், அஸங்க்யாதங்களான க்லேசங்கள்வந்து ப்ராபித்தா

http://acharya.org

லென், இவற்றை ஒன்றாக நினைக்கிறேனோவென்று தம்முடைய அத்யவஸாயதார்ட்யத்தை யருளிச்செய்கிறார்.

வ்யா.—(தொல்லுலகில்மன்பல்லுயிர்கட்கு) (ఏవంసంస్సృతిచక్రస్థే భ్రామ్యమాణే స్వకర్మభిః) (ஏவம்ஸம்ஸ்ருதிசக்ரஸ்த்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:) என்கிறபடியே - அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தமுடைய ஸம்ஸாரத்திலே நித்யராய அஸங்க்யாதராய்க் கொண்டு வர்த்திக்கிற ஆத்மாக்களுக்கு. (இறையவன்) (యస్సర్వేషు భూతేషు తిష్ఠన్ సర్వేషాం భూతానామన్తరః, యం సర్వే భూతా న విదుః, యస్య సర్వే భూతాః శరీరం, యస్సర్వాణి భూతాన్యన్తరో యమయతి, స త ఆత్మాऽన్తర్యామ్యమృతః) (సర్వస్య దేవాధిదేవస్య ...) (భీషాऽస్మాద్వాతః పవతే, భీషోదేతి సూర్యః, భీషాऽస్మాదగ్నిశ్చేన్ద్రశ్చ, మృత్యుర్ధావతి పఞ్చమ ఇతి) (అన్తర్బహిశ్చ తత్సర్వం వ్యాప్య నారాయణస్థితః) (யஸ்ஸர்வேஷு பூதேஷு திஷ்டன் ஸர்வேஷாம் பூதாநாமந்தர:, யம்ஸர்வபூதாநவிதந்தி, யஸ்யஸர்வே பூதாஶ் ஶரீரம், யஸ்ஸர்வேஷாம் பூதாநாமந்தரோயமயதி, ஸத ஆத்மா அந்தர்யாம்யம்ருத:) (ஸர்வேஸ்மைதேவாபலிமாவஹந்தி) (பீஷாஸ்மாத் வாதபவதே, பீஷோதேதிஸூர்ய:, பீஷாஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச, ம்ருத்யுர்த்தாவதிபஞ்சமஇதி) (அந்தர்பஹிஶ்சதத்ஸர்வம் வ்யாப்யநாராயண ஸ்த்தித:) என்று இத்யாதிகளில் சொல்லப்படு கிறபடியே வகுத்த சேஷியானவன்.

(மாயனென்ன) தாவிகரம நர்ஸிம்ஹாதிருபேந்த்ரவிப்பாவ ஜடாயுமோக்ஷப்ரதாந ஸேதுபந்தநாடயோதயாவாஸித்தர்குண குல்மலதாதி முகதிப்ராபண கோவர்த்தநோத்தாரணாதி ஆஶ்சர்ய சேஷ்டிதங்களை யுடையவனான ஸர்வேச்வரனென்னது. (மொழிந்த அனபன்) ஸ்ரீபாஷ்யாதிமுகேந லோகத்தாரகவெல்லாமருளிச்செய்ததும் உபதேசித்ததும் போந்த பரமப்ரீதியையுடையவன்.(அநகன்) இந்த உக்த்யுபதேசங்களிலே சில கயாதிலாபபூஜைகளை அபேக்ஷித்திருந்தால் அது அஸமாய்த்தலைக் கட்டும், அப்படியன்றிக்கே, ப்ரீதிப்ரேரிதராய்க் கொண்டு அவற்றைப் பண்ணியருளுகையாலே (அநகன்) என்று அருளிச்செய்கிறார். (இராமாநுசன்) எம்பெருமானார். (என்னை) அதிகாரமில்லாத வென்னை. இவ்வளவும ப்ரதிகூலித்துப்போந்த வென்னை. (ஆண்டனனே) பரகத ஸ்வீகாரமாக என்னை யாளாகினார் ஆத்மாநத்தாஸ்யத்திலே அந்வயிப்பித்து உஜ்ஜீவிக்கும்படி என்னை யடிமைகொண்டருளினார். இப்படிப்பட்டபுருஷார்த்தகாஷ்டையைப்பெற்றபின்பு.

(இன்பந்தருபெருவீடு வந்தெய்திலென்) (అమృతస్యైష సేతుః) (రసో వై సః, రసం హ్యేవాయం లబ్ధ్వాऽऽనన్దీ భవతి) (அமர்தஸ்யைஷஸேது:) (ரஸோவைஸ:, ரஸம்ஹ்யேவாயம்லப்த்வாநந்தீபவதி) என்றும்.

(నిరస్తాతిశయాహ్లాదసుఖభావైకలక్షణా) (நிரஸ்தாதிசயாஹ்லாதஸுகபாவைகலக்ஷணா) என்றும், (நலமந்தமில்லதோர்நாடு) என்றும் (அந்தமில் பேரின்பம்) என்றும் சொல்லுகிறபடியே ஆநந்தாவஹமாய் ஆத்மாநுபவமபோலே பரிமிதமாயிருக்கையன்றிக்கே பரமபுருஷார்த்த லக்ஷணமோக்ஷமானது இங்கேவந்து மேல்விழுந்தாலென், அதனை ஸுகமாகக் கணிசித்திருக்கிறேனோ.

(எண்ணிறந்ததுன்பம்) ஸங்க்யைக்கு நிலமல்லாத துக்கம். (యామ్యకిఙ్కరపాశాది గ్రహణం దణ్డతాడనమ్। యమస్యదర్శనఞ్చోగ్ర ముగ్రమార్గవిలోకనమ్॥ కరమ్భవాలుకావహ్ని యన్త్రశస్త్రాదిభీషణైః। ప్రత్యేకనరకేయాశ్చ యాతనా ద్విజదుస్సహాః॥ క్రకచైః పాట్యమానానాం మూషాయాఞ్చాపిదహ్యతామ్। కుఠారైః కృత్యమానానాం భూమౌచాపినిఖన్యతామ్॥ శూలేష్వారోప్యమాణానాం వ్యాఘ్రవక్త్రే ప్రవేశ్యతామ్। గృధ్రైస్సమ్భక్ష్యమాణానాం ద్వీపిభిశ్చోపభుజ్యతామ్॥ క్వాథ్యతాం తైలమధ్యేచ క్లిద్యతాం క్షారకర్దమే। ఉచ్చాన్నిపాత్యమానానాం క్షిప్యతాం క్షేపయన్త్రకైః॥ నరకేయానిదుఃఖాని పాపహేతూద్భవానిచ। ప్రాప్యన్తేనారకైర్విప్రతేషాంసఙ్ఖ్యానవిద్యతే) (யாம்யகிங்கரபாசாதி க்ரஹணம் தண்டதாடநம். யமஸ்யதர்சநஞ் சோக்ர முக்ரமார்க்க விலோகநம் ॥ கரம்பவாலு காவஹ்நியந்த்ர சஸ்த்ராதி பீஷணை: । ப்ரத்யேகநரகேயாஸ்சயாதநாத் விஜதுஸ்ஸஹா: ॥ க்ரகசை:பாட்யமாநாநாம் மூஷாயாஞ்சாபிதஹ்யதாம் । குடாரைக்ர்த்யமாநாநாம் பூமௌசாபிநிகந்யதாம் ॥ சூலாரோப்யமாணநாம் வ்யாக்ரவக்த்ரை:ப்ரவேச்யதாம் । க்ர்த்ரைஸ்ஸம்பக்ஷ்யமாணநாம் த்வீபிபிஶ்சோபபுஜ்யதாம் ॥ க்வாத்யதாம்தைலமத்யேச க்லித்யதாம்க்ஷாரகர்த்தமே । உச்சாந்நிபாத்யமாநாநாம்க்ஷிப்யதாம் க்ஷேபயந்த்ரகை: ॥ நரகேயாநிதுஃகாநிபாபஹேதூத்பவாநிச । ப்ராப்யந்தே நாரகேர்விபரதேஷாம்ஸங்க்யா நவித்யதே) என்னும் படியான துஃகங்களை.

(தருநிரயம்பலசூழிலென்) கொடுக்கும் நரகங்கள் ஒன்றும் சேஷியாதபடிவந்து வளைத்துக்கொண்டாலுமென். இப்படிப்பட்ட நரகங்களை ஒருதுஃகமாக நினைத்திருக்கிறேனோவென்று தம்முடையத்ர்டாதயவஸாயத்தை யருளிச்செய்தாராய்த்து. (తృణీకృతవిరిఞ్చాది నిరఙ్కుశవిభూతయః। రామానుజపదామ్భోజ సమాశ్రయణశాలినః) (தார்ணீக்ர்தவிரிஞ்சாதி நிரங்குசவிபூதய: । ராமாநுஜபதாம்போஜ ஸமாச்ரயணசாலிந:) என்று எம்பாரருளிச்செய்தாரிறே. ... (௩௦)

உரை.—அ.—முப்பத்தோராம்பாட்டு. அநாதிகாலம் அஸங்க்யாதமான யோநிகள்தோறும் தட்டித்திரிந்தநாம் இன்று நிர்ஹேதுகமாக எம்பெருமானாரைச்சேரப்பெற்றோமென்னும் ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார்.

http://acharya.org

மூ.—ஆண்டுகள்நாள்திங்களாய்நிகழ்காலமெல்லாமனமே, ஈண்டு
பல்யோநிகள்தோறுழல்வோமின்றோரெண்ணின்றியே
காண்டருதோளண்ணல்தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்
பூண்டவன்பாளனிராமாநுசனைப் பொருந்தினமே. (௩௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மநமே	பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிருக்கையாலே இரண்டுதசையிலும் கூடிநிற்கிற நெஞ்சே,	காண்தரு	காணத் தகுதியாயிருந்துள்ள,
நாளாய்	தினமாய்,	தோள்	திருத்தோள்களையுடையராகையாலே ரூபகுணத்தாலும உத்தேச்யராய்,
திங்களாய்	மாஸமாய்,	அண்ணல்	நமக்கு வகுத்தசேஷிகளாய்,
ஆண்டுகளாய்	ஸம்வத்ஸரங்களாய்க்கொண்டு,	தென்	தர்சநீயமான,
நிகழ்காலமெல்லாம்	வர்த்தியாநின்றுள்ளகாலமெல்லாம், தேவாதி பேதத்தாலும் அவாந்தரபேதத்தாலும பரிகணிக்க ஒண்ணாதபடி,	அத்தியூரர்	திருவத்தியூரிலே நித்யவாஸம் பண்ணுகையாலே அவ்வூரைத் தமக்கு நிரூபகமாகவுடைய பேரருளாளப் பெருமாளுடைய,
ஈண்டு	திரண்டு,	இணை	பரஸ்பரஸத்ருசமான
பல	பலவகைப்பட்ட,	கழற்கீழ்	திருவடிகளின் கீழே,
யோநிகள் தோறு	யோநிகள் தோறும்,	பூண்ட	பிணிப்புண்ட,
உழல்வோம்	ஒருகால் நுழைந்தவிடத்தே ஒன்பதின் கால நுழைந்து நாம,	அன்பாளன்	ஸ்நேஹத்தையுடையரான,
இன்றுஓர் எண்ணின்றியே	இன்று ஒரு நினைவின்றிக்கேயிருக்கச்செய்தே,	இராமாநுசனை	எம்பெருமானாரை,
		பொருந்தினம்	சேர்ந்துகொண்டு நிற்கப் பெற்றோம்.

நிகழ்தல்-வர்த்தித்தல். ஈண்டுதல்-திரளுதல் யோநி-ஜாதி. ()

வ்யா.—அ.—முப்பத்தோராம்பாட்டு. லோகத்திலே ஒருவனுக்கு ஒருநிதி லபித்தால் தன்னுடைய அந்தரங்கனுக்குச் சொல்லுமாப்போலே, இவரும் தம்முடைய பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவான மநஸ்ஸை ஸம்போதித்து கலாமுஹூர்த்தாதிரூபமாய்க்கொண்டு வர்த்திக்குங்காலமெல்லாம் தேவாதிதேஹங்

http://acharya.org

களதோறும் ஸஞ்சரித்து இவ்வளவும் போந்தோம், இப்போது ஒருஸாதநமின்றிகேகே ஸ்வதந்த்ரபாஹுவாய் தமக்கு உபகாரகரான பேரருளாளன் திருவடிகளின் கீழே அங்குத்தைக்கு ஒரு ஆபரணம்போலே யிருந்துள்ள ப்ரேமத்தையுடையரான எம்பெருமானாரைச்சேர்ந்துகொண்டு நிற்கப்பெற்றோம கண்டாயே! என்று சொல்லி ஹ்ருஷ்டராகிறார்.

வ்யா.—(ஆண்டுகள்நாள்திங்களாய் நிகழ்காலமெல்லாம்) (కలా ముహూర్తాదికాష్ఠాహోరాత్రాశ్చ సర్వశః, అర్ధమాసా మాసా ఋతవస్సంవత్సరశ్చ కల్పతామ్) (கலாமுஹூர்த்தகாஷ்டாஹோராத்ராச்ச ஸர்வச:, அர்த்தமாஸாமாஸா ரிதவஸ் ஸம்வத்ஸரச்ச கல்பதாம்) என்றும், (నిమేషో మానుషో యోఽసౌ మాత్రామాత్రప్రమాణతః। తైః స్వాష్ట దశభిః కాష్ఠా త్రింశత్కాష్ఠాః కలాస్మృతాః॥ నాడికాతుప్రమాణేన కలాదశ చపఞ్చ చ। నాడికాభ్యామథద్వాభ్యాం ముహూర్తో ద్విజసత్తమ॥ అహోరాత్రముహూర్తాస్తు త్రింశన్మాసస్తుతైస్తథా। మాసైర్ద్వాదశభిర్వర్ష మహోరాత్రన్తుతద్దివి) (நிமேஷோமாநுஷோ யோஸௌ மாத்ராமாத்ரப்ரமாணத:। தைரஷ்டாதசபிர்காஷ்டா த்ரிம்சத்காஷ்டாகலாஸ்ம்ருதா:॥ நாடிகாதுப்ரமாணேனகலா தசசபஞ்சச। நாடிகாப்யாமத்வாப்யாம் முஹூர்த்தோத்விஜஸத்தம॥ அஹோராத்ரமுஹூர்த்தாம்ஸ்து த்ரிம்சந்மாஸஸ்துதைஸ்ததா। மாஸைர்த்வாதசபிர்வர்ஷ மஹோராத்ரந்துதத்திவி) என்றும் சொல்லப்படுகிற ஸர்வகாலமும். ஆண்டுகள்-வத்ஸரங்கள். நாள்-திநம். திங்கள்-மாஸம். நிகழ்தல்-வர்த்தித்தல்.

(ஈண்டு பல்யோநிகள்தோறுழல்வோம்) தேவமநுஷ்யாதி ஜாதிகள் ஒவ்வொன்றிலே தானே அநேகமநேகமாக அவாந்தரஜாதிகளுண்டு, அவையெல்லாவற்றிலும் ஒருக்கால புகுந்தத்திலே ஒன்பதினால் புகுந்து, (மாறி மாறிப் பலபிறப்பும்பிறந்து) என்கிற படியே அநாதிகாலமேபிடித்து ஸஞ்சரித்துப்போந்தோம். ஈண்டுதல் - திரளுதல். யோநி - ஜாதி. உழலுகை - தட்டித்திரிகை. (மநமே)பாக்யமோக்ஷங்களிரண்டுக்கும்பொதுவாய் அறிவுக்கு ப்ரஸரணவாரமான நீ அறிந்தபடியன்று அந்தரங்கமானமநஸ்ஸை ஸம்போதித்தருளிச்செய்கிறார். (ఏవంసంసృతిచక్రస్థే భ్రామ్యమాణేస్వకర్మభిః। జీవే దుఃఖాకులే) (ஏவம்ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணேஸ்வகர்மபி:- ஜீவேதுக்காகுலே) என்றபடியே இவ்வளவும் ஸஞ்சரித்துப் போந்தோம்.

(இன்று) இப்போது. (ஒன்றிணின்றியே) நான் ஒன்றை யெண்ணிக்கொண்டிராதே யிருக்க. எம்பெருமானார்திருவடிகளிலே நான் ஒரு சைதந்யகார்யத்தையும பண்ணாதேயிருக்க. (காண்டகுதோளண்ணல்) (భయతాశ్చసువృత్తాశ్చ బాహవః పరిఘోపమాః। సర్వ

భూషణభూషార్హాః)(ஆயதாம்சஸுவ்ருத்தாம்சபாஹவ:பரிகோபமா:ஸர்வபூஷணபூஷார்ஹா:) என்கிறபடியே யிருந்துள்ள திருத்தோள்களையுடையராய் விந்த்யாடவியில்நின்றும காஞ்சீபுரத்துக்குத் துணையாகவந்து, (అహమేవ పరతత్త్వమ్)(அஹமேவபரதத்வம்) என்று திருக்கச்சிநம்பிமுகமாக உபதேசித்த உபகாரகனுடைய.

பக்கலிலே க்ர்பாகுணத்துக்கு ப்ரயோஜநமில்லாமையாலே எத்தனையேனும் தண்ணியரே அதுக்கு பாத்ரமாகையாலும் என கருஸத்ராசரான பாபிஷ்டர் ஒருவராகிலு மில்லாமையாலே என்னுடையநைச்யமே அதுக்குப் புகலிடமென்றபடி.

(నిమజ్జతో౽నన్తభవార్ణవాన్తశ్చిరాయ మే కూలమివాసి లబ్ధః। త్వయాపి లబ్ధం భగవన్నిదానీమనుత్తమం పాత్రమిదం దయాయాః) [త్వయాపి-த்வயாபி] இப்படி நமக்குக்கைப்பட்ட தேவரீருக்கும். [ఇదానీమ్-இதாநீம்] இத்தனைநாளைக்கு இப்போது. [భగవన్-பகவந] ஸர்வஜ்ஞனுமாயிருந்தாயே, நான் சொல்லவேணுமோ. [దయాయాః-தயாயா:] தேவரீருடைய க்ர்பைக்கு. [అనుత్తమం పాత్రమిదమ్-அநுத்தமம் பாத்ரமிதம்] (మయిస్థితిరమప్ర...ణాం ప్రథానేమిపదో౽హానితరాస్వప్యస్తిత్వమ్। అపరాధగణైరపూర్ణకుక్షిః కమలాకాన్త దయైకధంభవత్రీ) என்றும், (అపరాధచక్రవర్తి) (పాపానాం ప్రథమో౽స్మ్యహమ్) என்கிறபடியே பூர்ணபாத்ரமானநானும. [లబ్ధమ్ - லப்ததம்] தேவரீருக்குப் பெறுபேறாக லபித்தேன.

[అనన్తభవార్ణవాన్తః-அநந்தபவார்ணவாந்த:]ப்ரஸித்தார்ணவத்துக்கு பரிகணநமுண்டு, என்னுடைய ஸம்ஸாரமாகிற அர்ணவத்துக்கு அந்தமில்லை. காலமும் அநாதியாய் ஜந்மங்களும் பலவாய் கர்மங்களும் விசித்ரஙகளாய் பஹுவாயிருக்கையாலேஇந்தஅர்ணவம அநந்தமாயிருககும்; இப்படிபபட்ட பவார்ணவததினுடைய அகாதஜலத்திலே. [నిమజ్జతః-நிமஜ்ஜத:]அழுந்திககிடப்பன். [చిరాయ-சிராய](కేవలం స్వేచ్ఛయైవాహం ప్రేక్షే కంచిత్కదాచన)(கேவலம்ஸ்வேச்சயைவாஹம்ப்ரேக்ஷே கஞ்சித்கதாசந) எனகிறபடியே அநந்தமானகாலத்துககு. [మే-மே] அடியேனுக்கு. [కూలమివ - கூலமிவ] கரைபோலே. [లబ్ధో౽సి - லப்தோஸி]ப்ரஸிததார்ணவததிலே விழுந்து அழுந்தினசேதநன அப்போதே முடிய, முஹூர்த்த மாத்ரத்திலே அந்தப்பிணத்தைக கொண்டுவந்து கரையிலே தள்ளிவிடுமென்று ஸாவஜந ப்ரஸித கம்; இந்தஸம்ஸாரத்திலே யழுந்தி, (அஸந்நேவ) என்கிறபடியே யிருந்தவென்னை சிரகாலத்துககு ஸத்தையுண்டாக்கி அந்த ஆணவத்துககு பாரமாய்க் கைப்பட்டாய். (கண்டுகொண்டென்னைக் காரிமாறபபிரான், பண்டை வல்வினைபாற்றியருளினன்) என்று - இருவர்க்கும ப்ரயோஜநமா யிருந்ததென்று அபியுக்தரு மருளிச்செய்தாரிறே. (அந்தோவடியே னுனபாதமகலகில்லேனிறையுமே) என்றும், (புகலொன்றில்லாவடியே னுன்னடிக்கிழமாந்து புகுந்தேனே) என்றுமருளிச் செய்தாரிறே-நம்மாழ்வாரும். (పరమకారుణికో న భవత్పరః పరమశోచ్యతమో న హి మత్పరః) (பரமகாருணிகோநபவத்பர: பரமசோச்யதமோநஹிமத்பர:) என்னக்கடவதிறே.

http://acharya.org

(புன்மை) தோஷங்களுக்கு ஆகரமான ஸம்ஸாரம். அநாத்ய வித்யாகர்மவாஸநாருசிப்ரக்ருதி ஸம்பந்தரூபமான ஸம்ஸாரமென்றபடி. (இலோர்) ஸாம்ஸாரிகமான பந்தத்தைப் பூண்கட்டிக்கொண்டு நிற்கையாலே அவர்களை இங்கே சொல்லவொண்ணாதிறே; முமுக்ஷுக்கள், சிறிதுகாலம் ஸம்ஸாரத்தைப் பூண்கட்டிக்கொண்டு திரிந்து, பின்னை, “கரை கண்டோர்” என்னும்படி அத்தை ஸவாஸநமாகப் போகட்டு பகவத்குணாநுபவத்திலே ஆழங்கால் பட்டிருந்தார்களேயாகிலும் நிருபபதமாகச் சொல்லுகையாலே அவர்களையும் இங்கே சொல்லக்கூடாதிறே. இனி, ([illegible]) ([illegible]) ([illegible]) என்கிறபடியே அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளாயாயத்து (இலோர்) என்றருளிச்செய்தது.

(பகரும் பெருமை) ஏகதேசாவஸ்தாநத்தாலும் ஏகவிஷயாநுபவத்தாலும அடியேபிடித்து இவருடையப்ரபாவத்தை அடைவேயறியுமவர்கள்-நித்யஸூரிகளாகையாலே அவர்களாலேஸ்தோத்ரம்பண்ணப்பட்டப்ரபாவத்தையுடையரான. (இராமாநுசா) எம்பெருமானாரே. (பயன் இருவோமுக்குமானபின்னே) தேவரீரும் அடியேனுமாகிறஇருவருக்கும்ஸ்வரூபலாபமும் குணலாபமுமாகிற பரமப்ரயோஜநம்ஸித்தித்தபின்பு. இப்படி இருவர்க்கும்ப்ரயோஜநமாயிருக்க (இனி நாம்பழுதேயகலும்பொருளென்) இத்தைத் திருவுள்ளம்பற்றுகிற நாம் மேலுள்ளகாலம் வ்யர்த்தமே அகலுகைக்குக் காரணமென். நாம் என்றது - தம்மையும் எம்பெருமானாரையும். அன்றிக்கே, நாம் என்று பஹுவசநப்ரயோகம் பண்ணுகையாலே-எம்பெருமானாரும் இவருடைய ஸம்பந்தஸம்பந்திகளுமான எல்லாருமென்று பொருளாகவுமாம்.

(நாம் பழுதே யகலும்பொருளென்) (பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி யடிமைகொண்டாய) (என்னைத் தீமனங்கெடுத்தாய்) (மருவித்தொழும் மநமேதந்தாய்) (அறியாதன வறிவித்தத்தா நீசெய்தன வடியேனறியேன்) என்கிறபடியே நாம் க்ருதஜ்ஞராய்ப்போமதொழிய நமக்கு அகலுகையென்று ஒருப்ரயோஜநமுண்டோ. (பாவத்தால் யான் பிறப்பேனேலும் இனி எந்தை யெதிராசன் தான்பிறக்குமென்னையுயப்பதா) என்கிறபடியே ரக்ஷிக்கை அவர்க்கு அவஶ்யமாய்த் தலைக்கட்டக்கடவதாகையாலும், பெறுப்பேறாக அடியோங்களை தேவரீர் விஷயீகரித்துக் கொள்ளுகையாலும், * நிழலுமடிதாறும்போலே அடியோங்களை அநந்யார்ஹராம்படி அங்கீகரித்திருக்கையொழிய தேவரீருக்கு அகலுகையென்று ஒருப்ரயோஜநமுண்டோ வென்றதாய்த்து. ()

http://acharya.org

உரை.—அ.—நாற்பத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார், விரோதிகளை நிரஸித்துக்கொண்டு தம்திருவுள்ளத்திலுள்ளே நிரந்தரவாஸம் பண்ணியருளுகிற மஹோபகாராநுஸந்தாநத்தால் வந்த ப்ரீதியையும், அந்தப்ரீதியினுடைய அஸ்த்தைர்ய ஹேதுவில்லாமையையும் அருளிச்செய்தார் - கீழ் இரண்டுபாட்டாலே; இதில் - அவர் திருவவதரித்தருளினபின்பு லோகத்துக்குண்டான ஸமர்த்தியை அநுஸந்தித்து இனியராகிறார்.

மூ.—ஆனதுசெம்மையறநெறிபொய்ம்மையறுசமயம்
போனதுபொன்றியிறந்ததுவெங்கலிபூங்கமலத்
தேனதிபாய்வயல்தென்னரங்கன்கழல்சென்னிவைத்துத்
தானதிலமன்னுமிராமாநுசனித்தலத்துதித்தே. (சகூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூ	அழகிய,	இராமாநுசன	எம்பெருமானார்,
கமலம்	தாமரைப்பூக்களிலுண்டான,	இத்தலத்து	இந்தஸ்தலத்திலே,
தேன் நதி	தேனாகிறஆறு,	உதித்து	அவதரித்தருளி,
பாய	விளாநீராகப் பாயாநின்றுள்ள,	செம்மை	வைதிகமாகையாலே செவ்விதாயிருந்துள்ள,
வயல்	வயல்களையுடைத்தாய் திருச்சோலைகளும் திருமதிள்களும் திருக்கோபுரங்களும் திருமாளிகைகளும் மானஸமுதாய சோபையாலே	அறநெறி	தர்மமார்க்கம்,
		ஆனது	முன்பு அழிந்துகிடந்ததுமீண்டும் உண்டாயிற்று;
		பொய்ம்மை	வேதபாஹ்யமாகையாலே அயதாவான,
தென்	தர்சநீயமாயிருக்கிற,	அறுசமயம்	ஷட்ஸமயமும்,
அரங்கன்	கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளுடைய,	பொன்றிப்போனது	முடிந்துபோயிற்று,
			வைதிகதர்மம் தலைசாய்ந்து பாஹ்யஸமயமேலிடுகைக்குடலான,
கழல்	திருவடிகளை,		
சென்னி வைத்து	சிரஸாவஹித்துக்கொண்டு	வெங்கலி	க்ரூரமான கலியுகமானது,
தானதிலமன்னும்	தாம்அதிலே நித்ய ஸம்ச்லேஷம் பண்ணிநின்றுள்ள,	இறந்தது	"கலியும்கெடும்" என்கிறபடியே நசித்தது.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
இவர் அவதரித்தருளின பி		"பொன்மையறுசமயம்" என்று	
ன்பு லோகத்துக்குண்டான ஸம்		பாடமானபோது-வேதபாஹ்யத்	
ர்த்தி இருந்தபடி யென்னென்று		வேதபொல்லாதாயிருக்கிற ஷட்	
கருத்து. பொன்றுதல்-முடிதல்.		ஸமயமென்றபடி. ... (சகூ)	

வ்யா.—அ.—நாற்பததொன்பதாம்பாட்டு. எம்பெருமானார், தம்முடைய ப்ராப்திப்ரதிபந்தகங்களையெல்லாம் போககித் தம் திருவுள்ளத்திலே நிரந்தரவாஸம்பண்ணுகிற மஹோபகாரத்தால் வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தையும், அந்தப்ரீதி எப்போதுமுண்டாகக் கூடுமோவென்று அதிசங்கைபண்ணினவனைக்குறித்து அதினுடைய சாஞ்சல்யஹேதுவில்லாமையையும், கீழிரண்டுபாட்டுக்களாலே அருளிச்செய்து, இதிலே - எம்பெருமானார் திருவவதரித்தருளின பின்பு வேதத்துக்குண்டான ஸம்ர்த்தியையும், துர்மதங்களுக்கும் கலிதோஷத்துக்குமுண்டான விநாசத்தையு மநுஸந்தித்து இனியராகிறார்.

வ்யா.—(பூங்கமலத் தேன்நதிபாய்வயல்) அழகியதாமரைப் பூக்களிலுண்டான தேனாகிற ஆறுகளானவை ப்ரவஹியாநின்றுள்ள வயலாலே சூழப்பட்ட. (தென்னரங்கன்) திருமதிள்களும் திருக்கோபுரங்களும் திருச்சோலைகளுமான ஸமுதாயசோபையாலே தாசநீயமான கோயிலை இருப்பிடமாக விருக்கிற பெரியபெருமாளுடைய. (கழல்சென்னிவைத்து) திருவடிகளைத் தம்முடைய சிரஸ்ஸிலேவைத்துக்கொண்டு. கொக்குவாயும படுகண்ணியும இசைந்தாப்போலே யாய்த்துத் திருவடிகளும் திருமுடியும சேர்ந்தபடி. அன்றிக்கே, ராஜாக்கள் ஸிம்ஹாஸநத்திலே ஆரோஹிக்கும்போது ஆதிராஜ்யஸூசகமான அபிஷேகத்தைத் தந்தாமுடைய சிரஸ்ஸுக்களிலேவைத்துக்கொண்டாப்போலே, (உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்) என்னும்படி பரமப்ராப்யமான அவர்திருவடிகளை தம்முடைய உபயவிபூத்யைச்வர்ய ஸூசகமாம்படி திருமுடியிலே வைத்துக்கொண்டானெனவுமாம். (தானதில்மன்னும) தாமும் அதேநிஷ்டையிலே ஸுப்ரதிஷ்டிதராய திருவடிகளிலே நித்ய ஸம்ச்லேஷம் பண்ணுகின்றுள்ள. (இராமாநுசன)எம்பெருமானார். (இத்தலத்துதித்தே) வேதோக்த தர்மங்களுக்கெல்லாம ஸாங்கர்யம்வரும்படி வேதவிருத்தங்களான ஷட்ஸமயங்களும் வ்யாபித்து கலியானது ஸாம்ராஜ்யம் பண்ணிக்கொண்டுபோருகிற இந்தமஹாப்ருதிவியிலே திருவவதரிக்கவே.

(ஆனதுசெம்மையறநெறி)அறநெறிசெம்மையானது-முன்பு அழிந்துபோன வேதோக்தமான ஸமீசீந கர்மமார்க்கம்மீண்டின்

http://acharya.org

டானது. (ஸம்பூர்ணஸ்ய த்ரய்யா:) (ஸர்வஸ்வபூதம் ...) (...) என்கிறபடியே அல்பச்ருதராலே ப்ரதாரணம்பண்ணப்பட்ட வேதமெல்லாம் இவராலே ருஜுவாகத் திருந்தி தத்தீதர்மபரமானது ஸமீசீநமாய் ப்ரதிஷ்டிதமா யிராநின்றது. ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யரிறே யிவர். (பொய்ம்மையறுசமயம் போனதுபொன்றி) வேதபாஹ்யமாகையாலே அயதாவான ஷட்ஸமயமும் முடிந்துபோய்த்து. பொன்றுதல் - முடிதல். "பொன்மையறுசமயம்" என்று பாடமானபோது - (...) என்கிறபடியே பகவதாஜ்ஞாஉதிலங்கநம்பண்ணினவர்களை ப்ரமப்ரமாதங்களாலே நசிப்பிக்கக் கடவதான அபவித்தாந்தமென்றபடி. (இறந்ததுவெங்கலி) கீழ்ச்சொன்னபடியே அஜ்ஞாநத்தை விளைவிக்குமதாகையாலே அதிக்ரூரமானது நசித்துப்போய்த்து. (கலியுகக்கெடும்கண்டுகொண்மின்) என்றருளிசெய்தாரிறேநம்மாழ்வாரும். (...) (ஆசிநோதிஹிசாஸ்த்ரார்த்தான் ஆசாரந்ஸ்தாபயதய | ஸ்வயமாசரதேயஸ்து ஸஆசார்யஉதாஹ்ருத:) என்றிறே ஆசார்யலக்ஷணமிருப்பது; அது இவரிடத்திலேகாணும் நிறம்பெற்றது. (...) (புண்யாம்போஜவிகாஸாயபாபத்வாந்தக்ஷயாயச | ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ ராமாநுஜதிவாகர:) என்னக் கடவதிறே. ... ... (சக)

உரை.—அ.—ஐம்பதாம்பாட்டு. (தென்னரங்கன் கழல் சென்னிவைத்துததானதில் மன்னும்) என்று எம்பெருமானாருக்கு பெரியபெருமாள் திருவடிகளிலுண்டான ப்ராவண்யாதிசயத்தையநுஸந்தித்தார்-கீழ்,அந்தப்ரஸங்கத்திலே,நமக்குஉத்தேச்யமான எம்பெருமானார்திருவடிகளை அநுஸந்தித்து தத்ஸ்வபாவாநுஸந்தாநத்தாலே விதாராகிறார்-இதில.

மூ.—உதிப்பனவுத்தமர்சிந்தையுளொன்றலர்நெஞ்சமஞ்சிக்
கொதித்திடமாறிநடப்பனகொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்தவென்புன்கவிபாவினம்பூண்டனபாவுதொல்சீர்
எதித்தலைநாதனிராமாநுசன்றனிணையடியே. (ரு0)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாவு	"திசையனைத்துமேறுங்குணன்" என்கிறபடியே ஸர்வதிக்கிலும் பரவியிருப்பதாய்,	தொல்	ஸ்வரூபாநுபந்தியாகையாலே பழையதாயிருந்துள்ள.
		சீர்	கல்யாண குணங்களையுடையராய்,

பதம்.	உரை.
எதி	யதிகளுக்கு,
தலை	தலைவராய்,
நாதன்	நாதபூதராயிருக்கும
இராமாநுசனறன	எம்பெருமானாருடைய,
இணை	சேர்த்தியழகையுடைத்தாயிருந்துள்ள,
அடி	திருவடிகளானவை,
உத்தமர்	அநந்ய ப்ரயோஜநராய் அநந்யஸாதநரா[illegible]க்கும் உத்தமாதிகாரிகளுடைய,
சிந்தையுள	திருவுள்ளங்களிலே,
உதிப்பன	"எல்லையில் சீரிளநாயிறிரண்டுபோல்" என்கிறபடியே அதித்ய னுதித்தாப்போலே பராகாசியாநிற்கும் தன்மையையுடையன;
ஒன்றலர்	பாஹ்ய குத்ருஷ்டிகளானப்ரதிபக்ஷபூதருடைய,

பதம்.	உரை.
நெஞ்சம்	ஹ்ருதயமானது,
அஞ்சி	பீதமாய்,
கொதித்திட	அந்தபயாக்நியாலே பரிதபிக்கும்படி,
மாறி	பரஸ்பரம்மாறி யிட்டு,
நடப்பன	நடவாநிற்கும் தன்மையை யுடையன;
கொள்ளை	ஸம்ருத்தமாய்,
வன்	ப்ரபலமாயிருந்துள்ள,
குற்றமெல்லாம்	தோஷங்களெல்லாம்,
பதித்த	சேர அழுந்தினவைப்பட்ட,
என்	என்னுடைய,
புன்கவி	புல்லிய கவிகளாகிற
பாவினம்	சந்தஸ்ஸமூஹத்தை
பூண்டன	அணிந்துகொண்டன

இவற்றினுடைய தன்மையிருக்கும்படி யென்னென்று கருத்து. ஆனத்தின்வகையான கவித்துறையாகையாலே பாவினமென்கிறாராகவுமாம். ஒன்றலா-சத்ருக்கள். பாவுதல-பரம்புதல். (ரு0)

வ்யா.—அ.—ஐம்பதாமபாட்டு. ((தென்னரங்கன் கழல் சென்னிவைத்துத்தானதில்மன்னும்) என்று-எம்பெருமானார்க்கு பெரியபெருமாள்திருவடிகளிலுண்டான ப்ராவண்யத்தை யநுஸந்தித்தார்-கீழ்; இதில-அந்தப்ரஸங்கத்திலே தமக்கு உத்தேசயரான எமபெருமானார்திருவடிகளை யநுஸந்தித்து அவற்றினுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை அடைவேயருளிச்செய்து கொண்டு வித்தராகிறார்.

வ்யா.—(பாவுதொல்சீர்) பாவுகை - பரம்புகை (திசையனைத்தும் ஏறுங்குணன்) என்று இவர்தாமருளிச்செய்தபடியே ஸகல திக்குக்களிலும் வ்யாப்த்தங்களாய வந்தேறியன்றிக்கே ஸ்வாபா

விகங்களாயிருந்துள்ள கல்யாண குணங்களையுடையராய். (எதித்தலைநாதன்) அருளாளப்பெருமாளெம்பெருமானார், எம்பார் தொடக்கமான எழுநூறு ஜீயர்களுக்கும் வகுத்த சேஷியாய், அவர்களுக்கு ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை தத்யாதாத்ம்யபர்யந்தமாக உபதேசித்தருளி அவ்வழியாலே அவர்களுக்குத் தலைவராய், நாதபூதராயிருந்துள்ள. (இராமாநுசன்) எம்பெருமானார். (தன்னிணையடியே) இஸ்ஸம்ஸாரிசேதநரை அதிலநின்றும் நிவர்த்திப்பிக்கைக்கும், அநுபாவ்யமாய்க்கொண்டு ரஸிப்பிக்கைக்கும், இத்திருவடிகளோடொத்திருப்பாருண்டோ வென்று ஆராய்ந்துபார்த்தால், (రసో వై సః, రసం హ్యేవాయం లబ్ధ్వానన్దీ భవతి, కో హ్యేవాన్యాత్ కః ప్రాణ్యాత్, యదేష ఆకాశ ఆనన్దో న స్యాత్) (ఆనన్దం బ్రహ్మణో విద్వాన్ న బిభేతి కుతశ్చన) (అహం త్వా సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి) என்று வேதபுருஷனும் தன்னாலும் சொல்லப்பட்ட பரபாவத்தையுடையனான ஸர்வேச்வரனும், (సిద్ధస్య వస్తునః సాధ్యత్వేనాపేక్షితత్వాభావాత్) என்கிறபடியே ப்ராப்யமுண்டோவில்லையோவென்று ஸம்சயிக்கவேண்டும்படி பண்ணக்கடவனாகையாலும், ஸ்ரீபரதாழ்வானுக்கு இரங்காதே போனபடியாலும், இவ்வுபாயத்துக்கு ஒப்பாகமாட்டாது. (ప్రపత్తేః క్వచిదప్యేవం పరాపేక్షా న విద్యతే) (సకృదేవ ప్రపన్నాయ । సకృత్ ...) (ఉపాయోపేయభావేన తమేవ శరణం వ్రజేత్) என்று நிஸ்ஸம்சயப்ரதிபாதகமாய அந்யயோகவ்யவச்சேதகமாயிருந்துள்ள ப்ரமாணபலத்தாலே இவ்வுபாயம் அதிலும் சிரேஷ்டமாயாயிருப்பது. ஆகையாலே அந்த அதிசயத்துக்கு, ஒன்றுமொவ்வா நிரஸ்தஸமாப்யதிகமாயிருக்கிற இரண்டு திருவடிகளுமென்றபடி.

(உதிப்பன உத்தமர்சிந்தையுள்) உத்தமராவார் - அதம மத்யமரான வேதபாஹ்யருக்கும், வைதிகராயக்கொண்டு ஸாமாந்ய தாமஸத்திலேதானே மண்டியிருக்குமவர்களுக்கும், அவர்களுடைய நிஷ்டைக்கும் ப்ரதிபடராயபரமவைதிகரான விசேஷசாஸ்த்ரைக நிஷ்டராய முமுக்ஷுக்களாயிருக்குமவர்கள். உத்க்ருஷ்டராய் அநந்யஸாதநராய அநந்யப்ரயோஜநராயிருக்கும் உத்தமாதிகாரிகளென்றபடி. அன்றிக்கே, இது சரமபாவப்ரதிபாதகசாஸ்த்ரமாகையாலும், முமுக்ஷுக்களிலும் ஏகாந்திகளிலும் பரமைகாந்திகளிலும் வைத்துக்கொண்டு உத்தமா பரமைகாந்திகளாகையாலும், இவ்விடத்திலே (உத்தமர்) என்றது-பரமைகாந்திகளைச் சொன்னபடி யென்னவுமாம். (சிந்தையுள்) அவர்களுடைய திருவுள்ளங்களிலே. (உதிப்பன) (எல்லையில்சீரின்நாயிறிரண்டுபோல) என்கிறபடியே சக்ரவாளபர்வதத்திலேஇரண்டாதித்யர்களசேர வுதித்தாப்போலேஸத்துக்களுடைய திருவுள்ளங்களிலே எம்பெருமானாருடைய திருவடிகளிரண்டும் எப்போதுமுதித்து ப்ரகாசியாநிற்கும் தன்மையையுடையன.

கீழ்ச் சொல்லப்பட்ட அத்யவஸாயஸஹிதர்க்கு ஒருக்காலாகி லும் ப்ரகாசிக்கிறனவல்ல. இபபடிப்பட்ட ப்ராவண்யாதி சயமு டையவர்களுக்கே ப்ரகாசிக்குமென்றபடி. (యతీన్ద్రనాథ శిష్టాగ్రగణ్యజన సేవ్యభవత్పదాబ్జే) (யதீந்த்ரநாத । சிஷ்டாக்ரகண்யஜநஸேவ்ய பவத் பதாப்ஜே) என்றிறே ஜீயருமருளிச்செய்தது. (అజ్ఞాతసయోతయంయతిరాజసన్ద్రమ)(அஜ்ஞாதசயோதயம்யதிராஜசந்த்ரம) என்று அபியுக்தரு மருளிச்செய்தாரிறே.

(ஒன்றலர்நெஞ்ச'மஞ்சிக்கொதித்திடமாறிநடபபன) ஒன்ற லர் என்றது - பாஹ்ய'குத்ருஷ்டிகள் தொடக்கமான ப்ரதிபக்ஷிக ளோ. அவர்களுடைய ஹ்ருதயமானது ஸூர்யோதயத்தாலே திவா பீதங்கள் பயப்படுமாப்போலே, (కుదృష్టిభిః) (க்ஷிப்தப்ரத்யர்த்திதர்ப்பி:) என்னும்படியான அவர் திருவடிகளதனுதயத்தா லே பீதமாய, ஆதித்யனுடைய தேஜஸ்ஸாலே அவை பரிதபிக்கு மாப்போலே ஸ்வதேஜஸ்ஸாலே பரிதபிக்கும்படி ஆதித்யன இவற றுக்குப்ரதிபடனுயக்கொண்டுஉத்தராயண தக்ஷிணாயநஙகள்தோறு ம் மாறிமாறி ஸஞ்சரிக்குமாப்போலே அதுககு ப்ரதிபடஙகளாய்க் கொண்டு ஸர்வதிக்குக்களிலும் பரஸ்பரம் மாறிநடவாநிற்கும் தன் மையை யுடையன. இத்தால் - பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸிக்கை க்காக வேங்கடாசலத்துக்கும் யாதவாசலத்துககும் சாரதாபீடம் முதலான ஸ்தலங்களுக்கும் இவர் எழுந்தருளினபடியை அருளிச் செயதாராய்த்து.

(கொள்ளவன்குற்றமெல்லாம்பதித்த)(సర్వదోషరాశి...) (...యాన్యయాఖ్యాయి) என்றும, (...) என்றும், (...) என்றும் சொல்லுகிறபடியே ஸர்வதா ஸர்வப்ரகாரத் தாலும பண்ணப்பட்டவை யாகையாலே ஸம்ர்த்தங்களாய் ப்ர பலங்களாயிருந்துள்ள தோஷங்களெல்லாம திரட்டி ஒருகுப்ப லாகவைக்கப்பட்ட. (என்புன்கவிபாவினம) கவிபாடுகைககுத் தகு தியான ஜ்ஞாநமும் காவ்யலக்ஷணபரிஜ்ஞாநமு மிலலாத வென்னு டையகவியாகையாலே புல்லியதாய் அஸமீசீநமான கவியாகிற சந்தஸ்ஸமூஹத்தை;பாடடுக்களை யென்றபடி. அன்றிக்கே,அநேக சந்தஸ்ஸுக்களோடேகூடின கலித்துறையாகையாலே "பாவி னம்" என்கிறாராகவுமாம். (பூண்டன) இவனுடைய அஜ்ஞாநத் தாலே சொன்ன சொல்லுக்களன்றோ விவையென்று அவற்றில் ஒரு குறைகளும் பாராதே கலம்பகன் மாலையை அலங்கரித்துக் கொள்ளுவாரைப்போலே இவற்றை யலங்கரித்துக்கொண்டன. இவற்றினுடைய தன்மை யிருக்கும்படி யென்னென்று வித்த ராகிறார்காணும். (௬௦)

சக்ரவர்த்தி வெ. ஸ்ரீநிவாஸாசாரியர்.

உரை.—அ.—ஐம்பத்தோராம்பாட்டு. எம்பெருமானார் இந்த லோகத்தில் அவதரித் தருளிற்று என்னை அடிமை கொள்ளுகைக்காக, வேறொரு ஹேதுவு மில்லையென்கிறார்.

மூ.—அடியைத்தொடர்ந்தெழுமைவர்கட்காவன்றுபாரதப்போர்
முடியப்பரிநெடுந்தேர்விடுங்கோனைமுழுதுணர்ந்த
வடியார்க்கமுதமிராமாநுசனென்னையாளவந்திப்
படியிற்பிறந்ததுமற்றில்லைகாரணம்பார்த்திடிலே. (௫௧)

பதம்.	உரை	பதம்.	உரை.
அடியைத் தொடர்ந்து	“க்ருஷ்ணாஶ்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாஶ்ச பாண்டவா:” “கர்ஷ்ணாச்ரயா: கர்ஷ்ணபலா: கர்ஷ்ணநாதாஶ்சபாண்டவா:” என்கிறபடியே திருவடிகளைப் பின்சென்று,	கோனை	ஸர்வேச்வரனை,
		முழுது	ஆச்ரித பக்ஷபாதம், ஆச்ரித பாரதந்த்ர்யம், ஆச்ரித விரோதிநிரஸநம் முதலான ஸர்வஸ்வபாவங்களையும்,
		உணர்ந்த	அறிந்து,
எழும்	ஸர்வோத்தரராயிருக்கிற,	அடியார்க்கு	அவ்வவ ஸ்வபாவங்களுக்குத் தோற்று எழுதிக்கொடுத்திருக்கு மவர்களுக்கு,
ஐவர்கட்கு ஆக	பாண்டவர்களுக்காக, ஸர்வர்க்கமடைய அங்கே திரண்டு இவர்கள தனிமைப்பட்டு,	அமுதம்	போக்யபூதரா யிருக்கும்,
		இராமாநுசன்	எம்பெருமானார்,
அன்று	தன்னை யொழிய வேறுதுணையற்றிருக்கிறவன்று,	இப்படியில்	இந்த பூமியிலே,
		வந்துபிறந்தது	வந்தவதரித்தது,
பாரதப் போர்	பாரதஸமரத்திலே,	என்னைஆள	என்னை ஆளுகைக்காக;
முடிய	அவர்கள்ப்ரதிபக்ஷம் முடியும்படி, “ஆடிய மாநெடுந்தேர்” என்கிறபடியே,	பார்த்திடில்	ஆராயில்,
		மற்றுக்காரணமில்லை	வேறொரு காரணமில்லை.
பரி	குதிரைபூண்ட,		
நெடும்	நெடிய,		
தேர்விடும்	தேரைநடத்தின,		

எழுச்சி - கிளப்பம். அதாவது-நாம் “க்ர்ஷ்ணாச்ரயர்” என்கிறஔத்தத்யம். படி-பூமி. (௫௧)

http://acharya.org

வ்யா—அ.—ஐம்பத்தோராம்பாட்டு. பால்யமேபிடித்து மாதுலேயனென்றுநினையாதே ரக்ஷகனென்று அத்யவஸித்திருக்கிற பஞ்சபாண்டவர்களுக்கு ப்ரதிபக்ஷ மழியும்படி ஸாரத்யம் பண்ணின க்ருஷ்ணனுடைய ஆனைத தொழில்களெல்லாந் தெளிந்த ஸ்வரூபஜ்ஞானமுடைய ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆராவமுதாயிருக்கும் எம்பெருமானார், இந்த பாபப்ரசுரமான பூலோகத்திலே அவதரித்தது ஆராய்ந்து பார்த்தால் என்னை யாளுகைக்காகவென்றே நிஶ்சிதமாயத் திதனையொழிய வேறொரு ஹேதுவில்லையென்கிறார்.

வ்யா.—(அடியைத் தொடாந்தெழும) பால்யமே பிடித்து வ்யாஸர், குந்தி, மார்க்கண்டேயன் முதலானவர்களுடைய உக்தி விசேஷங்களாலும், ஆபத்து வந்தபோதெல்லாம உதவி ரக்ஷித்த படியாலும க்ருஷ்ணனை மாதுலேயனென்று நினைக்கை யன்றிக்கே தங்களை ரக்ஷிக்கும்பரதத்வமென்று அத்யவஸித்து,(కృష్ణాశ్రయాః కృష్ణ బలాః కృష్ణనాథాశ్చ పాణ్డవాః.) (க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாஶ்ச பாண்டவா:) என்கிறபடியே அவனதிருவடிகளை ஆச்ரயித்து ருத்ரேந்த்ராதிகளை வென்று காலமேய ஹிடிமப ஜராஸந்தாதிகளை ஸம்ஹரித்து லோகத்திலே தங்களுக்கு ஒருவரும ஸத்ருசரில்லையென்று கர்வோத்தராயிருக்கிற ஔத்தத்யம. (ஐவாகட்கா) தர்ம பீமார்ஜுந நகுலஸஹதேவரென்று அஞ்சுபேரான பஞ்ச பாண்டவர்களுக்காக. (அன்று) தார்த்தராஷ்ட்ரர்களிடத்தில பக்ஷபாதத்தாலே கர்ணசல்யாதி துர்வாக்கமெல்லாம திரண்டு இந்தபாண்டவர்களும்தனிமைப்பட்டு தன்னையொழிய வேறொருதுணையின்றிக்கேயிருக்கிற ஸமயத்தில.

(பாரதப்போர்முடிய)உபய ஸேனையிலுமபரதவம்சத்தாரிலபரிமிதராலுமதுர்வாக்யங்களை இந்த உபயஸேனையிலும அந்வயித்து யுத்தம்பண்ணினாகளானகையாலே அந்த யுத்தத்துக்கு "பாரதயுத்தம்" என்றுபேராயிருக்கிறது; அப்படிப்பட்ட உபயஸேனையிலும் திரண்டிருக்கிற பதினெட்ட க்ஷௌஹிணி பலத்துக்குமாக பாண்டவர்களைவரும்சேஷித்து அவாகளுக்கு ப்ரதிபக்ஷபூதரானமற்றப்பேரெல்லாரும் முடியும்படி. (பரிநெடுந் தேர்விடுங்கோனை) (ஆடியமாநெடுந்தேர்) என்கிறபடியே - ச்வேதாசவங்களாலே பூணப்பட்டு ஸர்வாலங்க்ருதமாய், தேவதா ப்ரஸாதத்தாலே வந்ததாகையாலேதிவ்யமாய் மஹத்தானதிருத்தேரை தான்ஸாரதியாய் நடத்தி, தன்னுடைய ஸர்வ ஸ்வாமித்வம் ஸாவருக்கும் தெரியும்படி யிருக்கிற க்ருஷ்ணனை. (తత్ర పాణ్డవానాం కురూణాం చ యుద్ధే ప్రారబ్ధే భగవాన్ పురుషోత్తమః । సర్వేశ్వరః జగదుపకృతిమర్త్యః ఆశ్రితవాత్సల్యవివశః పార్థం

http://acharya.org

[Telugu script] (தத்ர பாண்டவாநாம் குருணாம்சயுத்தே ப்ராரப்தே பகவாந் புருஷோத்தம:, ஸர்வேஶ்வர:, ஜகது பகர்திமர்த்ய:, ஆச்ரிதவாத்ஸல்யவிவஶ: பார்த்தம ரதிநம ஆத்மாநஞ்சஸாரதிம் ஸர்வலோக ஸாக்ஷிகம் சகார) என்று – கீதாபாஷ்யத்திலே இவ்வர்த்தத்தை எம்பெருமானார் அருளிச் செய்தாரிறே. இந்த க்ருஷ்ணன் யதுகுலத்திலேயவதரித்தாலும் ஸ்ரீருக்மிணிப் பிராட்டியிருடைய ஸ்வயம்வரத்துக்காக குண்டிநபுரத்துக்கு கேறவெழுந்தருளின போது, இந்த்ரன், தேவஜாதிகையிலே ஒரு ஸிம்ஹாஸநத்தை யனுப்புவித்து க்ர்ஷ்ணனே ராஜாவாம்படி அந்த ஸிம்ஹாஸநத்திலே எழுந்தருளப் பண்ணுவித்துத் திருவபிஷேகம் பண்ணுவித்தானென்று ப்ரஸித்தமிறே. ஆக, ராஜாவென்னக் குறையில்லை; இப்படிப்பட்டவனை.

(முழுதுணர்ந்த வடியார்க்கு) ஸ்வரூபரூபகுணவிபூதிகளையும், ([Telugu script]) (ஷாராயணஶ் ஸ்ரீமாந்க்ஷீரார்ணவநிகேதந:, நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம) என்கிறபடியே-ஸர்வஸ்மாத்பரனையும் அஜஹத்ஸ்வபாவனையுமவனதவதரித்து, ([Telugu script]) (உபஸம்ஹர ஸர்வாத்மந்ரூபமேதச்சதுர்ப்புஜம்) என்று-பிதாவானவன் ப்ரார்த்தித்தவாறே ப்ராக்ருதரைப் போலே யிருந்தபடியையும், யமுநாநதியைக் கால்நடையாகப் பண்ணினதும, உரலோடேயிலே கட்டுண்டடியுண்டதும், பூதநா சகட யமளார்ஜுந அரிஷ்ட ப்ரலம்ப தேநுக காளிய கேசி குவலயாபீட சாணூர முஷ்டிக கம்ஸாதிகளாகிற ஆச்ரித விரோதிகளைக் கொன்றதும், அக்ரூர மாலாகாராதிகளை அநுக்ரஹித்ததும், கோவர்த்தநோத்தரணாத்யதிமாநுஷ திவ்ய சேஷ்டிதங்களைப்பண்ணினதும, பாண்டவர்களுக்கு பாரதந்த்ரனாய்க் கழுத்திலே ஓலை கட்டிக்கொண்டு சென்று தூத்யம பண்ணினதும், காலாலே ஏவிக் காரியங் கொள்ளும்படியான ஸாரத்யத்தைச் செய்ததும், விச்வரூபத்தை தர்சிப்பித்ததும், அர்ஜுநவ்யாஜேந லோகோபகாரார்த்தமாக அத்யாத்மசாஸ்த்ரத்தை வெளியிட்டதும் முதலான வற்றையும அறிந்தவர்களாய அவ்வவஸ்வபாவங்களுக்குத் தோற்றுத தங்களை எழுதிக்கொடுத்து சேஷத்வ ஸ்வரூபத்திலே நிஷ்டரான ஆழ்வான், ஆண்டான் பிள்ளான், எம்பார் முதலானவர்களுக்கு. (அமுதம) ஸ்வரூபோஜ்ஜீவநத்தைப் பண்ணுமவராகையாலே நித்யாபூர்வராய் ரஸிக்குமவரான.

(இராமாநுசன்) எம்பெருமானார். (என்னை யாளவந்து) பரமபதத்திலே பரிபூர்ணாநுபவம நடவாநிற்க அத்தைக் காற்கடைக்

கொண்டு அதில் நின்றும் அடியேனை அடிமை கொள்ளுகைக் காகவே எழுந்தருளி. (இப்படியில்) (భగవత్స్వరూపతిరోధానకరీం విపరీతజ్ఞానజననీం స్వవిషయాయాశ్చ భోగ్యబుద్ధేర్జననీమ్) (பகவத்ஸ்வரூப திரோதாநகரீ௦ விபரீதஜ்ஞாந ஜநநீ௦ ஸ்வவிஷயாயாஶ்ச போக்ய புத்தேர்ஜநநீம்) என்னும்படியான ப்ராக்ர்த பூமியிலே. (பிறந்தது) (శ్రీమానావిరభూద్భూమౌ) (ஶ்ரீமாநாவிரபூத்ப்பூமௌ) என்கிற படியே அவதரித்தருளினது.(என்னையாள) (అహమస్మ్యపరాధచక్రవర్తి) (పాపానాంప్రథమోస్మ్యహమ్) (அஹமஸ்ம்யபராத சக்ரவர்த்தி) (பாபாநா௦ப்ரதமோஸ்ம்யஹம்) என்னும்படியான அடியேனை ரக்ஷிக்கவே யாய்த்து. (மற்றில்லை காரணம் பார்த்திடிலே) பின்னையும் இவ் வவதாரத்துக்கு மூலமேதென்று ஆராய்ந்துபார்த்தால் வேறொரு காரணமில்லையென்று அருளிச்செய்தாராயிற்று. ... (௫௧)

உரை.—அ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு. (என்னை யாளவந் திப்படியில் பிறந்தது) ஒருவராலும் ஆளவரியனான வென்னை ஆளுகைக்காக வந்து அவதரித்தானென்றீர், அவர் தாம் இப்படி அகடிதகடநாஸமர்த்தரோவென்ன; அவர் செய்த அகடிதகடநங் களை யருளிச்செய்கிறார்.

மூ.—பார்த்தானறுசமயங்களபதைப்பவிப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டுபுன்மையினேனிடைத்தான்புகுந்
தீர்த்தானிருவினைதீர்த்தரங்கன்செய்யதாளிணையோ டார்த்தானிவையெம்மிராமாநுசன்செய்யுமற்புதமே.(௫௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அறுசமயங்கள்	வேதபாஹ்யங்களான ஷட்ஸமயங்களும்,		ரன்னுடைய ஆத்தித்வாதி நிரபேக்ஷமாக,
பதைப்பப் பார்த்தான	நடுங்கும்படியாகக் கண்டார்;	தான்புகுந்து	தாமே வந்து புகுந்து,
இப்பார்முழுதும்	இந்த பூமியெங்கும்,		"యద్బ్రహ్మకల్పనియుతానుభవేప్యనాశ్యమ్" "யத் ப்ரஹ்ம கல்ப நியுதாநுபவேப்யநா ஶ்யம்" என்
புகழ்கொண்டு	தம்முடைய ஞ்வய கீர்த்தியாலே,		னும்படியே காலதத்வமுள்ளதனையும் அநுபவித்தாலும் தொலையாது என்னும்படியான,
போர்த்தான்	மூடிவிட்டார்;		
புன்மையினேனிடை	அநாத்மகுணங்களை நிரூபகமாக வுடையனாயிருக்கிற என்பக்கலிலே,		

பதம்.	உரை.	பதம்.	உரை.
இருவினைதீர்த்தான்	மஹாபாபங்களைப் போக்கினார்;	எம்மிராமாநுசன்	எங்களுக்கு நாதரான எம்பெருமானார்,
தீர்த்து	இப்படிபாபங்களைப் போக்கி,	செய்யும் அற்புதம் இவை	செய்யும் ஆஶ்சர்யங்கள் இவை.
அரங்கன்	பெரிய பெருமாளுடைய,		
செய்ய	அழகிய,		
தாளிணையோடு	திருவடிகளோடே,		
ஆர்த்தான்	ஸம்பந்திப்பித்தார்;		

அற்புதம்-அத்புதம். அதாவது அகடிதகடநாபாயுக்தமான ஆஶ்சர்யம். பதைத்தல-துடித்தல். போர்த்தல்-மூடுதல். இருமை-பெருமை ஆர்த்தல-பந்தித்தல்.

வ்யா.—அ.—ஐம்பதிரண்டாம்பாட்டு. (என்னையாளவந்திப்படியில பிறந்தது) என்று ஒருவராலும் ஆளவரியவென்னை ஆளவந்தவதரித்தாரென்று அவரைக்கொண்டாடாநின்றீர், இந்த அவதாரத்திலே உம்மை யொருவரையே ஆளாநின்றீரோவென்ன; முதல்முன்னம்உத்தேசித்தவதரித்தது என்னை யாளுகைக்காகவே; ஆகிலும்,இவர்அவதரித்தருளி,அவைதிகஸமயங்களாலேநசித்துப் போன லோகங்களை யெல்லாங்கண்டு ஸஹிக்கமாட்டாதே அந்த அவைதிகஸமயங்களை நசிப்பித்துத்தம்முடைய கீர்த்தியாலேலோகங்களெல்லாவற்றிலும் வ்யாபித்து, க்ரூரபாபியானவென்பக்கலிலே ப்ரவேசித்து, என்னுடைய பாபங்களெல்லாம் நசித்துப்போம்படி பண்ணி, பின்பு பெரியபெருமாளுடைய அழகிய திருவடிகளோடே ஸம்பந்திப்பித்தார்; இப்படி ஒருகார்யத்தை உத்தேசித்து அநேககார்யங்களைச் செய்தார். இப்படி இந்தஎம்பெருமானார்செய்தருளும் ஆஶ்சர்யங்களைக்கண்டீரே! என்று விஸ்மிதராகிறார்.

வ்யா.—(பார்த்தானறுசமயங்கள்பதைப்ப) (அறுசமயங்கள்) பௌத்த சார்வாக சாக்ய உலூக்ய பாஶுபத காணாபத்யங்களென்கிறவேதபாஹ்யஸமயங்களாறென்னுதல்;அன்றிக்கே அநுஷ்டாநத்தையிலே அத்யந்த துஃகரூபங்களானவை யென்னுதல்.(பதைப்பப்பார்த்தான) இப்படிப்பட்ட வேதபாஹ்ய ஸமயங்களெல்லாம் நிர்மூலமாய்ப்போம்படி அவற்றை கடாக்ஷித்தார். பதைத்தல்-துடித்தல். (దిక్సౌధాబద్ధజైత్రధ్వజపటపవనస్ఫాతినిర్ధూతతత్తత్సిద్ధాన్తస్తోమతూలస్తబకవిగమనవ్యక్తసద్వర్తనికా) (திக்ஸௌதாபத்தஜைத்ரத்வஜபடபவநஸ்பாதிநிர்த்தூததத்தத்ஸித்தாந்த ஸ்தோமதூலஸ்தபகவிகமநவ்யக்தஸத்வர்த்தநீகா) என்று அபியுக்தரும் அருளிச்செய்தாரிறே. (இப்பார் முழுதும் போர்த்தான் புகழ்கொண்டு)லோகமெல்லாம் நிஸ்ஸபத்நமாகப்பண்ண வேதமக்குளெல்லாம் கைவசமாய்த்து. இப்படிப்பட்ட

http://acharya.org

பூமியெங்கும் பண்டிதபாமரஸாதாரணமாகத் தம்மைக்கொண்டாடும்படி தம்முடைய கீர்த்தியை ஸர்வதிக்கிலும் வ்யாபிப்பித்தார். போர்த்தல — மூடுதல.

(புன்மையிலேனிடை) வந்தேறியான பாபங்களொன்று மின்றிக்கே, "வேம்புமுற்றக்கைப்பு மிகுவதுபோல" என்கிறபடியே நாள்தோறும என்னாலே நிரக்ஷிக்கப்பட்டவையாய், (పాపానాం) (பாபாநாம) என்றும, (దేహపుంజదేపాపాః) (தேத்வகஂபுஞ்ஜதேபாபா) என்றும சொல்லுகிறபடியே அந்த பாபங்களையே ஒருவடிவாகவுடையனுகையாலே அத்யந்தபாபியானவென்னிடத்திலே (தான்புகுந்து) அடியேன் ஒரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணுதே யிருக்கச்செய்தேயும், அர்த்தியாதே யிருக்கச்செய்தேயும், ததுபயநிரபேக்ஷமாகத் தாமே நிர்ஹேதுகமாகவந்து ப்ரவேசித்து.

(இருவினை)இரண்டு வகைப்பட்டவினை; புண்யபாபங்களென்றபடி. அன்றிக்கே, (இருவினை) இருமை-பெருமையாய், (యద్బ్రహ్మకల్పనియుతానుభవేప్యనాశ్యం తత్కిల్బిషం సృజతి జంతురిహ క్షణార్ధే)(పాపానాం ప్రథమోస్మ్యహం)(మయి తిష్ఠతి దుష్కృతాం ప్రధానే) (అహమసకృదపరాధచక్రవర్తి) (யத் ப்ரஹ்மகல்பநியுதாநுபவேப்யநாச்யம் தத்கில்பிஷம்ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே) (பாபாநாம்ப்ரதமோஸ்மயஹம) (மயி திஷ்டதி துஷ்க்ருதாம்ப்ரதாநே) (அஹமஸமயபராதசக்ரவர்த்தி) என்கிறபடியே அநுபவப்ராயச்சித்தங்களாலும எத்தனையேனும காலமுடையவராலும் நிவர்த்திப்பிக்கவரிதான என்னுடைய மஹா பாபங்களையென்றபடி. (தீர்த்தான) இவற்றை அநாயாஸேந மணலிலேயெழுதினஎழுத்தைத துடைப்பாரைப்போலேதுடைத்தார் (வாரேறுமறிகடலோ மாருதமோதீயகமோ காலேறுவெருங்கிறதுக கண்டிலமால்) என்றும், (சுமமெனுதேனைவிட்டோடித தூறுகள்பாய்ந்தனவே) என்றும சொல்லுகிறபடியே வாஸனையோடே போக்கினுரென்றபடி.

(தீர்த்து) அந்தபபடி ரக்ஷணம்பண்ணி ஆறிக்கைவாங்கி யிருக்கையன்றிக்கே இப்படி பாபங்களையெல்லாம போக்கி. (அரங்கன) எட்டாநிலமான பரமபதத்திலேபோய ஆச்ரயி என்றும, யோகமார்க்கத்தாலே அந்தர்யாமியை ஆச்ரயியென்றும், இபபடி அநேகங்களானவற்றை உபதேசிததுப் போருகையன்றிக்கே அத்யந்த ஸுலபராய்க்கொண்டு நானிருந்தவிடத்திலே யிருக்கிற பெரிய பெருமாளுடைய. (செய்யதாளிணையோடார்த்தான) (அரங்கத தம்மான் திருக்கமலபாதம்) என்கிறபடியே தர்சநீயமாய பாவநத்வ போக்யத்வங்களுக்கு பரஸ்பரஸத்ர்சமான திருவடிகளோடே

ஸம்பந்திப்பித்தார். சேஷசேஷிபாவஸம்பந்தத்தை அறிவிப்பித்தாரென்றபடி. ஆர்த்தல் - பந்தித்தல்.

(இவை யெம்மிராமாநுசன்செய்யுமற்புதமே) இவ்வளவும் சொன்னவையெல்லாம் எங்களுக்காக அவதரித்தருளின எம்பெருமானார் செய்தருளும அத்புதகார்யங்கள். அற்புதம் - அத்புதம். பித்ராவாக்ய பரிபாலநம் பண்ணவேணுமென்று காட்டுக்குப்போய் அவ்வளவிலே நில்லாதே ராக்ஷஸரையெல்லாம் ஸம்ஹரித்துத் திருவணைகட்டுவித்து மஹாராஜருக்கும ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கும் ஸ்வஸ்வராஜ்யங்களைக் கொடுத்தும போந்த சக்ரவர்த்தித்திருமகனைப்போலே, ஒன்றுசெய்யவொன்றுவொருப்பட்டு அநேகமான அதிமாநுஷ சேஷ்டிதங்களைப்பண்ணியருளினார் காணும் இவரும. இப்படியிறே மஹாபுருஷர்களபடியிருப்பது. காபுருஷர்களானாலே * உபகாரமதிலே அநேகப்ரகல்பநகளைச்சொல்லிக் காரியஸமயமவந்தவாறே வருந்தியும அல்பமாகிலும் செய்யமாட்டார்களென்றதாயதது ()

உரை.—அ.—ஐம்பத்துமூன்றாம்பாட்டு. "பார்த்தானறுசமயங்களபதைப்ப" என்று பாஹ்யஸமயங்களைக் குலையப்பண்ணி இவ்விபூதியில இவாஸ்த்தாபிநதவர்த்தமேதென்ன; ஸகலசேதநாசேதநங்களும ஸர்வேச்வரனுக்கே சேஷமென்கிற விலக்ஷணமான அர்த்தத்தை ஸ்தாபித்தருளினார்.

மூ.—அற்புதன்செம்மையிராமாநுசனென்னையாளவந்த
கற்பகங்கற்றவர்காமுறுசீலன்கருதரிய
பற்பல்லுயிர்களும்பலவுலகியாவும்பரனதென்னும்
நற்பொருள்தன்னையிந்நானிலத்தேவந்துநாட்டினனே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்னை ஆள	என்னை அடிமைகொள்ளுகைக்காக,	அற்புதம்	ஆச்சர்யபூதராய்,
வந்த	நான் கிடந்தவிடம் தேடிவந்த,	செம்மை	ஆச்ரிதருடைய கௌடில்யத்தைப்பார்த்துக் கைவிடாதே, நீரோடுமேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைப்போலே தம்மை அவர்களுக்கீடாக அமைத்துப் பரிமாறும் ஆர்ஜவ குணயுக்தரான,
கற்பகம்	பரமோதாரராய்,		
கற்றவர்	அறிவுடையார்,		
காமுறு	ஆசைப்படும்படியான,		
சீலன்	ஸௌசீல்யத்தையுடையராய், அதிமாநுஷமான செயல்களைச் செய்கையாலே,		

http://acharya.org

பதம்.	உரை.
இராமாநுசன்	எம்பெருமானார்,
கருதரிய	நினைக்கப் புக்கால் எட்டவரிதாம்படி,
பற்பல்லுயிர்களும்	அஸங்க்யாத மான ஆத்மாக்களும்,
பல்லுலகியாவும்	அவர்களுக்குவாஸஸ்தாநமாய அஸங்க்யாதமா யிருக்கிற ஸகலலோகங்களும், [குசேஷம்,
பரனது என்னும்	ஸர்வஸ்மாத்பர னுக் என்கிற,
நல்பொருள்தன்னை	சீரிய அர்த்தத்தை,
இந்நானிலத்தே	இந்த லே,
வந்து	ஒருவரபேக்ஷியா திருக்கத் தாமேவந்து,
நாட்டினன்	ஸ்தாபித்தருளினார்.

கல்பகத்திற் காட்டில இவர்க்கு விசேஷம் - அடிமை கொள்ளுகையும், இருந்தவிடம்தேடிவருகையும. காமுறுதல - விரும்புதல. பற்பலவுயிர்கள்-பலபலவாவுயிர்கள்; அஸங்க்யாதமான உயிர்களென்றபடி. "பல்லுலகில் யாவும" என்றும பாடம் சொல்லுவர்கள், 'எழுத்தேற்றம் வருகையால் அது சேராது. ஆனால், "பல்லுலகியாவும" என்றால எழுத்தேற்றம் வாராதோ வென்னில்; "உரைகின்றன னுமக்கி யான்" என்கிறவிடத்திற் போலவே, "பல்லுலகியாவும்" என்கிறவிடத்தில் இகரமும குற்றியலிகரமாய் வண்ணம கெடாமைக்குக் கழியுண்கையாலே எழுத்தேற்றமவாராது. நாட்டுதல - ஸ்தாபித்தல். (ருங)

வ்யா.—அ—ஐம்பத்துமூன்றுமபாட்டு. "பாரததாள னுசமயங்கள்பதைப்ப" என்று - பாஹ்யஸமயங்களைக குலையப்பண்ணினாரென்றும், "அரங்கன் செயயதாளிணையோடாரத்தான்" என்று - பரமபுருஷார்த்த ஸாம்ராஜ்யத்தைக கொடுததாரென்றும் சொன்னீர், அமமாதரமேயோ அவர்செய்ததென்னில்; அவ்வளவேயன்று, ஸகலாபேக்ஷிதங்களையும், அபேக்ஷாநிரபேக்ஷமாக கல்பகம் போலே கொடுக்குமவராய ஸௌசீலயத்தையுடையராய் அத்யாஶ்சர்யபூதராய் ஆர்ஜவகுணயுக்தரான எம்பெருமானார், ஸகலலோகங்களிலுமிருந்துள்ள ஸகலாத்மாககளுமஸர்வஸ்மாத பரனுககே சேஷபூதரென்று இந்தலோகத்திலே ப்ரதிஷ்டிப்பித்தருளினார்.

வ்யா.—(என்னையாள) ஸ்ரீயபபதியினுடைய திவ்யாஜ்ஞையினாலே ஸகலலோகோஜ்ஜீவந விஷயமாக வவதரிததாரேயாகிலும், (எதிர்சூழல்புக்குஎனைத்தோர்பிறப்புமெனக்கேயருள்கள் செய்ய) என்கிறபடியே லோகத்தாரெல்லாரிலும், (நீசனேன்நிறைவொன்றுமிலேன்) என்கிறபடியேஅத்யந்த நிஹீநனனவென்னிடத்திலே க்ர்பைபண்ணி யருளி அடியேனை அடிமை கொள்ளுகைக்காக.

http://acharya.org

(வந்தகற்பகம்)தம்மையொருவரைரக்ஷிக்கைக்காக அவதரித்தாரெ
ன்றுகாணுமஇவருடையதிருவுள்ளத்திலோடுகிறது. (வந்தகற்ப
கம்) நித்யவிபூதியில்நின்றும் லீலாவிபூதிக்கு எழுந்தருளின கல்ப
கம்.கல்பகம்போலேஅபீஷ்டார்த்தப்ரதரானவர் ஜடமாய் ஸ்தாவர
மாய் ஐஹிகபுருஷார்த்தமாத்ரப்ரதமாய் ஒருதேசவிசேஷத்திலே
தானேயபதமாயிறேஅந்தகல்பகமிருப்பது; இந்தகல்பகம் அதில் நி
ன்றும் அதிவிலக்ஷணமாய் அப்ராகர்தமாய்,(అజహత్రివర్గమపవర్గవైభవమ్)
(அஜஹத்ரிவர்க்கமபவர்க்கவைபவம) (நலமந்தமில்லதோர்நாடு
புகுவீர்)(நல்லபதத்தால் மனைவாழ்வர்கொண்ட பெண்டிர்மக்கள்)
என்கிறபடியே - ஐஹிகாமுஷ்மிக ஸமஸ்த புருஷார்த்தங்களையும்
கொடுக்ககூடவ ஔதார்யத்தையுடைத்தாய உபய விபூதியிலும்
வ்யாபித்ரூபதாய் நித்யமாய் நிற்பதொன்றிறே. ஆகையாலே,
(வந்தகற்பகம) என்று - சாகாசந்த்ரந்யாயேந புதத்யாரோபது
க்காகச்சொன்னஜரித்தனே. நானிடநதவிடம தேடிவந்து விஷயீக
ரித்தவிது மஹெளதார்யமிறே ! என்றுவித்தராய்க்காணும (வந்த
கற்பகம) என்கிறார்.

(கற்றவர் காமுறு சீலன்) ஸகல சாஸ்த்ரங்களையும் அப்யஸி
த்தத்தாலே ஜ்ஞாநாதிகராய, (உன்னையொழிய வொருதெய்வம்
மற்றறியா, மன்னுபுகழ்சேர் வடுகநம்பி) என்றுகொண்டாடப்படு
கிற வடுகநம்பி, கிடாம்பியாச்சான் முதலான முதலிகள், வ்யாமுக்
த்தராய் ஆசைப்படும்படியான ஸ்வபாவத்தையும் ஸத்வ்ருத்தியையு
முடையராய. அன்றிகே, பெரியவன் தாழ்ந்தவருடனே புரை
யறக்கலந்து பரிமாறுகையாகிற சீலகுணத்தை யுடையவரென்று
மாம். காமுறுதல் - விரும்புதல். எம்பெருமானார் கோயிலிலே
வாழுகிறகாலத்திலே ஒருநாள்மத்யாஹ்ந ஸமயத்திலேதிருக்காவே
ரியிலே நீராடித் திருமபவும எழுந்தருளுகிற வளவிலே வழியிலே
திருக்கோட்டியூர்நம்பி எதிரே எழுந்தருள, எம்பெருமானாரும்
அந்தமணலிலே ஸாஷ்டாங்கமாக தண்டனிட்டு நிற்க, நம்பியும்
அவரைக்கடாக்ஷித்து "எழுந்திரும்" என்றருளிச் செய்யாதே
வெறுமனே யிருந்தவாறே, அசசேர்த்தியைக கிடாம்பியாச் சான்
கடாக்ஷித்தருளி, "நம்பி! இவரைக்கொல்ல நினைத்தீரோ" என்று
சீறுபாறுசெய்து, மணலிலே ஸாஷ்டாங்கமாக விழுந்திருக்கிற
எம்பெருமானாரை வாரியெடுத்துக் கொண்டார் என்று நம்முதலி
கள கோஷ்டியிலே ப்ரஸித்தமிறே.

(அற்புதம்செம்மை) அதிமாநுஷங்களான சேஷ்டிதங்களைப்
பண்ணுகையாலே அத்புதராய் ஆசரிதருடைய கௌடில்யத்தைப்
பார்த்துக்கைவிடாதேநீரேறுமேடுகளிலேவிரகாலே நீரேற்றுமாப்

http://acharya.org

போலே தம்மை அவர்களுக்கிடாக அமைத்துப்பரிமாறும் ஆர்ஜவ குணத்தையுடையரான. (இராமாநுசன்) எம்பெருமானார். (கருதரிய) நினைக்கப்புக்கால் நினைத்துத் தலைசகட்டவரிதாம்படி. (பற்பலவுயிர்களும்) பலபடியான. பல்பல்லென்கையாலே - ஒருஜாதியே அஸங்க்யாதமாய் அப்படிப்பட்ட ஜாதிகுலங்களும அஸங்க்யாதங்களாய், (எண்பெருக்கந்நலத்தொண்பொருள்) என்கிறபடியே எண்ணிறந்த ஆத்மாக்களும. (பல்லுலகியாவும்) அந்த ஆத்மாக்களுக்கு ஆவாஸஸ்த்தாநமாய அஸங்க்யாதமாயிருக்கிற ஸகலலோகங்களும். (பரனதென்னும்) (పరిపరాణాం)(பரிபராணாம்) என்கிறபடியே ப்ரஹ்மருத்ராதிகளுக்கும பரனாய் ஸ்ரியஃபதியானவனுக்கே சேஷபூதமென்னும், (ஸர்வேஶோபி ஸநாதநாகிலஜகத் வ்யாப்தாவபோதாமலாநந்தாகார யுதோப்யநந்தஸுகுணஸ் ஸாவாதமநாம் ஶாஸிதா - தேஹீ தாரண ஶாஸநேஶநமுகை, ஸ்வாதீநநித்யஸ்திதி: ஸ்வாமீ நித்யமநோஜ்ஞமங்களவபு: ஶ்ரீபூமிநீளாதிப:) (సర్వేశోపి సనాతనాఖిలజగద్వ్యాప్తావబోధామలానందాకారయుతోప్యనంతసుగుణస్సావాత్మనాం శాసితా। దేహీంధారణశాసనేశనముఖైః స్వాధీననిత్యస్థితిః స్వామీనిత్యమనోజ్ఞమంగళవపుః శ్రీభూమినీళాధిపః) என்கிறபடியே - போக்யபோகோபகரண போகஸ்தாந போக்த்ருத்வங்களெல்லாம் ஸர்வஸ்மாத்பரனான நாராயணனுக்கே சேஷபூதமென்கிறது.

(நம்பொருள்தன்னை) யதாவஸ்திதமாய் ஸத்ஞாநத்தை. அன்றிக்கே, இப்படிப்பட்ட சீரியவர்த்தத்தை. (இந்நானிலத்தே வந்து) இந்தலோகமெல்லாம் உஜ்ஜீவிக்கைக்காக தாமே வந்தவதரித்தருளி. (நாட்டினனே) ஒருவரும அபேக்ஷியாதிருக்கச்செய்தே நிர்ஹேதுகமாகவே ப்ரதிஷ்டிப்பித்தருளினார். நாட்டுதல்-ஸ்தாபித்தல். சிலர்க்கு ஒருகாலத்திலே உபதேசித்துப்போனமாத்ரமேயன்றிக்கே லோகத்தாரெல்லாரும ஸர்வகாலமுமநுபவித்து உஜ்ஜீவிக்கும்படியாக ஸ்ரீபாஷ்யாதிமுகேந ப்ரதிஷ்டாபநம பண்ணியருளினாரென்றதாய்த்து. (యదణ్డమణ్డాంతరగోచరంచ యద్దశోత్తరాణ్యావరణాని యానిచ। గుణాః ప్రధానం పురుషః పరంపదం పరాత్పరం బ్రహ్మచతే విభూతయః) (யதண்டமண்டாந்தரகோசரஞ்ச யத்தஶோத்தராண்யாவரணாநி யாநிச - குணா: ப்ரதாநம் புருஷ: பரம்பதம் பராத்பரம் ப்ரஹ்மச தே விபூதய:) என்று ஆளவந்தாரு மருளிச்செய்தாரிறே.

கல்பகத்தைக் காட்டில் இவருக்கு விசேஷம் - அடிமை கொள்ளுகையும் இருந்தவிடத்தே வருகையும். "பல்லுலகில்யாவும்" என்றும் பாடம் சொல்லுவர்கள். எழுத்து ஏற்றமாகையாலே அது சேராது; ஆனால் "பல்லுலகியாவும்" என்றால் எழுத்தேற்றம் வாராதோ வென்னில்; "உரைக்கின்றனனுமக்கியான"

-த்தில்போலவே, "பல்லுலகியாவும்" என்கிறவிடத்திலே இகரம் குற்றியலிகரமாய்வண்ணங்கெடாமைக்குக் கழியுண்கையாலே எழுத்தேற்றமவாராதென்று ஜீயருமருளிச்செய்தாரிறே. ... ... (ருங)

உரை.—அ.—ஐம்பத்துநாலாம்பாட்டு. இப்படி எம்பெருமானார், யதார்த்தஸ்த்தாபநம்பண்ணியருளின ஸ்வபாவத்தைக்கண்டு, பாஹ்யஸமயங்களுக்கும், வேதத்துக்கும் திருவாய்மொழிக்குமுண்டான ஆகாரங்களை யருளிச்செய்கிறார்.

மூ.—நாட்டியநீசசமயங்கள்மாண்டன; நாரணனைக்
காட்டியவேதங்களிப்புற்றது; தென்குருகைவள்ளல்
வாட்டமிலாவண்டமிழ்மறைவாழ்ந்தது; மண்ணுலகில்
ஈட்டியசீலத்திராமாநுசன்றனியல்வுகண்டே. (ருச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	க்ஷுத்ரரான சேதநரோடே தமபெருமையையும் அவர்கள சிறுமையையும பாராதே கலந்து பரிமாறி,	சமயங்கள் மாண்டன	வேதபாஹ்யங்களாகையாலே தண்ணிதான, சமயங்கள் நசித்தன;
மண்ணுலகில	பூலோகத்திலே,	நாரணனை	பூர்வபாகம் ஆராதந ஸ்வரூபத்தையும், உத்தரபாகம் ஆராத்ய ஸ்வரூபத்தையும சொல்லுகையாலே, "వేదైశ్చ సర్వైరహమేవ వేద్యః" "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்கிறபடியே உபயவிபூதி யுக்தனான ஸர்வேச்வரனை,
ஈட்டிய	மேனமேலும் திரட்டிக்கொண்ட,	காட்டிய வேதம்	ப்ரகாசிப்பித்த வேதமானது,
சீலத்து	சீலகுணத்தையுடையரான,	களிப்புற்றது	நமக்கு இனி யொரு குறையில்லை யென்று கர்வித்தது;
இராமாநுசன்றன்	எம்பெருமானாருடைய,		
இயல்வுகண்டு	ஸ்வபாவத்தைக் கண்டு,		
	ஆதித்ய தர்சநத்திலே அந்தகாரம் நசித்து *அம்புஜாதங்கள் அலருமாப்போலே,		
நாட்டிய	ஸ்வயுக்தி ஸ்த்தாபிதங்களாய.		

* "அம்புஜாதிகள் அலருமாபபோலே" என்றும் பாடம்.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
தென்	ஸர்வப்ரகாரவிலக்ஷணமான,	வாட்டமிலா	ஒருகுறையின்றிக்கேயிருப்பதாய,
குருகை	திருநகரியைத் தமககு வாஸஸ்த்தாநமாகவுடையராய, பகவதநுபவபரீவாஹரூபமான ஸ்வோக்திகளாலே சத்துககுஉபகரித்தருளின,		ஜ்ஞாநப்ரப்திமோக்ஷாந்தமான ஸகல பலங்களையுமகொடுககும்,
		வண்	ஔதார்யத்தையுடைத்தாயிருக்கிற,
		தமிழ்மறை	த்ராவிடவேதமான திருவாய்மொழி,
வள்ளல்	பரமோதாரரான ஆழ்வாரருளிச்செயததாய்,	வாழ்ந்தது	பராபவைசவாயமாயதது.
	பாஹ்ய குத்ர்ஷ்டிகளால் அவிசால்யமாகையாலே,		களிப்புறுதல - கர்வித்தல. வாட்டம்-ஸங்கோசம். ஈட்டுதல்-திரட்டுதல். இயல்வு-ஸ்வபாவம. (௫௪)

வ்யா.—அ.—ஐம்பததுநாலாமபாட்டு. கீழெலலாம - எம்பெருமானார் துர்மதநிரஸநம்பண்ணினாரென்றும, வேதாந்த்தரணம பண்ணினாரென்றும் ஆழ்வாருடைய திவ்யஸூக்திகளிலேதானே அவகாஹித்தாரென்றும சொன்னீர, ஆன பின்பு அததால துர்மதங்களுக்கும் வேதங்களுக்கும் ஆழ்வாருடைய அருளிச்செயல்களுககு முண்டான ஆகாரத்தைச சொல்லவேண்டாவோ வென்ன; துர்மதஙக ளடங்கலும் வேரோடே கூட நசிததுப்போந்தன, வேதமானது பூலோகத்திலே "எனக்காருமநிகரில்லை" என்று கர்வித் திருந்தது, அருளிச்செயல்களெலலாம அனைவரும் உஜ்ஜீவிக்கும்படி நித்யாபிவ்ருத்தஙகளாய்க் கொண்டிருந்தனவென்கிறார்.

வ்யா.—(நாட்டியநீசச் சமயங்கள் என்று தொடங்கி) (மண்ணுலகில்) அஜ்ஞாநத்துக்கு விளைநிலமான பூலோகததிலே. (ஈட்டியசீலத்து) உபயவிபூதயைச்வாயததைப் பெற்ற தமமுடைய மாஹாத்ம்யத்தையும் லௌகிகருடைய சிறுமையையுமபாராதே திருக்கோட்டியூரிலே பாலவர்த்தவிபாகமற எல்லார்க்கும், குஹ்யதமமாகத் தாம்பெற்ற சரமசலோகார்த்தத்தை வெளியிட்டு, கொங்கில் பிராட்டியையும், இரட்டைத் திருப்பதியிலே மாடுமேய்க்கிற பெண்பிள்ளையையும், மேல் நாட்டுக்கெழுந்தருளுகிறபோது காட்டிலே ஒருஇடையனையும், மற்றும்ஊமைமுதலானவர்களையும,

http://acharya.org

நிர்ஹேதுகமாக விஷயீகரித்துக் கலந்து பரிமாறி மேல்மேலெனத் திரட்டிக்கொண்ட ஸௌசீல்யத்தையுடையரான. ஈட்டுதல் - திரட்டுகை. (இராமாநுசன்றன்) எம்பெருமானாருடைய. (இயல்வு கண்டு) ப்ரதிபக்ஷப்ரதிக்ஷேபகத்வ தாமமார்க்கப்ரதிஷ்டாபகத்வாதி ஸ்வபாவங்களைக்கண்டு. இயல்வு - ஸ்வபாவம்.

(நாட்டியநீசச் சமயங்கள் மாண்டன) சோழமண்டலத்திலே யிருக்கிற திவ்ய தேசங்களில்கோயில்களெல்லாம் வைஷ்யடிமபரான பாஷண்டிகள் பிடுங்கிப் பொகட்டுச் சிவாலயங்களைக் கட்டுவிக்கும்போது திருமங்கைமன்னன் திருவவதரித் தருளி அந்த பாஷண்டிகளுடனே ப்ரஸங்கித்து அவர்களைவென்று திவ்ய தேசங்களைக் கட்டடங்க நிர்வஹித்தார்; ஆளவந்தார், சோழன் ஸபையிலே ருத்ரபக்ஷ பாதிகளோடே ப்ரஸங்கித்து அவர்களை வென்று அந்தராஜாவாலே அர்த்தராஜ்யத்தைப் பெற்றார்; இங்கு அப்படியன்றிக்கே இவர் தம்முடைய காலத்திலே தானே அவ்யயபதேச்ய னென்பானொருவன் "சிவாத்பரதரம்நாஸ்தி" என்று சாஸநத்தையெழுதி இந்த பூமண்டலத்திலே ஸ்தாபிப்பதாக அநேக பகவத்பாகவத த்ரோஹங்களைப் பண்ணிக்கொண்டுபோந்து "நீசரும மாண்டனர்" என்கிறபடியே இவருடையயத்நமின்றிக்கே இவர் தம்முடைய அப்ரதிமப்ரபாவத்தைக் கண்டபோதே கழுத்திலே புண்பட்டு கிரிமிகண்டனாய் நசித்தான் என்றும், காளஹஸ்தியில் நின்றும சைவர்கள் திரண்டுவந்து திருவேங்கடமுடையானைத் தங்களுடைய கந்தநாயனார் என்று வழக்குப்பிடித்து அக்காலத்திலே ராஜாவான யாதவராயனாலேயும் பரிஹரிக்கவரிதாம்படி திருமலையை ஆக்ரமிக்க; அப்போது திருவேங்கடமுடையானுடைய விஷயீகாரத்தாலே எம்பெருமானாரெழுந்தருளி அவர்களை பராஜிதராக்கினவாறே அவர்க ளெல்லாரும தலையறுப்புண்டுபோனார்களென்றும், மேல் நாட்டிலே பௌத்த ஸமயத்தார் ப்ரபலராய அவ்விடத்தில் ராஜாவும் அவர்களுடைய சிஷ்யனாய் அத்தேசத்திலே தத்வ்யதிரிக்தர் இருக்கவுங் கூட வரிதாய்ப்போந்திருந்தகாலத்திலே இவரும யாத்ர்ச்சிகமாக அத்தேசத்திலே சில நாளெழுந்தருளியிருக்க, அந்தராஜாவும் இவருடைய வைபவத்தை ஸேவித்து அந்த பௌத்தர்க்கும் எம்பெருமானார்க்கும் ப்ரஸங்கம் பண்ணுவித்து அவர்களுடைய குதர்ஷ்டி கல்பநத்தையும், எம்பெருமானாருடைய ஸமீசீந கல்பநத்தையும் கண்டு வித்தனாய் இவர்திருவடிகளிலே ஆச்ரயித்து, பட்டாசார்யன் காலத்திலும் நசியாதே வேர்பாய்ந் திருக்கிற பௌத்தருடையவும் ஜைநருடையவும் தலைகளை யறுப்பித்து அத்தேசத்திலே அப்படிப்பட்ட நீசஸமயங்கள் நடையாடாதபடி பண்ணினாரென்றும் ப்ரஸித்தமிறே.

http://acharya.org

(நாட்டியவித்யாதி) ஆதித்யதர்சநத்தில் அந்தகாரம் நசிக்குமாப்போலே இவருடைய வைபவங்களைக்கண்டு ப்ரமாணதர்க்கங்களன்றிக்கே ஸ்வயுக்திஸ்த்தாபிதங்களாய், எத்தனைதரமுடையவராலும் நிவர்த்திப்பிக்க அசக்யங்களாய, வேதபாஹ்யங்களாகையாலே அதிநீசங்களாயிருக்கிற அவைதிகஸமயங்களெல்லாம் நிர்மூலமாய்ப் போயின. (நாரணனைக்காட்டிய வேதமகளிப்புற்றது) (నారాయణపరం బ్రహ్మ తత్త్వం నారాయణః పరః, నారాయణపరో జ్యోతిరాత్మా నారాయణః పరః, యచ్చ కించిజ్జగత్సర్వం దృశ్యతే శ్రూయతేఽపి వా, అంతర్బహిశ్చ తత్సర్వం వ్యాప్య నారాయణస్స్థితః) (நாராயணபரம்பாஹ்மதத்வம் நாராயணபர:, நாராயணபரோஜ்யோதிராத்மா நாராயணபர:, யச்சகிஞ்சிஜ்ஜகத்யஸ்மின் த்ருச்யதேச்ரூயதேபிவா, அந்தர்ப்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்திதஃ) என்றும, (నారాయణాద్ బ్రహ్మా జాయతే) (நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே) என்று தொடங்கி, (నారాయణ ఏవేదం సర్వం, యద్భూతం యచ్చ భవ్యం, నిష్కలో నిరంజనో నిర్వికల్పో నిరాఖ్యాతః శుద్ధో దేవ ఏకో నారాయణః, న ద్వితీయోఽస్తి కశ్చిత్, య ఏవం వేద, స విష్ణురేవ భవతి) என்றும, (ఏష సర్వభూతాంతరాత్మాఽపహతపాప్మా దివ్యో దేవ ఏకో నారాయణః) என்றும, (హ్రీశ్చ తే లక్ష్మీశ్చ పత్న్యౌ) என்றும் " நாராயணபரத்வத்தைக் காட்டுகிற வேதமானது பூர்வோத்தரபாகங்களிரண்டிலும் வைத்துக்கொண்டு, பூர்வபாகம் ஆராதநகாமஸ்வரூப ப்ரதிபாதகமாகையாலும், உத்தரபாகம் ஆராத்யப்ரஹ்மஸ்வரூபோபாய புருஷார்த்தப்ரதிபாதகமாகையாலும், இரண்டுக்கும் ஏகசாஸ்த்ரத்வத்தை இவ்வெம்பெருமானார் ஸமர்த்தித்து ஆஸேதுஹிமாசல ப்ரதிஷ்டை பண்ணுகையாலே இனி நமக்கொரு குறைகளுமில்லையென்று தேஜிஷ்டமாய கோயில்சாந்து பூசிக்கொண்டு இந்தலோகத்திலே நாவலிட்டு ஸஞ்சரியாநின்றது. களித்தல் - கர்விததல்.

(தென்குருகைவள்ளல் வாட்டமிலாவண்டமிழ் மறைவாழ்ந்தது) (திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும்) என்னும்படி தென்தேசத்துக்கெல்லாம் அலங்காரபூதமாய் தர்சநீயமான திருநகரியைத்தமக்குத்திருவவதாரஸ்த்தலமாகவுடையராய் பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை யநுபவிக்க அநுபவிக்க உள்ளடங்காமேதத்தநுபவபரீவாஹரூபங்களாய், "மொழிபட்டோடும் கவியமுதின் நுகர்ச்சியுறுமோமுழுதுமே" என்று-தம்மாலே ச்லாகிக்கப்படுமவையான ஸ்வஸூக்திகளை லோகத்தாரெல்லார்க்கும் ஸர்வாதிகாரமாம்படி உபகரித்தருளும் பரமோதாரரான நம்மாழ்வாராலே அருளிச்செய்யப்பட்டதாய் பாஹ்யகுத்ருஷ்டிகளால் அவிசால்யமாகையாலே ஒருகுறையுமின்றிக்கே யிருப்பதாய், "நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே" என்கிறபடியே - ஐஹிகபுருஷார்த்தத்தையும், "நிரனிறையாயிரத்து

http://acharya.org

இவைபத்தும்வீடே" "இவைபத்தும் பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்துபெரியவானுள்நிலாவுவரே" "அவாவிலந்தாதிப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே" என்கிறபடியே ஆமுஷ்மிகமான பரமபுருஷார்த்தத்தையும் கொடுக்கக்கடவதான ஔதார்யத்தையுடைத்தாயிருக்கிற த்ராவிடவேதமான திருவாயமொழியானது,"சடகோபன் தண்டமிழ்நூலவாழ" என்கிறபடியே - ஸமஸ்தப்ரபந்நஜநங்களும் மங்களாசாஸநம்பண்ணும்படி உஜ்வலமாய்த்து. வாட்டம் - ஸங்கோசம்.... ... ... (ருச)

உரை.—அ.—ஐம்பத்தஞ்சாம்பாட்டு எம்பெருமானார்ஸ்வபாவத்தைக் கண்டு வேதம் கர்வோத்தரமாயிற் றென்றார் - கீழ்; இப்படி ஒருவர் அபேக்ஷியாதிருக்கத் தாமே, ஸகலவேதங்களும் பூமியிலே நிஷ்கண்டகமாக நடக்கும்படி பண்ணின ஔதார்யத்திலே யீடுபட்டு அவரை ஆச்ரயித்திருக்கும் குடி எங்களை ஆளவுரிய குடியென்கிறார் - இதில்.

மூ.—கண்டவர்சிந்தைகவருங்கடிபொழில்தென்னரங்கன்
தொண்டர்குலாவுமிராமாநுசனைத்தொகையிறந்த
பண்டருவேதங்கள்பார்மேல்நிலவிடப்பார்த்தருளும்
கொண்டலைமேவித்தொழுங்குடியாமெங்கள்கோக்குலமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொகையிறந்த	(அநந்தா வை வேதா:) என்கிற படியே ஒரு தொகையில்லாதபடி அநந்தமாய,	கடி	பரிமளத்தையுடைத்தான,
பண்டரு வேதங்கள	உதாத்தாதியான ஸ்வரங்களுக்கு ப்ரகாசகங்களாயிருக்கிற வேதங்களானவை,	பொழில்	திருச்சோலைகளையுடைத்தாய்,
பார்மேல் நிலவிட	பூமியிலே வர்த்திக்கும்படி,	தென்னரங்கன் தொண்டர்	தர்சநீயமான கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிறபெரியபெருமாள்திருவடிகளுக்குசேஷபூதரானவர்கள்,
பார்த்தருளும	பண்ணியருளின,	குலாவும்	அந்த ஸ்வபாவத்துக்குத்தோற்றுக் கொண்டாடும்படியிருக்கிற,
கொண்ட	பரமோதாரராய்,	இராமாநுசனை	எம்பெருமானாரை,
கண்டவர் சிந்தை	கண்டவர்கள் நெஞ்சை,	மேவி	தத்ஸ்வபாவத்திலே யீடுபட்டு
கவரும்	அபஹரியாநிற்பதாய.	தொழும் குடி	விஷயாந்தர விமுகராயாஶ்ரயித்திருக்குங்குலம்,

http://acharya.org

பதம்.	உரை.
எங்கள் கோக்குலமாம்	தத்ஸம்பந்திகளை உத்தேச்யரென்றிருக்குமெங்களை ஆளவுரியகுலமாயிருக்கும.

எங்கள் கோக்குடி யென்றது-எங்களுக்குக்கோவானகுடி என்றபடி. கண்டவர் சிந்தைகவரும் என்றவிது-பெரிய பெருமாளுக்கு விசேஷணமாகவுமாம். கடி-மணம். குலாவுதல்-கொண்டாட்டம். நலவுதல்-வாத்தித்தல். பண்டருவேதங்கள்என்கிறவிடத்தில பண்டேயுள்ளதாய அரிதாயிருக்குதுள்ள வேதங்களென்று, வேதங்களினுடைய அநாதித்வத்தையும அலப்யத்வத்தையும் சொல்லுகிறதாகிலோவெனனில்; (பண்டையருவேதம்)என்றுபாடமாயிற்றாகில் அப்படிபொருள் சொல்லலாம; பண்டுஎன்கிறசப்தம-பூர்வகாலத்துக்கு வாசகமாமித்தனை யல்லது பூர்வகாலீநமானதத்துக்குவாசகமாகாமையாலே அப்படி சொல்லப்போகாது; (பண்டை நாளாம)(பணடைக்குலம)(பண்டையோமலமெலாம்) எனறும, (பணடுநூற்றுவா) (பண்டுமெல்லாம்) (பணடொருநாளாலினிலைவளாந) எனறுமஇத்யாதிஸ்தலங்களிலே இந்தவிபாகம கண்டுகொளவது. ... ... (௫௩)

வ்யா.—அ.—ஐமபத்தஞசாமபாட்டு. கீழ்ப்பாட்டிலே - வேதமானது எமபெருமானுடைய வைபவத்தைககண்டுகர்வித்து,தனக்கு ஒருவரும் லக்ஷயமாகமாட்டார்களென்று பூலோகத்திலே ஸஞ்சரியாநின்றதென்றார்; இதிலே-அப்படி அந்தவேதங்களை ஒருவர்அபேக்ஷியாதேயிருக்கத தாமே நிஷ்கணடகமாக ப்ரவாத்தி்பித்த ஔதார்யத்தையுடையராய ஸகலஜநமநோஹரமாய,பரிமளத்தையுடைய திவ்யோதயாநங்களாலே சூழப்பட்டு தாசநீயமான கோயிலுக்கு ஸ்வாமியான பெரியபெருமாளுடைய அடியாரான ஆழ்வாரகளைககொண்டாடுகிற எம்பெருமானாருடைய இநத ஸ்வபாவஙகளிலே யீடுபட்டு ஆச்ரயித்திருககுமவாகளுடைய குலத்தாா, எங்களை ஆளக்கடவ ஸ்வாம்தவததையுடைய குலத்தாரென்கிறார்.

வ்யா.—(தொகையிறந்த) வேதங்களை எண்ணப்புக்கால், "𑌅𑌨𑌨𑍍𑌤𑌾 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌃" "அநந்தாவைவேதா:" என்கையாலே எணணித் தலைக கட்டப்போகாதிறே. தொகை - ஸங்க்யை. இப்படி ஒருதொகையிலடங்காதபடி அநந்தமாய். (பண்தருவேதஙகள) பண் என்று - காநமாய், அதுதானும் இங்கு உதாத்தாநுதாத்த ஸ்வரிதப்ரசயாத்மகமாய், அந்தஸ்வரங்களும் சாகாபேதேந பஹுவிதங்களாய், அவற்றுக்குப்ரகாசகமானவேதங்களென்னுதல்;எல்லார்க்கும்அவ்வவஸ்வரபரிஜ்ஞாநத்தைக் கொடுக்கவல்ல வேதங்களென்னுதல்.

http://acharya.org

(సమస్తాజ్ఞాతవ్యార్థాంశ్చ వేదయతీతి వేదః;) (ஸமஸ்தாந்ஜ்ஞாதவ்யார்த்தாம்ஶ்ச வேதயதீதி வேத:) என்று ஆராதநாராத்யோபயாத்மகமான அர்த்தத்தை அபேக்ஷித்தவர்களுக்கு அடைவே யறிவிப்பிக்கும தாகையாலே வேதமென்று பேராயிருக்கிறது.

(பண்டருவேதங்கள்) எனகிறவிடத்தில், பண்டென்று-பூர்வ காலீநமாய், அரு என்று-தெரியவரிதாயிருக்கும் வேதங்களென்று பொருளாறுலோவென்னில்; பண்டு என்று - காலமாத்ரவாசக மாகையாலே காலீநதைச்சொலலமாட்டாது, பண்டை என்றால் காலீநத்தைசசொல்லலாம்; - (பண்டைநான்மறை) (பண்டைக்குலம்) (பணடையோமல்லோம்) என்று - இவை காலீநத்துக்கு உதாஹரணங்கள். (பண்டுநூற்றுவர்) (பண்டொருநாள்) என்று இவை பூர்வகாலவாசகத்துக்கு உதாஹரணங்கள். ஆகையாலே, பண்டு என்று பதமபண்ணிலும் காலபரமாய்ப்போமித்தனை யொழிய காலீநபரமாகமாட்டாது. ஆக பண்தரு என்றுபதச் சேதமபண்ணிலுல்தான் ஸுஸங்கதமென்று உரையிலேஜீயருமரு ளிசசெய்தாரிறே. இப்படி யிருந்துள்ள ரிக்யஜுஸ்ஸாமாதர்வண ருப சதுர்வேதங்களும், பராசர பாராஶர்ய ப்ராசேதஸாதி பரம ரிஷிகளாலே அவகாஹிக்கப்பட்ட வேதாந்தங்களும. (பார்மேல்) மஹாப்ருதிவியிலே. (நிலவிடபார்த்தருளும்) ஜநபௌத்ராதி பாஹ்யரோடேமுடிவிதது வேதங்களை ஆஸேதுஹிமாசலம வ்யாபிகுகும்படி பண்ணியருளின. நிலவுதல் - வர்த்தித்தல். இவர்தாம வேதமாக்சப்ரதிஷ்டாபநாசார்யரிறே. (கொண்டலை) ஜலஸ்த்தல விபாகமற வர்ஷிக்கும மேகமென்னலாம்படி வதாந்ய ராய.

(கண்டவா சிநதைகவரும)ஸூக்கண்டத்வயஸௌரஸ்ஸ்நிகத்தநீ ரோபகண்டாயாவிரமோத ஸ்திய்தமுகுநாநாதிதப்ரஹ்மகோஷா ம,மார்கேமாக்கேபதிகநிவஹைஹ்ருஶ்யமாநாபவர்ககாஂபாடிஶ்யந்தாஂபுநாபிபுரீஂஶ்ரீமத்ஂரங்கதாமந:)(శృంగిత్రయ్యాయసుసరస్సస్నిగ్ధనీరోపకంఠా మాకరోత్తేజస్తినత్తరకుల నాదిత్రబ్రహ్మఘోషామ్, మార్గేమార్గే పథికనివహైరుజ్ఝ్యమానా పవర్గా పశ్యేయం తాం పునరపి పురీం శ్రీమతీం రంగధామ్నః) எனகிறபடியே தன்னைப் பாரக்கிறவாகளுடைய மநஸ்ஸை அபஹரித்துத் தன்வசமாக்கி, பாராதபோது "இருமபவும்காண்கிறதெப்போதோ" என்றுஆகாங்க்ஷிககுமபடி நிற்பதாய. கவருகை-க்ரஹிக்கை. (கடிபொழில தென்னரங்கன) பரிமள ப்ரசுரங்களான சோலைகளாலே சூழப்பட்டும், விமாந மண்டப கோபுர ப்ராகார உத்யாநங்களாலே நிபிடமாயும, தவஜ பதாகாதிகளாலே அலங்க்ருதமாயு மிருக்கையாலே தர்ஶநீயமாயிருக்கிற கோயிலிலே நித்யவாஸம்பண்ணி அதுவே நிரூபகமாம்படி யிருக்கிற திருவரங்கச் செல்வனுருடைய. கடி - பரிமளம.

"கண்டவர் சிந்தைகவரும் கடி" என்று - பரிமளத்துக்கு விசேஷணமாகச் சொல்லவுமாம். அன்றிக்கே, (கண்டவர் சிந்தை கவரும் - தென்னரங்கன்) என்று - பெரியபெருமாளுக்கு விசேஷணமாகச் சொல்லவுமாம். (సర్వగంధః) (ஸர்வகந்த:) என்று சொல்லப்படுகிற வவரோட்டை ஸ்பர்ஶத்தாலே காணும் அவ்விடத்தே யிருந்த திருச்சோலைகளுக்கு (கடிபொழில்) என்று நிரூபிக்கும்படி பரிமளமுண்டாவது. (தொண்டர்குலாவும்) (கண்டேன் திருவரங்கமேயான்திசை) என்றும், (இனியறிந்தேன் தென்னரங்கத்தெந்தை) என்றும், (தேனார்திருவரங்கம) என்றும், (பண்டரங்கமேயதுவும) என்றும, (கிடகொடி மதிள்சூழ் திருவரங்கத்தாய்) என்றும், (அரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும் கடலவிளங்கு கருமேனியம்மானறனைக கண்ணாரககண்டு) என்றும், (அணியரங்கத்தேகிடந்தாய்) என்றும், (அரங்கத்தம்மா) என்றும், (அண்டர்கோனணியரங்க னென்னமுதினைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே) என்றும், (தின்னடியிணையடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே) என்றும் - அவருடைய போக்யதையிலே யீடுபட்டிருக்கிற பொய்கையார் தொடக்கமான ஆழ்வார்கள் பத்துப்பேரையும், (அனறெரிதத திருவிளக்கைத் தன திருவுள்ளத்தேயிருத்தும்) இதயாதிகளில சொல்லுகிறபடியே கொண்டாடி நிற்கிற. அவர்கள் பக்கலிலே எப்போதும ப்ரதிபத்தி பண்ணிக் கொண்டு போராநிற்கிறவென்றபடி. குலாவுதல - கொண்டாட்டம்.

(இராமாநுசனை) எம்பெருமானாரை. (மேவித்தொழுங்குடி) அவருடைய ஸ்வபாவங்களிலே அதயபிநிவிஷ்டசித்தராய விஷயாந்தரவிமுகராய ஆச்ரயித்திருக்குமவர்களுடைய திருவசத்தாரடங்கலும். (ஆமெங்கள் கோககுடியே) தத்ஸம்பந்திகளே உத்தேச்யரென்றிருக்கும் எங்களை அடிமைகொள்ள வல்லவருடைய திருவசத்தாராவர். தமக்கு ஒருவருக்குமேயன்று, தமமுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் இக்குடியொன்றுமே வகுத்த சேஷியென்றுகாணும் இவருடைய ப்ரதிபத்தி யிருக்கும்படி. அன்றிக்கே, எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயித்தவர்கள் எந்தக் குலத்திலே அவதரித்தாலும அந்தக்குலமே எங்களை யெழுதிக்கொள்ள வல்லஸ்வாமியாமென்று யோஜிக்கவுமாம். (త్వద్దాసదాసగణనాచరమావధౌయ స్తద్దాససైకరసతావిరతామమాస్తు) (த்வத்தாஸதாஸகணநாசரமாவதௌய ஸ்தத்தாஸதைகரஸதாவிரதாமமாஸ்து) என்று இவ்வர்த்தத்தையே யிறேஜீயரும் ப்ரார்த்தித்தருளினது. (సారజ్ఞోయదికశ్చిదస్తిభువనేనాథస్స యూథస్యనః) (ஸாரஜ்ஞோயதிகஶ்சிதஸ்திபுவநேநாதஸ்ஸயூதஸ்யந:) என்று அபியுக்தரும் அருளிச்செய்தாரிறே. (குலந்தாஙகுசாதிகள்

http://acharya.org

நாலிலுங்கீழிழிந்தெத்தனை, நலந்தானிலாத சண்டாளசண்டாளர்களாகிலும், வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணர்க்காளென்றுள், கலந்தார் அடியார் தம்மடியாரெம்மடிகளே) என்றாப்போலே அருளிச்செய்தாராய்த்து. ... ...(ருரு)

உரை.—அ.— ஐம்பத்தாறும்பாட்டு. "கொண்டலைமேவித் தொழுங்குடியாமெங்கள் கோக்குலம்" என்று இவர் சொன்னவாறே, முன்பும் ஒரோவிஷயங்களிலநின்றால் இப்படியன்றோ நீர் சொலலுவது, இதுவும் அப்படியன்றோவென்ன; எம்பெருமானுரை ஆச்ரயித்தபின்பு எனவாங்மநஸ்ஸுக்கள் இனி வேறொரு விஷயமறியாதென்கிறார்.

மூ.—கோக்குலமன்னரைமூவெழுகாலொருகூர்மழுவால்
போக்கியதேவனைப்போற்றும்புனிதனபுவனமெங்கு
மாக்கியகீர்த்தியிராமாநுசனையடைந்தபின்என்
வாக்குரையாதெனமநமநினையாதினிமற்றொன்றையே. ()

பதம்.	உரை.
கோக்குல மன்னரை	ஐசவர்யததாலே ராஜகுலததை ப்ராபிகதையனறிககே க்ஷத்ரியகுலோத்பவரானராஜாககளை,
மூவெழு கால்	"இருபத்தொரு காலரசுகளை கட்ட" எனகிறபடியே இருபததொருகால்,
ஒரு	அதவிதீயமாய்,
கூர்	கூரியதாயிருக்கிற,
மழுவால்	மழுவாலே நிரஸித்த,
போக்கிய தேவனை	விரோதிநிரஸநப்ரயுக்தமான ஔஜ்வல்யததை யுடைய ஸர்வேச்வரனை,
போற்றும்	அந்தகுண ஜிதராய்க்கொணடு ஏத்தாநிறபாராய்,
புனிதன்	ஸ்வ ஸம்பந்தத்தாலே அசுத்தரையும் சுத்தராக்கவல்ல பரமபாவநபூதராய்,

பதம்.	உரை.
	"இப்பார் முழுதும் போர்த்தான புகழ்கொண்டு" எனகிறபடியே,
புவநமெங்கும்	லோகமெங்கும்,
ஆக்கிய	வ்யாபிக்கும்படிபண்ணின,
கீர்த்தி	கீர்த்தியையுடைய,
இராமாநுசனை	எம்பெருமானுரை,
அடைந்த பின்	ஆச்ரயித்தபின்பு,
இனி	மேலுள்ளகாலமெல்லாம்,
மற்றொன்றை	வேறொரு விஷயத்தை,
என்வாக்கு	என்னுடையவாக்கானது,
உரையாது	கீர்த்தியாது;
என்மநம்	என்னுடைய மநஸ்ஸானது,
நினையாது	ஸ்மரியாது.

http://acharya.org

பதம். உரை. பதம். உரை.

போற்றுதல்-புகழுதல். புனிதன்-சுத்தன் கரணங்களுக்கு வ்விஷயத்தில் அநந்யார்ஹராம்படிவிளைந்த ப்ராவண்யத்தைக்கண்டப்ரீத்யதிசயத்தாலே, "என்வாக்கு, என்மநம்" என்றுதனித்தனியே ச்லாகித்தருளிச்செய்கிறார். "அடைந்ததற்பின் வாக்குரையாது, என்மநம்நினையாது" என்றும பாடம் சொல்லுவர்கள். பரசுராமாவதாரம் அஹங்கார யுக்தஜீவனை அதிஷ்டித்து நிற்கையாலே முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யமன்றோ, "போக்கிய தேவனைப்

போற்றும் புனிதன்" என்பானேன்னென்னில; அதுக்குக் குறையில்லை; விரோதி நிரஸநம் பண்ணின உபகாரத்துக்குத் தோற்று ஸ்துதிக்கிற மாத்ரமொழிய தத் உபாஸந மல்லாமையாலே, "மன்னடங்கமழுவலங்கைக் கொண்ட விராம நம்பி" என்றும, "வென்றிமாமழுவேந்தி முன் மண்மிசை மன்னரைமூவெழுகால்கொன்றதேவா" என்றும, ஆழ்வார்களருளிச்செய்ததும விரோதிநிரஸநஸ்வபாவத்துக்குத் தோற்றுத் துதித்ததனையிறே. ... (௫௬)

வ்யா.—அ.—ஐம்பத்தாறும்பாட்டு. "கொண்டலைமேவித் தொழுங்குடியாமெங்கள் கோக்குடி" என்றுசொன்னவாறே, நீர் இப்போது எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை யநுபவித்துவித்தராய்ச்சொன்னீர், நீர்விஷயாந்தரங்களைவிரும்பினபோது முற்காலத்தில் அப்படியேயன்றோ சொல்லுவது, ஆகையாலே உமக்கு இது ஸ்வபாவமாயவிட்டபின்பு இவரையே பற்றியிருக்கிறேனென்ற விது நிலைநிற்கக்கடவதோவென்று சிலர் ஆக்ஷேபிக்க; அவர்களைக்குறித்து நான் துர்வாஸனையாலே விஷயாந்தரங்களை விரும்புவதாக யத்நித்தேனாகிலும என்னுடைய வாக்கும் மநஸ்ஸும் அவற்றைவிரும்ப இசையாதேயிருந்ததென்கிறார்.

வ்யா.—(கோககுலமன்னரை) த்ரேதாயுகத்திலே கார்த்தவீர்யார்ஜுநனென்பானொருராஜா மஹாபலபராக்ரமசாலியாய ஒருவரும் எதிரின்றிக்கே திரியாநிற்கிறகாலத்திலே ஒருநாள் ஜமதக்நி மஹாரிஷியினுடைய ஆச்ரமத்திலேசென்று ப்ரஸங்காத் ராஜ்யகர்வத்தாலே அவனை ஹிம்ஸித்துப்போக; அந்தரிஷிபுத்ரனான ஸ்ரீபரசுராமாழ்வான் அச்செய்தியைக் கேட்டு மிகவும குபிதனாய தத்க்ஷணத்திலே தானே அந்தராஜாவைக் கொன்றும் பித்ர்வத ஜந்யமான கோபம் சமியாமையாலே "ராஜகுலத்தையெல்லாம் நிக்ஷத்ரமாகப் பண்ணக்கடவோம" என்று ஸங்கல்பித்து பூமியிலுள்ள ராஜாக்களையெல்லாம் ஸம்ஹரித்து சிறிதுநாள்தபஸ்ஸு பண்ணிக்கொண்டுபோந்து பின்னையும் க்ஷத்ரியகுலம் உத்பந்நமாய்க் கொழுந்துவிட்டுப் படர்ந்தவாறே அத்தைக்கண்டு திரியட்டும் முன்புபோலே நிக்ஷத்ரமாகப் பண்ணி, இப்படி

http://acharya.org

இருபத்தொருதலைமுறை க்ஷத்ரியராஜாக்களையெல்லாம் ஸம்ஹரித்து அவர்களுடைய ரக்தத்தாலே திலதர்ப்பணம் பண்ணினான் என்று ப்ரஸித்தமிறே. அப்படி ரோஷாவிஷ்டனாய் நின்றபோது வேறொரு குலத்திலே பிறந்தார் ராஜ்யம் பண்ணிக்கொண்டிருந்தாலும் அவர்கள்வழிபோகாதே க்ஷத்ரிய குலமாத்ரத்தையே ஸம்ஹரித்தபடியை யருளிச்செய்கிறார்.

(கோக்குலமன்னரை) வேறொருகுலத்தில் பிறந்து ஐச்வர்யத்தாலே ராஜகுலத்தை ப்ராபிக்கையன்றிக்கே ஸாக்ஷாத்க்ஷத்ரிய குலோத்பவரான ராஜாக்களை.(மூவெழுகால)மூவெழுதரம் "இருபத்தொருகாலரசுகளைகட்ட" என்கிறபடியே - இருபத்தொருதலைமுறையென்றபடி. (ஒருகூரமழுவால) ஆவேசாவதாரமான ஸ்ரீ பரசுராமாழ்வானுக்கு நிரூபகமா யிருக்கையாலே அத்விதீயமாய் இருபத்தொரு பர்யாயம் க்ஷத்ரியரை ஸம்ஹரிக்கத் தக்கதான கூர்மையையுடையபரசுவாலே. (போக்கியதேவனை) விரோதிநிரஸநப்ரயுக்தமான ஔஜ்வல்யத்தையுடைய ஸாவேசவஸ்துவை யென்றபடி. இப்படிப்பட்ட தொழில்களெல்லாம் அந்த அவதாரத்தில் பண்ணின க்ரீடையாகையாலே ஏவம்ப்ரகாரமான க்ரீடாயுக்தனை யென்றுதல். (போற்றும்) ஆச்ரயித்திருக்கிற; மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டிருக்கிற. போற்றுதல்-புகழ்தல்.(விநாசாய ச து்ஷ்க்ருதாம்) (விநாசாய சதுஷ்க்ருதாம்) என்கிறபடியே ஆச்ரித விரோதி நிரஸநசீலமாகிற குணத்திலே தோற்று ஏத்தாநின்றார்கள்காணும். மஹாபாரத பாஞ்சராத்ராதிகளாலும், நமமுடையபூர்வாசார்யர்களாலும், ப்ரஹ்மருத்ராஜநவ்யாஸசுகதஸ்த ஜாமதக்ந்யாதிகள் அநுபாஸ்யரென்று பஹுமுகமாகச் சொல்லியிருக்க, எம்பெருமானார் பரசுராமாழ்வனை ஏத்துகிற விது சேருமோவென்னில்; அந்த அவதாரம் எம்பெருமானுடைய அஹங்காரயுக்த ஜீவாவேச மாகையாலே அவனாலே செய்யும் அம்சத்துக்கு எம்பெருமானார் ஈடுபட்டு ஸ்துதித்தாரென்று சொன்னேனித்தனை யொழிய தநுபாஸநம் பண்ணுகிறாரென்று சொல்லாமையாலே விரோதமில்லை. (மன்னடங்க மழுவலங்கைக் கொண்டவிராமநம்பியென்றும், (வெறிமாமழுவேந்தி முன்மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்றதேவா) என்றும், * மயர்வறமதிநலமருளப்பெற்றவர் அருளிச்செய்ததும் விரோதிநிரஸநஸ்வபாவத்துக்குத் தோற்று. (புனிதன்) பகவந்மங்களாசாஸநத்தாலே பரிசுத்தஸ்வபாவராய், தம்மை ஆச்ரயித்தவர்களையும், (ஆத்மஸாம்யாவஹத்வாத்) (ஆத்மஸாம்யாவஹத்வாத்) என்று சொல்லப்பட்ட ஸ்வஸாம்யத்தை யுடையராம்படி பண்ணவல்லபாவநதமர். புனிதன்-சுத்தன். (புவநமெங்குமாக்கியகீர்த்தி) "இப்பார்

முழுதும் போர்த்தான் புகழ்கொண்டு" என்கிறபடியே - இந்த லோகமெங்கும்வ்யாபிக்கும்படிபண்ணின கீர்த்தியையுடையரான. (இராமாநுசனை) எம்பெருமானாரை. (அடைந்தபின்) ஆச்ரயித்த பின்பு. இங்கே, "அடைந்தற்பின்" என்றும் பாடம்சொல்லுவர்கள். ஆகிலும் அர்த்தபேதமில்லை. (இனி மற்றொன்றை) மேலுள்ள காலமெல்லாம் வேறொரு விஷயத்தை. (என் வாக்குரையாது, என் மநம் நினையாது) முற்காலமெல்லாம் அஸத்யபாஷணத்தையும் அஸத்கீர்த்தநத்தையும் பண்ணிக்கொண்டு போந்தவென்னுடைய வாக்கானது எம்பெருமானாரை ஆச்ரயித்தபின்பு அவருடைய திவ்ய குணங்களையே கீர்த்தியாநிற்கு மித்தனையொழிய வேறொன்றைக் கீர்த்திக்கமாட்டாது முற்காலமெல்லாம் பாபசிந்தையைத் தானே பண்ணிக்கொண்டு போந்த என்மநஸ்ஸானது அவரை ஆச்ரயித்த பின்பு அவருடைய திவ்ய குணங்களிலே யீடுபட்டு ஸர்வதா அவைதன்னை மநநம் பண்ணிக்கொண்டிருக்கு மித்தனையொழிய வேறொன்றை ஸ்மரிக்கமாட்டாதென்று அருளிச்செய்தாராய்த்து. (తృణీకృతవిరించాదినిరంకుశవిభూతయః। రామానుజపదాంభోజసమాశ్రయణశాలినః) (த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குஶ விபூதய:-ராமாநுஜ பதாம்போஜஸமாஶ்ரயண ஶாலிந:) என்னக்கடவதிறே. (ருசு)

உரை.—அ.— ஐம்பத்தேழாம்பாட்டு. "இனியென்வாக்குரையாது, என மநம் நினையாது" என்பானென், விபூதி இதுவாகையாலே அஜ்ஞாநம்வரிலோவென்ன; எம்பெருமானாரை இந்த லோகத்திலே லபித்தபின்பு, விவேகமின்றியே கண்டதொன்றை விரும்பக்கடவ பேதைத்தநம் ஒன்றுமறியேனென்கிறார்.

மூ.—மற்றொருபேறுமதியாதரங்கன்மலரடிக்கா
ளுற்றவரேதனக்குற்றவராகக்கொள்ளுமுத்தமனை
நற்றவர்போற்றுமிராமாநுசனையிந்நானிலத்தே
பெற்றனன்பெற்றபினமற்றறியேனொருபேதைமையே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மற்றொரு பேறு	வேறொரு ப்ரயோஜநங்களை,	தனக்குற்றவராக	தமக்கு பந்துபூதராக,
மதியாது	ஒன்றாக நினையாதே,	கொள்ளும்	அங்கீகரிக்கும்,
அரங்கன்	பெரிய பெருமாளுடைய,	உத்தமனை	உத்தமாதிகாரிகளாய், ஸௌஸகத்வ அவிளம்பபலப்ரதத்வ ஸ்வரூபாநுரூபத்வாதிகளாலே ஸர்வதபஸ்ஸுக்களிலும் வைத்துக் கொண்டு,
மலர்	நிரதிசயபோக்யமான,		
அடிக்கு	திருவடிகளுக்கு,		
ஆளுற்றவரே	அடிமையே புருஷார்த்தமென்று அதிலே ஊன்றியிருக்குமவர்களையே,		

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
நல்தவர்	விலக்ஷண தபஸ்ஸான ஸரணாகதி தர்மநிஷ்டரானவர்கள்,	பெற்றனன்	லபித்தேன்;
போற்றும்	தம்முடைய வைபவத்தையே சொல்லிப் புகழும் படியான,	பெற்றபின்	லபித்ததற்குப்பின்பு,
இராமாநுசனை	எம்பெருமானாரை,	மற்று	இத்தையொழிய,
இந்நாளிலத்தே	இந்தலோகத்திலே,	ஒருபேதைமை அறியேன்	ப்ராப்தா ப்ராப்த விவேகம் பண்ணாதே கண்டதொன்றிலே மேல் விழுகைக் குறுப்பான அஜ்ஞாநம் கண்டிலேன்.

ஆகலால் மேலும் உண்டாகக் கூடாதென்று கருத்து.... (௵)

வ்யா.—அ.—ஐம்பத்தேழாம்பாட்டு. "இனியென்வாக்குரையாது, என்மநம் நினையாதுமற்றொன்றையே" என்றீர், * இருள்தருமாஞாலத்திலேஇந்நாளிலேஇந்தநியமம் நிலைநிற்குமோ,"చఞ్చలంహిమనః" (சஞ்சலம்ஹிமந:) என்று - மநஸ்ஸு ஒருவிஷயத்தில் தானே ஸர்வகாலமும் நிற்கமாட்டாதிறே; ஆகையாலே மற்றொரு காலத்திலே மநஸ்ஸுவ்யபிசரித்து அஜ்ஞாநத்தை விளைத்தாலோ என்று ஆக்ஷேபித்தவர்களைக்குறித்து, நீங்கள் சொன்னதே ஸத்யம், ஆகிலும் நான் கீழே இழந்துபோன நாள்போலேயன்று இந்நாள், இப்போது தந்தாமுடைய பாரமைகாந்த்யத்தாலே ஸ்ரீரங்கநாதனுடைய பரம போக்யமான திருவடிகளுக்கு அடிமைப்படுகையே பரமபுருஷார்த்தமென்று அத்யவஸித்திருக்குமவர்களையே தமக்கு பந்துபூதராக அங்கீகரித்துக்கொண்டு, ப்ரபந்நகுலோத்தேச்யராய ஸர்வதபஸ்ஸுக்களிலும் வைத்துக்கொண்டு விலக்ஷணதபஸ்ஸான ஸரணாகதி தர்மத்திலே நிஷ்டரானவர்கள் தம்முடையவைபவத்தைச்சொல்லிப் புகழும்படியான எம்பெருமானாரை இந்தலோகத்திலே லபித்தேன், ஆனபின்பு, ப்ராப்தாப்ராப்த விவேகமின்றிக்கே கண்டதொன்றை விரும்பக்கடவதான அஜ்ஞாநமானது என்னிடத்திலே சேரக்கண்டிலேனென்கிறார்.

வ்யா.—(மற்றொருபேறுமதியாது)"నమాందుష్కృతినోమూఢాః ప్రపద్యన్తేనరాధమాః। మాయయాపహృతజ్ఞానాఃఆసురంభావమాశ్రితాః॥ కలౌజగత్పతింవిష్ణుం సర్వస్రష్టారమీశ్వరమ్। నార్చయిష్యన్తిమైత్రేయ పాషణ్డోపహతాజనాః। కామైస్తైస్తైర్హృతజ్ఞానాః ప్రపద్యన్తేన్యదేవతాః" (நமாம்துஷ்க்ருதிநோமூடா: ப்ரபத்யந்தே நராதமா:- மாயயாபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரம் பாவமாச்ரிதா:-

http://acharya.org

கலௌஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீஶ்வரம், நார்ச்சயிஷ்யந்திமைத்ரேய பாஷண்டோபஹதாஜநா: - காமைஸ்தைஸ்தைர் ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தேந்யதேவதா:) என்று நிஷேதித்தபடியேஸத்துக்களுடைய உபதேசாதிகளாலேதெளிந்துகொண்டு, "అనన్యార్హశేషత్వామ్" "వ్యవసాయాత్మికా బుద్ధిరేకేహ కురునన్దన । మయి చానన్యయోగేన భక్తిరవ్యభిచారిణీ" "அநந்யாஶ் சிந்தயந்தோமாம்" "வ்யவஸாயாத்மிகாபுத்திரேகேஹ குருநந்தந - மயிசாநந்யயோகேநபக்திரவ்யபிசாரிணீ" என்கிறபடியேதகேதநிஷ்டராய், "ఏకాన్తినో వినిశ్చిత్య దేవతావిషయాన్తరమ్। భక్త్యుపాయం సమం కృష్ణప్రాప్తౌ కృష్ణైకసాధనః" "ஏகாந்திநோவிநிஶ்சித்யதேவதாவிஷயாந்தரம்- பக்த்யுபாயம்ஸமம் க்ருஷ்ணப்ராப்தௌ க்ருஷ்ணைகஸாதந:" என்னுமபடி தேவதாந்தர மந்த்ராந்தர ப்ரயோஜநாந்தரங்களைஸ்மரியாத பாரமைகாந்த்யதாலே. மதிக்கை-விரும்புகை.

(அரங்கன்மலரடிக்கு) ("రఙ్గరఙ్గేతి బ్రూయాత్ యోజనానాం శతైరపి। ముచ్యతే సర్వపాపేభ్యో విష్ణులోకం స గచ్ఛతి" "ఇదం హి రఙ్గం త్యజతామిహాఙ్గమ్" (ரங்கம் ரங்கமிதிப்ரூயாதயோஜநாநாம் ஶதைரபி-முச்யதே ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம் ஸ கச்சதி - இதம்ஹி ரங்கம் த்யஜதாமிஹாங்கம்) என்னுமபடி ப்ரஸித்ததமமான ஸ்ரீரங்கநகரத்தைத் தனக்கு இருப்பிடமாகவுடையனாய அதுவே நிரூபகமாம்படி எழுந்தருளியிருக்கிற ஸ்ரீரங்கநாதனுடைய, "సర్వే వేదా యత్పదమామనన్తి" "విష్ణోః పదే పరమే మధ్వ ఉత్సః" "ஸர்வே வேதா யத்பதமாமநந்தி", "விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:" என்றும், "కదా పునశ్శఙ్ఖరథాఙ్గకల్పకధ్వజారవిన్దాఙ్కుశవజ్రలాఞ్ఛనమ్। త్రివిక్రమ త్వచ్చరణామ్బుజద్వయం మదీయమూర్ధానమలఙ్కరిష్యతి" "కదాహం భగవత్పాదామ్బుజద్వయం శిరసా సఙ్గ్రహీష్యామి" "கதாபுநஶ்ஶங்கரதாங்க கல்பகத்வஜாரவிந்தாங்குஶவஜ்ரலாஞ்சநம்- த்ரிவிக்ரம த்வச் சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி" "கதாஹம்பகவத பாதாம்புஜத்வயம்ஶிரஸா ஸங்க்ரஹீஷ்யாமி" என்னும் சொல்லுகிறபடியே வேதாந்தவாக்ய ஸாவஸ்வமாய், நித்ய நிரதிஶயபோக்யமாய், ஸர்வலக்ஷணோபேதமாய, அத்யந்த ப்ராக்ருததநீயமாய, புஷ்பஹாஸஸுகுமாரமாய, ஸேவித்தவர்களை அநந்யார்ஹராம்படி பண்ணக்கடவதான திருவடிகளுக்கு.

(ஆளுற்றவரே) "దాసోహం వాసుదేవస్య" "శ్రీభర్తుర్నరహరితనోర్దాస దాసస్య దాసః" "தாஸோஹம்வாஸுதேவஸ்ய" "லக்ஷ்மீபர்த்துர் நரஹரிதநோர்த்தாஸதாஸஸ்யதாஸ:" என்றும், "பொன்னாழிக்கையென்னம்மான் நீக்கமில்லாவடியார்" என்றும் சொல்லுகிறபடியே * வழுவிலாவடிமைகளிலே அந்வயித்து, "முகில்வண்ணனடியையடைந்தருள்சூடி யுய்ந்தவன்" என்றும், "ஆதலால்வந்துன்னடி

http://acharya.org

பிணையடைந்தேனணிபொழில் திருவரங்கத்தம்மானே" என்றும் அதுவே பரமபுருஷார்த்தமென்றத்யவஸித்திருக்கிறபராங்குஶ பரகாலாதிகளே (தனக்குற்றவராகக்கொள்ளும்) "బాన్ధవా విష్ణుభక్తాశ్చ" "பாந்தவா விஷ்ணுபக்தாஶ்ச" என்றும், "మాతాపితాయువతయస్తనయావిభూతిస్సర్వం" "மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ் ஸர்வம்" என்றும் சொல்லுகிறபடியே மாதாபிதாப்ரப்ருதியான ஸர்வவித பந்துக்களாக அநுஸந்தித்திருக்குமவராய். (உத்தமனை) கீழ்ச்சொன்ன அதிகாரிகளெல்லாரிலுமவைத்துக்கொண்டு உத்தமாதிகாரியாய். ஆசார்யராயென்றபடி.

(நற்றவா போற்றும) தவம்-தபஸ்ஸு. நல்தவம்-விலக்ஷணமான தபஸ்ஸு. "తస్మాన్న్యాసమేషాం తపసామతిరిక్తమాహుః" "தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:" என்றும், "సత్కర్మనిరతాశ్శుద్ధాః సాఙ్ఖ్యయోగవిదస్తథా। నార్హన్తి శరణస్థస్య కలాం కోటితమీమపి" "ஸத்கர்மநிரதாஶ்ஶுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா - நார்ஹந்தி ஶரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி" என்றும் ச்ருதிஸ்ம்ருதிகளாலே ப்ரஶம்ஸிக்கப்பட்டதாய் அர்ஜுநனுக்கு மோக்ஷோபாயங்களை உபதேசிக்குமிடத்தில் முந்துறமுன்னம் கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோக அவதாரரஹஸ்ய புருஷோத்தமவித்யா நாமஸங்கீர்த்தநரூப இதரோபாயங்களை உபதேசித்தவாறே அவற்றைக்கேட்டு சோகாவிஷ்டனானவனைக் குறித்து அவனுடைய சோகாபநோதநார்த்தமாக உபதேசிக்கப்பட்ட அர்த்தமாய அதஏவ ஸாரதமமாய அவிளம்பபலப்ரதமாய ஸ்வரூபாநுரூபமாய அத்யந்த விலக்ஷணமான ஶரணாகதி தர்மத்திலே அத்யபிநிவிஷ்டரான ஆழ்வான், ஆண்டான், பிள்ளான், எம்பார், கிடாம்பியாச்சான் முதலான முதலிகளையும லோகத்தாரையும் உத்தரிப்பிக்கைக்காக அவதரித்தவருடைய வைபவத்தையறிந்து, "నచేద్రామానుజేత్యేషా చతురా చతురక్షరీ। కామవస్థాం ప్రపద్యన్తే జన్తవో హన్త మాదృశః" "நசேத்ராமாநுஜேத்யேஷா சதுராசதுரக்ஷரீ, காமவஸ்தாம்ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருஶ:" "పుణ్యామ్భోజవికాసాయ పాపధ్వాన్తక్షయాయచ। శ్రీమానావిరభూద్భూమౌ రామానుజదివాకరః" "புண்யாம்போஜவிகாஸாய பாபத்வாந்தக்ஷயாய ச, ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ ராமாநுஜதிவாகர:" "తృణీకృతవిరిఞ్చాది నిరఙ్కుశవిభూతయః। రామానుజపదామ్భోజ సమాశ్రయణశాలినః" "த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குஶ விபூதய: - ராமாநுஜபதாம்போஜஸமாஶ்ரயணஶாலிந:" என்றும், "సత్యం సత్యం పునస్సత్యం యతిరాజో జగద్గురుః। సఏవ సర్వలోకానా ముద్ధర్తా నాత్ర సంశయః" "ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு: - ஸ ஏவ ஸர்வலோகாநா முத்தர்த்தா நாத்ர ஸம்ஶய:" என்றும், "కుదృష్టికుహనాముఖే నిపతతః పరబ్రహ్మణః కరగ్రహవిచక్షణో

http://acharya.org

జయతి లక్ష్మణోయంమునిః" "குத்ருஷ்டிகுஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண: கரக்ராஹவிசக்ஷணோ ஜயதிலக்ஷ்மணோயம்முநி:" என்றும், "సత్వగ్రస్తేద్యనిజదివ్యగుణస్వరూపప్రత్యక్షతాముపగతస్త్విహరంగరాజః। వశ్యస్సదాభవతి తేయతిరాజతస్మాచ్ఛక్తస్స్వకీయజనపాపవిమోచనేత్వమ్" "சுருத்யக்ரவேத்ய நிஜ திவ்ய குணஸ்வரூபப்ரத்யக்ஷதாமுபகதஸ்த்விஹரங்கராஜ:-வச்யஸ் ஸதாபவதிதேயதிராஜ தஸ்மாச்சகதஸ்ஸ்வகீயஜநபாபவிமோச நேத்வம்" என்றும், "வாழியெதிராசன்வாழியெதிராசன்" என்றும்·சொல்லிப் புகழும்படி எழுந்தருளியிருக்கிற.

(இராமாநுசனை)எம்பெருமானாரை. (இந்நானிலத்தே) இந்த * இருள்தருமாஞாலத்திலே. (பெற்றனன்) ஆச்ரயித்தேன். நிழலும் நீருமில்லாத மருகாந்தாரத்திலே தண்ணீர்ப்பந்தல்பெற்றவன் ஹ்ருஷ்டனுமாப்போலே இந்தலோகஸ்வபாவத்தை யழியமாறி என்னை உஜ்ஜீவிப்பிக்கும விஷயத்தைப் பெற்றேனென்று ஹ்ருஷ்டராகிறார்காணும். (பெற்றபின் மற்றறியேனொருபேதைமையே) எம்பெருமானாரை ஆசரயித்தபின்பு, முன்பு அநாதிகாலமே தொடங்கி * ஆவிர்ப்பூதமாயிருக்கிற என்னுடைய தேஹாத்மப்ரமமும்,ஸ்வஸ்வாதந்த்ர்யப்ரமமும்,அந்யசேஷத்வப்ரமமும,அநுபாயேஉபாயத்வப்ரமமும்எங்கேசென்றற்றது,கண்டிலேன். (மற்றறியேனொரு பேதைமையே) அஜ்ஞாநமானது மநஸ்ஸுக்குத்தோற்றுகிறதில்லை ;ப்ரத்யக்ஷமாக காணப்படுகிறதில்லை. ப்ராப்தாப்ராப்தவிவேகம்பண்ணுதே கண்ட-தொன்றிலே மேல்விழுந்து மண்டுகைக்குறுப்பான அஜ்ஞாநம்வாஸனையோடே-போய்த்தென்றபடி. ""త్యజభట దూరతరేణ తానపాపాన్" "த்யஜபட தூரதரேண தாநபாபாந்" என்றாப்போலே அஜ்ஞாநமடங்கலும் தூரதோநிரஸ்தமென்றதாய்த்து. ... ... (ருஎ)

உரை.—அ.—ஐம்பத்தெட்டாமபாட்டு. இப்-பலவிடங்களிலும், எம்பெருமானார் பாஹ்யமத நிரஸநம பண்ணின ஸ்வபாவத்தை யநுஸந்தித்து வித்தரானார்; குத்ருஷ்டி நிரஸநம்பண்ணினபடியையநுஸந்தித்து வித்தராகிறார்—இதில.

மூ—பேதையர்வேதப்பொருளிதென்றுன்னிப்பிரமநன்றென்
றோதிமற்றெல்லாவுயிருமஃதென்றுயிர்கள்மெய்விட்
டாதிப்பரனொடொன்றாமென்றுசொல்லுமவ் வல்லலெல்லாம்
வாதில்வென்றானெம்மிராமாநுசன் மெய்ம்மதிக்கடலே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பேதையர்	வேதாப்ராமாண்ய விரோதிக ளான பாஹ்யரைப்போலன்றிக்கேவேதத்தைப்ரமாணமாக		அங்கீகரித்து வைத்து ததர்த்த தர்ஸநத்தில் குத்ருஷ்டிகளா யிருக்கிற அஜ்ஞர்,

* " அகபிபூதமா யிருக்கிற " என்றும் பாடம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேதப்பொருளிதென்று	வேதத்தினுடைய அர்த்தம் இதுவென்று,	அவ்வல்லலெல்லாம்	அந்த கோஷத்தையெல்லாம்,
உன்னி	நிரூபித்து,	மெய்ம்மதிக்கடல	தத்த்வஜ்ஞாநஸாகரமாய,
பிரமம்	ப்ரஹ்மம்,	எம்.	நம்முடைய நாதரா ௫௧
நன்றென்று	விலக்ஷணமென்று,		
ஓதி	ப்ரதிபா	இராமாநுசன்	எம்பெருமானார்,
மற்றெல்லாவுயிரும்	தத்வ்யதிரிக்த ஸமஸ்தஜீவவர்க்கங்களும்,	வாதில்வென்றான்	லோகரக்ஷகமாக வாதம் பண்ணி ஜயித்தருளினார். இப்படிச் செய்தருளுவதே! என்று கருத்து.
அஃதென்று	அந்த ப்ரஹ்மந்தானே யென்று, இப்படி தத்வநிர்ணயத்தைப் பண்ணி மோக்ஷ நிர்ணயம் பண்ணுகிறவளவிலும,		
உயிர்கள்	ஜீவவர்க்கம்,		
மெய்விட்டு	தேஹாத்யுபாதிவிநிர்முக்தமானவாறே		
ஆதி	காரணபூதனை,		
பரனோடு	ஸர்வஸ்மாத் பரனோடே,		
ஒன்றாமென்றுசொல்லும்	ஏகீபவிக்குமென்று இப்படி சொல்லுகிற,		

ஆதிப்பரன் என்றது-ஸ்வபக்ஷத்தாலே; அல்லாதவர்கள் இப்படி சொல்லார்களிறே. ப்ரஹ்மாம்ஸமான ஜீவவர்க்கம் தேஹாத்யுபாதி விநிர்முக்தமானவாறே ப்ரஹ்மைக்யத்தை ப்ராபிக்குமென்றிறே அவர்கள் சொல்லுவது. அல்லல் - ஆரவாரம். அதாவது-கோஷம். (௫அ)

வ்யா.—அ.—ஐம்பதெட்டாம்பாட்டு. கீழ் - பலவிடங்களிலும் வேதபாஹ்ய ஸமயங்கள் பூலோகத்திலே நடையாடாதபடி எம்பெருமானார் சாஸ்த்ரமுகத்தாலே அவர்களோடே ப்ரஸங்கித்து அவர்களை ஸவாஸநமாக நிரஸித்த வைபவத்தைக்கொண்டாடினார்; இதில்- * கட்டப்பொருளை மறைப்பொருளென்று சொல்லுகிற குத்ர்ஷ்டிகளை வேதாந்த வாக்யங்களாலே ப்ரஸங்கம்பண்ணி ஜயித்தவருடையவைபவத்தைக் கொண்டாடுகிறார்.

வ்யா —(பேதையர் என்றுதொடங்கி) (பேதையர்) வேதத்தைப்ரமாணமென்ன் இசையாத சார்வாகாதிகளுடைய ஸமயஸ்தரான பாஹ்யரைப்போலன்றிக்கே, வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்துவைத்தும் அந்த அர்த்தநிரூபணம் பண்ணுகிறவேளையிலே, * அநாதிபாபவாஸநாதூஷிதாஉசேஷசேமுஷீகராய்க் கொண்டு வேதத்துக்குத் தந்தாமுடைய குத்ர்ஷ்டிகல்பநங்களான

http://acharya.org

அபார்த்தங்களைச் சொல்லி. "అథయావత్ ప్రజానాతిబుద్ధిస్సా పార్థతామసీ" "அதயாவத்ப்ரஜாநாதி புத்திஸ்ஸாபார்த்ததாமஸீ" என்கிறபடியே தமஃப்ரசுரராய்ப்போருகிற ஸ்ரீசங்கரபாஸ்கரயாதவாதிகளை, "பேதையர்" என்றுநிர்த்தேசிக்கிறார். பேதையர்-அஜ்ஞர். (வேதப்பொருளிதென்றுன்னி) வேதாந்தங்களினுடைய தாத்பர்யார்த்தம்இதுவேயென்று நிரூபித்து. உன்னுதல்-நிரூபித்தல்.

(பிரமம் நன்றென்றோதி) ப்ரஹ்மமே ஸமஸ்த ப்ரபஞ்சவிலக்ஷணமென்று அந்தவேதவாக்யங்களாலே ப்ரதிபாதித்து. "సర్వంఖల్విదంబ్రహ్మ" "సదేవసోమ్యేదమగ్రఆసీత్" "ఏకమేవాద్వితీయమ్" "యత్రత్వస్యసర్వమాత్మైవాభూత్" "ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம" "ஸதேவஸோம்யேதமக்ரஆஸீத்" "ஏகமேவாத்விதீயம்" "யத்ரத்வஸ்ய ஸர்வமாத்மைவாபவத்" என்கிற விஶிஷ்டைக்ய ப்ரதிபாதகங்களான ச்ருதிவாக்யங்களுக்கு குத்ர்ஷ்டிகல்பநமாக, "అశేషవిశేషప్రత్యస్తమితసన్మాత్రంబ్రహ్మైవపరమార్థః" "அஶேஷவிஶேஷப்ரத்யஸ்தமிதஸந்மாத்ரம் ப்ரஹ்மைவபரமார்த்தః" என்று அபார்த்தங்களைசசொல்லியென்றபடி. (மற்றெல்லாவுயிருமஃதென்று) ப்ரஹ்மாதிரிக்தமான ஜீவவர்க்கங்களடங்கலும் அந்தப்ரஹ்மத்தினுடைய ப்ரதிபிம்பபூதமாயிருக்கும், ஸ்வாஜ்ஞாநத்தாலே ப்ர்தசபூதமாயத் தோறறுகிற தித்தனையென்று, "ததிரேகி நாநாவிதஜ்ஞாதர்ஜ்ஞேயதத்தத்ச்ர்தஜ்ஞாந பேதாதி ஸர்வம் தஸ்மிந்நேவ பரிகல்பிதம் மித்யாபூதம" என்றும், "நிர்விசேஷசிந்மாத்ரம் ப்ரஹ்மைவஸத்யம்" எனறும்தத்வநிர்ணயதகதைப்பணணி என்றபடி.

(உயிர்கள்மெய்விட்டாதிப் பரனொடொன்றாமென்று சொல்லும்) மோக்ஷநிர்ணயம பண்ணுகிறவளவிலும் அப்படிப்பட்ட ஜீவவர்க்கங்களடங்கலும் தேஹாத்யுபாதிவிநிர்முக்தமானவாறே, "బ్రహ్మవేదబ్రహ్మైవభవతి" "పరంజ్యోతిరుపసమ్పద్యస్వేనరూపేణాభినిష్పద్యతే" "ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி" "பரம்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" இத்யாதிசருதிகளுடையதாதபர்யத்தையறியமாட்டாதே அவற்றுக்குக்காரணபூதனான ஸர்வஸ்மாதபரனோடே ஏகீபவித் திருக்குமென்கிற அபார்த்தத்தைச் சொல்லும்.

(அவ்வல்லலெல்லாம்) இப்படிசொல்லுகிற குத்ர்ஷ்டிகளுடைய ஶுஷ்கதர்க்கங்களுடையதோஷங்களையெல்லாம். அல்லல்-ஆரவாரம், அதாவது-கோஷம். "ஆதிப்பரனொடு" என்று-குத்ர்ஷ்டிகளுடைய பக்ஷத்தைப் பார்த்துச்சொன்னவார்த்தை யன்று, ஒருஜகத்தையும் அதுக்கு அவனுடைய காரணத்வத்தையும் ஸர்வமும் பரார்த்தபூதமாய் அவற்றுக்கெல்லாம் பரனா யிருப்பா

http://acharya.org

னென்னு மத்தையும் அந்தபக்ஷத்தார் இசையாரிறே. ஆக, ஸ்வஸி த்தாந்தாபி ப்ராயத்தாலே அருளிச்செய்தாரித்தனே (வாதில்வென்றான்) லோக ரக்ஷணார்த்தமாக வாதம்பண்ணி ஜயித்தருளினார். "సర్వం ఖల్విదం బ్రహ్మ" (ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம) என்கிற ச்ருதிக்கு- ப்ரஹ்மஶப்தம்ஸமஸ்தகல்யாணகுணாத்மகமான வஸ்துவையும், இதம்ஶப்தமும் ஸர்வஶப்தமும், பரித்ர்ஶ்யமாநமாயிருக்கிற போக்யபோகோபகரணபோகஸ்தாந போகத்ர்வர்க்கத்வைவித்யத்தையும்ப்ரதிபாதிக்கக்கடவதாயிருக்கையாலே, "ப்ரஹ்மமொன்றுமே ஸத்யம், தத்வ்யதிரிக்தமெல்லாம்மித்யாபூதம்" என்கிற ஶாந்தாத்தைவதம் ஸித்தியாதே சரீரபூதமாயிருக்கிற சேதநாசேதநவர்க்கத்துக்கும் ஶரீரியான ப்ரஹ்மத்துக்கும் சரீர சரீரிபாவ நிபந்தநமாக ஐக்யம் ஸித்திக்கையாலே விசிஷ்டைகயமே அர்த்தமென்று சொல்லியும், "సదేవ సోమ్యేదమగ్ర ఆసీత్, ఏకమేవాద్వితీయమ్" "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத், ஏகமேவாத்விதீயம்" என்கிற ச்ருதிக்கு, "అవ్యక్తమక్షరే లీయతే, అక్షరం తమసి లీయతే, తమః పరే దేవ ఏకీభవతి" "அவ்யக்தமக்ஷரே லீயதே, அக்ஷரம்தமஸி லீயதே, தமஃபரேதேவஏகீபவதி" எனகிறபடியே கல்பாதியிலே ஸூக்ஷ்மசிதசிச்சரீரகனாய் ஒருவனே யிருந்தானென்றும், காணுதமதத்திலே ஒருகார்யததைககுறிதது அநேககாரணங்களுண்டாயிருக்கிறாப்போலே இந்த ஜகத்ரூபகார்யத்துக்கும அவிதயை யொழிய வேறொரு காரணாந்தரம் வேண்டாதபடி தானே ஸர்வவித காரணங்களுமாயிருக்கையாலே அபிந்நநிமித்தகோபாதாந காரணமாயிருக்குமென்றும், அக்ஷரார்த்தத்தைப்ரதிபாதிததும், "యత్ర త్వస్య సర్వమాత్మైవాభూత్" "யத்ரத்வஸ்ய ஸர்வமாத்மைவாத்" என்கிற ச்ருதிககு-ஜகத்துக்கு தாரகனும வ்யாபகனும் நியந்தாவாயும அந்தர்யாமியாயும் ஸ்வாமியாயும் சேஷியாயு மிருக்கையாலே எல்லாம் அந்த பரஹ்மமேயாயிருக்குமென்று அர்த்தவர்ணநம்பண்ணியும், இன்னமும் அவர்கள் ஸ்வாஉஜ்ஞாநத்தாலே அபார்த்தங்களைச் சொல்லியும், உதாஹர்தங்களான, "తత్త్వమసి" "தத்த்வமஸி" இத்யாதி ச்ருதிகளுக்கெல்லாம் அயதாவஸ்த்தித பதார்த்தங்களைச சொல்லியும், தாம சொன்ன அர்த்தங்களுக்கெல்லாம் அநுகூலமாயிருந்துள்ள, "భోక్తా భోగ్యం ప్రేరితారఞ్చ మత్వా, జుష్టస్తతస్తేనామృతత్వమేతి, పృథగాత్మానం ప్రేరితారఞ్చ మత్వా" "ద్వా సుపర్ణా సయుజా సఖాయా సమానం వృక్షం పరిషస్వజాతే, తయోరన్యః పిప్పలం స్వాద్వత్త్యనశ్నన్నన్యో అభిచాకశీతి" "నిత్యో నిత్యానాం చేతనశ్చేతనానామేకో బహూనాం యో విదధాతి కామాన్" "போக்தாபோ்க்யம் ப்ரேரிதாரஞ்சமத்வா ஜுஷ்டஸ்ததஸ்தே நாம்ர்தத்வமேதி, ப்ர்தகாத்மாநம் ப்ரேரிதாரஞ்சமத்வா" "த்வாஸுபர்ணாஸயுஜாஸகாயாஸமாநம் வ்ர்க்ஷம்பரிஷஸ்வஜாதே, தயோரந்யஃபிப்பலம்ஸாத்வத்தி அநஶ்

நக்கக்யோ, அபிசாகஶிதி" "நித்யோநித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் ஏகோபஹூநாம் யோவிததாதிகாமாந்" இத்யாதியான ஜீவ ப்ராஹ்மணோரத்யந்த பேதப்ரதிபாதக ஶ்ருதிகளையும், "యఃపృథి వ్యాంతిష్ఠన్" "యఆత్మనితిష్ఠన్" "యస్యపృథివీశరీరమ్" "ఏషసర్వభూతాన్తరాత్మాప హతపాప్మాదివ్యోదేవఏకోనారాయణః" "யஃப்ருதிவ்யாம்திஷ்டந்" "யஸ்யப்ருதிவீஶரீரம்" "ஏஷஸர்வ பூதாந்தராத்மாஉபஹதபாப்மா திவ்யோதேவஏகோநாராயண:" இத்யாதி கடகச்ருதிகளையும் உபந்யஸித்து, இனி ப்ரபஞ்சமித்யாத்வ ப்ரதிபாதநத்துக்கு பௌத்தார்த்த ஸாரங்களானகேவல துஸ்தர்க்கங்களை யொழிய ஸமீசீந ப்ரமாண மொன்றுமில்லை யென்று அத்தை நிரஸித்து "బ్రహ్మవేదబ్రహ్మైవభవతి, సఏనాన్ బ్రహ్మగమయతి" "స్వేనరూపేణాభినిష్పద్యతే" "ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி, "ஸஏநாந்ப்ரஹ்மகமயதி" "ஸ்வேநரூபேணாபி நிஷ்பத்யதே" இதயாதிச்ருதிகளுக்குமுக்திவேளையில் ஐகயத்தை ப்ரதிபாதிக்கை அர்த்தமென்று சொன்னால்; "ఇమాన్ లోకాన్ కామాన్నీ కామరూప్యనుసఞ్చరన్, ఏతత్సామగాయన్నాస్తే" "సఖల్వేవం వర్తయన్ యావదాయుషం బ్రహ్మలోకమభిసమ్పద్యతే, నచపునరావర్తతే నచపునరావర్తతే" "నిరఞ్జనః పరమం సామ్యముపైతి" "మమసాధర్మ్యమాగతాః" "భోగమాత్రసామ్యలిఙ్గాచ్చ" "இமாநலோகாந்காமாந்நீகாமரூப்யநுஸஞ்சரன், ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" "ஸகல்வேவம்வர்த்தயந் யாவதாயுஷம் ப்ராஹ்மலோக மபிஸம்பத்யதே, நசபுநராவர்த்ததே நசபுநராவர்த்ததே" "நிரஞ்ஜந:பரமம்ஸாம்யமுபைதி" "மமஸாதர்ம்யமாகதா:" "போகமாத்ரஸாம்ய லிங்காச்ச" இத்யாத்யநேகச்ருதிஸ்ம்ருதி ஸூத்ரவிரோதம்வரக்கடவதாகையாலே, "బ్రహ్మభూతఃప్రసన్నాత్మానశోచతినకాఙ్క్షతి" "ப்ரஹ்மபூதப்ரஸந்நாத்மா நஶோசதி நகாங்க்ஷதி" என்கிறபடியே ப்ராஹ்மஸாம்யாபந்நராய் ப்ராஹ்மப்ரகார பூதராய், "సర్వగత్వాదనన్తస్య సఏవాహమవస్థితః" "ஸ்ாவகத்வாதநந்தஸ்யஸஏவாஹமுபஸ்த்தித:" என்கிறபடியே யிருக்கிறார்களென்றும், அந்தச்ருதிகளுக்கு அர்த்த நிர்ணயம்பண்ணி பஹுமுகமாக ப்ரஸங்கித்தருளி அவர்களை ஜயித்ததாயொன்றபடி. "கூறுமாகுருமததொடோங்கிய குமாரிலன் மதமவற்றினமேல், கொடியதர்க்கசரம்விட்டபின்குறுகி மாயவாதியனை வென்றிட, மீறிவாதில்வரு பாற்கரன்மதவிலக்கடிக கொடி யெறிந்துபோய மிக்கயாதவர்மதத்தைமாய்த்தபெருவீரர் நாளுமிக வாழியே" என்று இந்த ஆனைத் தொழில்களிலே ஈடுபட்டு ஜீயரும் மங்களாசாஸநம் பண்ணினூரிறே.

(எம்பிராமாநுசன்) இப்படிப்பட்ட ஆனைத்தொழில்களைச் செய்தருளினாராகையாலும், அத்யந்த ப்ரதிகூலனாய் விமுகனாய் அநாதியான ஸம்ஸாரத்திலே அழுந்திக்கிடக்கிறவென்னை உத்தரிக்

http://acharya.org

கைக்காக அவதரித்தருளின எம்பெருமானாருடைய. (மெய்ம் மதிக்கடல்) யதார்த்தஜ்ஞாநம் கடல்போலே அவிச்சிந்நமாயிருக்குமென்றபடி. அன்றிக்கே, தத்த்வஜ்ஞாந ஸாகரமாய் நம்முடைய நாதராயிருக்கிற எம்பெருமானார் லோகரக்ஷணார்த்தமாக குத்ர்ஷ்டிகளோடே ப்ரஸங்கம் பண்ணி அவர்களை ஜயித்தருளினாரென்று இங்ஙனே அந்வயிக்கவுமாம். இவர்தாமே "வாதியர்காளுங்கள் வாழ்வற்றதே" என்றருளிச் செய்தாரிறே. "ఆత్మైక్యం దేవతైక్యం త్రిగసమధిగతాత్మైక్యం త్రయాణామస్యతైశ్వర్యమిత్యాద్యనిపుణఫణితీరాద్రియన్తే న సన్తః । తైర్యన్త్రైరేకకణ్ఠైస్తదనుగుణమనువ్యాసముఖ్యోక్తిభిశ్చ శ్రీమాన్నారాయణో నః పతిరఖిలతనుర్ముక్తిదో ముక్తిభోగ్యః" என்று இவ்வர்த்தத்தை அபியுக்தருமருளிச் செய்தாரிறே. ... ... (ருஅ)

உரை.—அ.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு. இவர் இப்படி வித்தராகிற இத்தைக் கண்டவர்கள், இவர் இதுசெய்திலராகிலும் சேதநர் ப்ரமாணங்களைக்கொண்டு நிரூபித்து, "ஈச்வரன் சேஷி" என்று அறியார்களோவென்ன; கலியுகப்ரயுக்தமான அஜ்ஞாநாந்தகாரத்தை எம்பெருமானார் போககிற்றிலராகில் ஆத்மாவுக்கு சேஷியீச்வரனேயென்று நிரூபித்து ஒருவருமறிவாரில்லையென்கிறார்.

மூ·—கடலளவாயதிசையெட்டினுள்ளுங்கலியிருளே
மிடைதருகாலத்திராமாநுசன்மிக்கநான்மறையின்
சுடரொளியாலவ்விருளைத்துரந்திலனேலுயிரை
யுடையவன்நாரணனென்றறிவாரில்லையுற்றுணர்ந்தே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
கடலளவாய	சதுஸ்ஸாகர பர்யந்தமான	நான்மறையின்	சதுர்வேதத்தினுடைய,
திசையெட்டினுள்ளும்	ஸர்வ திக்குக்களிலும்,	சுடரொளியால்	நிரவதிக தேஜஸ்ஸாலே
கலிஇருளே	கலிப்ரயுக்தமான அஜ்ஞாநரூப தமஸ்ஸே,	அவ்விருளை	அந்த தமஸ்ஸை,
மிடைதரு காலத்து	நெருங்கி வர்த்திக்கிற காலத்திலே,	துரந்திலனேல்	ஓட்டிற்றிலராகில்,
இராமாநுசன்	எம்பெருமானார்,	உயிரையுடையவன்	ஆத்மாவுக்கு சேஷியானவன், தன்னையொழிந்த தட்டுங்களும் தனக்குப்ரகாரமாக தான்ப்ரகாரியாயிருக்கையாலே,
மிக்க	ஸர்வ ப்ரமாணோத்க்ர்ஷ்டமான,		

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
நாரண னென்று	நாராயண மப்தவாச்யனானவ னென்று கொண்டு,	அறிவாரில்லை	அறியத்தக்காரில்லை.
உற்றுணர்ந்து	உற்று அநுஸந்தித்து,		

மிடைதல் - நெருங்குதல். சுடரென்றும் ஒளியென்றும் பர்யாயமாய் - மீமிசைச்சொல்லாய் மிக்கவொளியென்றபடி. துரத்தல்-ஓட்டுதல. ... (௫௯)

வ்யா.—அ.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார், வேதோத்தரணம் பண்ணியருளினாரென்றும் சதர்தோத்தரணம் பண்ணியருளினாரொன்றும் கீழெல்லாம் பலபடியாகச்சொன்னீர், அவர் இப்படி செய்திலராகிலும் ப்ரமாதாக்களானசேதநரும் நித்யராய்,ப்ரமாணங்களானவேதங்களும்நித்யமாயிருக்கையாலே அவர்கள் அந்தவேதத்தைஅடைவே யோதி தத்ப்ரதிபாத்யனான நாராயணனே ஆத்மாக்களுக்கு சேஷியென்று தெளிந்து உஜ்ஜீவிக்க லாகாதோவென்று சொன்னவர்களைக்குறித்து, கலியிருளானது லோகமெல்லாம் வ்யாபித்து தத்வயாதாம்யஜ்ஞாநத்துக்கு ப்ரதிபந்தகமா யிருக்கையாலே எம்பெருமானார் திருவவதரித்து ஸகல சாஸ்த்ரங்களையும் அதிகரித்து அவற்றினுடைய நிரவதிக தேஜஸ்ஸாலே அந்த கலிப்ரயுக்தமான அஜ்ஞாநாந்தகாரத்தை ஓட்டிற்றிலராகில் நாராயணன் ஸர்வசேஷியென்று இந்த ஜகத்திலுள்ளாரொருவரும் அறியக் கடவாரில்லை யென்கிறார்.

வ்யா.—(கடலளவாயதிசை யெட்டினுள்ளும்) சதுஸ்ஸாகர பர்யந்தமான அஷ்ட திக்குக்களினுடைய ஆந்தரமான ப்ரதேசமெல்லாம். சதுஸ்ஸமுத்ரமுத்ரிதமான பூமிப்பரப்பெல்லாமென்றபடி.(கலியிருளே மிடைதருகாலத்து) "[illegible]" "கலேர்த்தோஷநிதே:" என்னும்படியான கலிபுருஷன்தன்னுடைய ஸ்வபாவத்தாலே லோகத்தாரெல்லார்க்கும் ஜ்ஞாநப்ரஸாத்தைப் பண்ணுவித்தும், ஸந்மார்க்கத்தை மூலையடியே நடப்பித்தும் போருகையாலும் தத்ப்ரயுக்தமான அஜ்ஞாநாந்தகாரமே நெருங்கி எங்குமொக்க வ்யாபித்துக்கொண்டு வர்த்திக்கும் காலத்திலே. கலி, ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே யென்றபடி. மிடைதல் - நெருங்குதல்.

(இராமாநுசன்) விண்ணின் தலைநின்றும் மண்ணின் தலத்துதித்த வெம்பெருமானார். (மிக்கநான்மறையின்) "மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள்" என்றும், "சுடர்மிகு சுருதியுள்" என்றும் சொல்லுகிறபடியே- ஸர்வ ப்ரமாணோத்க்ருஷ்டமாய் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை அடைவே ப்ரகாசிப்

பிக்கக்கடவதாய் அபௌருஷேயமாய் நித்ய நிர்த்தோஷமாய், ரிக்யஜுஸ்ஸாமாதர்வணரூபேண நாலுவகைப்பட்டிருக்கிறவேதத்தினுடைய.(சுடரொளியால்) * சுடர்மிகு சுருதியாகையாலே அந்த வேதத்தினுடைய சுடர்வளர்ந்து அவைதிகஸமயங்களையெல்லாம் நிர்மூலமாக்கி, பின்னையும் மேல்மேலன ஒளிநெருங்கிவருகையாலே, "சுடரொளி" என்று ப்ரயோகிக்கிறார். அப்படிப்பட்ட நிரவதிகதேஜஸ்ஸாலே.

(அவ்விருளை)"అజ్ఞానతిమిరాన్ధస్య""అజ్ఞానధ్వాన్తరోధాత్""அஜ்ஞாநதிமிராந்தஸ்ய" "அஜ்ஞாநத்வாந்தரோதாத்" என்கிறபடியே-கலிபுருஷனாலே ப்ரவர்த்திப்பிக்கப்பட்டபாபங்களாலேயுண்டாயிருக்கிற அஜ்ஞாநாந்தகாரத்தை. (துரந்திலனேல்) ப்ரமாணமும் அநாதியாய் நித்யமாய் ப்ரமாதாக்களும் அநாதியாய் நித்யராய் காலமும் அநாதியாய் நித்யமாய்க்கொண்டிருந்தாலும் ஒருத்தராகிலும் வேதார்த்தத்தைஸ்வயமாகவேதெளிந்துஉஜ்ஜீவித்தாரொன்று ஒரு சாஸ்த்ரம்சொல்லக் கேட்டதில்லை. "యస్య దేవే పరా భక్తిర్యథా దేవే తథా గురౌ। తస్యైతే కథితా హ్యర్థాః ప్రకాశన్తే మహాత్మనః" "జ్ఞానాఞ్జనశలాకయా""చక్షురున్మీలితం యేన తస్మై శ్రీగురవే నమః।, నారాయణోఽపి వికృతిం యాతి గురోః ప్రచ్యుతస్య దుర్బుద్ధేః। కమలం జలాదపేతం శోషయతి రవిర్న పోషయతి""யஸ்யதேவேபராபக்திர்யதாதேவேததாகுரௌ, தஸ்யைதேகதிதாஹ்யர்த்தாஃப்ரகாஶந்தேமஹாத்மநஃ""ஜ்ஞாநாஞ்ஜநஶலாகயா""சக்ஷுருந்மீலிதம்யேநதஸ்மைதஸ்ரீகுரவேநமஃ,நாராயணோபிவிக்ருதிம்யாதிகுரோஃப்ரச்யுதஸ்ய துர்ப்புத்தேஃ- கமலம்ஜலாதபேதம்ஶோஷயதிரவிர்நதோஷயதி" என்று ச்ருதிஸ்ம்ருத்யாதிகளிலே சொல்லப் படுகையாலும், "என்றுமனைத்துயிர்க்கு மீரஞ்செய் நாரணனும், அன்றுந் தன்னூரியன் பாலன் பொழியில், நினற, புனல்பிரிந்த பங்கயத்தைப்பொங்குசுடர்வெய்யோன், அனலுமிழ்ந்து தானுலர்த்தியற்று" என்று அருளாளப் பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்கையாலும், "ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைக் கொலைத்துக்கொண்ட விவனுக்கு ஆசார்யாபிமாந மொழிய கதியில்லையென்று பிள்ளை பலகாலும் அருளிச்செய்யக் கேட்டிருக்கையா யிருக்கும்" என்கையாலும், "சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தன" என்கிறபடியே ஓடிப் போம்படி பண்ணுகை யன்றிக்கே "அவரவர்விதிவழி யடையநின்றனரே" என்று தடஸ்தனாயிருந்து கொண்டு அந்த அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்குகைக்கு ,க்ர்ஷிபண்ணாதே யொழிந்தால். துரத்தல்-ஓட்டுதல்.

(உயிரையுடையவன் நாரணனென்று) "పతిం విశ్వస్యాత్మేశ్వరమ్" "యచ్చ కిఞ్చిజ్జగత్యస్మిన్ దృశ్యతే శ్రూయతేఽపి వా, అన్తర్బహిశ్చ తత్సర్వం వ్యాప్య నారాయణ[illegible]

http://acharya.org

ஸிதஃ” “பதிம்விஸ்வஸ்யாத்மேஸ்வரம்” “யச்சகிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந் த்ருஸ்யதேஸ்ரூயதேபிவா, அந்தர்ப்பஹிஸ்ச தத்ஸர்வம்வ்யாப்ய நாராயணஸ்த்திதஃ” என்றும், “సర్వేశ్వరస్సర్వధృత్ సర్వవేత్తా” “நிகரில் புகழா யுலகமூன்றுடையாய்” என்றும், “యదణ్డమణ్డాన్తరగోచరఞ్చయ ద్దశోత్తరాణ్యావరణాని యాని చ। గుణాః ప్రధానం పురుషః పరం పదం పరాత్పరం బ్రహ్మ చ తే విభూతయః” “யதண்டமண்டாந்தரகோசரம் சயத்தஸோத்தராண்யாவரணாநியாநிச, குணாஃப்ரதாநம் புருஷஃபரம்பதம்பராத்பரம்ப்ரஹ்மசதேவிபூதயஃ” என்றும் சொல்லுகிறபடியே தன்னை யொழிந்த தடங்கலும் ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியா யிருக்கையாலே நாராயண சப்த வாச்யனான ஸர்வேச்வரன் இந்த த்ரிவிதசேதந வர்க்கத்தையும் தனக்குசேஷமாகவுடையனாயிருப்பானென்று.

(உற்று) அத்யவஸித்து. விஸதமாகத் தெளிந்துகொண்டு. (அறிவாறில்லை) அறியத்தக்காரில்லை. “బిభేత్యల్పశ్రుతాద్వేదో మామయం ప్రతరిష్యతి” “பிபேத்யல்பச்ருதாத்வேதோமாமயம்ப்ரதரிஷ்யதி” என்கையாலே அத்தாலும் ஸ்வரூப நாஸமே விததிக்கு மித்தனையொழிய ஸ்வரூபஸித்தியில்லை யெனறுதாய்த்து “నిరాలోకే లోకే నిరవధికస స్నేహభరితో యతిక్ష్మాభృద్దీపో యదిన ఖలు జాజ్వల్యత ఇహ। అహఙ్కారధ్వాన్తం విజయతు కథఙ్కారమనఘః కృతస్తద్వ్యావృత్తోఽఘటత ఘటపాతాళకుహరమ్” “நிராலோகே லோகே நிரவதிபரஸ்நேஹபரிதோ யதிக்ஷமாப்ர்த்தீபோ யதிநகலு ஜாஜ்வல்யதஇஹ - அஹம்காரத்வாந்தம் விஜயதுகதம்காரமநகாஃ க்ர்தஸ்தத்வ்யாளௌகம்குமதிமதபாதாளகுஹரம்” எனறு இவ்வர்த்தத்தை அபியுக்தருமருளிச்செய்தாரிறே. ... (நுகூ)

உரை.—அ.—அறுபதாம்பாட்டு. இப்படி எம்பெருமானாருடைய ஜ்ஞாநவைபவத்தை இவரருளிச்செய்யக் கேட்டவர்கள் அவர்தம்முடைய பக்திவைபவமிருக்கும்படி யென்னென்ன; பகவத்பாகவத விஷயங்களிலும் ததுபயவைபவ ப்ரதிபாதகமான திருவாய்மொழியிலும் இவர்க்குண்டான ப்ரேமமிருக்கும்படியை யருளிச்செய்கிறார்.

மூ.—உணர்ந்தமெய்ஞ்ஞாநியர்யோகந்தொறுந் திருவாய்மொழி
மணந்தருமின்னிசைமன்னுமிடந்தொறுமாமலராள் [யின்
புணர்ந்தபொன்மார்வன்பொருந்தும்பதிதொறும்புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டலிராமாநுசனெங்குலக்கொழுந்தே. (சு0)

பதம்.	உரை.	பதம்.	உரை.
குணந்திகழ்	ஆத்மகுணௌஜ்ஜ்வல்ய யுக்தராய்		வுபகரித் தருளும் பரமோதாரராய்,
கொண்டல்	அக் குணங்கள் தன்னை ஸர்வவிஷயமாக	எம்குலம்	எங்கள்குலத்துக்கு,
		கொழுந்து	தலைவரான,

http://acharya.org

பதம்	உரை.
இராமாநுசன்	எம்பெருமானார்,
உணர்ந்த	ஜ்ஞாதவ்யார்த்தங்களறிந் திருக்கும்,
மெய்ஞ்ஞானியர்	யதார்ஜ்ஞாநயுக்தரானவர்களுடைய,
யோகந்தொறும்	கூட்டரவு தோறும்,
திருவாய்மொழியின்	திருவாய்மொழியினுடைய,
மணந்தரும்	பரிமளிதமாய்,
இன்இசை	விலக்ஷணமான இசை,
மன்னும்	நிரந்தரமாக நடக்கும்,
இடந்தொறும்	ஸ்த்தலங்கள் தோறும்,
மாமலராள்	பெரிய பிராட்டியாராலே,
புணர்ந்த	நித்யவாஸம்பண்ணபபட்ட,
பொன்	அழகிய,
மார்வன்	திருமார்பையுடையவன்,
பொருந்தும்	உகந்தருளி வர்த்திக்கும்,
பதிதொறும்	திருப்பதிகள் தோறும்,

பதம்.	உரை.
புக்கு	அவற்றை அநுபவிக்கையி லுண்டான ஆசையாலே புக்கு,
நிற்கும்	அவற்றிலே ஆழங்காற்பட்டு நிற்பர். இது அவருடைய பக்திவைபவமிருக்கும்படியென்று கருத்து.

அன்றிக்கே, எம்பெருமானாருடைய ஜ்ஞாந வைபவத்தைப் பேசின அநந்தரம் அவருடைய பக்தி வைபவத்தைத் தாமே யநுஸந்தித்து, ஏவம்பூத குணோஜ்வலராய், இந்த ப்ரேமத்தை எல்லார்க்கும் உபகரிக்கும் பரமோதாரரான எமபெருமானார் எங்குலக்கொழுந்து என்கிறாராகவுமாம். யோகம்-கூட்டரவு. இத்தால்-கூட்டத்தைச்சொன்னபடி. கொழுந்து-தலை. அதவா, எங்குலக்கொழுந்து என்றது - எங்கள் குலவேராய் தாம் கொழுந்தாய்க்கொண்டு, வேரிலே வெக்கை தட்டினால் கொழுந்து முற்பட வாடுமாப்போலே இக்குலத்துக்கு ஒரு தீங்குவரில் முற்படத் தம்முகம் வாடியிருககு மவசொன்னவுமாம். இசை மணந்தருகை யாவது-செவ்விப் பாட்டையுடைத்தா யிருக்கை. ... (௬௦)

வ்யா.—அ.—அறுபதாம்பாட்டு. கீழெல்லாம்-எம்பெருமானாருடைய வேதமார்க்கப்ரதிஷ்ட்டாபநத்தையும், பாஹ்யமதநிரஸந ஸாமர்த்த்யத்தையும், வேதாந்தார்த்த பரிஜ்ஞாநத்தையும், அந்தஜ்ஞாநத்தை லோகத்தார்க்கெல்லாம் உபதேசித்தபடியையு மருளிச்

http://acharya.org

செய்து, இதிலே – அந்தஜ்ஞாநபரிபாகரூபமாய்க்கொண்டு பகவத் விஷயத்திலும், அவனுக்கு *நிழலுமடிதாறுமாயிருந்துள்ள பாகவதவிஷயத்திலும், ததுபயவைபவ ப்ரதிபாதகமான திருவாய்மொழியிலும் இவருக்குண்டாயிருக்கிற நிரவதிகப்ரேமத்தையும், இம்மூன்றினுடைய வைபவத்தையும் ஸர்வவிஷயமாக உபகரிக்கைக்குடலான இவருடையஔதார்யத்தையும்அருளிச்செய்கிறார்.

வ்யா.—(உணர்ந்த மெய்ஞ்ஞானியர்யோகந்தொறும்) பக்தியாகிறது - ஜ்ஞாநவிகாஸவிசேஷமாகையாலே ஸ்ரீயஃபதியானவன் ஸர்வசேஷியென்று முந்துறத்தெளிந்து, அது, ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் ஆநந்தமயனாய், "सर्वगन्धः सर्वरसः" "ஸர்வகந்தஸ்ஸர்வரஸ:" என்கையாலே - ஸர்வவிதபோக்யனானவனை விஷயீகரிக்கையாலே ஸ்வயம்ப்ரீதிரூபாபந்நமாய்பக்தி என்கிற பேரையுடைத்தானதாயிருக்கிறது. ஆக, உணர்வுஎன்றது - பக்தியென்றபடி. இப்படிப்பட்ட பக்தியாகிற, மெய்ஞ்ஞாநம் – யதாவஸ்த்திதஜ்ஞாநம். பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளைக் கட்டடங்கவநுபவித்த. *மயர்வறமதிநல மென்றபடி. அப்படிப்பட்ட பக்திரூபாபந்நஜ்ஞாநத்தையுடையரான ஆழ்வார்களுடைய குழாம்எங்கே யெங்கே யிருக்கிறதோ அந்தந்தவிடங்கள்தோறும். யோகம் - கூட்டரவு. பரிஷத்தென்றபடி. பக்தரான ஆழ்வார்களனைவரும் அடியிலே *மயர்வறமதிநல மருளப்பெற்று பரிபூர்ணஜ்ஞாநராய், தத்வத்ரயத்தையும்உள்ளபடியநுஸந்தித்து, "அப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதம்" என்னும்படி பரமபோக்யனான ஸர்வேச்வரன்பக்கலிலே யீடுபட்டு, "அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன்" என்று பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து பெண்ணுடையுடுத்தும், தூதுவிட்டும், மடலெடுத்தும், நிரவதிகப்ரேமயுக்தராயிருந்தார்களிறே; ஆகையாலே "உணர்ந்தமெய்ஞ்ஞானியர்" என்று ஆழ்வார்களைச் சொல்லக் குறையில்லை.

(திருவாய்மொழியின் மணந்தரும இன்னிசைமன்னு மிடந்தொறும்) ஆழ்வார்கள்பதின்மரிலும்வைத்துக்கொண்டு ப்ரதாநரான நம்மாழ்வாருடைய திருப்பவளத்தாலே யருளிச்செய்யப்பட்ட ஶப்தராசியான திவ்யப்ரபந்தத்தினுடைய, "सर्वगन्धः" "ஸர்வகந்த:" என்கிறவிஷயத்தை ப்ரதிபாதிக்கையாலே தானும் பரிமளிதமாய் அநுஸந்தாதாக்களுக்கு அவ்விஷயத்தைக் கொடுக்கக்கடவதாய், "யாழினிசைவேதத்தியல்" என்றும், "தொண்டர்க்கமுதம்" என்றும், சொல்லுகிறபடியே போக்யதமமாயிருக்கிற அநுஸந்தாநகாநரூபமான இசையானது, எங்கெங்கஸ்தலத்திலே நடையாடி ஸுப்ரதிஷ்டிதமா யிருந்ததோ அவ்வவஸ்தலங்கள் தோறும்.

http://acharya.org

(மாமலராள் புணர்ந்த பொன்மார்வன்) ஸர்வப்ரகார விலக்ஷணமான பத்மத்தைத் தனக்கிருப்பிடமாகவுடையளான பெரிய பிராட்டியார் ஸம்ஶ்லேஷிக்கும்படி ஸ்ப்ருஹணீயமான திருமார்வை யுடையனான ஸர்வேச்வரன். (பொருந்தும் பதிதோறும்) உகந்தருளி வர்த்திக்கிற திருப்பதிகள்தோறும். பேரருளாளர் வழித்துணையாகவந்து தாமே சேர்த்தருளின பெருமாள்கோயிலிலும், பெரியபெருமாள் நியமநத்தாலே நம்பெருமாள் கோயிலிலும், காளஹஸ்தியில் நின்றும் சைவர்வந்து க்ஷுத்ரோபத்ரவம் பண்ணினபோது திருப்பதியிலும், வேதபாஹ்யரை நிரஸிக்கைக்காகத் திருநாராயணபுரத்திலும், மற்றும் திருநகரி, திருமாலிருஞ்சோலை தொடக்கமான திவ்யதேசங்கள்தோறும். (புக்குநிற்கும்) அவற்றை அநுபவிக்கையிலுண்டான ஆசையாலே அவ்வவ திவ்யதேசங்களிலே பலபடியாக ப்ரவேசித்தும், அவற்றை யடைவே நிஷ்கண்டகமாக நிர்வஹித்து புநர்விச்லேஷ பீருத்வரூபமான பரமபக்தியாலே ஆழங்கால்பட்டும் மங்களாசாஸநம்பண்ணிக்கொண் டெழுந்தருளியிருக்கிற, "உணர்ந்தமெய்ஞ்ஞானியர்" என்கிற விலக்ஷணப்ரமாதாக்களிலும் ப்ரீதிம்ருதியாயிருக்கையாலே, அம்மூன்றையும் இறையுமகலகில்லாதே அவற்றிலேதானே ஆழங்கால்பட்டிருப்பரென்றபடி.

(குணந்திகழ்கொண்டல்) இப்படிப்பட்ட பக்தியாகிற மஹாகுணம் தன்னிடத்திலே சென்று நிறம் பெற்று ப்ரகாசிக்கவே, "முகச்சோதிவாழி" என்கிறபடியே தம்முடைய ஜ்ஞாந பக்தி வைராக்யங்களையும், அந்த ப்ரமாதாக்களினுடைய ப்ரபாவத்தையும், அந்த ப்ரமாணத்தினுடைய ப்ரபாவத்தையும், "అప్రమేయం హి తత్తేజో యస్య సా జనకాత్మజా" "அப்ரமேயம்ஹிதத்தேஜோ யஸ்ய ஸாஜநகாத்மஜா" என்கிற பெரிய பிராட்டியாரையும், * மையலேற்றிமயக்க வல்ல ப்ரேமத்தினுடைய ப்ரபாவத்தையும் ஜலஸ்தலவிபாகமற வாஷிக்கும் வர்ஷுகவலாஹகம்போலே ஸர்வாதிகாரமாக ஸர்வ ஜநங்களுக்கும் ஸர்வதாகொடுத்தும் உபதேசித்தும் உபகரித்தருளும் பரமோதாரரான. (இராமாநுசன்) எம்பெருமானார்.

(எங்குலக்கொழுந்தே) எங்குலம் - ஸ்ரீவைஷ்ணவகுலம். அதுக்கு, கொழுந்து என்றது-வ்ருக்ஷமாய் பலிக்கைக்கும் கொடியாய்ப் படர்ந்து பலிக்கைக்கும் மூலம் கொழுந்தாகையாலே எங்கள்குலத்துக்கெல்லாம் மூலமானவ ரென்றபடி. கொழுந்து-தலை. அன்றிக்கே, எங்குலக்கொழுந்தென்றது-எங்கள்குல மடங்கலும் ஒருவேராய் அதுக்கு எம்பெருமானார் தாம் கொழுந்தாய்க் கொண்டு வேருக்கு வெக்கை தட்டினால் கொழுந்து முற்பட வாடுமாய்

http://acharya.org

போலே எங்கள் குலத்துக்கு ஒருகுறை வந்தால் முற்படத் தம்முடைய முகம் வாடியிருக்குமவரென்னவுமாம். "குணம் திகழ் கொண்டலாய்-எங்கள் குலக்கொழுந்தான-இராமாநுசன்-பதிதொறும்புக்கு நிற்கும்" என்று இங்ஙனே யோஜிக்கவுமாம். (சு0)

* உரை.—அ.—அறுபத்தோராம்பாட்டு. "குணம் திகழ்கொண்டல்" என்று இவருடைய குணத்தைச்ஸ்லாகித்தார், இவர்தம்முடைய குணவைபவமிருக்கும்படியென்னென்ன; அதிருக்கும்படியையருளிச்செய்கிறார்.

மூ.—கொழுந்துவிட்டோடிப்படரும்வெங்கோள்வினையால்நிரய
தழுந்தியிட்டேனைவந்தாட்கொண்டபின்னுமருமுனிவர் [த்
தொழுந்தவத்தோனெம்மிராமாநுசன்றன்புகழ்சுடர்மிக்
கெழுந்தத்தால்நல்லதிசயங்கண்டதிருநிலமே. (சுக)

பதம்.	உரை.	பதம்	உரை.
அரு	"స మహాత్మా సుదుర్లభః" "ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்கிறபடியே எம்பெருமானுக்கும் பெறுதற்கு அரிய வாகளாய்,	புகழ்	கல்யாணகுணங்கள்,
		கொழுந்துவிட்டு	மேன்மேலும் தலைப்பெற்று,
		ஓடி	சீக்ரகதியாய்க்கொண்டு,
		படரும்	விஸ்த்ர்தமாகாநிற்பதாய்,
முனிவர்	"వాసుదేవస్సర్వమ్" "வாஸுதேவஸ்ஸர்வம்" என்கிறபடியே அவனேநமக்குஸகலமுமென்று மநநம்பண்ணிக் கொண்டிருக்குமவர்கள்,	வெம்	க்ரூரமாய்.
		கோள்	ப்ரபலமாயிருந்துள்ள,
		வினையால்	கர்மங்களாலே "மற்றநரகம்" என்னும்படி * வானுயரின்பத்துக்கெதிர்த் தட்டாய்,
தொழும்	தம் திருவடிகளிலே வந்து வணங்கும்படியிருப்பாராய,	நிரயத்து	* அநந்தக்லேச பாஜநமான ஸம்ஸாரத்திலே,
தவத்தோன்	ப்ரபத்தி யாகிற மஹா தபஸ்ஸையுடையராய்,	அழுந்தியிட்டேனை	மக்நனாய் விட்டவென்னை,
		வந்து	நான் கிடக்கிற ஸ்தலத்திலேவந்து,
எம்	நமக்குஸ்வாமியான,		
இராமாநுசன்றன்	எம்பெருமானாருடைய,	ஆள்கொண்டபின்னும்	அடிமையாக்கிக்கொண்டபின்னும்,

http://acharya.org

பதம்.	உரை.
சுடர்மிக்கு	அவ்வளவில் பர்யவஸியாதே என்னை அங்கீகரிக்கை யால் வந்த நிரவதிக தேஜஸ்ஸோடே,
எழுந்தது	இன்னமும் இப்படி நமக்கு விஷயீகரிக்கலா வாராரோ வென்று மாத்ர்சரைத்தேடிககிளர்ந்தது;
அத்தால்	அத்தாலே,
இருநிலம்	மஹாப்ர்திவியானது,
நல்லதிசயம் கண்டது	நல்லதோராஸ்சயம் கண்டது.

இது எம்பெருமானுடைய குணவைபவமிருக்கும்படி யென்றுகருத்து.

பதம். உரை.

அன்றிக்கே, ராமாநுசன்றன்புகழ்சுடர்மிக்கெழுந்தது என்றதுக்கு- பாபிஷ்டனான வென்னை அடிமை கொண்ட பின்பும் தேஜஸ்ஸு குன்றாதிருக்கிறமாத்ரமன்றிக்கே, நிரதிசய தேஜஸ்ஸாய்த் தோற்றிற்றென்று பொருளாகவுமாம். அப்போதைக்கு, எழுதல் - தோற்றுதல். "இராமாநுசன் தொல்புகழ்" என்றுபாடமாகில், தொன்மை - பழமையாகையாலே, ஸ்வரூபாநுபந்தியாய்ப்பழையவாய்ப் போருகிறகுணங்கள் இப்படிசெய்ததென்கை. கொழுந்துவிடுகையாவது - வர்த்தித்துச் செல்லுகை. வெம்மை- க்ரௌர்யம். கோள் - மிடுக்கு. ()

வ்யா.—அ.—அறுபத்தோராம்பாட்டு. "குணந்திகழ்கொண்டல்" என்று இவர்தம்முடைய கல்யாணகுணங்களைக் கொண்டாடினீர், அவற்றினுடைய வைபவ மிருக்கும்படி யெங்ஙனே யென்று கேட்டவர்களைக்குறித்து, அத்யந்த க்ரூரபாபியாய் ஸம்ஸாரகர்த்தத்திலே யழுந்திக் கிடக்கிற வென்னை அர்த்தித்வ நிரபேக்ஷமாகத் தம்முடைய பரம க்ர்பையாலே தாமே நானிருந்தவிடம் தேடிவந்து என்னைத் தமக்கு சேஷமாம்படி திருத்தி ரக்ஷித்தருளின பின்பும், பராங்குச பரகால நாதயாமுநாதிகளெல்லாம் தம்பக்கலிலே விசேஷப்ரதிபத்தி பண்ணும்படி யிருப்பாராய், பெரியபெருமாள்திருவடிகளிலே ஸகல சேதநோஜ்ஜீவந விஷயமாகச் செய்யப்பட்ட ஸரணாகதியாகிற மஹா தபஸ்ஸையுடையரான எம்பெருமானாருடைய கல்யாண குணங்கள் ஸமஸ்ததிக்கிலும் வ்யாப்தங்களாய் அத்யந்த ஔஜ்வல்ய சாலிகளாய்க் கொண்டு பூமியிலேயெங்குமொக்கக் காணப்படுகிறன வென்கிறார்.

வ்யா—(அருமுனிவர்தொழுந்தவத்தோன்) (அரு) "ஸுதுர்லபா:" "ஸமஹாத்மாஸுதுர்லப:" என்று - கீதாசார்யன் தான் அவதரித்தவிபவாவதாரத்துக்குப் பிற்காலத்திலே நம்மாழ்வாரவதரிக்கையாலே அவருடையகாட்சி தனக்குலபியாதே போந்ததே! யென்று விசாரித்துச் சொன்னானென்று பெரியவாச்சான்பிள்ளை

http://acharya.org

இவ்வாக்யத்துக்கு அர்த்தமருளிச் செய்கையாலே, "அரு" என்று-துர்லபரான நம்மாழ்வாரைச் சொல்லுகிறது. (முனிவர்) "వాసుదేవస్సర్వమ్" "வாஸுதேவஸ் ஸர்வம்" என்றும், "உண்ணும்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணனெம்பெருமான்" என்றும்-பதினறுவர்ஷம் மநநம் பண்ணிக்கொண்டிருந்த அர்த்தத்தையிறே பிற்பாடு அவர் வெளியிட்டு ப்ரபந்தீகரித்தது. இதுதன்னையும் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்தாரிறே. இப்படி அத்யந்த துர்லபராய் மநந சீலரான நம்மாழ்வாரும் அவருடைய க்ர்பாவிஷயபூதரான நாதமுனிகளும் ஆளவந்தாரும், இவருடைய பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தையும் ஆராதித்துக்கொண்டு இவருடைய திருவவதாரத்தை மநநம் பண்ணிக்கொண்டு அநேக ப்ரயத்நங்களை பண்ணிக்கொண்டு போருகையாலே அவர்களையும் சேரப்பிடித்து, "முனிவர்" என்கிறார்.

(தொழும்) "పూర్వే మూర్ధాన్వయముపగతా దేశికా ముక్తిమాప్తాః" "பூர்வேமூர்த்நாந்வய முபகதா தேசிகா முக்திமாப்தா:" என்கையாலே அவர்கள் இவரோ நமக்கு உத்தாரகரென்று ப்ரதிபத்திபண்ணும்படி யிருக்குமவராய். (தவத்தோன்) "తస్మాన్న్యాసమేషాం తపసామతిరిక్తమాహుః" "தஸ்மாந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:" என்று ஶ்லாகிக்கப்படுகிற பகவச்சரணாகதிநிஷ்டரான. "కాలత్రయేऽపి కరణత్రయనిర్మితాతి పాపక్రియస్య శరణం భగవత్క్షమైవ । సా చ త్వయైవ కమలారమణేऽర్థితా యత్ క్షేమస్స ఏవ హి యతీన్ద్ర భవచ్ఛ్రితానామ్" "காலத்ரயேபிகரணத்ரயநிர்மிதாதி பாபக்ரியஸ்ய ஶரணம் பகவத்க்ஷமைம-ஸாசத்வயைவகமலாரமணேர்த்திதாய க்ஷேமஸ்ஸஏவஹியதீந்த்ரபவச்ச்ரிதாநாம்" என்று இவ்வர்த்தத்தை ஜீயருமருளிச்செய்தாரிறே. (எம்மிராமாநுசன்றன்) எங்களுக்கு வகுத்த சேஷியான எம்பெருமானார் தம்முடைய. (புகழ்) கல்யாணகுணங்கள். "இராமாநுசன் தொல்புகழ்" என்று பாடமானபோது - அநாதியாய் ஸ்வாபாவிகங்களான கல்யாணகுணங்களை யென்றபடி. இப்படிப்பட்ட கல்யாணகுணங்கள்.

(கொழுநதுவிட்டோடிப்படரும் வெங்கோள்வினையால் நிரயத்தழுந்தியிட்டேனை) மேன்மேலும் தலைபெற்று சீக்ரகதியாய்க்கொண்டு லோகமெல்லாம் வ்யாபித்து நிற்பதாய், "దురాచారః" "துராசார:" என்கிறபடியே அக்ர்த்யகரணக்ர்த்யாகரணரூபமாயிருக்கையாலே, "க்ஷிபாமி" "நக்ஷமாமி" என்னும்படியான பகவந்நிக்ரஹத்துக்குடலாய், "యద్బ్రహ్మకల్పనియుతానుభవేऽప్యనాశ్యమ్" "யத்ப்ரஹ்மகல்பநியுதாநுபவேப்யநாஶ்யம்". என்கிறபடியே - அநுபவ ப்ராயஶ்சித்தங்களாலும் நஶிப்பிக்கவொண்ணாதபடி

http://acharya.org

ப்ரபலமான துஷ்கர்மத்தாலே, "மற்றநரகம்" என்னும்படி * வானுயரின்பத்துக் கெதிர்த்தட்டாய் அநந்தக்லேசபாஜநமான ஸம்ஸாரமாகிற * விடியாவெந்நரகத்திலே நிமக்நராய்க் கரைகாணாதே அழுந்திகிடக்கிற வென்னை. வெம்மை-க்ரௌர்யம். கோள்-மிடுக்கு.

(வந்தாட்கொண்டபின்னும்) என்னை ரக்ஷிக்கவேணுமென்று நான் விரக்தியாதகாலத்திலே எம்பெருமானார் தம்முடைய நிர்ஹேதுகக்ருபையாலே * விண்ணின்தலைநின்று நாளிருந்த மண்ணின் தலத்தே என்னைத் தேடிக்கொண்டுவந்து என்னுடைய அஜ்ஞாநத்தைப்பார்த்துக் கைவிடாதே அடிமைகொண்டபின்பு. சகாரம் அவதாரணார்த்தமாய் - என்னை ஆட்கொண்டபின்புதானே யென்றபடி. (சுடர்மிக்கெழுந்தது) அவ்வளவில் பர்யவஸியாதே என்னை அங்கீகரித்து தரிப்பிக்கையாலே வந்த நிரவதிக தேஜஸ்ஸோடே கூட மேன்மேலும கிளர்ந்தது. இன்னும் இப்படி விஷயீகரிக்கலாவார் ஆரேனு முண்டோவென்று மாத்ர்சரைத் தேடிக்கொண்டு கிளர்ந்தது. இவரை ஆச்ரயித்தபின்பு அவர் ஆகாராந்தரத்தை பஜித்தாப்போலே காணும் அவையடங்கலும் இவரை விஷயீகரித்தபின்பு ஆகாராந்தரத்தை பஜித்தபடி. (அத்தால் நல்லதிசயங்கண்ட இருநிலமே) அத்யந்த பாபிஷ்டனான வென்னை விஷயீகரித்தபின்பு அவருடைய கல்யாணகுணங்களுக் குண்டான கிளர்த்தியாலே, "வஸுந்தராபுண்யவதீ" "வஸுந்தராபுண்யவதீ" என்கிறபடியே * மேதினிநமசுமையாறுமெனத் துயாவிட்டு விளங்கத் தொடங்கிற்றென்கிறார்.

இருநிலம் - மஹாவிஸ்தாரதையானபூமி. இருமை - பெருமை. அன்றிக்கே, இருநிலம் - மஹாவிஸ்தர்தையானஇந்தப்ர்திவியிலே. (அத்தால் நல்லதிசயங்கண்டது) என்போலேபாபிஷ்டரை ரக்ஷித்தபின்புதானே எம்பெருமானாருடைய கல்யாணகுணங்கள் நிரவதிக ஔஜ்வல்ய யுகதங்களாய்க்கொண்டு கிளம்புகையாலே, அக்கிளர்த்தியால் அவற்றினுடைய ஸ்வரூபத்துக்கு ஓரதிசயமானது எல்லாராலும் காணப்பட்டதென்று யோஜிக்கவுமாம்.

"சுடர்மிக்கெழுந்தது-கொழுந்துவிட்டோடிப்படரும்" என்று அந்வயித்து-என்னை யங்கீகரித்துக் கிளர்ந்த அக்கல்யாண குணங்கள், எனபோல்வாராரேனும் இன்னம் இந்தலோகத்திலே யிருந்தால் அவர்களையுங்கூட ஒக்க ரக்ஷிக்கவேணுமென்னும் * நோயாலே என்னையும் மேல்மேலனக் கொழுந்துவிட்டு அபிவ்ர்த்தங்களாய்க் கொண்டு ஸகல திக்குக்களிலும் வ்யாபியாநின்றதென்றும் சொல்

* "நோயாசையாலே" என்னும் பாடம்.

http://acharya.org

ஸ்வுமாம். இப்படியாயிற்று எம்பெருமானாருடைய கல்யாணகுண வைபவமிருக்கும்படி யென்றுகருத்து. ... ... (கூக)

உரை.—அ.— அறுபத்திரண்டாம்பாட்டு. தம்முடைய கர்ம ஸம்பந்தம் அறப்பெறுகையால்வந்த கார்த்தார்த்த்யத்தை யருளிச் செய்கிறார்.

இருந்தேனிருவினைப்பாசங்கழற்றியின்றியானிறையும்
வருந்தேனினியெம்மிராமாநுசன்மன்னுமாமலர்த்தாள் [ப
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கொன்று நன்மைசெய்யா
பெருந்தேவரைப்பரவும்பெரியோர்தங்கழல்பிடித்தே. (கூஉ)

பதம்.	உரை.
எம்	நமக்குநாதரான,
இராமாநுசன்	எம்பெருமானுடைய,
மன்னு	பரஸ்பரம்பொருந்தி,
மா	பரமபூஜ்யமாய்,
மலர்	பரமபோக்யமாயிருந்துள்ள,
தாள்	திருவடிகளில்,
பொருந்தா	சேராத,
நிலையுடை	ஸ்வபாவத்தையுடையரான,
புன்மையினோர்க்கு	துர்மாநிகளுக்கு,
ஒன்றும்	ஏகதேசமும்,
நன்மைசெய்யா	அநுகூலவ்ர்த்தி பண்ணாத,
பெருந்தேவரை	ஸூரிஸமரான ஸ்ரீவைஷ்ணவர்களை,
பரவும்	அவர்கள் ஸ்வபாவத்துக்குத் தோற்று ஸ்தோத்ரம் பண்ணுகின்றுள்ள,
பெரியோர்	மஹாப்ரபாவரானவர்களுடைய,
தம்	
கழல்பிடித்து	திருவடிகளைப்பற்றி,
இன்று	இன்று,

பதம்.	உரை.
இரு	புண்ய பாபரூபத்தாலே உபயவிதமாயிருந்துள்ள,
வினைப்பாசங்கழற்றி	கர்மபாசவிநிர்முக்தனாய்,
இருந்தேன்	க்ர்தக்ர்த்யனாய் நிர்ப்பரனாயிருந்தேனே;
யான்	இப்படியிருந்தநான்,
இனி	இனி,
இறையும்	அத்யல்பமும்,
வருந்தேன்	துக்கத்தில் அந்வயியேன்.

கர்மம்கிடக்கிலிறே துக்கம் வருவதென்று கருத்து.

அதவா, பொருந்தா இத்யாதிக்கு - எம்பெருமானார் திருவடிகளில்சேரோம்என்னும் துர்மாநிகளுக்கு - ஆயிரம்பண்ணைபல்காட்டிலும் ஒரு நன்மையும்செய்யோமென்றிருக்கும் பரதேவதையான பெரியபெருமாளை, அந்தஸ்வபாவத்திலேதோற்று ஸ்தோத்ரங்களைச் செய்த *மொழியைக்கடக்கும் பெரும்புகழானகூரத்தாழ்வான் திருவடிகளைப்பற்றி, இன்று - இருவினைப் பாசங்கழற்றி - இருந்தேன்" என்று இங்ஙனே

http://acharya.org

பதம்.	உரை.
	யோஜிக்கவுமாம். "பெருந்தேவனே" என்றும்பாடம்சொல்லுவர். "புன்மையினோர்க்குஎன்றும் நன்மை செய்யா" என்று பாடமான போது - ஒருகாலத்திலும் ஆநுகூல்யம் பண்ணாத என்று பொருளாகக்கடவது. புன்மையினோர் என்றது - புன்மையையுடையோரென்றபடி. புன்மை - பொல்லாங்கு. "இன்றியான்" என்கிறவிடத்தில்றகரத்தின்மேலேறின இகாரம்குற்றியலிகர மாகையாலே, "உமக்கியான்" என்கிற விடத்தைப்போலே வண்ணம்கெடாமைக்குக்கழித்து, பதினேழெழுத்தாகவெண்ணக்கடவது. ... (௬௨).

வ்யா.—அ.—அறுபத்திரண்டாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-ஸமஸ்தகல்யாண குணாத்மகரான எம்பெருமானார், தம்மைப் பெற வேணுமென்று தேடித்திரியும்படியையும், அவர் நிர்ஹேதுகமாகத் தம்மை யடிமைகொண்டபின்பு அவர்தம்முடைய கல்யாணகுணங்கள் நிறம் பெற்றபடியையும் அருளிச்செய்து, இதிலே-"எம்பெருமானார் பர்யந்தமுமல்ல, அவருடையதாஸ்யதைப் பண்ணிக்கொண்டுபோருமவர்களுடையபர்யந்தமுமல்ல தம்முடையதாஸ்யம்" என்று துர்மாநிகளாய்க் கொண்டு வன்னெஞ்சரான ஆத்மாபஹாரிகளுக்கு வ்யதிரேகமுகேந தாஸ்யத்தைப் பண்ணுமவர்களுடைய ஸம்பந்தத்தாலே தமக்குண்டான கார்த்தார்த்த்யத்தையருளிச்செய்கிறார்.

வ்யா.—(எம்மிராமாநுசன்) "అస్మద్గురోర్భగవతోஸ్య" "తస్మిన్ రామానుజార్యే గురురితి చ పదం భాతి" "శ్రీమద్గురూణాం కులమిదమఖిలం తస్య నాథస్య శేషః" "தஸ்மிந்ராமாநுஜார்யே குருரிதிசபதம்பாதி" "ஸ்ரீமத்குரூணாம்குலமிதமகிலம்தஸ்யநாதஸ்யசேஷ:" என்கிறபடியே - ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் சேஷியான எம்பெருமானாருடைய.(மன்னுமாமலர்த்தாள்) மன்னுகையாவது-ஸ்வாஸ்ரீதரக்ஷணத்திலே தீக்ஷித்து நிஸ்சலமாயிருக்கை. "திண்கழல்" என்னுமாப்போலே. புஷ்பத்துக்கு மஹத்வமாவது-காந்தி ஸௌகுமார்ய ஸௌரப்ய பாவநத்வாதிகுணவிஸிஷ்டதை. இப்படிப்பட்ட பாவநத்வ போக்யத்வங்களையுடையனவாய் புஷ்பஹாஸஸுகுமாரமான திருவடிகளை. "சீராருமெதிராசர்திருவடிகள்" என்றும், "அழகாருமெதிராசரடியிணைகள்" என்றும் ச்லாகிக்கப்பட்ட திருவடிகளென்றபடி.

(பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கு) மர்க்கட மூஷ்டியைப்போலே மூர்க்கித்துநின்று வந்தாச்ரயியாதபடியான [illegible] பாவத்தையுடைய துர்மாநிகளுக்கு.|(ஒன்றும்நன்மைசெய்யா) [illegible]ல்பமாநாலும் அவர்களுக்கு ஹிதமாயிருப்பதொரு ப்ர[illegible]

http://acharya.org

கல்வியாதே யிருக்கிற. (பெருந்தேவரை)(தேவர்)ப்ரஹ்மருத்ராதிகள். (பெருந்தேவர்) "యత్రపూర్వే సాధ్యాస్సన్తి దేవాః" "யத்ரபூர்வே ஸாத்யாஸ்ஸந்திதேவா:" என்கிற நித்யஸூரிகள். ததம்ஶபூதரான திவ்யஸூரிகளென்னவுமாம். (பரவும்பெரியோர்தம்) "మాతా పితా యువతయః" "மாதாபிதாயுவதய:" என்கிறச்லோகத்திலும், "భూతం సరశ్చ" "பூதம்ஸரஶ்ச" என்கிற சலோகத்திலும் சொல்லுகிற படியே - அவர்களை ஸர்வகாலத்திலும் ஸர்வப்ரகாரத்தாலும் ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டுபோருமவர்களுடைய.(பெரியோர்) பெருமை ஜ்ஞாநத்தாலே யாகையாலே ஜ்ஞாந ப்ரதாநமாயிறே பெருமையிருப்பது. "மொழியைக் கடக்கும் பெரும்புகழானை கூரத்தாழ்வான் முதலான முதலிகளுடைய. (கழல்பிடித்து) திருவடிகளை ஆச்ரயித்து. "నారాయణోపి వికృతిం యాతి గురోః ప్రచ్యుతస్య దుర్బుద్ధేః" என்கையாலே."இராமாநுசன் மன்னுமாமலர்த்தாள்பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கென்றும் நன்மைசெய்யாப்பெருந்தேவர்" என்று-ஸ்ரீயபதியான பெரியபெருமாளையும், "பரவும்பெரியோர்" என்று - பராங்குசபரகாலாதிகளையும் சொல்லவுமாம். அன்றிக்கே, "பெருந்தேவர்" என்றவித்தைஎம்பெருமானரிடத்திலே யொதுக்கி, "பரவும் பெரியோர்தம்கழல்பிடித்து" என்று - * த்வத்தாஸதாஸ சரமாவதியான தாஸ்யத்திலே ஊன்றியிருக்கிற அத்யவஸாயத்தைச் சொல்லவுமாம். புன்மையினோர்க்கென்றும் நன்மைசெய்யா என்று பாடமானபோது-அவர்களுக்கு ஒருகாலத்திலும் ஆநுகூல்யம்பண்ணாதை என்றுபொருளாகக்கடவது. புன்மையினோர் என்றது-புன்மையையுடையோரென்றபடி. புன்மை-பொல்லாங்கு. "பெருந்தேவரை" என்றும்பாடம்சொல்லுவர்கள். இப்படியானபின்பு (இருந்தேனிருவினைப்பாசங்கழற்றி) புண்யபாபரூபேண இரண்டுவகைப்பட்டிருக்கிறகர்மமாகிறப்ராப்யப்ரதிபந்தகமான பாசத்தைக் கடந்திருந்தேன். பந்தஹேதுவாகையாலே ப்ராப்திப்ரதிபந்தகமென்கிறது. "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి" "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று அவர் சொன்னதேநமக்கு ப்ராப்தமாயிருந்ததென்றபடி.(இன்றியானிறையும்வருந்தேனினி) இப்போது நான் க்ஷணமாத்ரமாகிலும் ஸம்ஸாரதுக்கத்தாலே க்லேசப்படக்கடவேனல்லேன். "అత్రైవ శ్రీరంగే సుఖమాస్స్వ" "அத்ரைவ ஸ்ரீரங்கேஸுகமாஸ்வ" என்கிறபடியே ஸம்ஸாரவெக்காயம் ஒரு க்ஷணமாத்ரமும் தட்டாதே ஸர்வதா ஆநந்தாநுபவத்தோடே யிருக்கக்கடவேனென்றதாய்த்து. ... ... (௯௨)

உரை.—அ.—அறுபத்துமூன்றாம்பாட்டு. அநிஷ்டமானவை கழித்தபடி சொன்னார் - கீழ்; இஷ்டமானகைங்கர்யத்துக்கு

அபேக்ஷிதமான தேவரீர்திருவடிகளில் ப்ராவண்யாதிசயத்தை தேவரீர் தாமே தந்தருளவேணுமென்கிறார்.

மூ.—பிடியைத்தொடருங் களிறென்னயானுன்பிறங்கியசீர்
அடியைத்தொடரும்படிநல்கவேண்டுமறுசமயச்
செடியைத்தொடரும்மருள்செறிந்தோர்சிதைந்தோடவந்
திப்படியைத்தொடருமிராமானுசமிக்கபண்டிதனே. (௬௩)

பதம்.	உரை.
அறுசமயம்	ஆறுமண்டிக் கிடக்கிற பாஹ்ய ஷட்ஸமயங்களை,
செடியைத் தொடரும்	அநுவிதாநம் பண்ணுகைக் குறுப்பான,
மருள்செறிந்தோர்	அறிவுகேடுகுடிகொண்டவர்கள்,
சிதைந்து	பக்நராய்,
ஓட	வெருவிஓடும் படியாக,
வந்து	வந்து, "அவர்பின் படருங் குணன்" என்கிறபடியே,
இப்படியை	இந்தபூமியிலுள்ளாரை விஷயீகரிக்கைக்கு,
தொடரும்	அவகாசம்பார்த்துத் தொடருமவராய், வஸ்து ஸ்வபாவங்களறிந்து கார்யம் செய்கைக் குறுப்பாயிருந்துள்ள,
மிக்கபண்டிதன்	நிரவதிகமான ஜ்ஞாத்ர்த்வத்தையுடைத்தான
இராமாநுசா	உடையவரே,

பதம்.	உரை.
பிடியை	பிடியினளவில் ப்ராவண்யாதிசயத்தாலே, ஒன்றாலும் நிவர்த்திப்பிக்க வொண்ணாதபடி,
தொடரும்	அத்தையே பின்பற்றித்திரியா நின்றுள்ள,
களிறென்ன	களிறுபோலே,
யான்	நானும்,
உன்	தேவரீருடைய,
சீர்	ஸௌந்தர்யஸௌகந்த்ய ஸௌகுமார்யாதிகுணங்களெல்லாம்,
பிறங்கிய	ப்ரகாசித்திருந்துள்ள,
அடியை	திருவடிகளை,
தொடரும்	பின்தொடரும்,
படி	ஸ்வபாவத்தை,
நல்கவேண்டும்	தந்தருளவேணும்.

களிறென்ன என்றது - களிறென்று சொல்லலாம்படியென்கை. "களிறன்ன" என்று பாடமானாலோவென்னில்; அப்போது, பிடியைத் தொடரும் களிற்றையொத்த யானென்று பூதார்த்தவாசியாய், யான் என்கிற அதிகாரிக்கு விசேஷணமாயித்தனை

பதம். உரை.
யல்லது, அடியைத் தொடரும்படி நல்கவேண்டும் என்கிற ப்ராப்ய ப்ராவண்ய ப்ரார்த்தனைக்கு த்ர்ஷ்டாந்தமாக மாட்டாமையாலே அது சேராது. பிறங்குதல்-ப்ர்காசம். பிறங்கிய சீரடியென்றது-மிகவுமழகிதான திருவடிகளென்னவுமாம். அப்போது, பிறங்குதல்-மிகுதி. சீரென்று-அழகு. செடி-தூறு. மருள் செறிகையாவது-அறிவுகேடு திரளுகை. அடியைத்தொடரும்படி யென்கிறவிடத்தில், படியென்று - ஸ்வபாவம். நல்குதல்-கொடுத்தல். அடியைத் தொடரும்படியாகச் செய்யவேணுமென்னவுமாம். (சுங)

வ்யா.—அ.—அறுபத்துமூன்ரும்பாட்டு. கீழிம்பாட்டிலே-எம்மிராமாநுசன் மன்னுமாமலர்த்தாள் பொருந்தாமனிசரைக் குறித்து ஹிதலேசமும் செய்யாத பெரியோரைஅநுவர்த்திக்கும் மஹாத்மாக்களுடைய திருவடிகளை ஆச்ரயித்து, ப்ராப்திப்ரதிபந்தகங்களான புண்யபாப ரூபகர்மங்களைக் கழற்றிக்கொண்டு ஸம்ஸார வெக்காயம்தட்டாதபடி யிருந்தேனென்று எம்பெருமானர் திருவடிகளுடைய ஸம்பந்திஸம்ப்ந்தி பர்யந்தமாகச்செல்லுகிற ப்ரபாவத்தைக்கொண்டாடினர்; இதிலே-அப்படிப்பட்ட திருவடிகளிலே தமக்கு உண்டான ப்ராவண்யாதிசயம் பிறக்கவேணுமிறேயென்று கொண்டு, அவைதிகஸமயத்தோரடங்கலும்பக்நராய் வெருவியோடும்படிஅவதரித்து,பூலோகத்திலெங்கும்பாஹ்யரைத்தேடி,அவர்கள் மேல் படையெடுத்து அவர்களைத் தேடித்திரியும்படியான ஜ்ஞாநபௌஷ்கல்யத்தையுடையரானஎம்பெருமானரே!,தேவரீர் திருவடிகளிலே அதிமாத்ரப்ராவண்யத்தை அடியேனுக்குத் தந்தருளவேணுமென்றுநேர்கொடுநேரே விண்ணப்பம்செய்கிறர்.

வ்யா.—(அறுசமயச்செடியை) தூறுமண்டிக்கிடகிற பாஹ்யஷட்ஸமயங்களை. செடி-தூறு. அன்றிக்கே, அறுஎன்று-அநுஷ்டாநதசையிலே யற்றிருக்கிற ஸமயங்களென்னுதல்; ஸாதநதசையிலே ஆட்டையறுத்துக்கொடுக்கையும், "தலையையறுத்துக் "கொடுக்கையும்," கல்லும்முள்ளுமான காட்டிலே பஞ்சாக்நிமத்யத்திலே தபஸ்ஸு-பண்ணுகையும், பஸ்மதாரண மலலேபநாதி துர்வ்யாபாரங்களைப் பண்ணுகையும், ப்ராப்திதசையிலும் பாஷாணகல்பமாயிருக்கையும் முதலான துக்கங்களாலே வ்யாப்தங்களாகையாலே வருத்தத்தோடே பிணைந்திருக்கிற ஸமயங்களென்னுதல். (தொடரும் மருள்செறிந்தோர்) இப்படிப்பட்ட துர்மதங்களாகிற கஹநத்திலே த்ர்ஷ்டிவிஷமான பாஷாணங்கட்கெல்லாம் தலைசாய்ந்து "[illegible]" "பஹுஶாகாஹ்யநந்தாஶ்சபுத்தயோர் வ்யவஸாயிநாம்" என்கிறபடியே நின்றவரநில

லா நெஞ்சினராய்க்கொண்டு துர்மதங்களை அநுவிதானம் பண்ணுகைக்குறுப்பான அறிவுகேடு குடிகொண்டவர்கள். மருள் செறிகையாவது-அறிவு கேடு திரளுகை. (சினைந்தோட) ஸிம்ஹத்தைக்கண்டு ம்ருகங்கள் ஓடுமாபோலே இவரைக் கண்டு துஷ்ட ஸமயத்தார் பக்நஹ்ருதயராய் வெருவி ஓடும்படியாக. (வந்திப்படியைத்தொடரும்)பரமபதத்தில்நின்றும இவ்வளவாகத்தாமேவந்து இந்தபூமியிலே அந்தப்ரதிபக்ஷங்கள்மேலேபடைதிரட்டித்திரியும். படி-பூமி. அன்றிக்கே "அவர்பின்படருங்குணன்" என்கிறபடியே இந்தபூமியிலுள்ளாரை விஷயீகரிக்கைக்காக அவஸரம்பார்த்துத் தொடர்ந்து திரியுமவனென்னவுமாம் (இராமாநுசா) எம்பெருமானாரே. (மிக்கபண்டிதனே) தேவரீருடைய ஜ்ஞாநபௌஷ்கல்யமிருக்கிறபடி எங்ஙனே! என்று ஆஶ்சர்யப்பட்டு ஸம்போதிக்கிறார் காணும். காளஹஸ்தியில நின்றும் சைவர்கள் திருமலைமேலே வந்து தங்களுடைய துர்மத ப்ரவர்த்தநம்பண்ணத் தொடங்க அவ்விடத்துக்கு இவரெழுந்தருளி அவர்களை ஜயிக்க அவர்கள் பக்நராய் ஓடிப்போனார்களென்றும், திருநாராயணபுரத்துக்கு ஸமீபத்திலே ஜைநா இவரோடே ப்ரஸங்கித்து பக்நராய்ப்போனார்களென்றும், அதுக்குப் பிற்பாடு திக்விஜயார்த்தமாக ஆஸேதுஹிமாசலபர்யந்தம் ப்ரதிவாதிகளை நாடி பூமிப் பரப்பெல்லாம் ஸஞ்சரித்து தம்முடைய பாண்டித்யத்தாலே ஸாரஸ்வதபீடத்திலேயிருந்த குத்ருஷ்டிகளை ஜயித்தாரென்றும் ப்ரஸித்தமிறே. இந்த ஸம்போதநத்தால் - எம்பெருமானாரே! எனக்கொரு அபேக்ஷையிருக்கிறது அத்தை விண்ணப்பம் செய்கிறேனென்னு மிடம் இவர்க்கபிப்ராயமாகத் தோற்றுகிறது.

அதென்னென்ன அருளிச்செய்கிறார் (பிடியைத் தொடரும் களிறென்னயான்) பிடியினளவில் வ்யாமோஹாதிசயத்தாலே ஒன்றாலும் நிவர்த்திப்பிக்க வொண்ணாதபடி அத்தையே பின் பற்றித் திரியாநின்றுள்ள களிறுபோலே இத்தனைநாளும் விஷயாந்தரப்ரவணனாய்த் திரிந்தபோட்கனான அடியேன். அன்றிக்கே,
'యాప్రీతిరవివేకానాం విషయేష్వనపాయినీ। త్వామనుస్మరతస్సా మే హృదయాన్మాపసర్పతు'
"யாப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ । த்வாமநுஸ்மரத ஸ்ஸாமே விஷயாந்நாபஸர்ப்பது" என்கிறபடியே - இப்படிப் பட்ட ப்ரீதிப்ரகர்ஷத்தையுடையேனும்படி அடியேனை க்ருபை பண்ணி யருளவேணு மென்கிறார் என்னவுமாம். பிடியைத் தொடரும்களிறென்ன என்றது-களிறென்று சொல்லலாம்படியென்கை. பிடி-பெண்யானை. களிறு ஆண்யானை. படி - ஸ்வபாவம். நல்கவேண்டும் - கொடுத்தருளவேணும். இத்தனைநாளும் இப்படித்திரியும் நான் இப்போது (உன்பிறங்கிய சீரடியைத் தொடரும்படி)

http://acharya.org

உபதேசித்து ஸந்மார்க்கத்திலே நிறுத்துகைக்கும், அநுகூலரை ரக்ஷிக்கைக்கும் மநநம்பண்ணுகைக்கு முடலான ஜ்ஞாநவிகாஸத்தோடேயிருக்கிற ஆனே. இப்படி அப்ராக்ருதமான ஆனைக்குண்டான ஜ்ஞாநம் அதுக்குத்தக்கதாயிருக்குமிறே. கஜமாக உத்ப்ரேக்ஷிக்கிறது விபக்ஷிகளை சித்ரவதம்பண்ணவும் தாம் பரிக்ரஹித்தவர்களை பட்டாபிஷேகயோக்யராம்படி பண்ணவும் வல்லவராகையாலே.

(பண்டருமாறன் பசுந்தமிழ்) * எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை நிரை நிறை ஓசை தளை இனம் யாப்பு பா துறை பண் இசை தாளம் முதலான செய்சொல்லு மிதுக்குண்டாகையாலே "யாழினிசைவேதத்தியல்" என்று - காரோபலக்ஷிதங்களான ஸகலலக்ஷணங்களும அநுஸந்தாதாக்களுக்குத் தெளிந்து அநுபவிக்கும்படியாயிருக்கிற. அன்றிகே, "பண்டு அரு" என்று பதச்சேதமாகில், பண்டு என்கிற சப்தம காலபரமேயாகிலும், "గఙ్గాయాం ఘోషః" "கங்காயாம் கோஷ:" என்கிறவிடத்திலே கங்காபதம் தீரவாசகமானாப்போலே லக்ஷணையாய் இப்பபத்தமகாலீநவஸ்து வாசகமென்று சொல்லலாமிறே; அந்தபக்ஷத்திலே, "ఏవం త్రేతాయుగే నాథః శరణోపగప్రణేష్యతి । కలేర దౌవన్ద్యోగీశ శరణోపగప్రణేష్యతి" "ద్రమిడోపనిషద్గీతాద్రామిడబ్రహ్మసూత్రే । వ్యాపకా నైవ ధాన్యాన్ సో వేదవ్యాసో వ్యసిష్యతి" என்கிறபடியே - ப்ரதித்வாபராந்தத்திலும வ்யாஸாவதாரமபண்ணி ஸம்ஸ்க்ருதவேதங்களை ஸர்வேச்வரன்தானே வ்யவஹிக்குமாப்போலே, ப்ரதிகலியுகாதியிலும் ஜ்ஞாநயோகியாயவதரித்து த்ரமிட வேதங்களை ஸர்வேச்வரனே வெளியிட்டுப் போருகிறுனென்று ப்ரஹ்மபார்க்கவ வ்ருத்தபாரதமாதி புராணங்களிலே ஸுபரஸித்தமாகச் சொல்லுகையாலே நித்யமாய அபௌருஷேயமா யிருந்துள்ள திருவாய்மொழி, பாகவதர்களொழிய அந்யருச்ருவாமநஸ்ஸுக்களாலே ஸ்பாசிக்கவுங்கூடவரிதான வென்றபடி. "மாறன்" என்று - நம்மாழ்வாருக்கு ப்ரதமோபாத்தமான திருநாமம்.

வ்யா —அ.—எழுபததுநாலாமபாட்டு. கீழ்ப்பாட்டிலே - எம்பெருமானா, தமமுடைய பரமகர்பாகாரயமான ஔதார்யத்தாலே சேதநரெலலாரையும் குறித்து யதாவஸ்திதஜ்ஞாநோபதேசம பண்ணியருளினரென்று அருளிச்செயது, இதிலே-ஸதஸத்விவேகஶூந்யராய் ஸ்வாஜ்ஞாதிலங்கநம் பண்ணிப் போருகிற துஷ்டரை, ஸர்வேச்வரன் அநேகாவதாரங்களையும அநேகயத்நங்களையும் பண்ணி சக்ரஹஸ்தனாய்க்கொண்டு வருத்தத்தோடே நிரஸித்தவோபாதியன்றிக்கே, தாம் உபதேசித்த ஜ்ஞாநத்துக்கு விரோதிகளாய் ஜ்ஞாநலவதுர்விதக்தராய்க்கொண்டு திரண்டு கிடக்கிறபாஹ்யகுத்ர்ஷ்டிகளை தாதாத்விகையான வொருசுக்தியாலே நிரஸித்தாரென்று அவர்தமமுடைய வைபவததைககொண்டாடுகிறார்.

வ்யா.—(மறையின்திறம்) "వాచావిరూపనిత్యయా" "வாசாவிருபநித்யயா" என்கிறபடியே நித்யமாய், "అతఏవ చేయుష్మద్భిః దూషితమాలిన్య వినిర్ముక్తవేదాఖ్యాక్షరరాశేరేవ" "அசேஷசேமுஷீதோஷதூஷிதமாலிந்யவிநிர்முக்த வேதாக்யாக்ஷரராசேரேவ" என்கிறபடியே-ப்ரமப்ரமாதாதிதோஷதுஷ்டபுருஷப்ரணீதமன்றிக்கே அபௌரு

http://acharya.org

ஷேயமாய் அதஏவ நித்ய நிரவத்யமாய், "ధర్మజ్ఞసమయః ప్రమాణం వేదాశ్చ" "தர்மஜ்ஞஸமயப்ரமாணம்வேதாஶ்ச" என்கிறபடியே ப்ரமாண தமமாய், அதஏவ ப்ரத்யக்ஷாதி ஸகலப்ரமாண விலக்ஷண மாய், "శాస్త్రయోనిత్వాత్" "ஶாஸ்த்ரயோநித்வாத்" என்றும், "హర్తుం తమస్సదసతీ చ వివేక్తుమీశో మానం ప్రదీపమివ కారుణికో దదాతి" "ஹர்த்தும் தமஸ்ஸதஸதீசவிவேக்துமீஶோ மாநம்ப்ரதீபமிவகாருணிகோ ததாதி" என்றும் சொல்லுகிறபடியே தன்னுடைய ஶாஸநரூப மாய் ஸதஸத்விவேசகமாய், (మాతాపితృసహస్రేభ్యో వత్సలతరం శాస్త్రమ్) (மாதாபித்ர்ஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம்ஶாஸ்த்ரம்) என்கிற படியே ஆப்ததமமாய், "శ్రుతిస్స్మృతిర్మమైవాజ్ఞా" "ஶ்ருதிஸ்ம்ருதிர்மமை வாஜ்ஞா" என்கிறபடியே தன்னுடைய ஶாஸநரூபமாயிருந்து ள்ள வேதத்தினுடைய ப்ரகாரத்தை. த்யாஜ்யோபாதேய விவேசந ரூபமான ஶிக்ஷையை. "సత్యం వద, ధర్మం చర, స్వాధ్యాయాన్మా ప్రమదః, ఆచార్యాయ ప్రియం ధనమాహృత్య ప్రజాతంతుం మా వ్యవచ్ఛేత్సీః" "ஸத்யம்வத, தர்மம் சர, ஸ்வாத்யாயாந்மாப்ரமத:, ஆசார்யாய ப்ரியம்தநமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மாவ்யவச்சேத்ஸீ:" என்றும் வேதபுருஷனாலே போதிக்கப்பட்ட ப்ரகாரத்தை யென்றபடி. (தேரார - என்று) நிருபிக்கிறிலரென்று. (ఇదమస్తీదమపి మే భవిష్యతి పునర్ధనమ్, అసౌ మయా హతశ్శత్రుర్హనిష్యే చాపరానపి) (இதமஸ்தீதமபிமேபவிஷ்யதி புநர்த்தநம் - அஸௌமயாஹதஶ்ஶத்ருர்ஹநிஷ்யேசாபராநபி) என்றாராவணாதி களைப்போலே வேதத்தைத் தெளிந்துவைத்தே தத்விபரீதமாக்க நிஷ்டராய்ப் போனார்களென்று.

(மாயவனை) ஸகலஜகத்காரணபூதனா யிருந்துவைத்து ராக்ஷ ஸர்க்கு பக்ஷணயோக்யமான மானிடசாதியில் தான்பிறந்தும், ஒரு திர்யக்குக்கு மோக்ஷத்தைக்கொடுத்தும், ஒருதிர்யக்கின் கா லிலே விழுந்தும, வாநரஸேநா பரிவ்ர்தனாய்க் கொண்டு கடலை யடைத்தும், ஒருக்காலும் ஒருவரும் கண்டும் கேட்டு மறியாத நரஸிம்ஹரூபேண ஆவிர்ப்பவித்தும், இப்படிப்பட்ட அநேகஆஶ்ச ர்யகுணசேஷ்டிதங்களை யுடையனான ஸர்வேஶ்வரன். (தீயவரை) "ఆజ్ఞాచ్ఛేదీ మమ ద్రోహీ" "ஆஜ்ஞாசசேதீமமத்ரோஹீ" என்கிறபடி யே ஸ்வாஜ்ஞாதிலங்கநம் பண்ணும் அத்யந்தத்ரோஹிகளான துஷ்டரை.

(கூராழிகொண்டு) "வடிவார்சோதி" என்றும், (స్ఫురత్సహస్రారశిఖాతితీవ్రం సుదర్శనం భాస్కరకోటితుల్యమ్) (ஸ்ப்புரத்ஸஹஸ்ராரஶிகா தீவ்ரம்ஸுதர்ஶநம்பாஸ்கரகோடி துல்யம்" என்றும் சொல்லுகிற படியே - மிகவும் கூர்மையை யுடைத்தான திருவாழியாலே. (குறைப்பது) "సర్వద్విషాం ప్రాణవినాశి కృష్ణచక్రమ్" "ஸர்வத்விஷாம்

ப்ராணவிநாஶிவிஷ்ணோஶ்சக்ரம்'' என்கிறபடியே ஆச்ரிதவிரோதிகளை முற்றூட்டாக நிரஸிக்கக்கடவ திருவாழியை தரித்துக்கொண்டு அத்தாலே பகலைஇரவாக்கி ஸைந்தவனைக்கொன்றதும், ''சாமாறவனைநீயெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்'' என்கிறபடியே சிமாலியைக்கொன்றதும். குறைக்கை-சேதிக்கை.

(అజాయమానోబహుధావిజాయతే) (அஜாயமாநோபஹுதா விஜாயதே) என்றும், ''పరిత్రాణాయసాధూనాం వినాశాయచదుష్కృతామ్। ధర్మసంస్థాపనార్థాయసంభవామియుగేయుగే'' (பரித்ராணாயஸாதூநாம்விநாஶாயச துஷ்க்ர்தாம் - தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தாய ஸம்பவாமியுகேயுகே) என்றும், (மாறிமாறிப்பல பிறப்பும பிறந்து) என்றுமசொல்லுகிற படியே இஸ்ஸம்ஸாரிகளைப்போலே தானும் பலபிறப்பும் பிறந்து திருவாழியாழ்வானைத் திருக்கையிலே பிடித்துக்கொண்டு, அவன் தனக்கு நிரூபகமாமபடி யிருப்பது, வேதாந்தோக்த தாமஸம்ஸ்த்தாபநார்த்தமாக ஸ்வாஜ்ஞாநுவர்த்தநம்பண்ணுகிற சேதநரை ரக்ஷிக்கைக்காகவும், தத்விரோதிகளாய் ஸ்வாஜ்ஞாச்சேதிகளான துஷ்டரைச் சேதிக்கைக்காகவுமிறே. (బహిరన్తస్తమచ్ఛేదిజ్యోతిర్వన్దేసుదర్శనమ్। ఏనావ్యాహతసంకల్పం వస్తులక్ష్మీధరంవిదుః) (பஹிரந்தஸ்தமச்சேதி ஜ்யோதிர்வந்தேஸுதர்ஶநம் - ஏநாவ்யாஹதஸங்கல்பம் வஸ்து லக்ஷ்மீதரம்விதுః) என்னககடவதிறே.

இப்படி விரோதிநிரஸநார்த்தமாகஸர்வேச்வரனுக்குஇத்தனை யத்நம் பண்ணவேண்டியிருந்தாலும் எம்பெருமானார்க்கு இப்படி யத்நித்திருக்க வேண்டுவதில்லையென்கிறார் மேல் (கொண்டலனையவண்மை) தம்முடைய அநதிகாரம்பாராதே கைக்கொண்டு உபகரித்த விதுகது வித்தராய் பாட்டுதோறும் இவருடைய ஔதார்யத்தையே கொண்டாடுகிறாராணும. ஜலஸ்த்தல விபாகமற வர்ஷிக்கும் வர்ஷுகவலாஹகம்போலே இருந்தவிடம் தேடிவந்து உபகரிக்கும்படியான ஔதார்யத்தையுடையராய். (ஏரார்குணத்து) அதிபோகயங்களான வாத்ஸல்ய ஸௌஶீல்யாதி குணங்களையுடையராய். (எம்மிராமாநுசன்) அடியோங்களுக்கு இவ்வதிசயங்களெல்லாம் தெரியும்படி உபதேசித்து அத்தாலே வகுத்தசேஷியாயிருக்கிற எம்பெருமானார்.

(அவ்வெழில்மறையில்)பூர்வோக்தமான நிரவதிக தேஜஸ்ஸையுடையதாய், (వేదశాస్త్రాత్పరంనాస్తి) (வேதஶாஸ்த்ராத்பரம்நாஸ்தி) என்றும், (నవేదాన్తాచ్ఛాస్త్రమ్) (நவேதாந்தாச்சாஸ்த்ரம்) என்றும் சொல்லுகிறபடியே நிஸ்ஸமாப்யதிகமான வேதத்திலே. வேதோக்தமார்க்கத்திலே யென்றபடி. (சேராதவரை) ஆச்ரயியாதவர்களை. அப்ராமாண்ய புத்தியாலும் அயதார்த்தப்ரதிபத்தியா

லும் அதிலே பொருந்தாநிலையுடையரான பாஹ்யகுத்ருஷ்டிகளை யென்றபடி. (சிதைப்பது) பக்நராய் பராஜிதராகப்பண்ணுவது. சிதைக்கை-அழிக்கை

(அப்போதொரு சிந்தைசெய்தே) அந்த ப்ரஸங்ககாலத்திலே தானே, (సర్వాన్ బ్రహ్మగమయతి) (ஸர்வாந் ப்ரஹ்மகமயதி) (బ్రహ్మవేద బ్రహ్మైవభవతి) (ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி) இத்யாதிவாக்யங்களுக்கு உட்பொருளறியாதே அபார்த்தங்களைச்சொல்லி அபலாபித்தவர்களைக் குறித்து, (ప్రణవో ధనుశ్శరో హ్యాత్మా బ్రహ్మ తల్లక్ష్యముచ్యతే। అప్రమత్తేన వేద్ధవ్యం శరవత్తన్మయో భవేత్) (ப்ரணவோதநுஶ்ஶரோ ஹ்யாத்மா ப்ரஹ்மதல்லக்ஷ்யமுச்யதே-அப்ரமத்தேநவேத்தவ்யம் ஶரவத்தந்மயோபவேத்) என்றும் சுருதிவாக்யத்துக்கு தாத்பர்யமான வொருயுக்தியாலே அவர்கள்சொன்ன அபார்த்தங்களை கண்டித்தருளி அவர்களை நிர்மூலம்பண்ணினு ரென்றபடி. (స్వసిద్ధాన్తధ్వాన్తస్థిరకృతకదుర్వాదిపరిషత్ దివాభీత ప్రేక్షాదినకరసముత్థానపరుషః) (ஸ்வஸித்தாந்த த்வாந்தஸ்த்திரக்ர்தகதுர்வாதி பரிஷத்திவாபீத ப்ரேக்ஷாதிநகர ஸமுத்தாநபருஷ:) என்னுமபடியிறே இவர்விஷயமான ஸ்ரீஸூக்தியிருப்பது ஆக ஸர்வஶக்தியுக்தனை ஸர்வேச்வரனிலுங்காட்டில் இவர் அநாயாஸேந விரோதிகளைநிரஸித்தாரென்று இவர்தம்முடைய ப்ரபாவத்தைக் கொண்டாடினாராய்த்து. ... ... (எசு)

உரை.—அ.—எழுபத்தஞ்சாம்பாட்டு. இப்படி இவர், தம்முடைய குணத்திலே வித்தராகிறபடியைக்கண்டு, நீர் இதுசெய்வது பகவத்வைலக்ஷண்யத்தைக காணுமளவுமிறே, கண்டவாறே நீரே அதிலே தோள்மாறுகிறீரென்று எம்பெருமானுர்க்குக் கருத்தாக; எம்பெருமான தன்னழகோடே ப்ரத்யக்ஷித்து உன்னைவிடேன் எனறிருந்தாலும தேவரீருடைய குணங்களே வந்து என்னை மொய்த்து நின்று அலையாநிற்குமென்கிறுர்.

மூ.—செயததலைச்சங்கஞ்செழுமுத்தமீனுந்திருவரங்கர்
கைத்தலத்தாழியுஞ்சங்கமுமேந்திநங்கண்முகப்பே
மொய்த்தலைத்துனனைவிடேனென்றிருக்கினுநின்புகழே
மொய்த்தலைக்கும்வந்திராமாநுசவென்னைமுற்றுநின்றே ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
செய்த்தலை	வயல்தலைகளிலே,	அரங்கர்	கோயிலிலே நித்ய வாஸம் பண்ணு கிற பெரிய மாள்,
சங்கம்	சங்குகளானவை,		
செழுமுத்தம	அழகிய முத்துக்க ப்ரஸவியா நின்றுள்	திருக்கைத் தலத்து	"கை[illegible]

http://acharya.org

பதம்.	உரை.
	கிறபடியே வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும் படியான திருக்கையிலே,
ஆழியும்	* அணியாராழியும்,
சங்கமும்	சங்கமும்,
ஏந்தி	ஏந்திகொண்டு,
நம்கண்முகப்பே	என் கண் வட்டத்திலே,
மொய்த்து	ஸாக்ஷாத்கரித்து,
அலைத்து	தம்முடைய ஸௌந்தர்யாதிகளாலே தேவரீர் விஷயமாக என்னுடைய நிலையைக் குலைக்கைக்கீடான புத்தி பேதத்தைப்ப
உன்னைவிடேனென்	உன்னைநாம் விடோமென்று ப்ர ஞை பண்ணிக்கொண்டு,
இருக்கிலும்	ஸ்தாவரப்ரதிஷ்டையாக இருக்கிலும்,
நின்	தேவரீருடைய,

பதம்.	உரை.
புகழே	கல்யாணகுணங்களே,
வந்து	வந்து,
என்னை	என்னை,
முற்றும்	எங்குமொக்க,
நின்று	மொய்த்துக்கொண்டு நின்று
மொய்த்து	அஹமஹமிகயா ஸ்வவைலக்ஷண்யத்தைக்காட்டி,
அலைக்கும்	ஆகர்ஷியாநிற்கும். ஆகையால் பகவத்வைலக்ஷண்யம் கண்டாலும் அதில் தோள் மாறக்கூடாதென்றுகருத்து.

மொய்த்தல்-திரளுதல். அலைத்தல்-நின்றவிடத்தில் நில்லாதபடி சலிப்பித்தல். "மெய்த்தலத்து" என்று பாடமானபோது-மெய்யான தலத்திலே; மெய்ந்நிலத்திலே யென்றபடி. அதாவது - நின்னைவிடேன்" என்றிருக்கிற விருப்பு. ஐந்த்ரஜாலிகம்போலே மெய்போலும்பொய்யன்றிக்கே, ஸத்யமேயாயிருக்கை. ஸத்யமாக உன்னைவிடேனென்று கண்முகப்பேயிருக்கிலுமென்றபடி. (எரு)

வ்யா — அ. — எழுபத்தஞ்சாம்பாட்டு. இப்படி இவர்தம்முடையகுணசேஷ்டிதங்களை யநுஸந்தித்து வித்தராய்ச் சொன்ன வார்த்தையை எம்பெருமானார்கேட்டருளி, இப்போது நீர் அத்யவஸாயாதிசயத்தாலே இப்படி யெல்லாம் சொன்னீர், ஆகிலும் பகவத்விஷயத்திலே சென்று அங்கேற வைலக்ஷண்யங்களைக் கண்டு அவ்விடத்தில் ரஸமறிந்தீராகில் இந்தப்ராவண்யம் நிலைநிற்குமோ வென்று திருவுள்ளமாயருள; ஸர்வேச்வரன் சங்கசக்ராதி திவ்யாயுதாலங்க்ருதனாய்க்கொண்டு அடியேனிருந்தவிடம் தேடிவந்து தன்வைலக்ஷண்யத்தை அடியேனுக்கு முற்றூட்டாகக் காட்டி

http://acharya.org

உன்னை நான் விடுவதில்லையென்று என்முன்னேநிற்கிலும் உனக்கு வைலக்ஷண்யத்திலே யீடுபடாதே தேவரீர்பக்கலிலேதானே ஈடு படும்படி தேவரீருடைய கல்யாணகுணங்கள் கட்டடங்கவந்து அடியேனைச்சூழ்ந்துகொண்டு ஆகர்ஷியாநிற்குமென்கிறார்.

வ்யா.—(செய்த்தலைச்சங்கம்) (சூழ்புனலரங்கம்) என்றும், (పూగీకణ్ఠద్వయసరససస్నిగ్ధనీరోపకణ్ఠామ్)(பூகிகண்டத்வயஸ ஸரஸஸ்நிக்த நீரோபகண்டாம்) என்றும் சொல்லுகிறபடியே - திருக்காவேரியி னுடைய ஜலஸம்ருத்தியாலே கோயில் சுற்றுமிருக்கிற வயல்களுக் கும் திருநந்தவநங்களுக்கும் நீர்பாய்ந்தால் அந்தவயல்தலையிலே ஜலத்தோடே வந்த சங்கங்கள் அங்கே நிற்குமிறே; அப்படிப்ப ட்ட சங்கங்களானவை. (செழுமுத்தமீனும்)அழகிய முத்துக்களை ப்ரஸவியாநின்றுள்ள. ஜலஸம்ருத்தியையுடைத்தான ப்ரவாஹத் தோடே வந்த சங்கங்களாகையாலே அவற்றுக்கு அழகிய முத்து க்களை ஈனுகையே ஸ்வபாவமாயிருக்குமிறே. இவர் அந்த வைல க்ஷண்யத்தை ஸர்வதா அநுபவித்துக்கொண்டிருந்தவராகையாலே அத்தையிட்டே அந்நகரத்தைவர்ணிக்கிறார்காணும்.(திருவரங்கர்) இப்படிப்பட்ட ரங்கஸ்த்தலத்துக்கு நிர்வாஹகரான பெரிய பெருமாள்.

(கைத்தலத்தாழியுஞ் சங்குமேந்தி) (சங்கொடுசக்கரமேந் துந் தடக்கையன்)என்றும், (கூராராழிவெண்சங்கேந்தி)என்றும், (கையினார் சுரிசங்கனலாழியர்) என்றும் சொல்லுகிறபடியே- வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும்படியான அழகிய திரு க்கைகளிலே திருவாழியாழ்வானையும்ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் தரி த்துக்கொண்டிருந்தால் அந்தச்சோத்தியழகு வாக்குக்கு நிலமன் றிறே. திருக்கைகளும் திவ்யாயுதங்களும் தட்டுமாறி ஒன்றுக் கொன்று பரபாகமாயக்காணுமிருப்பது. இப்படி அணியாராழியும் சங்கமு மேந்திக்கொண்டு தாசநீயராய். (என்கண்முகப்பே) என் கண்வட்டத்திலே. ஸாக்ஷாத்கரித்தது.

(மொய்த்தலைத்து) தம்முடைய ஸௌந்தர்யாதிகளாலே தேவரீர்விஷயமான என்னுடைய அத்யவஸாயத்தைக் குலைக் கைக்கீடான புத்திபேதத்தைப் பிறப்பித்தும், நின்றவிடத்திலே நில்லாதபடி துடிப்பித்தும். "மெய்த்தலத்து" என்று பாடமான போது - மெய்யானதலத்திலே. மெய்ந்நிலத்திலே யென்றபடி. அதாவது - நின்னைவிடேனென்றிருக்கிறவிருப்பு. ஐந்த்ரஜாலிகம் போலே மெய்போலும் பொய்யன்றிக்கே ஸத்யமேயாயிருக்கை. மொய்த்தல் - திரளுதல். அலைத்தல்-நின்றவிடத்தில் நில்லாதபடி துடிப்பித்தல். (உன்னைவிடேனென்றிருக்கிலும்) [illegible]

http://acharya.org

விடக்கடவோ மல்லோமென்று ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டு ஸ்த்தாவர ப்ரதிஷ்ட்டையாக அடிபெராதேயிருக்கிலும்.

(இராமாநுசா) எம்பெருமானாரே. (நின்புகழே) "ஏய்ந்த பெருங்கீர்த்தி" என்னும்படியான தேவரீருடைய கல்யாணகுணங்களே. (வந்து – என்னைமுற்றும் நின்று - மொய்த்தலைக்கும்) அடியேனிருந்த விடம்தேடிவந்து விஜாதியர்க் கிடங்கொடாதபடி அடியேனை எங்குமொக்கபரிவேஷ்டித்துகொண்டுநின்று, பகவத் வைலக்ஷண்யத்தில் கால்தாழாதபடி அஹமஹமிகயா ஸ்வ வைலக்ஷண்யத்தைக்காட்டி ஆகர்ஷியாநிற்கிறன. ஆகையாலே பகவத் வைலக்ஷண்யத்தைக் கண்டாலும் அதிலே தோள்மாறக்கூடாதென்றுகருத்து. "గచ్ఛతా మాతులకులం భరతేన తదానఘః। శత్రుఘ్నో నిత్యశత్రుఘ్నో నీతః ప్రీతిపురస్కృతః" "సులభం స్వగురుం త్యక్త్వా దుర్లభం య ఉపాసతే। హస్తస్థముదకం త్యక్త్వా ఘనస్థమభివాఞ్ఛతి" "கச்சதா மாதுலகுலம்பரதேநததாநக:-ஶத்ருக்நோநித்யஶத்ருக்நோ நீத꞉ப்ரீதிபுரஸ்க்ர்த꞉" (ஸுலபம்ஸ்வகுரும் த்யக்த்வாதுர்லபம்யஉபாஸதே - ஹஸ்தஸ்த்தமுதகம் த்யக்த்வா கநஸ்தமபிவாஞ்சதி" என்னக்கடவதிறே.(எட்டவிருந்த குருவையிறையன்றென்று, விட்டோர் பரனைவிருப்புதல், பொட்டெனத் தன், கண்செம்பளித்திருந்து கைத்துருத்தி நீர்தூவி, அம்புதத்தைப் பார்த்திருப்பானற்று) என்று அருளாளப்பெருமாளெம்பெருமானாரும் அருளிச்செய்தாரிறே. ... ... (எரு)

உரை.—அ.—எழுபத்தாரும்பாட்டு. பகவத்வைலக்ஷண்யம் காணுமையாலே தேவரீரையொழிய அறியேனென்றிருக்கிறேனல்லேன, கண்டகாலத்திலும் நான் தேவரீரையொழிய வறியேனென்றூர் - கீழ்; இவர் இப்படி விண்ணப்பம்செய்தவாறே எம்பெருமானார் மிகவும்உகந்தருளி இவர்க்கு எத்தைசசெய்வோமென்னுமிடம்தோற்ற எழுந்தருளி யிருககிறபடியைக்கண்டு தம்முடைய ப்ராவண்யத்தை நிஷ்கர்ஷித்து அபேக்ஷிக்கிறூர் - இதில்.

மூ —நின்றவண்கீர்த்தியும்நீள்புனலும்நிறைவேங்கடப்பொற்
குன்றமும்வைகுந்தநாடும்குலவியபாறகடலும்
உன்றனக்கெத்தனையினபந்தருமுன்னிணைமலர்த்தா
ளென்றனக்குமதிராமாநுசாவிவையீந்தருளே. (எசு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நின்ற	காதாசித்க மன்றிக் கேஒருபடிப்பட்டு நின்ற,	நீள்புனலும்	*"வார்புனலந்தணருவி" என்னுமாபபோலே ஒழுகு நீண்ட புனலும்,
வண்கீர்த்தியும்	அழகிய கீர்த்தியும்,	நிறை	நிறைந் திருப்பதாய்,

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேங்கடம்	திருவேங்கடமென்னும் திருநாமத்தையுடைத்தாய்,	உன்	தேவரீருடைய,
பொன்குன்றமும்	ஸ்ப்ராஹணீயமாயிருந்துள்ள திருமலையும்,	இணை	சேர்த்தி யழகை யுடைத்தாய்,
வைகுந்தநாடும்	ஸ்ரீவைகுண்டமாகிற திருநாடும்,	மலர்	போக்யமாயிருந்துள்ள,
குலவியபாற்கடலும்	ஆர்த்த ரக்ஷணார்த்தமாகவந்து சண்வளர்ந்தருளுகிறவிடமென்று, விஶேஷஜ்ஞரெல்லாருங் கொண்டாடும திருப்பாற்கடலும்,	தாள்	திருவடிகள்,
		என்றனக்கும்	எனக்கும்,
		அது	அவ்வளவானந்தத்தையுண்டாக்கும்; ஆனபின்பு,
உன்றனக்கு	தேவரீருக்கு,	இராமாநுசா	உடையவரானதேவரீர்,
எத்தனை இன்பமதரும்	யாதோரளவு ஆநந்தத்தை விளைக்கும்,	இவை	இததிருவடிகளை,
		ஈந்தருள்	எனக்குத் தந்தருளவேணும்.

குலவுதல் - கொண்டாட்டம். ஈதல்-கொடுத்தல். (எசு)

வ்யா.—அ.—எழுபத்தாறும்பாட்டு. கீழ்ப்பாட்டில்-* புஂஸாஂத்ர்ஷ்டிசித்தாபஹாரியான ஸர்வேச்வரன் ஸமஸ்ததிவ்யபூஷணங்களாலும் ஸமஸ்ததிவ்யாயுதங்களாலும் ஒப்பித்துக்கொண்டுவந்து என்முன்னேநின்று, உன்னை நான்விடுகிறிலேன் என்றுபலாத்காரம்பண்ணினாலும், "ᜯஜ்ஜோ ஸ்வஸ்ஸ;" "குணைாத்தாஸ்யமுபாகதঃ" என்றுபோலே தேவரீருடைய கல்யாணகுணங்களிலே ஈடுபட்ட அடியேனை அக்குணங்கள்தானே தேவரீர்க்கு அநந்யார்ஹனும்படி பண்ணிற்றினவென்று விண்ணப்பஞ்செய்யக் கேட்டருளி இவருடைய பாவபந்தமென்ன‌னே! என்று மிகவு முகந்து இவருக்குநாம் என்னத்தைச்செய்வோமென்னுமிடம்தோற்ற அவரெழுந்தருளியிருக்கிறபடியைக் கடாக்ஷித்து, தேவரீருக்கு அபிமதங்களாயிருந்துள்ள * தண்ணார்வேங்கடமும், * வைகுந்தமாநகரும், * திருப்பாற்கடலும் யாதொரு ஆநந்தத்தை விளைக்குமோ அப்படியே, தேவரீருடைய பரமபோக்யமான திருவடிகளும் அடியேனுக்கு அவ்வளவானந்தத்தை யுண்டாக்கும், ஆகையாலே அவற்றைத் தந்தருளவேணுமென்று அபேக்ஷித்தருளுகிறார் - இப்பாட்டில்.

வ்யா.—(நின்ற வண்கீர்த்தியும்) "ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி" என்கிறபடியே காதாசித்கமன்றிக்கே [illegible]வர்த்தியாய் அழகிதாய், "தெழிகுரலருவித் திருவேங்கடம்"

http://acharya.org

என்றும், "பரன் சென்றுசேர் திருவேங்கடமாமலை" என்றும், (வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு." என்றும், "வில்லார்மலி வேங்கடமாமலை" என்றும் ஆழ்வார்கள் ஈடுபடுகைக்குடலான குணவத்தாப்ரதையையும். (நீள்புனலும்) "வார்புனலந்தணருவி வடதிருவேங்கடம்" என்றும், "குளிரருவிவேங்கடம்" என்றும், "செங்கயல்திளைக்குஞ்சுனைத் திருவேங்கடம்" என்றுஞ் சொல்லுகிறபடியே-அநவரதம பாயாநின்றுள்ள நீண்ட திருவருவிகளும். (நிறைவேங்கடப் பொற்குன்றமும்) இவையிரண்டாலும் நிறைந்திருப்பதாய், (தெளிியார்வணங்கும் மலை திருவேங்கடம்) என்கிறபடியே திருவேங்கடமென்னும் திருநாமத்தையுடைத்தாய், (எம்பெருமான பொனமலை) என்கிறபடியே-அத்யந்த ஸ்ப்ர்ஹணீயமாய, "பரன்சென்றுசேர் திருவேங்கடம்" என்கிறபடியே-வகுத்த சேஷியான ஸர்வேச்வரன் உகந்தருளின நிலமான திருமலையும்.

(வைகுந்தநாடும்) "యత్ర పూర్వే సాధ్యాస్సన్తి దేవాః" "విష్ణోర్యత్పరమం పదమ్" "దేవానాం పూరయోధ్యా" (யத்ரபூர்வேஸாதத்யாஸ்ஸந்திதேவா:) (விஷ்ணோர்யத்பரமம்பதம்) (தேவாநாம்பூரயோத்யா) என்றும, (అత్యర్కానలదీప్తం తత్స్థానం విష్ణోర్మహాత్మనః) (వైకుణ్ఠేతు పరే లోకే శ్రియా సార్ధం జగత్పతిః ఆస్తే విష్ణురచిన్త్యాత్మా భక్తైర్భాగవతైస్సహ) (அத்யர்க்காநலதீப்தம்தத்ஸ்தாநம் விஷ்ணோர்மஹாத்மந:) (வைகுண்டேது பரேலோகே ஸ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: - ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்ப் பாகவதைஸ்ஸஹ) என றுஞ சொலலுகிறபடியே * அந்தமிலபேரின்பததடியாரான நித்யஸூரிகளுக்கு இருப்பிடமாய், ஸர்வேச்வரனுக்கு போகவிபூதியான * நலமநதமிலலதோர்நாடாய், ஸ்ரீவைகுண்டமென்னும பேரையுடைத்தான பரமபதமும். (குலவிய பாற்கடலும்) "பாற்கடலுள்பையத்துயின்றபரமனடிபாடி" என்கிறபடியே-ஆச்ரிதரானதேவர்களுடையகூப்பீடு கேட்பதாக ஸர்வேச்வரன் வந்து கண்வளர்ந்தருளுகிற விடமென்று விசேஷஜ்ஞரொல்லாரும் கொண்டாடும்படியா யிருந்துள்ள திருப்பாற்கடலும். குலவுதல்-கொண்டாட்டம். இப்படிப்பட்ட உகந்தருளின நிலங்கள்.

(உன்றனக்கெத்தனை யின்பந்தரும்) (అనన్తనిలయే శేషతల్పే వేఙ్కటభూధరే) "ஆநந்தநிலயே ஶேஷதல்பே வேங்கடபூதரே" இத்யாதிகளிலும், (ఏష నారాయణశ్శ్రీమాన్ క్షీరార్ణవనికేతనః। నాగపర్యఙ్కముత్సృజ్య హ్యాగతో మధురాం పురీమ్) (ஏஷநாராயணஶ்ஸ்ரீமாந்க்ஷீரார்ணவநிகேதந: - நாகபர்யங்கமுத்ஸ்ர்ஜ்ய ஹ்யாகதோமதுராம்புரீம்) இத்யாதிகளிலும், கௌஷீதகீப்ராஹ்மணத்தில் பர்யங்கவித்யையிலும் சொல்லுகிற படியே திருவேங்கடமுடையானுக்கும் திருப்பாற்

கடல்நாதனுக்கும் * வாணிளவரசு வைகுந்தக்குட்டனுக்கும் பர்யங்கமாயிருக்கிற தேவரீருக்கு எவ்வளவாநந்தத்தைக் கொடுக்கும். இப்படி அவ்வவஸ்தலங்கள்தோறும் ஸ்ரீயஃபதியினுடைய திவ்யமங்கள விக்ரஹத்தாலே வந்த ஆநந்தத்தை யறியுமவர் இவரொருவருமிறே. (రమమాణా వనే త్రయః) (ரமமாணுவநேத்ராய:) என்று இவர் தமமுடைய அவதாரத்துக்கு பூர்வாவதாரமான இளைய பெருமாளுக்கு அந்ததிவ்யதம்பதிகளுக்குண்டான ஆநந்தத்தோடொத்த ஆநந்தமுண்டாய்த்தென்று சொன்னனிறே ரிஷியும்.

(உன்னிணைமலர்த்தாள்) (అనన్తప్రథమరూపమ్) (அநந்தப்ரதமரூபம்) இதயாதிகளில் படியே * சுடரொளியாய் நின்ற தன்னுடைச்சோதியிலே * வாணிளவரசுவைகுந்தக்குட்டன் விஷயமாக, (నివాసశయ్యాసనపాదుకాంశుకోపధానవర్షాతపవారణాదిభిః । శరీరభేదైస్తవ శేషతాం గతైర్యథోచితం శేష ఇతీరితే జనైః) (நிவாஸஶய்யாஸந பாதுகாம்ஶுகோபதாநவர்ஷாதப வாரணாதிபி:- ஶரீரபேதைஸ்தவ ஶேஷதாங்கதைர்யதோசிதம் ஶேஷஇதீரிதேஜநை:) எனகிறபடியே அசேஷஶேஷவ்ருத்திகளிலும அந்வயித்து "சேஷன்" என்னும் திருநாமத்தையுடையராய், "బాల్యాత్ప్రభృతిసుస్నిగ్ధః" (பால்யாத்ப்ரப்ருதிஸுஸ்நிக்த:) என்கிறபடியே அவதாரதசையிலும் பால்யம் தொடங்கி பெருமாள்திருத்தொட்டிலோடு இணைத்தொட்டி விடாதபோது பள்ளிகொண்டருளாதே அவர்பக்கலிலே அதிவ்யாமுக்தராய், "ముహూర్తమపి జీవావో జలాన్మత్స్యావివోద్ధృతౌ" (முஹூர்த்தமபிஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ) என்று - பிரியில் தரியாமையை விண்ணப்பம் செய்து மஹாரண்யமான தண்டகாரண்யத்திலே சென்று, "అహం సర్వం కరిష్యామి" (அஹம்ஸர்வம்கரிஷ்யாமி) எனறுப்ரார்த்தநாபூர்வகமாக வழுவிலாவடிமைகள்செய்து, நம்பி மூத்தபிரானாய் அவதரித்த தசையிலும் அவனை அநுவர்த்தித்துக்கொண்டு போந்து அங்குத்தைக்கு அந்தரங்கராயிருந்துள்ள தேவரீருடைய பாவநத்வ போக்யத்வங்களுக்கு ஓரொன்றுக்கொன்று பொலியாய்ச் சேர்த்தியழகையுமுடைத்தாய் புஷ்பஹாஸ ஸுகுமாரமாய் பரமபோக்யமாயிருந்துள்ள திருவடிகள்.

(என்றனக்கும் அது) கீழ்ச்சொன்னபடியே அந்தரங்கராய் ஸர்வஜ்ஞராயிருக்கிற தேவரீருககு அவ்வவவிஷயங்களிலே எத்தனை ப்ரீதியுண்டு அப்படியே, இவ்வளவும் விமுகனாய் அஜ்ஞனாய்ப்போந்த அடியேனுக்கு ஸ்வவிஷயமாயிருந்துள்ள அவ்வளவாநந்தத்தையுண்டாக்கும். எம்பெருமானாருடைய ஆநந்தம் ப்ரதம பர்வவிஷயமாகையாலே அளாயாறுபட்டு, அமுதனாருடைய ஆநந்தம் சரமபர்வ விஷயமாகையாலே கரைபுரண்டு காணுமிருப்பது.

http://acharya.org

(இராமாநுசா) எம்பெருமானாரே!(இவையீந்தருளே) எனக்குபுருஷார்த்தம்தேவரீருடையதிருவடிகளேயாய்விட்டபின்பு அவற்றை தேவரீர்தாமே பரகதஸ்வீகாரமாகக்கொடுத்தருளவேணும். ஈதல்-கொடுத்தல். "எம்மாவீட்டுத்திறமும் செப்பம், நின்செம்மாபாத பற்புத்தலைசேர்த்தொல்லைக்,. கைம்மாதுன்பங் கடிந்தபிரானே, அம்மாவடியேன் வேண்டுவதீதே" என்று பரமபர்வத்தில் நம்மாழ்வாரும் இப்படியே அபேக்ஷித்தருளினாரிறே. ... (எகூ)

உரை.—அ.— எழுபத்தேழாம்பாட்டு. தாம் அபேக்ஷித்தபடியே திருவடிகளைக கொடுத்தருளப்பெற்று க்ர்தார்த்தராய் அவர் செய்த உபகாரங்களை யநுஸந்தித்து இவையெல்லாம்செய்தபின்பு இனிச் செய்தருளுவதாக நினைத்தருளுவ தேதோவென்கிறார்.

மூ.—ஈந்தனனீயாதவின்னருளெண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனனம்மறைப்பல்பொருளாலிப்படியனைத்து
மேய்ந்தனன்கீர்த்தியினாலென்வினைகளைவேர்பறியக்
காய்ந்தனன்வண்மையிராமாநுசற்கென்கருத்தினியே (எஎ)

பதம்.	உரை.
ஈயாத	இதுக்குமுன்பு ஒருவர்க்கும் உபகரியாத,
இன்னருள்	விலக்ஷணமான அருளை,
ஈந்தனன்	எனக்குஉபகரித்தார்.
எண்ணில்	எண்ணிறந்த,
மறைக்குறும்பை	மறைக்குறும்புண்டு வேதத்தைமூலையடியே நடத்துகிற குதர்ஷ்டி மதங்களான வற்றை,
அம்மறை	அந்தவேதப்ரதிபாத்யமான,
பல்பொருளால்	அநேகார்த்தங்களைக்கொண்டு,
பாய்ந்தனன்	தள்ளிவிட்டார்;
இப்படியனைத்தும்	இந்த பூமியெல்லாம்,
கீர்த்தியினால்	கீர்த்தியாலே,
ஏய்ந்தனன்	வ்யாப்தரானார்;
என்வினைகளை	என்னுடைய கர்மங்களை,

பதம்.	உரை.
வேர்பறிய	வாஸனையோடே போம்படி,
காய்ந்தனன்	ஓட்டினார்;
வண்மை	பரமோதாரரான,
இராமாநுசற்கு	எம்பெருமானாருக்கு,
இனி	இனி,
கருத்து	தம் திருவுள்ளத்திலோடுகிறது,
என்	ஏது. இன்னும் செய்யத்தக்கதுண்டோவென்று கருத்து.

"ஏய்ந்தவண்கீர்த்தியினார்" என்று பாடமானபோது - பூமியெங்கும் பொருந்தப்பட்டிருந்துள்ள தம்முடைய விலக்ஷணமான குணவத்தாப்ரதையாலே என் கர்மங்களைப் போக்கினாரென்கை. அதாவது-இவரோடு அந்வயமுடையவனன்றோ இவன் என்று கர்மம்தானேவிட்டுப்போகை. பாய்தல்-உதைத்தல். அதாவது •தள்ளுதல். ஏய்தல்-பொருந்துதல். காய்தல்-கடிதல். ... (எஎ)

http://acharya.org

வ்யா.—அ.—எழுபத்தேழாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே - எம்பெருமானாரைக் குறித்து, தேவரீருடைய திருவடிகளை ஸர்வதா அடியேனநுபவித்துக்கொண்டிருக்கும்படி எனக்குத் தந்தருள வேணுமென்ன; அவரும் உகந்தருளி தாம் அபேக்ஷித்தபடியே விலக்ஷணையான க்ருபையைப்பண்ணித் திருவடிகளைக்கொடுக்க க்ருதார்த்தராய, வேதப்ரதாரகரான குத்ருஷ்டிகளை ப்ரமாணதமமான அந்த வேதார்த்தங்களைக்கொண்டேநிரஸித்தும், பூமிப்பரப்பெல்லாம் தம்முடைய கீர்த்தியை எங்குமொக்க வ்யாபிப்பித்தும், என்னுடைய ப்ராப்தி ப்ரதிபந்தக கர்மங்களை வாஸனையோடே ஓட்டியும், இப்படி பரமோதாரரான எம்பெருமானார், எனக்கு இன்னமும் எத்தை உபகரித்தருளவேணுமென்று நினைத்திருக்கிறாரோ வென்கிறார்.

வ்யா —(ஈந்தனன்ஈயாதவின்னருள்)(ஈயாத) "మన్త్రంయత్నేన గో ప్యేత్" "மந்த்ரம்யத்நேநகோபயேத்" என்றாப்போலே "అహంకారయుతాయ" "அஹங்காரயுகதாய்சைமே" என்று சொல்லப்படுகிற ஹரவிரிருசாதிகளுக்குங்கூடக் கொடுக்கவொண்ணாதபடி பேணிக்கொண்டுபோந்த. (இன்னருள்) விலக்ஷணையான தம்முடைய க்ருபையை. நிர்ஹேதுக பரமக்ருபையை யென்றபடி. (ஈந்தனன்) கொடுத்தார். கீழ்ப்பாட்டிலே - இவர், தேவரீர் திருவடிகளைகொடுத்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தபடியே அவர்கொடுக்கையாலே அதுக்கு மூலம் அவருடைய க்ருபாகுணமென்று அநுஸந்தித்து, "இன்னருள" என்று. அத்தைக்கொண்டாடுகிறார் காணும். ஈந்தனன்-ஈன்றனன். (இன்னருள்) ஸர்வேச்வரனுடைய அருளையும் இவருடைய அருளையும் சேரப்பிடித்துப் பார்க்குமளவில இவருடைய அருளுக்குண்டான தன்னேற்றம் வடிவிலே தொடைகொள்ளலாம்படி காணும் இதினுடைய போக்யதையிருப்பது. ஆச்ரயத்துக்குத் தகுதியாயிறே அதினுடைய குணங்களுமிருப்பது

(எண்ணில் மறைக்குறும்பைப்பாய்ந்தனன் அம்மறைப்பல் பொருளால்) எண்ணிறந்த மறைக்குறும்புண்டு - வேதத்தைமூலையடியே நடத்தக்கடவ குத்ருஷ்டி மதங்கள். தொகையிட்டுச்சொல்லவொண்ணாதபடி அஸங்க்யேயராய் வேதப்ரதாரகராய் ப்ரமித ப்ரமாண ப்ரமேய ப்ரமாத்ருஸ்வரூபரா யிருந்துள்ள குத்ருஷ்டிமத நிஷ்டராயென்றபடி. "అనన్తా వై వేదాః" "அநந்தாவைவேதா:" என்கையாலே - எண்ணிறந்தமறையென்று யோஜிக்கவுமாம்.

(அம்மறைப்பொருளால்) "సర్వం ఖల్విదం బ్రహ్మ" "ఏకమేవా[illegible]" "నేహ నానాస్తి కిఞ్చన" "యత్ర త్వస్య సర్వమాత్మైవాభూత్" "తత్కేన కం [illegible], [illegible].

http://acharya.org

శబలిభానీయాత్'' "తత్త్వమసి'' "బ్రహ్మవేదబ్రహ్మైవభవతి, సదానాద్ బ్రహ్మగమయతి'' இத்யாதிச்ருதிகளுக்கு சுத்தாபேதப்ரதிபாதநமே பொருளென்று குறும்புசொல்லுகிற அந்தகுத்ர்ஷ்டிமத நிஷ்ட்டரை யடங்கலும், அகிஞ்சித்ஜ்ஞனாய் கர்மவச்யனான சேதநனுக்கும், ஸர்வஜ்ஞனாய் அகர்மவச்யனான ஈச்வரனுக்கும் ஸ்வரூபைக்ய ப்ரதிபாதநத்திலே அவற்றுக்கு தாத்பர்யம் சொல்லவொண்ணாமையாலே விசிஷ்டைக்யமே அவற்றினுடைய தாத்பர்ய விஷயீபூதார்த்தமென்று ஸ்வரூபைக்ய ப்ரதிபாதநத்துக்கு அத்யந்தப்ரதிகூலங்களாயும் விசிஷ்டைக்ய ப்ரதிபாதநத்துக்கு அத்யந்தாநுகூலங்களாயுமிருந்துள்ள, "భోక్తా భోగ్యం ప్రేరితారం చ మత్వా'' "ద్వా సుపర్ణా సయుజా సఖాయా సమానం వృక్షం పరిషస్వజాతే, తయోరన్యః పిప్పలం స్వాద్వత్త్యనశ్నన్నన్యో అభిచాకశీతి'' "ఇమాన్ లోకాన్ కామాన్నీ కామరూప్యనుసంచరన్, ఏతత్సామ గాయన్నాస్తే'' "యస్యాత్మా శరీరం యస్య పృథివీ శరీరమ్'' (போக்தாபோக்யம் ப்ரேரிதாரஞ்சமத்வா) (த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம்வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே, தயோரந்ய: பிப்பலம் ஸாத்வத்தி அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி) (இமாந் லோகாந் காமாந்நீகாமரூப்யநுஸஞ்சரன், ஏதத்ஸாமகாயந்நாஸ்தே) (யஸ்யாத்மாஶரீரம்யஸ்யப்ருதிவீசரீரம்) இத்யாதியான பேதச்ருதிகளையும் கடகச்ருதிகளையும் உபந்யஸிதததும் பஹுமுகமாக ப்ரஸங்கித்தும் அந்தச்ருதிகளினுடைய தாதபர்யங்களைக்கொண்டு தானே. (பாய்ந்தனன்) அந்தஸ்த்தலத்தில நின்றும் பலாயநம் பண்ணுவித்தார். பாய்தல் - உதைத்தல். "తదన్యమతదుర్మతజ్వలితచేతసాం వాదినాం శిరస్సు నిహితం మయా పదం దక్షిణం లక్ష్యతామ్'' (ததந்யமத தூமதஜ்வலிதசேதஸாம்வாதிநாம்ஶிரஸ்ஸு நிஹிதம்மயாபதம்தக்ஷிணம்லக்ஷ்யதாம்) என்கிறபடியே அச்செயல்களெல்லாம அவருடைய ஸம்பந்திகளுக்குங்கூட வுண்டாககடவனவாகையாலே அவருக்குண்டாகச்சொல்லவேண்டாவிறே.

(இப்படியனைத்து மேய்ந்தனன் கீர்த்தியினால்) இந்த பூமிப்பரப்பெல்லாம் - கட்டடங்கத் தம்முடைய குணவத்தாப்ரதையாலே ஆக்ரமித்தார். ஏய்தல்-பொருந்துதல். தம்முடைய நியமநத்தை சிரஸாவஹிக்கும்படி வ்யாபித்தாரென்றபடி. (எனவினைகளை வேர்பறியக் காய்ந்தனன்) அநாதிகாலமேதொடங்கி எம்பெருமானுடைய நிஷயீகாரபாத்ரபூதனுமளவும் நான் திரகசழியச்செய்த அக்ர்த்யகரணதிகளை ஸமூலோந்மூலநம்பண்ணி நிவர்த்திப்பித்தார். காய்தல் - கடிதல். வேர்கிடந்தால் திரியட்டும் அங்குரிக்குமென்னும் அதிசங்கையாலே அத்தோடேகூட அவற்றைப் பிடுங்கிப்போட்டாரென்றபடி. இவற்றிலே இந்தச்செடிசில நாளிருந்துபோய்த்தென்று தெரியாதபடி பண்ணினாரென்று வித்த

http://acharya.org

ராகிறார்காணும். "சும்மெனாதேகைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே" என்றும், "வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ, கானோவொருங்கிற்றுக் கண்டிலமால்" என்றுஞ் சொல்லுகிறபடியே பண்ணியருளினானென்றபடி. "இப்படி யனைத்து மேய்ந்தவண் கீர்த்தியினார்" என்று பாடமானபோது- பூமியிலே எங்குமொக்க வ்யாபித்துநிற்பதாய் ஸகல புருஷார்த்த ப்ரதத்வரூப ஔதார்யத்தையுடைத்தான கீர்த்தியாலே என்னுடைய துஷ்கர்மங்களை வாஸனையோடே யோட்டினானென்று பொருளாகக்கடவது. அதாவது-இவரோடு அந்வயமுடையானொருவனன்றோ இவனென்று துஷ்கர்மங்களெல்லாம் தன்னடையேவிட்டுப்போகை.

(வண்மையிராமாநுசற்கென்கருத்தினியே) இப்படிப்பட்ட பரமோதாரரான எம்பெருமானார்க்கு இன்னம் தந்திருவுள்ளத்திலோடுகிறதேதோ, அடியேனுக்கு இன்னம் எந்த விசேஷார்த்தத்தைக் கொடுப்பதாக நினைப்பிட்டிருக்கிறாரோ, அவரைப்பார்த்தால் இன்னம் சில எனக்குக் கொடுக்கவேணுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறாப்போலேயிருக்கிறதுகாணும் என்று வித்தராகிறார். "உன் மநத்தாலென் நினைந்திருந்தாய்" என்னும்படியாய்த்து. ... ... (எஎ)

உரை.—அ.—எழுபத்தெட்டாம்பாட்டு. இப்படி செய்தவுபகாரங்களை அநுஸந்தித்தவநந்தரம், தம்மைத் திருத்துகைக்காக அவர்பட்ட வருத்தங்களைச்சொல்லி, இப்படி என்னைத் திருத்தி தேவரீர் உத்தேச்யவிஷயத்துக்கு உறுப்பாக்கினபின்பு வேறொரு அயதார்த்தங்கள் என்னெஞ்சுக்கு இசையாதென்கிறார்.

மூ—கருத்தில்புகுந்துள்ளில்கள்ளங்கழற்றிக்கருதரிய
வருத்தத்தினால்மிகவஞ்சித்துநீயிந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள்கேள்வனுக்காக்கியபினென்னெஞ்சில்
பொருத்தப்படாதிராமாநுசாமற்றோர்பொய்ப்பொருளே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கருத்தில் புகுந்து	நெடுங்கை நீட்டாகவிருக்கில் இவன் நெஞ்சைத் திருத்தப் போகாதென்று நெஞ்சு தன்னிலே வந்து புகுந்து,	உள்ளில்	உள்ளுண்டான,
		கள்ளம் கழற்றி	ஆத்மாபஹாரத்தைப்போக்கி,
		கருதரிய	வேறுசிலர்க்கு நெஞ்சால் நினைக்கவும் கூட அரிதாயிருந்துள்ள,
	குடியிருக்குமவர்கள் செடியறுக்குமாப்போலே,	வருத்தத்தினால்	வருத்தத்தாலே, நானதியில்செய்தக்ஷிதன்னையும் அறி

பதம்.	உரை.
	த்துக் கொள்வேனென்று எனக்கொன்றும் தெரியாதபடி,
மிகவஞ்சித்து	மிகவும்மறைத்து,
நீ	தேவரீர்தாம் அறிந்ததாகயத்நித்து,
திருத்தி	தரிசுகிடந்த நிலத்தை செய்காலாம்படி திருத்து வாரைப்போலே திருத்தி,
இந்தமண்ணகத்தே	இந்தலோகத்திலே,
திருமகள் கேள்வனுக்கு	தேவரீர்க்கு உத்தேஸ்ய விஷயமான ஸ்ரீயஃபதிக்கு,
ஆக்கியபின்	அந்தஃபுர விநியோகத்துக்கு ஆளாமபடி பண்ணின பின்பு,

பதம்.	உரை.
என்னெஞ்சில்	இப்படி தேவரீர் திருத்தத்திருந்தின என் மநஸ்ஸிலே,
	தேவரீர் அறிவித்த யதார்த்த மொழிய,
மற்றோர் பொய்ப்பொருள்	அதுக்குப்புறம்பாயிருப்பதொரு அயதார்த்தம்,
பொருத்தப்படாது	வலியப் பொருத்திலும் பொருந்தாது.

இந்தமண்ணகத்தே திருத்தி என்று-* இருள்தருமாஞாலமான இந்தலோகத்திலே திருத்துகையிலுண்டான அருமையைச் சொல்லிற்றாகவுமாம. கருத்தென்று-மநோவ்ருத்திவாசியான சப்தத்தாலே மநஸ்ஸைச்சொல்லுகிறது. "சிந்தை" என்னுமாப்போலே. வருத்தம்-ஆயாஸம. பொருத்துதல்-இசைத்தல். (எஅ)

வ்யா.—அ.—எழுபத்தெட்டாம் பாட்டு. கீழ்ப்பாட்டிலே - லோகத்தையெல்லாம ப்ரமிப்பித்தழித்தகுத்ர்ஷ்டிகளை ப்ரபல ப்ரமாணங்களாலே நிரஸித்துத்தம்முடைய பாபங்களையெல்லாம் போக்கி இன்னும் அதுக்குமேலே சிறிது கொடுக்கவேணுமென்று நினைத்திருந்தாரென்று எம்பெருமானார் செய்த உபகார பரம்பரையை அடைவே அநுஸந்தித்து, இதிலே-தரிசுகிடந்ததறையைச் செய்காலாம்படி திருத்தும் விரகரைப்போலே இவ்வளவும் விஷயாந்தர ப்ரவணனாய்ப்போந்த வென்னைத் திருத்துகைக்காக *படாதனபட்டு அரியனசெய்து திருத்தி தேவரீர்க்கு வகுத்த விஷயமான ஸ்ரீயஃபதிக் காளாம்படி பண்ணியருளின பின்பு வேறே சில அயதார்த்தங்கள் என்னுடைய மநஸ்ஸிலே வலியப்பொருத்திலும் பொருந்தாதே யிருப்பன வென்கிறார்.

வ்யா.—(கருத்தில்புகுந்துள்ளில் கள்ளங்கழற்றி) "ఏషామేవానుకంపార్థ మహమజ్ఞానజం తమః। నాశయామ్యాత్మభావస్థో జ్ఞానదీపేన భాస్వతా" தேஷாமேவாநுகம்பார்த்த மஹமஜ்ஞாநஜந்தம:, நாஶயாம்யா

http://acharya.org

த்மபாவஸ்த்தோ ஜ்ஞாநதீபேநபாஸ்வதா" என்றும், (என்னைத் தீமனங்கெடுத்தாய்) என்றும் சொல்லுகிறபடியே நெடுங்கைநீட்டாகவிருக்கில் இவன்நெஞ்சைத்திருத்தப் பணிப்படுமென்று கொண்டு நெஞ்சுதன்னிலே தானேவந்து புகுந்து, குடியிருக்கிறவர்கள் அங்கிருக்கிற செடிகளை யறுக்குமாப்போலே, உள்ளிலுண்டான அஜ்ஞாநாநயதாஜ்ஞாந விபரீத ஜ்ஞாநரூபமான தோஷங்களையெல்லாம் வாஸனையோடே துடைத்து. "కిం తేన న కృతం పాపం చోరేణాత్మాపహారిణా" "கிம்தேநநக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்னும்படியான ஆத்மாபஹாராதி தோஷங்களைக் கட்டடங்கப் போக்கி யென்றபடி. கருதது என்று - மநோவ்ர்த்தி வாசியான சப்ததாலே ப்ரகரணாநுகுண்யத்துக்காக மநஸ்ஸைச் சொல்லுகிறது. "சிந்தை" என்னுமாப்போலே.

(கருதரிய வருத்தத்தினால) வேறுசிலர்க்கு நெஞ்சில் நினைக்கவுங்கூட அரிதாயிருநதுள்ள வருத்தத்தாலே. வருத்தம் - ப்ரயாஸம். (மிகவஞ்சித்து) நான் அறியில் செய்தக்ஷிதன்னையும் அழித்துக்கொள்வனென்று இராமட மூட்டுவாரைப்போலே எனக்கு ஒன்றுந் தெரியாதபடி மிகவும மறைத்து. (நீ இந்த மண்ணகத்தே திருத்தி) தேவரீா தாம் அறிந்ததாக யத்நிதது, இவ்வளவும் நித்ய ஸம்ஸாரியாய விஷயாநதரங்களிலே மண்டி விமுகனாய்க்கொண்டு * இருளதருமா ஞாலததிலே ஸ்வைரமாக அபதப்ரவர்த்தனாய்ப் போநதேனகையாலே கருநதமையான என்னை * செயல்நன்றாகத் திருத்தி. "తేషాం సతతయుక్తానాం భజతాం ప్రీతిపూర్వకమ్। దదామిబుద్ధియోగంతం యేనమాముపయాన్తితే" "தேஷாம்ஸததயுகதாதாம்பஜதாம்ப்ரீதிபூர்வகம்-ததாமிபுத்தியோகம்தம் யேநமா முபயாநதிதே" என்கிறபடியே ஒரு அதிகாரதமைதப்பார்த்துத திருத்துகையன்றிக்கே நிர்ஹேதுகமாகததிருததினையென்றபடி. திருததுகையாவது - இவ்வாத்மவஸ்து சேஷியானஸ்ரியப்பதிககு சேஷமென்னும் இவ்வர்த்தத்தை நெஞ்சிலே படும்படி உபதேசிககை.

(திருமகள கேள்வனுக்காகியபின்) * நலமந்தமில்லதோர் நாடுபுகுநதபின்பு வரகநடவதான இந்த சேஷத்வ ஜ்ஞாநத்தை இந்த மண்ணகத்தே எனக்கு உபகரித்து தத்பலமாகக்கொண்டு, "பூமகளார்தனிக்கேள்வன்" என்கிறபடியே ஸ்ரீதேவியாகிற பெரியபிராட்டியாரக்கு வல்லபனான ஸர்வேச்வரனுக்கு அந்தஃபுர விநியோகத்துக்கு ஆளாமபடி பண்ணினபின்பு. எனக்கு ஜ்ஞாநத்தைப்பிறப்பித்தவனுக்கு என்னுயிரை அறவிலைசெய்துஎழுதிக்கொடுத்தபின்பு. "மருவித்தொழும் மநமேதந்தாய்" என்கிறபடியே-ஜ்ஞாநத்தை எனக்கு உபகரித்தருளி என்னை பகவ தநங்யார்ஹ சேஷபூதனும்படிகடாக்ஷித்தருளினபின்பென்றபடி.(என்னெஞ்சில்

http://acharya.org

பொருத்தப்பட்டாது) இப்படிதேவரீர் * படாதனபட்டுத் திருத்தத் திருந்தின வென் மநஸ்ஸிலே இசையாது.

(எம்மிராமாநுசா) ʻʻ𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌃ʼʼ ʻʻஅஸ்மத்குரோ:ʼʼ என்கிற படியே எனக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணி உபகரித்தருளின எம்பெருமானாரே!. (மற்றோர்பொய்ப்பொருள்)தேவரீர் அறிவித்த யதார்த்தஜ்ஞாநமொழிய அதுக்குப் புறம்பாயிருப்பதொரு அயதார்த்தமான அர்த்தத்தையும். (பொருத்தப்படாது) வலியப் பொருத்திலும் பொருந்தாது. பொருத்துதல்-இசைத்தல. ʻʻஇந்த மண்ணகத்தே திருத்திʼʼ என்று-* இருள்தருமா ஞாலமான இந்த லோகத்திலே திருத்துகையிலுண்டான அருமையைச் சொலலிற்றாகவுமாம். தீபம் வ்யாபித்தவிடத்தில் திமிரவ்யாப்திககு வழியில்லாதாப்போலே ஜ்ஞாநம் புக்க விடததில் அஜ்ஞாநம் புகுர வழியில்லையென்றதாய்த்து. ʻʻ𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨ʼʼ ʻʻஜ்ஞாநாக்நிஸ்ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதேர்ஜுநʼʼ எனனக் கடவதிறே. ... ... (எஅ)

உரை.—அ.—எழுபத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார் யதார்த்தஜ்ஞாநத்தைக் கொடுக்கையாலே அயதார்த்தங்கள் தமக்குப் பொருநதாதபடியாயத் தென்று ஸ்வநிஷ்டையை யருளிச் செய்தார்-கீழ்; உஜ்ஜீவநருசியுமுண்டாயிருக்க அருமந்தஜ்ஞாநத்தை யிழந்து இவ்விஷயத்துககு அசலாய்ப்போருகிற லௌகிகர் படியையநுஸந்தித்து இன்னாதாகிறார் - இதில்.

மூ.—பொய்யைச்சுரக்கும்பொருளைத்துரந்திந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்குமிராமாநுசனநிற்கவேறுநமமை
உய்யக்கொளளவல்லதெயவமிஙகியாதெனறுலர்ந்தவமே
ஐயப்படாநிற்பர்வையததுள்ளோாநல்லறிவிழந்தே. ( )

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொய்யை	ஆத்மாவினுடைய தேஹபரிமாணத்வ க்ஷணிகஜ்ஞாநரூபத்வ ஜடத்வாதிகளென்ன, ப்ரஹ்மத்தினுடைய மாயாசபளிதத்வ உபாதி மிச்ரத்வ விகாரித்வாதிகளென்ன சுத்தாஸத்யமாயிருப்பதொன்றை,	சுரக்கும்	மேனமேலும் உபபாதியா நிற்கும்,
		பொருளை	பாஹ்ய குத்ருஷ்டிமதார்த்தத்தை,
		துரந்து	ஓட்டி,
		இந்தப்பூதலத்தே	இந்தபூமியிலே,
		மெய்யை	யதார்த்தத்தை,
		புரக்கும்	பரிபாலித்தருளும்,
		இராமாநுசன்	எம்பெருமானார்,

http://acharya.org

பதம்.	உரை.
நிற்க	ஆரொருவர் வருவாரென்று வழிபார்த்து நிற்கச் செய்தே, ஸஜாதீய புத்தியாலே இவரை உபேக்ஷித்து,
வேறு	வேறே,
நமமை	நம்மை,
உய்யக்கொள்ளவல்ல	உஜ்ஜீவிப்பிக்க வல்ல,
தெய்வம்	தேவதை,
இங்கியாதென்று	இங்கே ஏதென்று தேடி,
உலர்ந்து	மநஃக்லேஶத்தாலே உடம்புலர்ந்து,
நல்லறிவு	இவ்விஷயமே நமக்குத் தேஶ்யமென்று பற்றி உஜ்ஜீவித்துப் போகைக்குறுப்பான யதார்த்தஜ்ஞாநத்தை,
இழந்து	லபிக்கப்பெறாதே, உங்களுக்கு உஜ்ஜீவநகரம இவ்விஷயமேயென்றாலும்,
வையத்துள்ளோர்	பூமியிலுள்ளார்,

பதம்.	உரை.
அவமே	வ்யர்த்தமே,
ஐயப்படா நிற்பர்	ஸம்ஶயப்படா நின்றார்கள்; ஐயோ! இவர்கள் நிலையிருந்தபடி யென்னென்று கருத்து.

பொய்யைச்சுரக்கும் இத்யாதிக்கு - உத்பத்திவிநாசாதியோகத்தாலே அஸத்யஶப்த வாச்யமான தேஹத்தை ஜந்மபரம்பரையாலே மேன்மேலுண்டாக்கும தேஹாத்மாபிமாநஸ்வஸ்வாதந்த்ர்யாதயர்த்தங்களை ஸ்வோபதேசத்தாலே ஓட்டிவிட்டு இந்த பூதலத்திலே * ஸதைகரூபதயா ஸத்யஶப்தவாசயமான ஆத்மாவை ரக்ஷித்தருளும்எம்பெருமானார் நிற்கஎன்றுபொருளாகவுமாம். துரத்தல்-ஓடடுதல். புரத்தல்-காத்தல். ஐயம்-ஸம்ஶயம். "தெய்வமங்கியாது" என்ற விடத்தில் இகரமும குற்றியலிகரமாகையாலே, "உமக்கியான்" என்கிறவிடத்திற்சொன்ன ந்யாயத்தாலே கழிதது பூர்வாபரபாதங் களுக்கு ஒக்கப் பதினெழுத்தாகஎண்ணக்கடவது ... ... (எகூ)

வ்யா.—அ.—எழுபததொன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார என்னுடைய மநோதோஷத்தைப் போக்கி அதுதன்னைத் திருத்தி ஸம்யஜ்ஞாநத்தைப் பிறப்பித்து ஶ்ரியஃபதிக்கு சேஷமாக்கினபின்பு என்னுடைய மநஸ்ஸு வேறொருவரைத் தேடிப்போமோவென்று தம்முடைய அத்யவஸாய தார்ட்யத்தையருளிச்செய்து, இதிலே - அந்தப்படியே ஸம்ஸாரி சேதநருக்கும் அத்யவஸிக்க ப்ராப்தமாயிருக்க அதுசெய்யாதே, ஆத்மாவினுடைய தேஹபரிமாணத்வம், க்ஷணிகத்வம் தொடக்கமான வேதாந்த விருத்தார்த்தங்களை வாய்வந்தபடி ப்ரலாபிக்கிற பாஹ்யகுத்ர்

http://acharya.org

ஷ்டிகளுடைய மதப்ரமேயத்தை வாஸனையோடே ஓட்டிவிட்டு,
முன்பு அந்த மறைக்குறும்பாலே வ்யாப்தமான பூலோகத்திலே
ஸத்யமான அர்த்தத்தை, எம்பெருமானார் நிருபிக்கச்செய்தேயும்
ஸஜாதீயபுத்தியாலே அவரைவிட்டகன்று வேறொரு தேவதை
நம்மை ரக்ஷிக்கக்கடவதுண்டோவென்னும் உள்வெதுப்பாலே
சுஷ்கித்துப்போய் வ்யர்த்தமே ஸம்ஶயாத்மாக்களாய் நசித்துப
போகிறவர்கள் படியைக் கண்டு இனியராகிறார்.

வ்யா—(பொய்யைச்சுரக்கும்பொருளைத்துரந்து) பொய்யெ
ன்று-அஸத்யம். (சுரக்கும்பொருளை) இத்தையே மேன்மேலும்
உபபாதியாநிற்கிற பாஹ்யகுத்ருஷ்டிகளுடைய மதப்ரக்ரியையை.
"అసన్నేవస భవతి, అసద్బ్రహ్మేతి వేద చేత్" (அஸந்நேவஸ பவதி, அஸத
ப்ரஹ்மேதிவேதசேத்) என்கிறபடியே அஜ்ஞாநாந்யதாஜ்ஞாந
விபரீதஜ்ஞாந விஷயங்களை யென்றபடி. அவையாவன-ஆத்மாவி
னுடைய தேஹபரிமாணத்வ க்ஷணிகத்வ விஜ்ஞாநரூபத்வ ஜடத்
வாதிகளும், ப்ரஹ்மத்தினுடைய மாயாஶபளிதத்வ உபாதிமிச்ரத்வ
விகாரத்வாதிகளும், ஜகத்தினுடைய மித்யாத்வ அவித்யாகார்யத்
வாதிகளும், இப்படி அஸத்யங்களாய வேதவிருத்தங்களான அர்
த்தங்களையென்றபடி.

அன்றிக்கே, (பொய்யைச்சுரக்கும்பொருளை) ("నాసతో విద్యతే
భావః") (நாஸதோவித்யதேபாவ:) என்கிறபடியே உதபத்திவிநா
ஶாதியோகத்தாலே அஸச்சப்த வாச்யமான தேஹத்தை ஜந்ம
பரம்பரையாலே மேன்மேலுண்டாக்கும் தேஹாத்மாபிமாநம
ஸ்வஸ்வாதந்த்ர்யம் தொடக்கமான அர்த்தங்களையென்றுமாம்.
(பொருளைத்துரந்து) இப்படிப்பட்ட அஸத்யமான அர்த்தங்களைத்
திருநாராயணபுரத்திலும், ஸரஸ்வதீபண்டாரத்திலும், "[illegible]
[illegible]
"கோவா சக்ஷுரிதரஞ்சயேதபி புரஸ்ஸாடோபதாக்கச்சடா ஶஸ்
த்ராஶஸ்த்ரிவிஹாரஸம்ப்ரதாயஸ்வாதேஷு வாதேஷுந:" என்
கிறபடியேகரைகட்டாக்காவேரிபோலேதடையறப்பெருகிவருகிற
ஸத்தர்க்கங்களாலேபாஹ்யகுத்ருஷ்டிகளுக்குக்கண்விழிக்கவொண்
ணாதபடி அவர்களோடே பஹுமுகமாக ப்ரஸங்கித்து, ஶரீரமே
ஆத்மாவாகில் ம்ருதஶரீரத்திலும் சைதந்யமுண்டாக வேண்டிவ
ரும் என்றும், ஆத்மா க்ஷணிகமாகில் பூர்வக்ஷணாநுபூதங்களான
ஸுகதுக்கங்களுக்கு உத்தரக்ஷணத்தில் ப்ரதிஸந்தாநம் வாராமல்
போகவேண்டி வரும் என்றும், ஜ்ஞாநமே ஆத்மாவாகில் நானறி
வென்றிருக்க வேணுமித்தனையொழிய நானறிந்தேனென்று ஜ்ஞா
த்ருத்வேந ப்ரதிஸந்தாநங்கூடாதென்றும்,

ஆத்மா ஜடமென்றால் "ఏతద్యో వేత్తి తం ప్రాహుః క్షేత్రజ్ఞ ఇతి తద్విదః"
"ஏதத்யோவேத்திதம்ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:" என்கிற

http://acharya.org

படியே - பாதேமேவேதநா, ஸிரஸிமேஸ-கம் என்றும், "విజ్ఞానఘనః" "விஜ்ஞாநகந:" என்று ஜ்ஞாநஸ்வரூபமாகச் சொல்லக் கூடாதுஎனறும, பரஹ்மம் மாயாசபளிதமாஞலும், "నిష్కలం నిష్క్రియం శాన్తం నిరవద్యం నిరఞ్జనమ్" "நிஷ்களம் நிஷ்க்ரியம் ஸாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்" என்கிறபடியே நிர்மலாநந்தைக ஸ்வரூபமாகையாலே நான் ஜீவனென்றும் ஈச்வரனென்றும் ப்ரமிக்கக் கூடாதென்றும், அப்படி ப்ரமித்தால, "ఏకో దేవస్సర్వభూతేషు గూఢః" "ஏகோதேவஸ்ஸர்வபூதேஷு-கூட:" என்கிறபடியே - அத்விதீயனுனவனுக்கு ப்ரம நிவர்த்தகரில்லாமையாலே ஸர்வதா ப்ரமித்தே போகவேண்டி வரும் என்றும, ப்ரஹ்மம் விகாரியென்றால் நிர்விகாரியென்கிற ச்ருதியோடே விரோதம் ப்ரஸங்கிக்குமென்றும், அவர்களைக் குறித்து பஹுமுகமாக ப்ரதிகூலதர்க்கங்களைச் சொல்லி அவர்களை சிக்ஷிதது பராஜிதராக்கி இந்த மஹா ப்ர்திவியிலே யிருக்கக் கூடாமல்கடலிலே புகும்படி ஓட்டிவிட்டு. துரத்தல் - ஓட்டுதல். (இந்தப்பூதலத்தே மெய்யைப்புரககும்) யதாஜ்ஞாநத்தை இந்த பூதலததிலேபரிபாலித்தருளும். சுஷ்கதர்க்கவாதிகளைஓட்டிவிட்டு. "ప్రమాణం వేదాశ్చ" "பரமாணம்வேதாஸ்ச" என்றும், "అతో వేదాః ప్రమాణమ్" (ஆதௌவேதா꞉ப்ரமாணம்)என்றும் சொல்லுகிறபடியே ஸகல ப்ரமாணமான வேதத்திலே வைத்துக்கொண்டு, "సత్యం జ్ఞానమనన్తం బ్రహ్మ" (ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம) என்கையாலே - ஸர்வேச்வரனஸ்வரூபவிகாரத்வஜடத்வத்ரிவிதபரிச்சேதரஹிதனென்றும், "కప్యాసం పుణ్డరీకమేవమక్షిణీ" "கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" "విష్ణోః పదే పరమే మధ్వ ఉత్సః" "விஷ்ணோ꞉பதேபரமேமத்வ உத்ஸ꞉" எனகையாலே-சுபாச்ரயதிவ்யரூபனென்றும், "పరాస్య శక్తిర్వివిధైవ శ్రూయతే, స్వాభావికీ జ్ఞానబలక్రియా చ" "பராஸ்யஸக்திர்விவிதைவஸ்ரூயதே, ஸ்வாபாவிகீஜ்ஞாநபலக்ரியாச" என்கையாலே-ஸமஸ்தகல்யாண குணாத்மகனெனறும், "పాదోఽస్య విశ్వా భూతాని, త్రిపాదస్యామృతం దివి" "பாதோஸ்யவிசவாபூதாநி, த்ரிபாதஸ்யாம்ர்தம்திவி" என்கையாலே-உபயவிபூதிநாதனென்றும், "హ్రీశ్చ తే లక్ష్మీశ్చ పత్న్యౌ" (ஹ்ரீஸ்சதேலக்ஷ்மீஸ்சபத்ந்யௌ) என்கையாலே - திவ்யமஹிஷீவல்லபனென்றும், "యత్ర పూర్వే సాధ్యాస్సన్తి దేవాః" "యత్రర్షయః ప్రథమజా యే పురాణాః" "ఏతత్సామ గాయన్నాస్తే" (யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்திதேவா꞉) (யத்ரருஷய꞉ப்ரதமஜாயேபுராணா꞉) (ஏதத்ஸாமகாயந்நாஸ்தே) என்கையாலே-ஸூரிப்ர்ந்த பரிசர்யமாணனென்றும்.

"తదైక్షత బహు స్యాం ప్రజాయేయేతి" "తత్సృష్ట్వా, తదేవానుప్రావిశత్, తదను ప్రవిశ్య, సచ్చ త్యచ్చాభవత్" (ததைக்ஷதபஹுஸ்யாம்ப்ரஜாயேயேதி) (தத்ஸ்ர்ஷ்ட்வா,ததேவாநுப்ராவிஸத், தத நுப்ரவிஸ்ய, ஸச்சத்யச்

http://acharya.org

சாபவத்) என்கையாலே - ஸூக்ஷ்மசிதசித்விஶிஷ்டனாய்க்கொண்டு ஜகத்காரணபூதனென்றும், "ఏష సర్వభూతాన్తరాత్మా ఉపహతపాప్మా దివ్యోదేవఏకో నారాయణః" (ஏஷஸர்வபூதாந்தராத்மாபஹதபாப்மா திவ்யோதேவஏகோநாராயண:) எனகையாலே-ஸர்வாந்தர்யாமியென்றும், "అమ్భస్యపారే భువనస్యమధ్యే నాకస్యపృష్ఠే మహతో మహీయాన్" (அம்பஸ்யபாரேபுவநஸ்யமத்யே நாகஸ்யப்ருஷ்டே மஹதோமஹீயாந்) என்கையாலே - வ்யூஹரூபேணாவஸ்த்திதனென்றும், "బ్రహ్మణ్యో దేవకీపుత్రో బ్రహ్మణ్యో మధుసూదనోమ్" "అజాయమానో బహుధా విజాయతే" (ப்ராஹ்மண்யோதேவகீபுத்ரோப்ராஹ்மண்யோமதுஸூதநோம்) (அஜாயமாநோபஹுதாவிஜாயதே) என்கையாலே - அநந்தாவதாரகந்தனென்றும,

"సయశ్చాయంపురుషే, యశ్చాసావాదిత్యే" "య ఏషోన్తరాదిత్యే హిరణ్మయః పురుషః" (ஸயஶ்சாயம்புருஷே, யஶ்சாஸாவாதித்யே) (யஏஷோந்தராதித்யே ஹிரண்மய:புருஷ:) என்கையாலே - ஸமஸ்த திவ்யதேஶநிலயனென்றும, "నారాయణాయ విద్మహే వాసుదేవాయ ధీమహి, తన్నో విష్ణుః ప్రచోదయాత్" (நாராயணாயவித்மஹே வாஸுதேவாய தீமஹி, தந்நோவிஷ்ணு:ப்ரசோதயாத்) என்கையாலே - விஷ்ணு நாராயண வாஸுதேவாதிஶப்தவாச்யனென்றும், 'పరాత్పరం పురుషముపైతి దివ్యమ్' (பராத்பரம்புருஷமுபைதிதிவ்யம்) எனகையாலே-ஸர்வஸ்மாத்பரனென்றும், "ఏషోऽణురాత్మా చేతసా వేదితవ్యః" "ఆరాగ్రమాత్రో హ్యవరోపి దృష్టః" (ஏஷோணுராத்மாபுருஷமுபைதிதிவ்ய:) (ஆராக்ரமாத்ரோஹ்யவரோபித்ருஷ்ட:) எனகையாலே-ப்ரத்யகாத்மா அணுவாயிருப்பானென்றும், "నిత్యానాం-చేతనానామ్" "(நித்யாநாம்-சேதநாநாம்) என்கையாலே - நித்யனாயிருப்பானென்றும், "భోక్తా భోగ్యం ప్రేరితారఞ్చ మత్వా" (போக்தாபோக்யம்ப்ரேரிதாரஞ்சமத்வா) என்கையாலே-போக்தாவென்றும, "పృథగాత్మానం ప్రేరితారఞ్చ మత్వా" (ப்ருதகாத்மாநம்ப்ரேரிதாரம்சமத்வா) எனகையாலே - ஸர்வேஶ்வரனில் வேறுபட்டிருப்பானென்றும்,

"తయోరన్యః పిప్పలం స్వాద్వత్తి" (தயோரந்ய:பிப்பலம்ஸ்வாத்வத்தி) என்கையாலே - கர்மபலபோக்தாவென்றும், "బ్రహ్మణే త్వా మహస ఓమిత్యాత్మానం యుఞ్జీత" (ப்ராஹ்மணேத்வாமஹஸ ஓமித்யாத்மாநம்யுஞ்ஜீத) என்கையாலே-பகவதநந்யார்ஹஶேஷபூதனென்றும், "తమేవం విద్వానమృత ఇహ భవతి" "தமேவம்வித்வாநம்ருத இஹபவதி) என்கையாலே - தாத்ர்ஶஜ்ஞாநத்தைக்கொண்டு பரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷத்தைப்பெறக்கடவனென்றும், "సమానే వృక్షే పరిషస్వజాతే" (ஸமாநம்வ்ர்க்ஷம்பரிஷஸ்வஜாதே) என்கையாலே - அசித்து ஈஶ்வரனுக்குக் க்ரீடாபரிகரமாயிருக்குமென்றும், "ఆకాశాద్వాయుః, వాయో

http://acharya.org

ಬಿಸ್ತಿಃ, ಆಗ್ನೇರಾಪಃ, ಅದ್ಭ್ಯಃ ಪೃಥಿವೀ" (ஆகாஶாத்வாயுঃ, வாயோரக்நிঃ, அக்நேராபঃ, அத்ப்ய:ப்ருதிவீ) என்கையாலே- சதுர்விம்ஶதித்வாத்மகமாய் பரிணமிக்குமென்றும், "ಮೃತ್ತಿಕೇತ್ಯೇವ ಸತ್ಯಮ್" (ம்ர்த்திகேத்யேவஸத்யம்) என்கையாலே - துச்சவ்யாவர்த்தமாயிருக்குமென்றும், இப்படி தத்வத்ரயத்தினுடையவும் ஸ்வரூபஸ்வபாவாதிகளை இந்த அஜ்ஞாநவர்த்தகமான பூலோகத்திலே யதாவாக உபதேசித்து உபகரித்தவென்றபடி. புரத்தல்-காத்தல். அன்றிக்கே, இரண்டாம் யோஜனைக்கு அநுகுணமாக, "பொருளைத் துரந்திந்தப்பூதலத்தே மெய்யைப் புரக்கும்" என்றதுக்கு - ஸ்வஸ்வாதந்த்ர்யாதிகளை ஸ்வோபதேசத்தாலே ஓட்டிவிட்டு இந்த பூலோகத்திலே ஸதைகரூபனாய்ஸத்யஶப்தவாச்யனான ஆத்மாவை ரக்ஷித்தருளினாரென்று பொருளாகக்கடவது.

(இராமாநுசன்நிற்க) எம்பெருமானார் வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்யோபய வேதாந்தாசார்யராய்த் திருத்துறைக்கு ஆராகிலும் ஆளுண்டோ வென்று * எதிர் சூழல் புக்கு வழிபார்த்துக்கொண்டு நிற்கச்செயதே. (வேறு நம்மை யுய்யக்கொள்ள வல்லதெய்வம்) அநாதி பாபவாஸநாதூஷிதாசேஷ சேமுஷீகராய் அவர்பக்கல் ஸஜாதீய புத்தியைப்பண்ணி அவருபதேஶத்துக்கு இசையாதே எங்களைஉஜ்ஜீவிப்பிக்கைக்கு ஸமர்த்தமான வேறொரு தைவம். (இங்கியாதென றுலர்ந்து) இந்த பூமியிலே ஏதோவென்று தேடித்தேடித் தடுமாறி, அப்படிப்பட்ட தைவத்தை லபியாதே மிகவும் உடம்புலர்ந்து க்லேசித்து.(அவமேஐயப்படா நிற்பர்) இவ்விஷயம் எனக்கு உத்தேச்யமென்று பற்றி உஜ்ஜீவித்துப் போகைக்குறுப்பானயதாஜ்ஞாநத்தைலபிக்கப்பெறாத உங்களுக்கு உஜ்ஜீவநகரமில்லையென்று சொனனாலும் வ்யர்த்தமே இனி நமக்கு ரக்ஷகராவா ரொருவருமில்லை யென்று ஸம்ஶயப்படாநின்றார்கள். ஐயம்-ஸம்ஶயம். (வையத்துள்ளோர்நல்லறிவிழந்தே) பூலோகத்திலே யிருக்கிற சேதநர்கள நலல பரிசுத்தஜ்ஞாநத்தை யிழந்து போனார்களே, அத்தாலே நம்முடைய உபதேசமும் வெறிதே தலைக் கட்டிற்று. "ಸಂಶಯಾತ್ಮಾ ವಿನಶ್ಯತಿ" (ஸம்ஶயாத்மா விநஶ்யதி) என்று இவர்கள் நஶித்துப்போனார்களே ஐயோ! என்று ஸர்வபூத ஸுஹ்ருத்தாகையாலே அவர்களுக்காக அமுதனார் அவஸாதப்படுகிறார்காணும். ... ... (௭௯)

உரை.—அ.—எண்பதாம்பாட்டு. இவ்விஷயத்தை ஆச்ரயிக்க இசையாத ஸம்ஸாரிகள் நிலையைக்கண்டு இழவுபட்டார்- கீழ்; உம்முடையநிஷ்ட்டைதானிருக்கும்படியென்னென்ன; இவ்விஷயமே உத்தேஶ்யமென்றிருப்பாரை உத்தேஶ்யமென் றிருக்குமவர்களு

க்கே * ஒழிவில்காலத்தில்படியே நான் அடிமை செய்வேனென்கிறார்-இதில்.

மூ.—நல்லார்பரவுமிராமாநுசன்திருநாமமநம்ப
வல்லார்திறநதைமறவாதவாகளயவரவர்க்கே
எலலாவிடத்திலுமென்றுமெப்போதிலுமெத்தொழும்பும்
சொல்லால்மநத்தால்கருமத்திலுல்செய்வன்சோர்வின்றியே

பதம்.	உரை.
நல்லார்	"நல்லார்நவில் குருகூர் நகரான்" என்னுமாப்போலே ஸத்துக்களடங்கலும்,
பரவும்	இருந்த விடங்களிலே ப்ரேமபரவசரா யேத்தும்படியான,
இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
திருநாமம்	திருநாமத்தை, "నచేద్రామానుజేత్యేషా చతురా చతురక్షరీ। కామవస్థాం ప్రపద్యన్తే జన్తవో హన్త మాదృశః" (நசேத் ராமாநுஜேத்யேஷா சதுராசதுராக்ஷரீ - காமவஸ்த்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோஹந்த மாத்ருசஃ) என்கிறபடியே,
நம்பவல்லார்திறத்தை	தங்களுக்குத் தஞ்சமாக விச்வஸிக்கம் என்கிறவிவற்றுல்லவர்களுடைய ப்ரகாரத்தை,

பதம்.	உரை.
மறவாதவர்கள்	அநவரதாநுஸந்தாநம் பண்ணியிருக்குமவர்கள்
யாவர்	யாவா சிலர்,
அவர்க்கே	அவர்களுக்கே,
எல்லாவிடத்திலும்	ஸர்வதேசத்திலும்,
என்றும்	ஸாவகாலத்திலும்,
எப்போதிலும்	ஸர்வாவஸ்தைகளிலும்,
எத்தொழும்பும்	ஸாவசேஷவ்ருத்திகளும்,
சொல்லால்	வாக்காலும்,
மநத்தால்	மநஸ்ஸாலும்,
கருமத்திலுல்	காயத்தாலும், "தனக்கேயாக" என்கிறபடியே,
சோர்வின்றிச்செய்வன்	ப்ராதக்ரம மறச் செய்வேன்.

"வல்லார்திறத்தை மதியாதவர்கள்" என்று பாடமானபோது, மதித்தல்-அளவிடுதலாய், அவர்கள்படியை பரிச்சேதியாதவர்களென்று பொருளாகக்கடவது. நம்புதல் - விச்வஸித்தல்; விரும்புதலுமாம். திறம்-ப்ரகாரம். தொழும்பு - அடிமை. சொல், கருமமாக தத்தத்காரணங்களான வாக்காயங்களை லக்ஷிக்கிறது. சோர்வு - பிரிவு. (௮௦)

http://acharya.org

வ்யா.—அ.—எண்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே - 'எம்பெருமானார் துர்மத நிரஸநம்பண்ணியும் ப்ராமாணிகமாக வேதமார்க்க ப்ரதிஷ்டாபநம்பண்ணியுமிருக்கச்செய்தே அஜ்ஞாநப்ரசுரமான இந்தபூலோகத்திலே யிருந்துள்ள சேதநர் அவரை ஆச்ரயிக்க இசையாதே வேறொரு ரக்ஷகாந்தரமுண்டோவென்று தேடித் தடுமாறித்திரிந்து அவஸந்நராய்விட்டார்களென்று அவர்கள்படியைச்சொல்லி, இதிலே - அவர்களைப்போலன்றிக்கே அவர்களிற் காட்டில அத்யந்தவிலக்ஷணராய் எம்பெருமானார் திருநாமத்தையே விச்வஸித்திருக்கும் மஹாத்மாக்களிடத்திலே பத்தஸ்நேஹராய் ஒருகாலமும அவர்களைவிஸ்மரியாதே யிருக்குமவர்கள யாவர்சிலர் அந்த ததீயர்க்கே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்த்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களையும ஸர்வகரணங்களாலும் ஸர்வருமறியும்படி பண்ணக்கடவேனென்று தம்முடைய நிஷ்டையைச் சொல்லுகிறார்.

வ்யா.—(நல்லார்பரவு மிராமாநுசன்) "நல்லார் நவில் குருகூர்நகரான" என்று-திருநகரியிலே வர்த்திக்கிற ஸத்துக்களாலே விரும்பப்படும் நம்மாழ்வாரைப்போலே, "கலியுங்கெடுங்கண்டு கொண்மின்" என்று அவர்தம்மாலும், "மேவினேனவன் பொன்னடி" என்று அவர்க்கு அந்தரங்கரான ஸ்ரீமதுரகவிகளாலும், அவர் தாமுடையப்ரஸாதத்தாலே பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைப் பெற்றுத்தாராநின்ற ஸ்ரீமந்நாதமுநிகளாலும், "ஆமுதல்வன்" என்று தத்வஜ்ஞரான ஆளவந்தாராலும் விரும்பப்பட்ட எம்பெருமானாருடைய. இவர்களெல்லாரும் இப்புடைகளாலே எம்பெருமானாருடைய வைபவத்தை முந்துறமுன்னம், "இந்நாநிலத்தே வந்து நாட்டினான்" என்று வெளியிட்டபின்பு அத்தைக் கண்டு தெளிந்திறே ஆழ்வான் ஆண்டான் தொடக்கமானார் அவர் தம்மைப் பரவத்தொடங்கிற்று. "అనంతః ప్రథమం రూపం లక్ష్మణస్తు తతః పరం। బలభద్రస్తృతీయస్తు కలౌ రామానుజస్స్మృతః" "அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத: பரம - பலபத்ரஸ்த்ரீயஸ்துகலௌ ராமாநுஜஸ்ஸ்ம்ருத:) என்று நாரதபுராணோக்தவசநத்தை ஸத்துக்கள் வாசித்துக்கொண்டு போருவர்களிறே. "అర్వాఞ్చో యత్పదసరసిజద్వంద్వమాశ్రిత్య పూర్వే మూర్ధ్నా యస్యాన్వయముపగతా దేశికా ముక్తిమాపుః । సోయం రామానుజమునిరపి" (அர்வாஞ்சோ யத்பதஸரஸிஜத்வந்த்வமாச்ரித்யபூர்வே மூர்த்நாயஸ்யாந்வயமுபகதாதேசிகா முக்திமாபு: - ஸோயம் ராமாநுஜமுநிரபி) என்கிறபடியே ஸத்துக்களடங்கலும், இருந்தவிடங்களிலே ப்ரேம பரவசராய்க் கொண்டு ஏத்தும்படியான எம்பெருமானாருடைய.

http://acharya.org

(திருநாமம் நம்பவல்லார் திறத்தை) "న చేద్రామానుజేత్యేషా చతురా చతురక్షరీ । కామవస్థాం ప్రపద్యన్తే జన్తవో హన్త మాదృశః" (நசேத்ராமாநுஜேத்யேஷா சதுரா சதுராக்ஷரீ, காமவஸ்தாம்ப்ரபத்யந்தே ஜந்தவோஹந்தமாத்ருஶ:) என்றும், "రామానుజదివాకరః" (ராமாநுஜதிவாகர:) என்றும், "రామానుజపదామ్భోజసమాశ్రయణశాలినః" (ராமாநுஜபதாம்போஜஸமாஶ்ரயணஶாலிந:) என்றும், "రామానుజపదచ్ఛాయా" (ராமாநுஜபதச்சாயா) என்றும், "తస్మై రామానుజార్యాయ నమః పరమయోగినే" (தஸ்மைராமாநுஜார்யாய நம:பரமயோகிநே) என்றும், "రామానుజార్యం నమత ప్రత్యహం ..." (ராமாநுஜார்யம் நமத ப்ரத்யஹம்...) என்றும், "తస్మిన్ రామానుజార్యే" (தஸ்மிந் ராமாநுஜார்யே) என்றும், "రామానుజశ్శరణమస్తు" (ராமாநுஜஶ்ஶரணமஸ்து) என்றும், "రామానుజాఙ్ఘ్రిప్రణమామి మూర్ధ్నా" (ராமாநுஜாங்க்ரிபதிபரணமாம்மூர்த்நா) என்று - * சதுரக்ஷரியான ராமாநுஜனென்கிற திருநாமத்தினுடைய வ்யதிரேகத்தில் அநர்த்தத்தை ஏறிட்டுக்கொண்டு அதனையே தங்களுக்குத் தஞ்சமாக விசுவஸித்துத் தத்வ்யவஸாயயுக்தராயிருக்கும் ஆழ்வானை, ஆண்டானை, எம்பார் முதலான முதலிகளுடைய ப்ரகாரத்தை. நம்புதல்-விச்வஸித்தல். திறம்-ப்ரகாரம்.

"యథా తే తత్ర వర్తేరన్, తథా తత్ర వర్తేథాః" "యాన్యస్మాకం సుచరితాని, తాని త్వయోపాస్యాని" "యం త్వార్యాః క్రియమాణం ప్రశంసన్తి, స ధర్మః, యం గర్హన్తి సోఽధర్మః", "వేదశాస్త్రరథారూఢా జ్ఞానఖడ్గధరా ద్విజాః । క్రీడార్థమపి యద్బ్రూయుః స ధర్మో నేతరస్స్మృతః" "యాస్త్వస్మత్తో ... శాస్త్రాణి" "సమయాచారాశ్చ ధర్మవృత్తావేషు" "பரிக்ரஹமும் பூர்வாசார்யர்களுடைய வசநமும் அநுஷ்டாநமும்" என்று - இப்படி ப்ரமாண ஸஹஸ்ரத்தாலே ப்ரதிபாதிக்கப்பட்ட சிஷ்டருடைய ஜ்ஞாநாநுஷ்டாநப்ரகாரத்தையென்றபடி.

(மறவாதவர்களையவர்) "స్వాధ్యాయాన్మా ప్రమదః, ఆచార్యాయ ప్రియం ధనమాహృత్య ప్రజాతన్తుం మా వ్యవచ్ఛేత్సీః, సత్యాన్న ప్రమదితవ్యమ్, ధర్మాన్న ప్రమదితవ్యమ్" (ஸ்வாத்யாயாந்மாப்ரமத:, ஆசாரியாயப்ரியம்தநமாஹ்ருத்யப்ரஜாதந்தும்மாவ்யவச்சேத்ஸீ:, ஸத்யாந்நப்ரமதிதவ்யம், தாமாநநப்ரமதிதவ்யம்" என்கிறபடியே விஸ்வாஸமாந்த்யத்தாலே அதனை மறந்துபோகை யன்றிக்கே அநவரதம் அநுஸந்தித்துக்கொண்டிருக்கிறவர்கள்யாவர் சிலர். எம்பெருமானாருடைய திருநாமத்தை, "நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே" என்கிறபடியே முதலடியிலே தாம் அநுஸந்தித்தும், "இராமாநுசனென்று சொல்லுமினே" என்கிறபடியே லோகத்தாரெல்லார்க்கும் உபதேசித்தும், "சயந்தருகீர்த்தி யிராமாநுசமுனி தாளிணைமேல், உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்குமன்பால், இயம்புங்கலித்துறையந்தாதி

"யோத" என்கிறபடியே - ப்ரபந்நர்களுக்கெல்லாம் நித்யாபிஜப்யமாம்படி க்ரந்தீகரித்தும் போருகைக்குறுப்பான இவ்வதிகாரமுண்டாம்படி கருந்தறையான வென்னைத் திருத்தியருளின ஆழ்வான்போல்வாரென்றபடி. "நம்பவல்லார் திறத்தை மதியாதவர்கள்" என்றுபாடமானபோது - மதித்தல் - விடுதலாய-அவர்கள் படியை பரிச்சேதியாதவர்களென்று பொருளாகக்கடவது.

(அவர்க்கே) அவர்களுக்கு முகமலர்த்தியுண்டென்றும் எனக்கு உஜ்ஜீவநமுண்டென்றும இருவாக்குங்கூடப் பொதுவாகப் பண்ணுகை தவிர்ந்து, "தனக்கேயாகவெனைக்கொள்ளும்" என்கிறபடியே, அவர்களுடைய முகமலர்த்தியே புருஷார்த்தமென்று அத்யவஸிக்கிறார். "அவர்க்கே" என்கிற அவதாரணத்தாலே-இவ்வர்த்தம தோற்றுகிறதிறே (எல்லாவிடத்திலுமென்றும் எப்போதிலும) "సర్వేషు దేశకాలేషు సర్వావస్థాసు చాచ్యుత। కింకరోస్మి" (ஸர்வேஷு தேசகாலேஷு ஸர்வாவஸ்தாஸு சாச்யுத-கிஂகரோஸ்மி) என்றும, (ஒழிவிலகாலமெல்லாமுடனாய்மன்னி) என்றும, "కాలం సకలమపి సర్వత్ర సకలాస్వవస్థాస్వావిస్స్యుర్మమ" (காலஂ ஸகலமபி ஸர்வத்ர ஸகலாஸ்வவஸ்தாஸ்வாவிஸ்யுர்மம) என்று சொல்லுகிறபடியே - பகவத்விஷயத்திலே ஈடுபட்டாப்போலே, "తస్మాన్మద్భక్తభక్తాశ్చ పూజనీయా విశేషతః" "మద్భక్తైస్సహసంవాసః" (தஸ்மாத் மத்பக்தபக்தாஸ்ச பூஜநீயா விசேஷத: - மத்பக்தைஸ்ஸஹஸஂவாஸ:) என்றும, "తస్మై దేయం తతో గ్రాహ్యం స చ పూజ్యో యథా హ్యహమ్" (தஸ்மை தேயஂ ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்) என்றும் அவன் ருசிக்க அருளிச்செய்தாருடையவான மேலே ஸர்வதேச ஸர்வகாலஸர்வாவஸ்தைகளிலும் (எல்லாவிடத்திலும) ஸர்வதேசங்களிலும். இடம்-தேசம். (எல்லாம) காலோபலக்ஷணமாயிருந்துள்ள ஸகலாவஸ்தைகளிலுமென்றபடி. (எப்போதிலும) ஸகலகாலங்களிலும்.

(சொல்லால மனத்தால கருமத்தினால) இம்மூன்றிலும். மனோவாக்காயங்களாலே மூன்றிலும். "சொல்லாலகருமத்தினால்" என்கிற இவற்றால்- த்ரிவிதகரணங்களானவாக்காயங்களைலக்ஷிக்கிறது. (எத்தொழும்பும்) ஸர்வப்ரகாரதாஸ்யமும. தொழும்பு - அடிமை. எப்பேர்ப்பட்ட வென்றபடி. (சோர்விலறியே) "வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்றப்ரார்த்தித்தபடியே அவிச்சிந்நமாக. சோர்வு-பிரிவு. செய்வன-செய்யக்கடவன. அம்மூன்றிலும் வைத்துக்கொண்டு ஒவ்வொன்றிலேதானே ஸர்வகரணங்களாலும் ஸர்வவிதகைங்கர்யங்களையும் பண்ணக்கடவேனென்கிறார். "వాచా యతీంద్ర మనసా వపుషా చ యుష్మత్పాదారవిందయుగళం భజతాం గురూణామ్। కూరాధినాథకురుకేశ ముఖాద్యపుంసాం పాదానుచింతనపరస్సతతం భవేయమ్" (வாசாயதீந்த்ரமநஸா வபுஷாச யுஷ்மத்பாதாரவிந்தயுகளஂ பஜதாஂகுருணாம் - கூராதி

நாதகுருகேஶமுகாத்யபுஂஸாஂ பாதாநுசிந்தநபரஸ் ஸததஂபவேயம்) என்று ஜீயரும் ப்ரார்த்தித்தருளினாரிறே. (நன்றுந்திருவுடையோம் நானிலத்திலெவ்வுயிர்க்கு - மொன்றுங் குறையில்லையோதினோம், குன்ற - மெடுத்தானடிசேர் இராமாநுசன்றாள் - பிடித்தார் பிடித்தாரைப்பற்றி) என்றும்படியான ஸ்வாத்யவஸாயத்தை வெளியிட்டருளினாராயத்து. ... ... (அ0)

உரை.—அ.—எண்பத்தோராம்பாட்டு. எம்பெருமானார் ஸம்பந்திஸம்பந்திகளுக்கே ஸாவசேஷ வ்ருத்திகளும் பண்ணக்கடவேனென்றார் - கீழ்; இந்நிலைக்கு முன்பு இசையாத தமக்கு இந்தருசியுண்டாயிற்றது எம்பெருமானார் ப்ரஸாதத்தாலே யாகையாலே தமக்கு அவர்செய்த வுபகாரத்தை அவரை நமஸ்கரித்து விண்ணப்பஞ்செய்து, தேவரீருடைய க்ருபைக்கு ஒப்பில்லையென்கிறார்.

மூ —சோர்வின்றியுன்றன் றுணையடிக்கீழ் தொண்டுபட்டவர்பா
சார்வின்றிநின்றவெனக்கரங்கன்செய்யதாளிணைகள் [ல
பேர்வின்றியின்றுபெறுதற்கிராமாநுசவினியுன்
சீரொன்றியகருணைக்கில்லைமாறுதெரிவுறில் (அக)

பதம்.	உரை.
சோர்வின்றி	வேறொருவிஷயத்தில்மநஸ்ஸூ பிரிவின்றிக்கே,
உன்றன்	தேவரீருடைய,
துணை	சேர்த்தியழகையுடைத்தான,
அடிக்கீழ்	திருவடிகளின்கீழே.
தொண்டுபட்டவர்	* நிழலு மடிதாறும் போலே சேஷமாயிருக்குமவர்கள்
பால்	
சார்வின்றி நின்ற	ஒருபொருத்தமின்றிக்கே நின்ற,
எனக்கு	எனக்கு,
	அவர்களுக்கே அநந்யார்ஹ சேஷமென்னும் நினைவைப் பிறப்பிக்கை யாலே "அடியார்க்கென்னையாட்படுத்தவிமலன்" என்றும், "அடியார்க்காட்படுத்தாய" என்றுஞ் சொல்லுகிறபடியே தாம் உகந்தாரை ஸ்வாமியாளவிலே சேர்க்கும் ஸ்வபாவராய பாகவதசேஷத்வ நிஷ்டாக்கொழிய தம திருவடிகளை விட்டுப் போராத நிலையாம்படியிருக்கும்,
அரங்கன்	பெரிய பெருமாளுடைய
செய்ய	திருமேனிநிறத்துக்கு பரபாகமான சிவப்பையும்,

http://acharya.org

பதம்.	உரை.
இணை	சேர்த்தியையுடைய
தாள்கள்	திருவடிகளை,
பேர்வின்றி	ஒருகாலமும் நீங்காதபடியாக,
இன்று	இன்று,
பெறுத்து	பெறுவித்தருளின
இராமாநுச	உடையவரே!
இனி	இப்படியானபின்பு,
உன	தேவரீருடைய,
சீரொன்றிய	கௌரவயுக்தையாயிருந்துள்ள,
கருணைக்கு	க்ருபைக்கு,
தெரிவுறில்	ஆராயுமளவில்,
மாறில்லை	ஒப்பில்லை.

அதவா, "சோர்வின்றி" இத்யாதிக்கு அரங்கனசெய்யத்தா

பதம். உரை.

முளிணைகள் - பேர்வின்றி - உன்றன் துணையடிக்கீழ் தொண்டுபட்டவாபாலக்கு - இன்று பெறுத்து மிராமாநுச என்றநவயித்து - பகவச்சேஷத்வத்துக்கிசைகையாலே பெரியபெருமாள் திருவடிகளை விடாமலுறைக்கப்பற்று தர்மாநத்தாலேபாகவத சேஷத்வத்துக்கு இசையாமையால் தேவரீர் திருவடிகளுக்கு சேஷமாயிருப்பார் பக்கல் சேராமல நின்ற வெனக்கு அத்தை இன்று லபிப்பித்தருளின தேவரீர் க்ருபைக்கு ஒப்பில்லையென்னவுமாம். போதல்-நீங்குதல். சீர்-கரம்; அழகாகவுமாம். ஒன்றுதல்-கூடுதல். மாறு-ஒப்பு. தெரிவுறுதல் - ஆராய்தல். (அக)

வ்யா.—அ.—எண்பத்தோராம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே - ஸர்வோத்தமரான எம்பெருமானாருடைய ஸம்பந்திஸம்பந்திகளுக்கே ஸர்வதேசஸர்வகாலஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வகரணங்களாலும் ஸர்வவிதகைங்கர்யங்களும் செய்யக்கடவேனென்று அவர்கள் பக்கலிலே தமக்குண்டான ஸம்ப்ரமத்தைச்சொல்லி, இதிலே - எம்பெருமானார் திருமுகமண்டலத்தைப்பார்த்து இவ்வளவும் தேவரீர்க்கு சேஷபூதராயிருக்கிறவர்கள் திறத்திலே அடிமைத்தொழில் செய்ய இசையாத வென்னை, தாமுகந்தாரைத் தமக்கு அந்தரங்கபரிகரமாக்குமவர்கள் விஷயத்திலே அடிமைப்படுத்துகைக்கு உத்தேசிக்கலாய், தன்னடியாக்கடிமைப்படாதே யிருக்கிறவர்களுக்கு அந்தத்திருவடிகளைக் கொடுக்க இசையாதே யிருக்கிற பெரியபெருமாளுடைய திருவடிகளிலே சேர்த்தருளின தேவரீருடைய பரமக்ருபைக்கு ஒப்பில்லையென்கிறார்.

வ்யா.—(சோர்வின்றியுன்றன் துணையடிக்கீழ்) "మయి చానన్యయోగేన భక్తిరవ్యభిచారిణీ" (மயி சாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ) என்று - கீதாசார்யனருளிச்செய்தபடியே - வேறொருவிஷயத்திலும் மநஸ்ஸு பிரிந்துபோகையன்றிக்கே, "కృత్వా మర్త్యమయీం తనుమ్। మగ్నానుద్ధరతే లోకాన్ కారుణ్యాచ్ఛాస్త్రపాణినా" (க்ருத்வா மர்த்யமயீம் தநும் - மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா) என்று -

